# நன்னூல் உரைவளம்

6

## உயிரீற்றுப் புணரியல்- I

இரா. கண்ணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies

நன்னூல் உரைவளம் (தொகுதி-6)

# உயிரீற்றுப் புணரியல் - 1


பதிப்பாசிரியர்

முனைவர் இரா. கண்ணன்



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

மையத் தொழில்நுட்பப் பயிலகை வளாகம்

இரண்டாம் முதன்மைச் சாலை,

தரமணி, சென்னை-600 113

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Nannūl uraivaḷam (Vol. 6)**<br>**Uyiri̱ṟṟup puṇariyal - 1** |
| Author | : | Dr. R. Kannan<br>Associate Professor<br>Dept. of Tamil Language<br>Presidency College, Chennai - 5 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus, Tharamani<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 694 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2010 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 11 Point |
| No. of Pages | : | 288 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 125/-<br>(Rupees One hundred and twenty five only) |
| Printed by | : | Sri Venkateswara Offset<br>New No. 47, Rajanga Mathya Street<br>Vadapalani, Chennai - 600 026.<br>Phone : 23621409 |
| Subject | : | Tamil Grammar |

முனைவர் கரு.அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை – 113

# அணிந்துரை

வாழ்வை இலகுவாக்க மனிதன் படைத்துக் கொண்ட கருவிகள் பற்பல. அவற்றுள் மொழியும் ஒன்று. ஆயினும் பிற கருவிகள் யாவற்றுள்ளும் தலையாயதும் தனிச் சிறப்புடையதும் மொழியே. மொழி இன்றேல் வேறு எக்கருவியும் தோன்றி யிராது. மொழி, மனத்தின் உயிர்; பிறபிற கலைகளுக்கும் கருவிகளுக்கும் தாய். மாந்தரின வாழ்விற்கு இத்துணை இன்றியமையாக் கருவியாய்த் திகழும் மொழி, உலகம் யாண்டும் பரவிக் கிடக்கும் மக்களினக் குழுக்களிடையே பலவாகக் காணக் கிடக்கிறது. அம் மொழிக்கூட்டத்திடையே பன்மீன் நாப்பண் விளங்கு பால்மதி போல் இலங்குவது தமிழ்.வரலாற்றுக்காலந் தொடங்கி இன்றளவும் தன்னேரிலாத் தகைசால் சீர்மை யுடன் திகழும் இத் தமிழ்மொழியின் இலக்கிய இலக்கணப் பரப்பு அளந்திட்டுக் கூற ஒண்ணா விரிவினை உடையது. காலமும் கடும்புனலும் கொண்டது போக எஞ்சியன சிலவே யாயினும், மறைந்து போனவற்றிற்கு மாற்றாகக் காலந் தோறும் தோன்றிய பனுவல்களோ பற்பல. அழகு தமிழில் அமைந்த அந்நூல்களின் பொதிபொருளைப் பழகு தமிழில் விளக்க எழுந்த உரைகளும் மிகப் பல.

ஒல்காப் புகழுடைய தொல்காப்பியத்திற்குப் பின் ஏறத்தாழ பன்னிரண்டு நூற்றாண்டுகள் கழித்துத் தோன்றி இன்றளவும் தனிச் சிறப்புடன் வாழ்வது நன்னூல். பெயருக்கு ஒப்பவே தமிழின் இலக்கணத்தை நலம்படவும் நயம்படவும் இயம்பும் இந்நூலிற்கு உரைவிளக்கம் கண்டோர் பலர். அவ்வுரைகளுள் பல, தம் பெயரை மட்டுமே நிறுத்தி தாம் மாய்ந்தன. வேறுபலவோ, அச்சேறியபோதும் இன்று காணுதற்கும் அரியனவாய் உள்ளன. இவ்வாறு காலச் செலவால் அருகி உள்ள உரைகளை அரிதின் முயன்று திரட்டி இருபத்திரண்டு தொகுதிகளாக உருவாக்கப் பெற்றுள்ள இவ்வுரை வளத்தினைஎம் நிறுவனத்தின் வழி வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறோம்.

மயிலை நாதர், சங்கர நமச்சிவாயர்,சிவஞான முனிவர், கூழங்கைத் தம்பிரான், விசாகப் பெருமாளையர், ஆ.முத்துத் தம்பிப்பிள்ளை, இராமானுச கவிராயர், கா.கோபாலா சாரியார், தி.கோ.ரங்காசாரியார், ஆறுமுக நாவலர், வ.குமார சாமிப் புலவர், வை.மு.சடகோபராமானுசாசாரியார், சே.கிருட்டிணமாசாரியார், பவானந்தம் பிள்ளை, கொ.இராமலிங்கத் தம்பிரான், கா.நமச்சிவாய முதலியார், மோசசு பொன்னையா ஆகியோரின் உரைகளும், என்றி பவார் செய்த பாயிரப் பகுதிக்கான ஆங்கில மொழி பெயர்ப்பும், இலாசரசு செய்த எழுத்ததிகாரம் மற்றும் சொல் லதிகாரத்திற்கான ஆங்கில மொழிபெயர்ப்பும் இவ்வுரை வளத்தில் திரட்டப் பெற்றுள்ளன. நன்னூலைத் தழுவி இயற்றப் பெற்று ஒரு நூற்றாண்டு காலத்திற்கும் மேல் மீள்பதிப்புக் காணாத திருப்பாற்கடல்நாதன் கவிராயரின் தமிழிலக்கணம், சி.அருணாசலம் பிள்ளையின் TAMIL GRAMMAR, இ.சாமுவேல் பிள்ளையின் தொல்காப்பிய நன்னூல், G.U.போப்பின் காண்டிகையுரை, ஆ.முத்துத் தம்பிப்பிள்ளையின் நன்னூல் இலகுபோதம் ஆகியன இவ்வுரைவளத் திரட்டில் தனித்தனி நூல்களாக வெளியிடப் பெற்றுள்ளன. இவ்வுரைவளம் தமிழன்னைக்கு அணி சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

நன்னூல் உரைவளத்தின் பதிப்பாசிரியரான முனைவர் **இரா.கண்ணன்**, சென்னை மாநிலக்கல்லூரித் தமிழ்த் துறையில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றுகிறார். இவர் அறுபதிற்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். இவ்வுரைவளத்தின் பதிப்புப் பணியோடு எழுத்துக் கோர்த்தல், மெய்ப்புத் திருத்தல், வடிவமைத்தல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் தனியொருவராக இருந்து சிறப்புடன் செய்துள்ள இப்பதிப்பாசிரியரை மனதார வாழ்த்துவதுடன் நன்றி நவிலுங் கடப்பாடுமுடையேன்.

நிறுவனப் பணிகளில் எம்முடன் இணைந்து பணியாற்றும் துணை இயக்குநர், பேராசிரியப் பெருமக்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் ஆகிய அனைவர்க்கும் எம் நன்றி உரித்தாகுக.

**கரு.அழ.குணசேகரன்**

சென்னை – 113.

12.01.2011.

# முன்னுரை

தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐம்பெரும் பிரிவுகளை உடையது என்பர். இது பொது வழக்கே யாயினும் பிற்காலத்தில் பாட்டியல் அனைய புதுப்புது இலக்கணப் பிரிவுகள் தமிழில் தோன்றி நன்கு செழித்து வளர்ந்துள்ளன. அவ்வாறே எழுத்து, சொல் முதலான ஒவ்வொரு பிரிவினிலும் தோன்றிய இலக்கண நூல்களும் பல உள. தொல்காப்பியம், எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களை உடையதாதலான் அது மூன்றிலக்கணம் கூறும் நூல் என்பது போதரும். ஆயினும் பொருளதிகாரத்துள் அமைந்து கிடக்கும் உவமவியலும், செய்யுளியலும் முறையே அணியிலக்கணத்தையும், யாப்பிலக்கணத்தையும் வேண்டுமளவிற்கு விளக்கிக் கூறுதலான், அந்நூல் ஐந்திலக்கண நூலுமாம். தொல்காப்பியத்திற்குப் பின் பல்வேறு இலக்கண நூல்கள் எழுந்தன.பழங்காலத்தில் பெருவழக்காய் வழங்கிய அவ்விலக் கண நூல்கள் இன்று வீழ்ந்து போயின. இன்று வழங்கப் பெறும் இலக்கண நூல்களுள் வீரசோழியம், தொல்காப்பியத்திற்குப் பின் எழுந்த முதல் ஐந்திலக்கண நூலாகும். ஆயினும் அந்நூல் வடமொழி சார்பினைப் பெரும்பான்மை தழுவிச் செல்வதால் அது அவ்வளவாகப் போற்றப் படுவதில்லை. வீரசோழியத்திற்குப் பின் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண் டளவில் பவணந்தி முனிவரால் நன்னூல் இயற்றப்பட்டது. நன்னூல் ஐந்திலக்கணம் கூறிய நூல் என்றும், இன்று எழுத்து மற்றும் சொல்லிலக் கணம் உரைக்கும் பகுதி மட்டுமே கிடைக்கப் பெறுகிறது என்றும் எஞ்சிய பகுதிகள் காலச் செலவால் அழிந்திருக்கக் கூடும் என்றும் கருதுவாரும் உண்டு. இன்று வழக்கில் உள்ள நன்னூலின் மொத்த நூற்பாத் தொகை நானூற்று அறுபத்திரண்டு. பாயிரம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என மூன்று பகுதிகளாய் அமைந்துள்ள இந்நூலின்கண் பாயிரம் 55 நூற்பாக்களையும், எழுத்ததிகாரம் 202 நூற்பாக்களையும் சொல்லதிகாரம் 205 நூற்பாக்களையும் பெற்றுள்ளன. பாயிரம், பவணந்தியால் இயற்றப்பட்டதன்று என்பர்.

நன்னூலிற்கு இன்றுகாறும் எழுந்துள்ள உரைகள் பல. ஆயினும் மயிலைநாதரின் உரையே முதலில் எழுந்த உரையாகும். மயிலைநாதர் நன்னூல் ஆசிரியர் பவணந்தியின் சம காலத்தவர். மயிலைநாதரின் உரை நன்னூலிற்கு இன்று வரை எழுந்துள்ள உரைகள் யாவற்றிலும் தலைமை யானது, தனிச் சிறப்புடையது. இவ்வுரைக்குப் பின் பல உரைகள் எழுந்தன. அவற்றுள் சில அச்சேறாமலேயே இறந்தன.வேறுசில அச்சேறிய பின்னும் இன்று அருகியுள்ளன.இவ்வாறு காலச்செலவான் அருகி வரும் உரைகளைக் காத்தற் பொருட்டும், தமிழாய்விற்குத் தக்க கருவி நூலாய் அமையும் திறம் நோக்கியும் இவ்வுரைவளம் உருவாக்கப் பெற்றுள்ளது.இதில் நன்னூலின் சிறந்த உரைகள் அனைத்தும் திரட்டப் பெற்றுள்ளன.

நூற்பா அதன்கீழ் சீர் பிரிக்கப் பெற்ற நிலையில் நூற்பா,ஆங்கில எழுத்துப் பெயர்ப்பு, இலாசரகு செய்த மூல நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு, தொல்காப்பியம் முதல் சுவாமிநாதம் வரையிலான இலக்கண நூல்களில் இருந்து தரப்பெற்றுள்ள ஒப்புமைப் பகுதி,நன்னூல் உரைகள் ஆகியன இவ்வுரைவளத்தில் நிரல்படுத்தப்பட்டுள்ளன. மூலநூலின் பாட வேறுபாடும், மயிலைநாதர் உரையின் பாடவேறுபாடும் காட்டப் பெற்றுள்ளன.

நன்னூலிற்கு விருத்த யாப்பில் எழுந்த ஆண்டிப்புலவர் உரை அழிந்து போனது. அச்சேறிய உரைகளுள் பல இன்று அருகி பெயரளவில் மட்டுமே அறியப் பெறுபவையாக உள்ளன. அச்சேறிய அரிய உரைகளையேனும் காக்கும் வகையில் இவ்வுரைவளம் இருபத்திரண்டு தொகுதிகளாக வெளியிடப் பெறுகின்றது. தமிழ் உலகம் ஏற்றுப் போற்றும் என நம்புகிறேன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர், பேராசிரியர் முனைவர் ***கரு.அழ.குணசேகரன்*** அவர்களும், துணை இயக்குநர் **திரு.க.ந.வீரபாகு சுப்பிரமணியன்** அவர்களும் நன்னூல் உரைவள நூல்கள் அனைத்தையும் விரைந்து வெளிக் கொணர்ந்தனர். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இவ்வுரைவளத் திரட்டுப் பணியின்போது பல்லாற்றான் உதவிய சென்னை இராணிமேரி கல்லூரிப் பேராசிரியை **முனைவர் ந.கலைவாணி** அவர்களுக்கும், உற்றுழி உதவிய அனைவர்க்கும் உளமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்வதோடு, தோன்றாத் துணையாய் இருந்து எம்மை இயக்கி வரும் தில்லைக் கூத்தனின் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து அமைகிறேன்.

**10.11.2010** **இரா.கண்ணன்.**
**சென்னை–55**

நன்னூல் உரைவளம்

(தொகுதி – 2)

# உயிரீற்றுப் புணரியல் – 1

# சுருக்க விளக்கம்

| | | |
|---|---|---|
| அவி | – | அவிநயம் |
| இடள் | – | இதன் பொருள் |
| இல, விள | – | இலக்கண விளக்கம் |
| உ–ம் | – | உதாரணம் |
| உணர்–ற்று | – | உணர்த்துதல் நுதலிற்று |
| எ–டு | – | எடுத்க்காட்டு |
| எ–று | – | என்றவாறு |
| எ–னின் | – | என் நுதலிற்றே எனின் |
| சுவாமி | – | சுவாமிநாதம் |
| சூ–ம் | – | சூத்திரம் |
| தொல், எழு | – | தொல்காப்பியம் எழுத்ததிகாரம் |
| தொல், சொல் | – | தொல்காப்பியம் சொல்லதிகாரம் |
| தொல், பொருள் | – | தொல்காப்பியம் பொருளதிகாரம் |
| தொன் | – | தொன்னூல் விளக்கம் |
| நச் | – | நச்சினார்க்கினியர் |
| ந.பா | – | நவநீதப் பாட்டியல் |
| நேமி | – | நேமிநாதம் |
| பா–டு | – | பாட வேறுபாடு |
| பொ–ரை | – | பொழிப்புரை |
| மா.அலங் | – | மாறனலங்காரம் |
| மு.வீ | – | முத்துவீரியம் |
| வீர | – | வீரசோழியம் |
| வெண், பாட் | – | வெண்பாப் பாட்டியல் |

**அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ ,ஒ, ஓ, ஔ, ஃ – இவ்வெழுத்துக்கள் முறையே** a , ā , i , ī ,u ,ū ,e, ē ,ai ,o, ō, au, kh **எனவும்,**

**க், ங் , ச், ஞ் , ட் ,ண், த், ந் , ப், ம், ய், ர் , ல் , வ், ழ், ள், ற் , ன் - வ்வெழுத்துக்கள் முறையே** k, ṅ , s, ñ , t , ṇ, ṭ , n , p , m , y , r , l , v ,ḻ ,ḷ, ṛ , ṉ, kh

**எனவும் ஆங்கில எழுத்துப்பெயர்ப்பில் பயன்படுத்தப் பெற்றுள்ளன.**

# நன்னூல் உரைவளம் – தொகுதி – 6

## எழுத்ததிகாரம்

# உயிரீற்றுப் புணரியல் – 1

## COMBINATION OF VOWEL FINALS

150. மெய்யுயிர் முதலீ றாமிரு பதங்களும்
தன்னொடும் பிறிதொடு மல்வழி வேற்றுமைப்
பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே.

மெய் உயிர் முதல் ஈறு ஆம் இரு பதங்களும்
தனோடும் பிறிதோடும் அல்வழி வேற்றுமைப்
பொருளின் பொருந்துழி நிலை வருமொழிகள்
இயல்போடு விகாரத்து இயைவது புணர்ப்பே

mey uyir muṭal īṛu ām iru paṭaṅkaḷum
ṭan̲ōtum piṛiṭōtum alvaḷi vēṛṛumaip
poruḷin̲ poruṉṭuḷi nilai varumoḷikaḷ
iyalpōtu vikāraṭṭu iyaivaṭu puṇarppē

இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### COMBINATION

### Combination defined

When simple and compound words, whose initials and finals are either Vowels or Consonants combine, each with itself or each with the other, casually or in casually, — the natural or

mutational **union** which takes place between (the finals and initials) of any such contiguous pair of words is called **combinations.**

## ஒப்புமைப் பகுதி

உயிரிறு சொல்முன் உயிர்வரு வழியும்
உயிரிறு சொல்முன் மெய்வரு வழியும்
மெய்யிறு சொல்முன் உயிர்வரு வழியும்
மெய்யிறு சொல்முன் மெய்வரு வழியுமென்று
இவ்வென அறியக் கிளக்குங்காலை
நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவியென்று
ஆயீ ரியல புணர்நிலைச் சுட்டே.

(தொல்.:108)

அவற்றுள்
நிறுத்த சொல்லின் ஈறா கெழுத்தொடு
குறித்து வருகிளவி முதலெழுத் தியையப்
பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்
பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலும்
தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலும்
தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலும்
மூன்றே திரிபிடன் ஒன்றே இயல்பென
ஆங்கந் நான்கே மொழிபுணர் இயல்பே.

(தொல்.: 109)

மெய்யீ றுயிரீ றுயிர்முதன் மெய்ம்முதலா
எய்தும் பெயர்வினையும் இவ்வகையே – செய்தமைத்தாற்
றோன்றல் திரிதல் கெடுதலெனத் தூமொழியாய்
மூன்றென்ப சந்தி முடிவு.

(நேமி.: 12)

மெய்யுயிர் முதலீ றாமிரு பதங்களுந்
தம்மொடும் பிறவொடு மல்வழி வேற்றுமைப்
பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிக
ளியல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே.

(இ.வி.: 53).

நிலைவரு மொழியொடு நேர்வது புணர்ப்பே

(மு.வீ.: 160)

**அதுதான்**
**இயல்பு விகார மெனவிரு பாலன**

(மு.வீ.: 161.)

**உயிர்மெய்முத லிறாகும் இருபதந்தம் மொடு வேறொடு**
**நாற்சந்தியின் பொருளாளின் மொழி அம்மொழியாய்**
**இயல்புவிகா ரத்தினாற்புணர் வாம்...**

(சுவாமி.: 28)

## மயிலை நாதர்

என்பது சூத்திரம். இவ்வோத்து என்னுதலிற்றோ வெனின், ஓத்து நுதலியதூஉம் ஒத்தினது பெயருரைப்பவே விளங்கும். ஆயின் இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், உயிரீற்றுப் பதம் புணருமா றுணர்த்திற் றாகலான், **உயிரீற்றுப் புணரிய** லென்னும் பெயர்த்து. மேலோத்தினோடு இதற்கு இயைபு என்னையோ வெனின், மேலோத்தினுட் பதங்களாமா றுணர்த்தி இதனுட் பதங்கள் தம்மிற் புணருமாறு ணர்த்தினமையின் அதனோடு இயைபுடைத் தென்க.

இவ் வோத்தினுள் இத் தலைச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், புணர்ச்சி யிலக்கண முணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.: மெய்யுயிர் முதலிறாம்** – மெய் முதலாயும் உயிர் முதலாயும் மெய் ஈறாயும் உயிரீறாயு முள்ள, **இரு பதங்களும்** – பகாப் பதங்களும் பகு பதங்களும், **தன்னொடும் பிறிதொடும்** – மெய்யீற்றின் முன் மெய்ம் முதல் வந்தும் மெய்யீற்றின் முன் உயிர் முதல் வந்தும் உயிரீற்றின் முன் உயிர் முதல் வந்தும் உயிரீற்றின் முன் மெய்ம் முதல் வந்தும் பகாப்பத முன் பகாப்பதம் வந்தும் பகாப்பதம்முன் பகுபதம் வந்தும் பகுபத முன் பகுபதம் வந்தும் பகுபத முன் பகாப்பதம் வந்தும், **அல்வழி வேற்றுமைப் பொருளில்** – அல்வழிப் பொருளினானாதல் வேற்றுமைப் பொருளினானாதல், **பொருந்துழி** – புணருமிடத்து, **நிலை வருமொழிகள்** – நிலைமொழியும் வருமொழியும், **இயல்பொடு விகாரத்து** – இயல்பாகியும் விகாரமாகியும், **இயைவது** – பொருந்துவது, **புணர்ப்பு** – புணர்ச்சியாவது, **எ—று.** ஏகாரம் ஈற்றசை.

ஈண்டு மெய்யை முற்கூறினார், முதலினும் ஈற்றினும் விகாரப்படப் புணர்தற் சிறப்பு நோக்கி யென்க.

**வ—று.:—**

பொன்கழஞ்சு, பொன்னிருகழஞ்சு, மணியொன்று, மணி
மூன்று என மெய்யும் உயிரும் தன்னொடும் பிறிதொடும்

வந்தன. பொன்முடி, பொன்கொள் எனவும்; வா, போ, உண்சாத்தா எனவும்; "அது மற்றம்ம தானே" "அதுகொ றோழி காம நோயே" (குறுந்.5) எனவும்; "கொம்மைக் குழகாடுங் கோலவரைமார்பா" (சீவக. 2790) "மல்லற் செல்வமொடு" எனவும் பகாப்பத நான்கும் தன்னொடும் பிறிதொடும் வந்தன. மலையன் மன்னவன், மலையன் மன் எனவும்; [1]வானவன் வாளவன், வானவன் வாள் எனவும் [2]பரணியான் பாரவன், பரணியான் பாரெனவும்; இளையள்மடவாள், இளையள் பெண் எனவும்; கரியான் மலையன், கரியான் கால் எனவும்; ஊணன்தீனன், ஊணன் உரம் எனவும் பெயர்ப்பகுபதம் தன்னொடும் பிறிதொடும் வந்தது. உண்டான் தின்றான், உண்டான் சாத்தன் என வினைப் பகுபதம் தன்னொடும் பிறிதொடும் வந்தது. பிறவுமன்ன, சாத்தன்கடியன் எனவும், சாத்தன்கடுமை எனவும் அல்வழியும் வேற்றுமையும் வந்தன. பொற்பூண், மணிப்பூண், இருபஃது என நிலைமொழியும் வருமொழியும் இருமொழியும் முறையே விகாரப்பட்டன. திருமகள், மணிப்பூண், பொற்குடம், மணமுரசு என இயல்பும், மூன்று விகாரமும் வந்தன.

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின்,** நிறுத்த முறையானே மேலை இயலுள் கூறிய பதங்கள் ஒன்றோடு ஒன்று புணருமாறு உணர்த்துவான் தொடங்கிப் புணர்ச்சி இன்னது என்பதூஉம், பொதுப்புணர்ச்சியும் முறையே தலைப்பெய்து உயிரீற்றுப்பதம் புணரும். சிறப்புப்புணர்ச்சி கூறுவார், கமுகந்தோட்டம் என்றாற்போல மிகுதி பற்றிய குறியாய் இவ்வியற்கு உயிரீற்றுப் புணரியல் எனப் பெயர் தந்தமையின், இவ்வியலில் வைத்தமுறையே புணர்ச்சியின்னது என்பது **உணர் – ற்று.**

**இ–ள்.:–** மெய்யையும் உயிரையும் முதலும் ஈறுமாக வுடைய பகாப்பதம் பகுபதம் என்னும் இரண்டு பதங்களும், தன்னொடு தானும் பிறிதொடு பிறிதுமாய் அல்வழிப் பொருளினானாதல் வேற்றுமைப் பொருளினானாதல் பொருந்துமிடத்து, நிலைமொழியும் வருமொழியும் இயல்போடும் விகாரத்தோடும் பொருந்துவது மேற்கூறிய புணர்ச்சியாம், **எ–று.**

---

**பாடவேறுபாடு.:–**

1. **வானவன் வளவன்,**

2. **பரணியான் அரணியான்**

'உயிர்மெய் முதலீறாம்' எனின், உயிர்மெய் என்னும் ஒரெழுத்தாய்ப் பொருள்படுமாதலின், 'மெய்யுயிர் முதல் ஈறாம்' என மெய்யை முற் கூறினார். திசைச்சொல்லும் வடசொல்லும் பெயர் வினை இடை உரியாய் அடங்கு மாதலின், அவற்றுள் அடக்கி இருபதங்களும் என்றார்.

வேற்றுமை யல்லாத வழி அல்வழியாதலின், வேற்றுமை யல்வழி எனக்கூறல் வேண்டும்; அங்ஙனம் கூறின், வேற்றுமைப் பொருள் அல்வழிப்பொருள் என இருபொருள் படாது, வேற்றுமை என்பது அல்வழியை விசேடித்ததாய் அவ்வழிப் பொருள் ஒன்றினும் பொருந்துழி எனப் பொருள்படுமாதலின், அல்வழி வேற்றுமை என அல்வழியை முற் கூறினார்.

இயல்பு எனினும், தன்மை எனினும், இயற்கை எனினும் ஒக்கும். விகாரம் எனினும், செயல் எனினும், செயற்கை எனினும், விதி எனினும் ஒக்கும். இவ்விரண்டனுள்,

**"நின்ற சொல்முன் இயல்பா கும்மே"**

என இயற்கையைச் செயற்கையாகவும்,

**"இசையா ஒருபொருள் இல்லென்றல் யார்க்கும்
வசையன்று வையத் தியற்கை"**

எனச் செயற்கையை இயற்கையாகவும் கூறுதல் இலக்கணை.

புணரியல் மூன்றனுள்ளும் மெய்யுயிர் முதலீறாம் இருபதங்களும் இவ்வாறு புணர்ந்து வருதல் காண்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்**, புணர்ச்சிக்கு இலக்கணம் இவ்வாறு வருமெனக் கூறியது.

**இ—ள்.: மெய்யுயிர் முதலீ றாம்** – மெய் முதலாய் உயிர் ஈறாயும் உயிர் முதலாய் மெய் ஈறாயும் மெய் முதலாய் மெய் ஈறாயும் உயிர் முதலாய் உயிர் ஈறாயும் வரும், **இரு பதங்களும்** – பகாப்பதங்களும் பகுபதங்களும், **தன்னொடும்** – மெய்யீற்றின் முன் மெய் முதல் வந்தும் உயிரீற்றின் முன் உயிர் முதல் வந்தும், **பிறிதொடும்** – மெய்யீற்றின் முன் உயிர் முதல் வந்து, உயிரீற்றின்முன் மெய்முதல் வந்தும், **அல்வழி வேற்றுமைப் பொருளில்** – அல்வழிப் பொருளினானாதல் வேற்றுமைப் பொருளினானாதல், **பொருந்துழி** – வந்து புணருமிடத்து, **நிலைவருமொழிகள்** – நிலைமொழியும் வருமொழியும், **இயல்பொடு** – இயல்பாகியும் வருமொழி இயல்பாகியும் இரு மொழியும் இயல்பாகியும், **விகாரத்து** – நிலைமொழி விகாரமாகியும்

வருமொழி விகாரமாகியும் இரு மொழியும் விகாரமாகியும், **இயைவது புணர்ப்பே** – பொருந்துவது புணர்ச்சியின் முறையாம், **எ–று.**

**உ–ம்.:–**

பொன்கழஞ்சு, மணியொன்று, பொன்னிருகழஞ்சு, மணிமூன்று என மெய்யும் உயிரும் தன்னொடும் பிறிதொடும் வந்தன. மரம் என மெய் முதலும் மெய்யீறும், இலை என உயிர்முதலும் உயிரீறும் ஆல் என உயிர்முதலும் மெய்யீறும், விள என மெய் முதலும் உயிரீறும் என மெய் உயிர் முதல் ஈறாய் வந்தன. புணர்ச்சி யென்பது ஒன்றுண்டாம் பிறவெனின் அச்சொற்களைக் கூறுகின் றோரும் கேட்கின்றோரும் அவ்வோசையை இடையறவு படாமை உள்ளத்தின் கண்ணே உணர்வராதலின் அவ் வோசை கெடின் உள்ளத்தின்கண் நிலைபெற்றுப் புணர்ந்தனவே யாம். ஆகவே பின்னர் கண்கூடாகப் புணர்க்கின்ற புணர்ச்சியும் முடிந்தனவேயாம் என்று உணர்க.

## விசாகப் பெருமாளையர்

இது, நிறுத்த முறையினாலே புணர்ச்சியை அறிவிக்கத் தொடங்கிப் புணர்ச்சி இன்னதென்பதும் பொதுப்புணர்ச்சியும் ஆகிய விரண்டுடனே உயிரீற்றுப்பதம் புணருஞ் சிறப்புப் புணர்ச்சி இவ்வியலாற் சொல்லப்படுதலால் இவ்வியலிலே வைத்த முறைப்படி புணர்ச்சி இப்படிப்பட்ட தென்று உணர்த்துகின்றது.

**இ–ள்.:– மெய்யுயிர்**–மெய்யாவது உயிராவது, **முதலீறாம்**– முதலு மீறுமாகிய, **இரு பதங்களும்** – பகாப்பதம் பகுபதம் என்கின்ற யிரண்டு பதங்களும், **தன்னொடும் பிறிதொடும்** – தன்னொடு தானும், பிறிதொடு பிறிதுமாய், **அல்வழி வேற்றுமைப்பொருளின்** – அல்வழிப் பொருளி னாலாவது வேற்றுமைப் பொருளி னாலாவது, **பொருந்துழி** – பொருந்து மிடத்து, **நிலை வரு மொழிகள்** – நிலைமொழியும் வருமொழியும், **இயல்பொடு விகாரத்து** – இயல்போ டாயினும் விகாரத்தோ டாயினும், **இயைவது** – பொருந்துவது, **புணர்ப்பு** – முன் சொல்லப்பட்ட புணர்ச்சியாம், **எ–று.**

'மெய்யுயிர் முதலீறாம்' எனவே, மெய்ம் முதன் மெய்யீறு, உயிர் முதலுயிரீறு, மெய்ம் முதலுயிரீறு, உயிர்முதன் மெய்யீறு என நான்கு வகையாம்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

பன்னிரண்டு பகுதியினதாகிய எழுத்ததிகாரத்தில் இதுகாறும் எத்தனைபகுதி கூறப்பட்டன?

எண்முதற் பதமீறாகிய பதினொன்றுங் கூறப்பட்டன.

ஆக எழுத்ததிகாரம் எத்தனை இயல்களையுடையது?

எழுத்தியல், பதவியல், புணரியல் என மூன்றியல் களையுடையது.

இனிக் கூறக் கிடக்கும் பகுதி யாது?

புணர்ச்சி

புணர்ச்சியாவது யாது?

மெய்யுயிர் முதலீ றாமிரு பதங்களுந்
தன்னொடும் பிறிதொடு மல்வழி வேற்றுமைப்
பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே.

(மெய் உயிர் முதல் ஈறு ஆம் இருபதங்களும்
தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்
பொருளின் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத்து இயைவது புணர்ப்பே).

**இ—ள்.: —மெய் உயிர் முதல் ஈறு ஆம் இருபதங்களும்** — மெய்முதலாயும், உயிர்முதலாயும், மெய்யீறாயும் உயிரீறாயும் உள்ள பகாப்பதம், பகுபதம் என்னும் இரண்டு பதங்களும், **தன்னொடும் பிறிதொடும்** — தன்னொடுதானும் தன்னொடு பிறிதுமாய், **அல்வழி வேற்றுமைப் பொருளின் பொருந்துழி** — அல்வழிப் பொருளினாலேனும் வேற்றுமைப் பொருளினாலேனும் பொருந்துமிடத்து, **நிலைவருமொழிகள் இயல்பொடு விகாரத்து இயைவது புணர்ப்பு** — நிலைமொழியும் வருமொழியும் இயல்போடாயினும் விகாரத்தோ டாயினும் பொருந்துவது புணர்ச்சியாம், **எ—று.**

புணர்ச்சி எத்தனை வகைப்படும்?

இயல்பு புணர்ச்சி விகாரப்புணர்ச்சி என இருவகைப்படும்.

பொருணோக்கினால் புணர்ச்சி எத்தனை வகைப்படும்?

அல்வழிப்புணர்ச்சி வேற்றுமைப்புணர்ச்சி என இரு வகைப்படும்.

தன்னோடு தான் புணர்வதெப்படி?

ஆல்–வீழ்ந்து என்னுமிடத்து ஆல் என்னும் நிலைமொழியீறாகிய லகரமெய்யும் வீழ்ந்தது என்னும் வருமொழி முதலாகிய வகரமெய்யும் புணர்தலின் தன்னொடு தான் புணர்தலாயிற்று. ஆ உண்டு ஆவுண்டு என்பதிலும் உயிரீறும் உயிர்முதலும் வருதலின் தன்னொடுதானே. ஆலிலை ஆல் இலை என மெய்யீறும் உயிர்முதலும் புணர்தலின் தன்னொடு பிறிது புணர்தல். பெயரொடு பெயரும் பெயரொடு வினையும் பிறவும் வருதலுங் கொள்க.

நிலைமொழியாவது யாது?

இருமொழி புணருமிடத்து முதலில் நிறுத்துமொழி

வருமொழியாவது யாது?

வந்துபுணரும் இரண்டாமொழி

## முகவை இராமானுச கவிராயர்

**இது**, நிறுத்த முறையே மேலையியலுட் கூறிய பதங்க ளொன்றோ டொன்று புணருமா றுணர்த்தத் தொடங்கிப் புணர்ச்சி யின்ன தென்பதும், பொதுப்புணர்ச்சியும் உயிரீற்றுப்பதம் புணருஞ் சிறப்புப் புணர்ச்சியும் இவ் வியலாற் கூறுவராதலால், வைத்த முறையே இச் சூத்திரம் புணர்ச்சி யின்னதென்பதுணர்த்திற்று.

**இ–ள்.:– மெய்யுயிர் முதலீறாமிருபதங்களும்** – மெய்யையும் உயிரையும் முதலும் ஈறுமாகவுடைய பகாப்பதம் பகுபத மென்னும் இரண்டு பதங்களும், **தன்னொடும் பிறிதொடும்** – தன்னொடு தானும் பிறிதொடு பிறிதுமாகி, **அல்வழி வேற்றுமைப் பொருளிற் பொருந்துழி** – அல்வழிப் பொருளினாலாவது வேற்றுமைப் பொருளினாலாவது பொருந்துமிடத்து, **நிலைவருமொழிகள்** – நிலைமொழியும் வருமொழியும், **இயல்பொடு விகாரத்து** – இயல்போடாவது விகாரத்தோடாவது, **இயைவது புணர்ப்பு** – பொருந்துவது மேற்கூறிய புணர்ச்சியாம், **எ–று.**

> மெய்யையும் அல்வழியையும் முன் வைத்தது, உயிர்மெய் யென்றும் வேற்றுமை யல்லாதவழி யென்றும் பொருள்படுமாதலால் அதனை விலக்குதற் பொருட்டெனக் காண்க.
>
> இயல்பு, இயற்கை, தன்மை, சுபாவம் என்பன ஒரு பொருள். செயற்கை, செயல், விகாரம், விதி என்பன ஒரு பொருள். இவ் விரண்டினுள் "நின்ற சொன் முன்னியல்பா கும்மே" என இயற்கையைச் செயற்கை யாகவும், "இல்லென்றல் வசையன்று வையத்தியற்கை" எனச்

செயற்கையை இயற்கை யாகவுங் கூறுவது இலக்கணை. இலக்கணை யென்பது ஒன்றை யொன்றாகவும் ஒரு பொருளின் தன்மையை மற்றொரு பொருளின் தன்மை யாகவுங் கூறுவது. இவ்வாறு புணரியல் மூன்றினுள்ளும், இயற்கை செயற்கையாவும் – செயற்கை இயற்கையாவும் வருதல் காண்க.

'ணன வல்லினம் வரட்டரவு' மென்பது செயற்கையைச் செயற்கையாகக் கூறியது, இயற்கையை இயற்கையாகக் கூறலாகாமை யுணர்க.

இவ்வியலுள், புணர்ச்சி இன்னதென்பதும் பொதுப்புணர்ச்சி யும் உயிரீற்றுப்பதம் புணருஞ் சிறப்புப் புணர்ச்சியுங் கூறுவோர் இவ்வியலை உயிரீற்றுப் புணரியல் என்றது என்னெனின், அவை சிறுபான்மை யாதலால்; கமுகந் தோட்டமென்றாற் போல மிகுதி பற்றிய குறியாய் இந்த இயலுக்கு உயிரீற்றுப் புணரியல் எனப் பெயர் தந்தாரென்க. இயைவது புணர்ப்பு என முற்றும் பயனிலையுமாக முடிந்தது இச் சூத்திரம்.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

அஃதாவது உயிரை இறுதியிலுடைய மொழிகளோடு உயிர்முதன் மொழியும் மெய்ம்முதன் மொழியும் புணரும் இயல்.

**உரை :–** **மெய் உயிர்** – மெய்யையும் உயிரையும், **முதல் ஈறு ஆம்** – முதலும் இறுதியுமாகவுடைய, **இருபதங்களும்** – (பகாப்பதம் பகுபதம் என்ற) இரண்டு பதங்களும், **தன்னொடும் பிறிதொடும்** – தன்னொடுதானும் (பகுபதத்தோடு பகுபதமும், பகாப்பதத்தோடு பகாப்பதமும்) பிறிதொடு பிறிதுமாய் (பகுபதத்தோடு பகாப்பதமும் பாகப்பதத்தோடு பகுபதமுமாய்), **அல்வழி வேற்றுமை பொருளின்** – அல்வழிப் பொருளினாலாவது வேற்றுமைப் பொருளினாலாவது, **பொருந்துழி** – பொருந்துமிடத்து, **நிலை வரு மொழிகள்** – நிலைமொழியும் வருமொழியும், **இயல்பொடு விகாரத்து** – இயல்பாகவேனும் விகாரமாகவேனும், **இயைவது** – பொருந்துவது, **புணர்ப்பு** – (முன் சொல்லப்பட்ட) புணர்ச்சியாம்.

**குறிப்பு :–**

'மெய்யுயிர் முதலீறாம்' என்றதனால் உயிரீற்றின் முன் உயிர்முதன்மொழி புணர்தலும், உயிரீற்றின் முன் மெய்ம்முதன்மொழி புணர்தலும், மெய்யீற்றின் முன் உயிர்முதன்மொழி புணர்தலும், மெய்யீற்றின் முன்

மெய்ம்முதன்மொழி புணர்தலும் என நான்கு விதமாய்ப் புணருமென்றதாயிற்று.

**உ–ம் :–**

| | | | |
|---|---|---|---|
| கிளி + அழகு ... | ... | உயிர்முன் | உயிர். |
| கிளி + சிறை ... | ... | உயிர்முன் | மெய். |
| மரம் + உயர்வு ... | ... | மெய்முன் | உயிர் |
| மரம் + நெடிது ... | ... | மெய்முன் மெய் | |

இயல்பும் விகாரமுமாகிய இப்புணர்ச்சிகள் மெய்யினிடத்து நிகழ்தல் போல உயிரினிடத்து நிகழா என்றற்கு மெய்யை முற்கூறினார் என்க. (இயல்பு, இயற்கை, தன்மை சுபாவம் என்பன ஒருபொருளன. விகாரம், செயற்கை, செயல், விதி என்பன ஒரு பொருளன).

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:– மெய் உயிர் முதல் ஈறு ஆம் இருபதங்களும்** – மெய்யையும் உயிரையும் முதலும் ஈறுமாக வுடைய பகாப்பதம் பகுபதம் என்னும் இரண்டு பதங்களும், **தன்னொடும் பிறிதொடும்** – தன்னொடு தானும் பிறிதொடு பிறிதுமாய், **அல்வழி வேற்றுமைப் பொருளின் பொருந்துழி** – அல்வழிப் பொருளினாலேனும் வேற்றுமைப் பொருளினாலேனும் பொருந்துமிடத்து, **நிலை வருமொழிகள் இயல்பொடு விகாரத்து இயைவது** – நிலைமொழியும் வருமொழியும் இயல்போ டாயினும் விகாரத்தோ டாயினும் பொருந்துவது, **புணர்ப்பு** – முன் சொல்லப்பட்ட புணர்ச்சியாம், **எ–று.**

மெய்யுயிர் முதலிறா மெனவே, மெய்ம் முதன் மெய்யீறு, உயிர் முதலுயிரீறு, மெய்ம் முதலுயிரீறு, உயிர் முதன் மெய்யீறு என நால் வகைப்படு மென்றாராயிற்று.

இயல்பு, இயற்கை, தன்மை என்பன ஒருபொருட் சொற்கள். விகாரம், செயல், செயற்கை, விதி என்பன ஒரு பொருட்சொற்கள்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். மெய் உயிர் முதல் ஈறு ஆம் இருபதங்களும்** – மெய்யையும் உயிரையும் முதலு மீறுமாகவுடைய பகாப்பதம் பகுபதம் என்னும்இருவகைப் பதங்களும், – **தன்னொடும் பிறிதொடும்** – தென்னொடுதானும் பிறிதொடுபிறிதுமாய், – **அல்வழி வேற்றுமைப் பொருளின் பொருந்துழி** – அல்வழிப் பொருளினாலேனும் வேற்றுமைப் பொருளினாலேனும்

பொருந்துமிடத்து, – **நிலை வரு மொழிகள்** – நிலைமொழியும் வருமொழியும், – **இயல்பொடு விகாரத்து இயைவது** – இயல்பாகவேனும் விகாரமாகவேனும் சந்திப்பது, – **புணர்ப்பு** – முன்சொல்லப்பட்ட புணர்ச்சியாம். **எ–று.**

மெய்யுயிர் முதலீறாம் எனவே : – மெய்ம்முதன் மெய்யீறு, மெய்ம்முதல் உயிரீறு, உயிர்முதல் உயிரீறு, உயிர்முதன் மெய்யீறு என்று சொற்கள் நால்வகைப் படுமென்றுணர்க. உ–ம். கனகம், கடுகு, உவகை, ஓடம் என முறையே காண்க.

தன்னொடும் பிறிதொடும் எனவே : – நிலைமொழி வருமொழிகளில் உயிரீறும் உயிர்முதலுஞ் சந்தித்தலும், உயிரீறும் மெய்ம்முதலுஞ் சந்தித்தலும், மெய்யீறும் மெய்ம்முதலுஞ் சந்தித்தலும், மெய்யீறும் உயிர்முதலுஞ் சந்தித்தலும் என்று எழுத்துவகையால் புணர்ச்சி நால்வகைப் படுமென்பதும், இருபதங்களும் என்றது பகாப்பதம், பகுபதங்களையாதலின் தன்னொடும் பிறிதொடும் என்றது பகாப்பதத்தொடு பகாப்பதமும், பகுபதத்தொடு பகுபதமும்; பகாப்பதத்தொடு பகுபதமும், பகுபதத்தொடு பகாப்பதமும் நிலைமொழி வருமொழிகள் சந்தித்தலும் என்று பதவகையால் நால்வகைப் புணர்ச்சி குறிக்கப்படுமென்பதும். உ–ம். பொன் + ஒளி; கற்றோர் + புகன்றார்; வாழை + முரிந்தது; விழுந்தது + மரம் என முறையே காண்க.

அல்வழி வேற்றுமைப் பொருளில் பொருந்துழி எனவே : – அல்வழிச் சந்தி வேற்றுமைச் சந்தியென்று பொருணோக்கத்தாற்புணர்ச்சியிருவகைப் படுமென்பதும். உ–ம். வாழைமுரிந்தது, பழத்தை உண்டான் என வரும்.

இயல்பொடு விகாரத் தியைவது எனவே இயல்புச்சந்தி விகாரச்சந்தியென்று சுபாவபேதங்களால் இருவகைப் படும் புணர்ச்சியென்பதும் உணர்க.

உ–ம்.:–

பொன்விலை, புகழ்அழகிது எனவும்.வாழைப்பழம், பொற்கலம், மரவேர் எனவும். வரும். இவற்றிற் சுபாவமும் பேதமுங் காண்க. இயல்பு, இயற்கை, தன்மை, சுபாவம் என்பன ஒருபொருட் சொற்கள். விகாரம், செயற்கை, செயல், விதி, பேதம் என்பன ஒருபொருட் சொற்கள்.

இவ்விரு வகைகளையும் இணைத்தால், அல்வழி இயல்புச்சந்தி, அல்வழி விகாரச்சந்தி, வேற்றுமை

இயல்புச்சந்தி, வேற்றுமை விகாரச்சந்தி என்று நால்வகைப்படுமென்றறிக. இவற்றில் உயிரீறு, மெய்யீறு, உயிர்முதல், மெய்ம்முதல்களும் பகாப்பதம் பகுபதங்களும் ஆகிய அனைத்தும் அடங்கி நிலைமொழி வருமொழிகளாய் நிற்றலுங்காண்க.

நிலைமொழியாவது சந்திப்பில் இடப்புறத்தில் நிற்கும் பதம்; அதற்குப் பின்னாக வலப்புறத்தில் வந்தமொழி வருமொழியாம். (சூத்திரம்.) ; – "சந்தியிலிடமொழி நிலைமொழியாமதன், பிந்தியவலமொழி வருமொழிப் பெயர்பெறும்" என்பதனாலறிக.

உயிர்மெய் முதலீறாம் என்று முறையிற் கூறாமல், மெய்யுயிர் முதலீறாம் என்று முறைபிறழக் கூறியது என்னையெனின்; உயிர்மெய் முதலீறாம் என்று கூறின் உயிர்மெய்யென்னும் எழுத்தென்று கருதப்பட்டு உயிர்மெய் யெழுத்து முதல் உயிர்மெய்யெழுத்து ஈறாம் என்று பொருள்பட்டு மெய்ம்முதல் உயிரீற்றுப்பதம் மாத்திரங் குறிக்கப்பட்டு மெய்ம்முதல் மெய்யீறும், உயிர்முத லுயிரீறும், உயிர்முதல் மெய்யீறும் ஆகிய மற்றவை மூவகைப் பதங்களும் அடங்காவாம் ஆதலின் அந்நால் வகையும் அடங்குதற் பொருட்டு மெய்ம்முத லுயிரீறாமென்று கூறியதென்றுணர்க.

வேற்றுமையல்லாதவழி அல்வழியாதலின் வேற்றுமை யல்வழிப் பொருளின் என்று முறையிற் கூறாமல் அல்வழி வேற்றுமைப் பொருளின் என்று கூறியது என்னை யெனின்; வேற்றுமை யல்வழிப்பொருளின் என்று கூறின் (வேற்றுமைவழி யல்லாததாகிய) அல்வழியென்று இவ் வொன்றுமே கருதப்பட்டு வேற்றுமைவழி கொள்ளப் படாதுபோம் ஆதலின் ஐயநீக்கி அவ்விரு வழியையுங் குறித்தற்கு அல்வழியை முன்வைத்து அவ்வாறு கூறினாரென்றறிக.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

உயிரெழுத்துக்களை இறுதியி லுடைய நிலை மொழிகளோடு உயிர் முதலும் மெய்ம் முதலுமாகிய வருமொழிகள் புணரும் விதத்தைச் சொல்லும் இயல்.

**இ–ள்.: மெய் உயிர்**–மெய்யையும் உயிரையும், **முதல் ஈறு ஆம்**–முதலும் இறுதியுமாக வுடைய, **இரு பதங்களும்** – (பகாப்பதம் பகுபதம் என்ற)

இரண்டு பதங்களும், **தன்னொடும் பிறிதொடும்** – தன்னொடு தானும் பிறிதொடு பிறிதுமாய், **அல்வழி வேற்றுமை பொருளின்**– அல்வழிப் பொருளினா லாவது வேற்றுமைப் பொருளினா லாவது, **பொருந்து உழி** – பொருந்து மிடத்து, **நிலை வரு மொழிகள்** – நிலைமொழியும் வருமொழியும், **இயல்பொடு விகாரத்து** – இயல்பாக வாயினும் விகாரமாக வாயினும், **இயைவது** – பொருந்துவது, **புணர்ப்பு** – (முன் சொல்லப்பட்ட) புணர்ச்சியாம், **எ–று.**

உயிரீற்றின் முன் உயிர் முதல்மொழி புணர்தல், உயிரீற்றின் முன் மெய்ம் முதல்மொழி புணர்தல், மெய்யீற்றின் முன் உயிர் முதல்மொழி புணர்தல், மெய்யீற்றின் முன் மெய்ம்முதல் மொழி புணர்தல் எனப் புணர்ச்சி நான்கு வகையாம்.

**உ–ம்.:–**

மெய்ம்முத லுயிரீறு – மணி.
மணி+அழகு – உயிர்முன் உயிர்.

உயிர்முத லுயிரீறு–அது.

நிலம்+வலிது – மெய்ம்முன் மெய்.

உயிர்முதல் மெய்யீறு–அவன்.

மணி+பெரிது–உயிர் முன் மெய்.

மெய்ம்முதல் மெய்யீற்று–கல்.
நிலம்+அழகிது–மெய்ம்முன் உயிர்.

தன்னொடு தான் பொருந்துதலாவது, பகுபதத்தோடு பகுபதமும், பகாப் பதத்தோடு பகாப்பதமும் புணர்தல். பிறிதொடு பிறிது பொருந்துதலாவது, பகுபதத்தோடு பகாப்பதமும் பகாப்பதத்தோடு பகுபதமும் புணர்தல்.

**உ–ம்.:–**

| | | |
|---|---|---|
| அவன்+ | வந்தான் | – பகுபதத்தோடு பகுபதம். |
| பொன் + | கலம் | – பாகாப்பதத்தோடு பகாப்பதம். |
| பொன்னன் + | கை | – பகுபதத்தோடு பகாப்பதம். |
| கிளி + | அழகிது | – பகாப்பதத்தோடு பகுபதம். |

'உயிர்மெய்முதலிறாம்' என்றும், வேற்றுமை யல்வழி என்றுங் கூறினால், உயிர்மெய் யென்னும் ஒரெழுத் தென்றும் வேற்றுமை யல்லாதவழி யென்றும் பொருள்பட்டு **மயங்க வைத்த லென்னும்** குற்றத்துக்கு இடமா மாதலால், அங்ஙனங் கூறாது,மெய்யுயிர்'என்றும், அல்வழி வேற்றுமை என்றும் மாற்றிக் கூறினார்.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:– மெய் உயிர் முதல் ஈறு ஆம் இருபதங்களும்** – மெய்யையும் உயிரையும் முதலும் ஈறுமாகவுடைய பகாப்பதம் பகுபதம் என்னும் இரண்டு பதங்களும், **தன்னொடும் பிறிதொடும்** – தன்னொடு தானும் பிறிதொடு பிறிதுமாய், **அல்வழி வேற்றுமைப் பொருளின் பொருந்துழி**– அல்வழிப் பொளினாலேனும் வேற்றுமைப் பொருளினாலேனும் பொருந்துமிடந்து, **நிலை வருமொழிகள் இயல்பொடு வகிாரத்து இயைவது** – நிலைமொழியும் வருமொழியும் இயல்போடாயினும் விகாரத்தோடாயினும் பொருந்துவது, **புணர்ப்பு** – முன் சொல்லப்பட்ட புணர்ச்சியாம். எ–று.

மெய்யுயிர் முதலீறாமெனவே, மெய்ம்துன் மெய்யீறு, உயிர் முதலுயிரீறு, மெய்ம்முதலுயிரீறு, உயிர் முதன் மெய்யீறு என நால்வகைப் படு மென்றராயிற்று.

இயல்பு, இயற்கை, தன்மை என்பன ஒருபொருட் சொற்கள். விகாரம், செயல், செயற்கை, விதி என்பன ஒருபொருட் சொற்கள்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

உயிரெழுத்துக்களை இறுதியிலுடைய நிலைமொழிகளோடு உயிர் முதலும் மெய்ம் முதலுமாகிய வருமொழிகள் புணரும் விதத்தைச் சொல்லுமியல்.

**இ–ள்.:– மெய் உயிர்** – மெய்யாவது உயிராவது, **முதல் ஈறு ஆம்**– முதலும் ஈறுமாகிய, **இரு பதங்களும்** – (பகாப்பதம் பகுபதம் என்கின்ற) இரண்டு பதங்களும், **தன்னொடும் பிறிதொடும்** – தன்னோடு தானும் பிறிதொடு பிறிதுமாய், **அல்வழி வேற்றுமைப் பொருளின்** – அல்வழிப் பொருளினாலாவது வேற்றுமைப் பொருளினாலாவது, **பொருந்துழி** – பொருந்துமிடத்து, **நிலை வரு மொழிகள்** – நிலை மொழியும் வருமொழியும், **இயல்பொடு விகாரத்து** – இயல்போடாயினும் விகாரத்தோ டாயினும், **இயைவது** – பொருந்துவது, புணர்ப்பு – (முன் சொல்லப்பட்ட) புணர்ச்சியாம். எ–று.

**பொ–ரை.:–**

மெய்யையாவது உயிரையாவது முதலும் ஈறுமாகவுடைய பகாப்பதம், பகுபதம் என்னும் இரண்டு பதங்களும் தன்னோடு தானும் பிறிதோடு பிறிதுமாய், அல்வழிப் பொருளினாலாவது வேற்றுமைப் பொருளினாலாவது பொருந்து மிடத்து, நிலை மொழியும் வருமொழியும்,

இயல்போடாயினும் விகாரத்தோடாயினும் பொருந்துவது (முன் சொல்லப்பட்ட) புணர்ச்சியாம்.

'மெய்யுரிர் முதலிறாம்' எனவே மெய்ம் முதல் மெய்யீறு, உயிர் முதல் உயிரீறு, மெய்ம் முதல் உயிரீறு, உயிர் முதல் மெய்யீறு என நான்கு வகையாம்.

உ-ம்.:-

மெய்ம் முதல் மெய்யீறு–கல்.

உயிர் முதல் உயிரீறு – அது.

மெய்ம் முதல் உயிரீறு – மணி.

உயிர் முதல் மெய்யீறு – அவன்.

இனி, மெய்ம் முன் மெய் புணர்தல் – நிலம்+வலிது.

உயிர் முன் உயிர் புணர்தல் – மணி + அழகு.

மெய்ம் முன் உயிர் புணர்தல் – நிலம் + அழகிது.

உயிர் முன் மெய் புணர்தல் – மணி + பெரிது.

இனி, தன்னொடு தான் பொருந்துதலாவது – பகுபதத்தோடு பகுபதமும், பகாப்பதத்தோடு பகாப்பதமும் புணர்தல். பிறிதொடு பிறிது பொருந்துதலாவது – பகுபதத்தோடு பகாப்பதமும் பகாப்பதற்தோடு பகுபதமும் புணர்தல்.

உ-ம்.:-

அவன்+வந்தான்–பகுபதத்தோடு பகுபதம்.

பொன்+கலம்–பகாப்பதத்தோடு பகாப்பதம்.

பொன்னன் + கை – பகுபதத்தோடு பகாப்பதம்.

கிளி + அழகிது – பகாப்பதத்தோடு பகுபதம்.

உயிர்மெய் என்னில் உயிர்மெய்யென்னும் ஓ ரெழுத்து முதலும் ஈறுமாகும் எனப் பொருள்படு மாதலால் மெய்யுயிர் எனவும், வேற்றுமை அல்வழி என்னில் வேற்றுமை யல்லாதவழி யெனப் பொருள்பட்டு அல்வழி ஒன்றற்கே யாதலால், அல்வழி வேற்றுமை பெனவுங் கூறினார். புணர்ச்சி, பொதுப்புணர்ச்சி, சிறப்புப்புணர்ச்சி என்னு மூன்றனுள் இது புணர்ச்சி இன்ன தென்பது கூறிற்று.

## கா.நமச்சிவாய முதலியார்

உயிரீற்றுப் புணரியல், உயிரெழுத்துக்களை இறுதியிலுடைய

நிலைமொழி களோடு, உயிரெழுத்தையும் மெய்யெழுத்தையும் முதலாகவுடைய வருமொழிகள் புணரும் இலக்கணத்தைக் கூறும் இயல்.

**மெய் உயிர்** – மெய்யும் உயிரும், **முதல் ஈறாம்** – முதலும் ஈறுமாகிய, **இருபதங்களும்** – (பகாப்பதம் பகுபதம் என்கிற) இரண்டு பதங்களும், **தன்னொடும் பிறிதொடும்** – தன்னொடுதானும் பிறிதொடு பிறிதுமாய், **அல்வழிவேற்றுமைப் பொருளின்** – அல்வழிப் பொருளினாலாவது வேற்றுமைப் பொருளினாலாவது, **பொருந்துழி** – பொருந்துமிடத்து, **நிலை வருமொழிகள்** – நிலை மொழியும் வருமொழியும், **இயல்பொடு விகாரத்து** – இயல்போடாயினும் விகாரத்தோடாயினும், **இயைவது** – **பொருந்துவது**, **புணர்ப்பு** – (முன் சொல்லப்பட்ட) புணர்ச்சியாம்.

'**மெய்யுயிர் முதலீறாம்**' எனவே, மெய்ம்முதல் மெய்யீறு, உயிர்முதல் உயிரீறு, மெய்ம்முதல் உயிரீறு, உயிர்முதல் மெய்யீறு என நான்கு வகையாம்.

**உதாரணம்.:–**

மரம் – மெய்ம் முதல் மெய்யீறு
அணி– உயிர் முதல் உயிரீறு
மணி – மெய்ம் முதல் உயிரீறு
அணில் – உயிர் முதல் மெய்யீறு

பொன்னன் + வந்தான் = பொன்னன் வந்தான் பகுபதத்தோடு பகுபதம் புணர்ந்தது.

பொன் + கலம் = பொன்கலம் பகாப்பதத்தோடு பகாப்பதம் புணர்ந்தது.

பொன்னன் + கை = பொன்னன்கை பகுபதத்தோடு பகாப்பதம் புணர்ந்தது.

பொன் + அழகியது = பொன்னழகியது பகாப்பதத்தோடு பகுபதம் புணர்ந்தது.

**இவ்வியலுள் புணர்ச்சி இன்னதென்பதும், பொதுப்புணர்ச்சியும், உயிரீற்றுப்பதம் புணரும் சிறப்புப்புணர்ச்சியும் கூறுவார், இதனை உயிரீற்றுப் புணரியல் என்றது என்னையெனின், அவை (சிறப்புப் புணர்ச்சி யல்லாதன) சிறுபான்மைய வாதலால், கமுகந்தோட்டம் என்றாற்போல, மிகுதிபற்றிக் கூறினார் என்க.**

## மோசகு பொன்னையா

'நன்கியம்புவன் எழுத்தே' என நுதலிப் புகுந்து, அவ்வெழுத்தைப் பன்னிரு பாலதாகப் பகுத்து, அப்பகுப்பின் இறுதிக்கண் நின்ற புணர்ப்பை இது முதல் மூன்று இயற்களிற் கூறுகின்றார்.

மெய்யையும் உயிரையும் முதலும் ஈறுமாகக் கொண்ட பகாப்பதம், பகுபதம் என்னும் இரு பதங்களும், தன்னொடு தானும் பிறிதொடு பிறிதுமாய் அல்வழிப்பொருள் நோக்குடனோ, வேற்றுமைப் பொருள் நோக்குடனோ பொருந்துங்கால் நிலைமொழியும் வருமொழியும் இயல்பாக வேனும் விகாரமாகவேனும் பொருந்துவது புணர்ச்சியாம், எ—று.

தெளிவு கருதி 'மெய்யுயிர்', 'அல்வழி வேற்றுமை, என மாற்றிக் கூறினார். சொல்லைப் பதம் என்றார்; திரிதலை விகாரம் என்றார். அவை பற்றிப் பின்னர் விளக்கப்படும்.

'நிலைவரு மொழிகள் இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே' என மொழிமேல் வைத்துக் கூறினார்.

உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என்னும் மூன்று இயல்களுள்ளும் நிலைமொழியின் ஈற்றெழுத்தோடு வருமொழி முதலெழுத்துப் புணரும் முறைமையை உணர்த்து கின்றார் ஆதலானும், தொல்காப்பியர்,

*நிறுத்த சொல்லின் ஈறா கெழுத்தொடு*
*குறித்துவரு கிளவி முதலெழுத் தியையப்*

புணர்வதே புணர்ச்சி என்றோதினர் ஆதலானும், சொல்லியலுட் கூறாது எழுத்தியலுட் கூறுவதாலும், நிலைமொழியீற்று எழுத்தோடு வருமொழி முதலெழுத்துப் புணரும் எழுத்துப் புணர்ச்சியே இவ்வாசிரியராற் கூறப்படுகின்றது எனக் கொள்க.

*உயிரிறு சொன்முன் உயிர்வரு வழியும்*
*உயிரிறு சொன்முன் மெய்வருவழியும்*
*மெய்யிறு சொன்முன் உயிர்வரு வழியும்*
*மெய்யிறு சொன்முன் மெய்வரு வழியுமென்று*

அந்நால் வகையில் புணர்ச்சி நிகழினும், மெய்யீற்றின் முன்

உயிர் வரின்,அது ஏறி முடிவதும், உயிரீற்றின் முன் உயிர் முதன்மொழி வரின், உடம்படுமெய் பெற்று இயைந்து நிற்பதும், இயல்பு புணர்ச்சியே யாகும். வேற்றுமை அல்வழிப் பாகுபாட்டிற்கு உரியன உயிரீற்றின் முன் மெய்யும், மெய்யீற்றின் முன் மெய்யும் வரும் ஈரிடங்களே. அவையே மெய் பிறிதாதல்,மிகுதல், குன்றல் என்னும் திரிதல் புணர்ச்சிக்கு உரியனவாம் எனக் கொள்க.

மொழிமுதலில் வல்லினம் ஒலிக்கும் முறைக்கும், மொழி இடையில் அஃது ஒலிக்கும் முறைக்கும் தமிழ் ஒலிமரபு நெறிப்படிச் சிறிது வேற்றுமை உண்டு. வருமொழியின் முன் நிற்கும் வல்லினம் புணர்மொழி களிலும் வல்லொலி யாகவே ஒலித்தல் பொருள் உணர்ச்சிக்கு இன்றியமை யாதது ஆதலின், அவ்வாறு ஒலித்தற்குத் துணையாமாறு வல்லினம் இரட்டித்து எழுதப்படும். பொருள் நோக்கால் புணர்மொழிப்பட்ட நிலை வரு மொழிகள் செறிந்து நில்லாது ஓரளவு விட்டிசை பெறுவதும் உண்டு. அவ்வாறு விட்டிசைத்து நிற்கும் இடங்களில் வருமொழியின் முதலில் நிற்கும் வல்லினம் வல்லொலி பெற்றே நிற்பதால், இரட்டித்து எழுதப்படுவது இல்லை பொருள் நோக்கால், இவ்வாறு புணர்மொழியிடை விட்டிசை நெகிழ்ச்சி இன்மையும் உண்மையும் முறையே வேற்றுமை, அல்வழித் தொடர்களில் பெரும்பாலும் அமைவதால், அவ்வடிப் படையில் வேற்றுமைப் புணர்ச்சி அல்வழிப் புணர்ச்சி என இரண்டாகப் பகுத்துக்கொண்ட இலக்கணக்காரர் விளக்கங் கூறுவாராயினர். மொழிமுதல் வல்லெழுத்துக் களின் உச்சரிப்பும் காலத்துக்குக் காலம் இடத்துக்கு இடம் ஒருநிலைப்படாது ஓரளவு வேறுபட்டு நிகழ்ந்தமையால், இம்முறைக்கென்று இயன்ற விதிகளும் பலவிலக்குகளைப் பெற்றன. வேற்றுமை, அல்வழித் தொடர்களுக்குக் கூறப்படும் பொதுவிதிகள் அனைத்தும், பொருளால் முறையே ஆறும், பதினான்குமாகப் பகுத்தோதப்பட்ட அவற்றின் உட்பிரிவுகள் எல்லாவற்றிற்கும் ஒருங்கே பொருந்தாமல், சிலவற்றிற்கே ஏற்புடையனவாக அமைந்தன. உரையாசிரியர்கள் இவ்விலக்குகளை எடுத்துக் கூறி ஒருவாறு அமைதிகூறித் தெளிவுறுத்தி யுள்ளனர்.

இக்காலப் பேச்சு வழக்கில், மொழிமுதல் வல்லினமும், மொழியிடை வல்லினமும், பெரும்பாலும் வேற்றுமை யின்றி

ஒலிக்கப்படுவதால், வல்லினம் மிக்கும் மிகாமலும் வழுவின்றி எழுதுவது இலக்கணக் கல்வி வல்லாருக்கே உரிய ஒரு தனிச்சிறப்பாக அமைந்து, பலருக்கும் இடர்ப்பாட்டை உண்டாக்கா நிற்கின்றது.

வீரசோழிய நேமிநாத ஆசிரியர்கள் அல்வழி வேற்றுமைப் பாகுபாட்டைக் கூறாது விடுத்தனர். தொல்காப்பியரும், அவற்றுள்,

*நிறுத்த சொல்லின் ஈறா கெழுத்தோடு*
*குறித்துவரு கிளவி முதலெழுத் தியையப்*
*பெயரோடு பெயரைப் புணர்க்குங் காலும்*
*பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலும்*
*தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலும்*
*தொழிலொடு தொழிலைப் புணர்க்குங்காலும்*
*மூன்றே திரிபிடன் ஒன்றே இயல்பென*
*ஆங்கந் நான்கே மொழிபுணர் இயல்பே.*

எனப் புணர்ச்சியின் இயல்பு கூறுங்கால் அல்வழி வேற்றுமைப் பாகுபாடுகளைச் சுட்டிக் கூறாது, நிலை வரு மொழிகளின் இடையே எழுத்துஞ் சாரியையும் தோன்றும் மிக்க புணர்ச்சியின் மரபுரைக்குங்காலே அதனைக் கூறிச் சென்றார் என்பது மனங்கொளற் குரியது. வேற்றுமை, அல்வழிப் பாகுபாடு இலக்கண விதிகள் மிகப்பலவாகத் தோன்றுவதற்குக் காரணமாக இருந்ததே யன்றித் தமிழ் இலக்கண நெறியை எளிமைப்படுத்தப் பயன்பட்டிலது.

(1)

**151. வேற்றுமை [1]யைம்முத லாறா மல்வழி**
**தொழில்பண் புவமை யும்மை யன்மொழி**
**எழுவாய் விளியீ ரெச்சமுற் றிடையுரி**
**தழுவு தொடரடுக் கெனவீ ரேழே.**

பாடவேறுபாடு:–

1. ஐ முதல்

வேற்றுமை ஐம் முதல் ஆறு ஆம் அல்வழி
தொழில் பண்பு உவமை உம்மை அன்மொழி
எழுவாய் விளி ஈர் எச்சம் முற்று இடை உரி
தழுவு தொடர் அடுக்கு என ஈர் ஏழே

vēṟṟumai aim mutal āṟu ām alvaḻi
toḻil paṇpu uvamai ummai aṉmoḻi
eḻuvāy viḷi īr essam muṟṟu itai uri
taḻuvu totar atukku eṉa īr ēḻē

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Casual and incasual combination

Casual combination is that in which the signs of the six cases-from the second to the seventh-are either expressed or understood-Incasual combination is of fourteen kinds: viz, ellipses of Relative terminations, sign of Noun-adjective, sign of comparison, the particle um, and of any other words: the **preceding** of the Nominative and Locative Cases; of Relative and Verbal Particples; of Definite and Indefinite Finite verbs, Particles and of Qualifying Words:- and the Repetition of the same word.

## ஒப்புமைப் பகுதி

வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்
வேற்றுமை யல்வழி புணர்மொழி நிலையும்
எழுத்தே சாரியை ஆயிரு பண்பின்
ஒழுக்கல் வலிய புணருங் காலை

(தொல்.: 113)

ஐம்முத லாறு தழுவுதொடர் வேற்றுமை
செவ்விதி னிலையு மெழுவாய் விளிமுற்
றிடையுரி யெச்சமடுக் குவமை யும்மை
தழுவுதொட ரல்வழிச் சந்தி யென்ப.

(இ.வி.: 54)

அல்வழி வேற்றுமையா மிரண்ட வற்றுள்
விரியினு முருபெடா வினைசார் பெயரே
அல்வழிப் பொருட்பெய ராகு மென்ப

**வேற்றுரு பில்லது விரிக்குங் காலை**
**வேற்றுமைக் கொளி னதுவேற் றுமைப்பொருளே**

(தொன்.: 22)

**அல்வழி வேற்றுமை யாமிரு பாலன**

(மு.வீ.: 165)

**அவற்றுள்**
**அல்வழி வினைத்தொகை யன்மொழி யுவமை**
**உம்மை குணமெழு வாய்விளி யிடையுரி**
**அடுக்கீ ரெச்சமுற் றாறொடு மெட்டே.**

(மு.வீ.: 166)

**சாரெண் வேற்றுமை விரிந்துந் தொகுத்து மவ்வப் பொருளைத்**
**தழுவுதொடர் வேற்றுமையின் வழி விரிவாய்த் தொகையாய்ப்**
**பேரில்வினை யிடையுரிச் சொற்றொடர் அல்வழியே**

(சுவாமி.: 27: 1–2)

## மயிலை நாதர்

**எ–னின்,** மேல் அல்வழி வேற்றுமை யென்றார், அவை இவை யென்ப துணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:–** இரண்டாம் வேற்றுமை முதல் ஆறும் விரியவும் தொகவும் வருந் தொடர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சி யெனப்படும். வினைத் தொகையும், பண்பு முதல் நான்கும் விரியவும் தொகவும் வருந் தொடர்ச்சியும், எழுவாய் முதல் ஈண்டுரைத்த எட்டும் தமக்கேற்கும் பெயர் வினைகளோடு தொடருந் தொடர்ச்சியும், விரைவாதியின் வரும் அடுக்குமான இப் பதினான்கும் அல்வழிப் புணர்ச்சி யெனப்படும், **எ–று.**

வேற்றுமை யல்லாதவழி அல்வழி யென்பது அறிவித்தற்கு, வேற்றுமையை ஈண்டு முன் வைத்தாரென்க. ஈரெச்சம், இரு முற்றென்று ஓதினமையின், தொழிலென்றது அத் தொகையை யெனக் கொள்க.

**வ–று.:–**

பொன்னை யுடையான் பொன்னுடையான், பொன்னாலாய குடம் பொற்குடம், பொன்னற்கு மகன் பொன்னன்மகன், மலையின் வீழருவி மலைவீழருவி, மலையினது உச்சி மலையுச்சி, மலைக்கண் முழை மலைமுழை என விரிந்தும் தொக்கும் வேற்றுமைப் புணர்ச்சி யாறும் வந்தவாறு

காண்க. [1]பொன்னனை, பொன்னனால், பொன்னற்கு, பொன்னனின், பொன்னனது, பொன்னன்கண் என்னும் உருபு புணர்ச்சியும் அதுவே யெனக் கொள்க. கொல்யானை என வினைத்தொகையும், [2]ஆயனாய சாத்தன் ஆயன்சாத்தன், வேயனைய தோள் வேய்த்தோள், தீயுநீரும் தீநீர், பொற்றாலி பூண்டாள் பொற்றாலி என விரிந்தும் தொக்கும் பண்பு முதல் நான்கும் வந்தன. கொற்றன் கொடுத்தான், கொற்றாகொள், உண்டசாத்தன், உண்டுவந்தான், உண்டான் ஒணன், குண்டுகட்டெருமை, 'அணங்குகொலாய்மயில் கொல்லோ கணங்குழை'' "கொன்னூர் துஞ்சினும்'', "நனிபேதையே'' "படைபடை யென்றஞ்சி'' என எழுவாய் முதலொன்பதும் விரிந்து அல்வழிப் [4]புணர்ச்சி வந்தவாறு காண்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின்,** மேல் அல்வழி வேற்றுமை என்றார் அவை இவை என்பது **உணர் – ற்று.**

**இ–ள்.:** வேற்றுமைப் புணர்ச்சி, 'பெயரே ஐ ஆல்' என்னும் சூத்திரத்து ஐ முதலிய ஆறு உருபும் தொக்கும் விரிந்தும் வரப் பதங்கள் பொருந்தும் தொடர்ச்சியாம். அல்வழிப் புணர்ச்சி வினைத்தொகை முதலிய ஐந்து தொகைநிலையும் எழுவாய் முதல் ஒன்பது தொகாநிலையு மெனப் பதங்கள் பொருந்தும் தொடர்ச்சி பதினான்காம், **எ–று.**

வேற்றுமைத் தொகைநிலை தொகாநிலை என விதவாமையின் அவ் விரண்டும் வேற்றுமைப் புணர்ச்சி என்பதூஉம், முற்றெச்சங்களை விதந்தமையின் தொழில் என்றது வினைத்தொகையை என்பதூஉம், வினைத்தொகை முதல் ஐந்தும் விரிந்தவழி வினைத் தொகை பெயரெச்சமாயும் பண்பை விளக்கும் மொழி இடைச்சொல் லாதலின் பண்புத்தொகை இரண்டும் இடைச்சொற் சந்தியாயும் உவமைத்தொகை இரண்டாம் வேற்றுமையோடு பயனிலையாயும், உம்மைத்தொகை இடைச்சொற் சந்தியாயும், அன்மொழித்தொகை பொற்றொடி என்பது பொன்னாலாய தொடியினை யுடையாள் எனச் சொற்களும் சந்திகளும் பலவாயும் முடிதலானும், வேற்றுமைத்தொகை யன்றி இத்தொகைகள் தொகாநிலையுமாம் என மேற்சூத்திரம் செய்யாமை யானும், இவ் ஐந்து தொடரும் தொகைநிலை என்பதூஉம் பெற்றாம்.

இரண்டு என்பதனை முற்று என்பதனோடும், தழுவு தொடர் என்பதனை எல்லாவற்றோடும் ஒட்டுக.

அடுக்கும் தழுவு தொடராயினும் ஒருசொல் அடுக்கி வருதலின் ஏனைய போல் தழுவுதொடரன்று என்பார் விதந்து பிற் கூறினார்.

உ–ம்.:–

பொன்னுடையான், பொன்னை யுடையான்; கல்லெறிந்தான், கல்லாலெறிந்தான்; கொற்றன் மகன், கொற்றனுக்கு மகன்; மலைவீழருவி, மலையின் வீழருவி, மலையுச்சி, மலையினதுச்சி; மலைமுழை, மலைக்கண் முழை என வேற்றுமைப் புணர்ச்சி வந்தன. கொல் யானை, கருங்குதிரை, ஆயன் சாத்தன், பொற்சுணங்கு, இராப்பகல்,பொற்றொடி, கொற்றன் கொடுத்தான், கொற்றாகொள், உண்டசாத்தான், உண்டுவந்தான், உண்டான் சாத்தன், குண்டுகட்டெருமை, "[1]அணங்கு கொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை", [2]"நனி பேதையே", 'படைபடையென்றஞ்சி' என அல்வழிப் புணர்ச்சி வந்தன.

தழுவுதொடர் ஆறும் பதினான்கும் எனக் கூறவே தழுவாத்தொடரும் சில உள, அவ்விருவழியும் என்றாராயிற்று. அவை வருமாறு;– கைக்களிறு பொற்குடம் ஆடகப்பூண் என்பன; தழுவுதொடராகிய உருபும் பயனும் உடன்தொக்கமையின் களிறு குடம் பூண் என்பனவற்றோடு நிலைமொழிகள் தழுவாது தொடர்ந்து, மூன்று விகாரமும் ஏற்ற வேற்றுமைப்புணர்ச்சி. "இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பின், பரலவலடைய விரலை தெறிப்ப" என்பதனுள் மருப்பினிரலை எனக் கொண்டு கூட்டாக வந்து இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கு, மருப்பு என்பது இரலை என்பதனோடு புணராது மருப்பிற் பரல் எனப் புணர்ந்து திரிந்தது. இத் தொடக்கத்தன எல்லாம் தழாத் தொடராய வேற்றுமைப் புணர்ச்சியாம் என்க.

"சுரையாழ அம்மி மிதப்ப" என்பதனுள், மொழிமாற்றாய்ச் சுரை மிதப்ப எனத் தழுவுதொடராக வருவழி இயல்பாக முடியும் எழுவாய்ப் புணர்ச்சி, சுரையாழ எனத் தழாத்தொடராய் உடம்படுமெய் தோன்றி முடிந்தது. இத் தொடக்கத்தன எல்லாம் தழாத்தொடராய அல்வழிப் புணர்ச்சியாம் என்க.

மாடத்தைக்கட்டினான் என வேற்றுமை யுருபும் சாரியையும் விரிந்து நின்ற இருமொழி ஒரு சந்தியாகிய வேற்றுமைச் சந்தியை, வேற்றுமை நயங் கருதி நான்கு சொல் மூன்று சந்தியாக்கி, உருபும் சாரியையும் இடைச்சொல்லாதலின் அல்வழியுள் இடைச்சொற் சந்தி என்று கோடலும் ஒன்று. 'எட்டே வேற்றுமை' என மேற் கூறுவார் எழுவாயும் விளியும் ஒழித்து வேற்றுமை ஐம் முதலாறு என்றது என்னை யெனின்:– பெயர்ப்பொருளை வேற்றுமை செய்தலான் வேற்றுமை எட்டு என்பார், எழுவாய்க்கும் விளிக்கும் உருபு பெயரும் பெயரது விகாரமும் அன்றி வேறு உருபு இன்மையின் அவ் விரண்டனையும் ஒழித்துத் தமக்கு என உருபுடையன இடைநின்ற ஆறு வேற்றுமையுமே ஆதலின், அவற்றின் உருபு ஆறும் தொக்கும் விரிந்தும் இடைநிற்க அவ்வாறோடும் பதங்கள் பொருந்தும் புணர்ச்சியை வேற்றுமைப் புணர்ச்சி என்றார் என்க.

வினைத்தொகை பண்புத்தொகை அன்மொழித்தொகை என்னும் அல்வழிப் புணர்ச்சியவாய தொகைநிலைத் தொடர்மொழிகளை ஒருமொழிகள் என்பாரும் உளர்; அவர் கூற்றுத் தாய் மலடி என்றாற் போலும்.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்**, மேல் 'அல்வழி வேற்றுமை' என்றார்; அவை இவை யென உரைத்தது.

**இ–ள்.:–** **வேற்றுமை** – வேற்றுமைப் புணர்ச்சியாவது யாதென்னில், **ஐமுதலாறாம்**– இரண்டாம் வேற்றுமை ஐயுருபு முதல் ஆறுருபும் விரியவும் தொகவும் புணரும் புணர்ச்சியாம், **அல்வழி** – அல்வழிப் புணர்ச்சியாவது யாதென்னில், **தொழில்** –வினைத்தொகை பெயரோடும் புணரும் புணர்ச்சியும், **பண்பு** – பண்புத்தொகைப் பெயரொடும் வினையொடும் விரியவும் தொகவும் புணரும் புணர்ச்சியும், **உவமை** – உவமைத்தொகைப் பெயரொடும் வினையொடும் விரியவும் தொகவும் புணரும் புணர்ச்சியும், **அன்மொழி** – அன்மொழித்தொகைப் பொருளோடும் புணரும் புணர்ச்சியும், **எழுவாய்** – எழுவாய் வேற்றுமை தன் பயனிலையொடு புணரும் புணர்ச்சியும், **விளி** – விளி வேற்றுமை தம் பொருளொடு புணரும் புணர்ச்சியும், **ஈரெச்சம்**– பெயரெச்சமும் வினையெச்சமும் பெயரொடும் வினையொடும் புணரும் புணர்ச்சியும், **முற்று** – தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றும் பெயரொடும் வினையொடும் புணரும் புணர்ச்சியும், **இடையுரி** – இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயரொடும் வினையொடும் புணரும்

புணர்ச்சியும், **தழுவு தொடர்** – என்பதனை எல்லாவற்றோடும் ஒட்டுக புணரும் புணர்ச்சியென்றாம், **அடுக்கு** – விரைவாதியின் வரும் அடுக்குப் புணரும் புணர்ச்சியும், **என ஈரேழே** – என்று சொல்லும் இப்பதினான்கு புணர்ச்சியுமாம், எ–று.

**உ–ம்.:–**

பொன்னை யுடையான் பொன்னுடையான், பொன்னாலாய குடம் பொற்குடம், பொன்னர்க்கு மகன் பொன்னர்மகன், மலையின்வீழருவி மலைவீழருவி, மலையினதுச்சி மலையுச்சி, மலைக்கண் முழை மலைமுழை என ஐ முதல் ஆறும் விரிந்தும் தொக்கும் வேற்றுமைப் புணர்ச்சி வந்தவாறு காண்க. பொன்னை, பொன்னால், பொற்கு, பொன்னின், பொன்னது, பொற்கண் என்னும் உருபுப் புணர்ச்சியும் அதுவே யெனக் கொள்க. கொல்யானை, அரிவாள், எரி முட்டையென வினைத்தொகை பெயரொடு புணர்ந்து தொக்கு வந்தன. ஆயனாய சாத்தன் ஆயன் சாத்தன், கேழலாய பன்றி கேழற்பன்றி, வேழமாய கரும்பு வேழக் கரும்பு எனவும், வேயனையதோள் வேய்த்தோள், துடிபோலுமிடை துடியிடை, பால் போலுமொழி பான்மொழி எனவும் தீயுநீரும் தீநீர், கல்லாடரும் மாமூலரும் கல்லாடர் மாமூலர், சேரரும் சோழரும் பாண்டியரும் சேர சோழ பாண்டியர் எனவும் பொற்றாலி பூண்டாள் பொற்றாலி, தாழ்குழலுடையர் தாழ்குழல் எனவும் பண்புமுதல் நான்கும் விரிந்தும் தொக்கும் அவ்வப் பொருளை உணர்த்தி முறையே வந்தவாறு காண்க. கொற்றன் கொடுத்தான் எழுவாய்ப் புணர்ச்சி. கொற்றன் கொள் விளிப்புணர்ச்சி. உண்ட சாத்தன், உண்கின்ற சாத்தன், உண்ணும் சாத்தன் பெயரெச்சப் புணர்ச்சி. உண்டு வந்தான், உண்ண வந்தான் என வினையெச்சப் புணர்ச்சி. உண்டான் போனான், உண்டான் தின்றான் எனத் தெரிநிலை வினை, முற்றுப் புணர்ச்சி. குண்டுகட்டெருமை, குண்டுகட்கு வந்தது குறிப்பு வினைமுற்றுப் புணர்ச்சி.

"சின்மொழி அரிவையை பெறுகதில் யானே", "வந்தாள் கொல் பாங்கி", "அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங் குழை மாதர்கொல் மாலுமென் நெஞ்சு" என இடைச்சொற் புணர்ச்சி. நனிபேதை, சாலக் கொண்டான் உரிச்சொற் புணர்ச்சி.

பாம்பு பாம்பு, தீத்தீ, வருக வருக அடுக்குப் புணர்ச்சி.

முறையே அல்வழிப் புணர்ச்சி பதினான்கும் வந்தவாறு காண்க.

## விசாகப் பெருமாளையர்

**இது,** முன் சொன்ன அல்வழி வேற்றுமை இவை யென்பது உணர்த்துகின்றது.

**இ–ள்.: வேற்றுமை**–வேற்றுமைப் புணர்ச்சி யாவது, **ஐம் முதலாறாம்** – ஐ ஆல் கு இன் அது கண் என்கின்ற ஆறுருபுகளும் மறைந்தாகிலும் வெளிப்பட்டாகிலும் வரப் பதங்கள் பொருந்துந் தொடர்ச்சியாம், **அல்வழி**–அல்வழிப் புணர்ச்சி யாவது, **தொழில்**–வினைத்தொகையும், **பண்பு**–பண்புத்தொகையும், **உவமை**–உவமைத்தொகையும், **உம்மை** – உம்மைத்தொகையும், **அன்மொழி** – அன்மொழித்தொகையும், **எழுவாய்**–எழுவாயும், **விளி**–விளியும், **ஈரெச்சம்** – பெயரெச்ச வினையெச்சங்களும், **(ஈர்)முற்று** – தெரிநிலைவினை குறிப்பு வினைமுற்றுகளும், **இடை**–இடைச்சொல்லும், **உரி**–உரிச்சொல்லும், **அடுக்கு**–அடுக்கும், **என**– என்று, **தழுவுதொடர்**–பதங்கள் பொருந்துந் தொடர்ச்சி, **ஈரேழ்**–பதினான்கு வகையாம், **எ–று.**

**உ–ம்.:–**

| (வேற்றுமைத்தொகை) | (வேற்றுமைவிரி) |
|---|---|
| ஐ – நிலங் கடந்தான் | நிலத்தைக்கடந்தான் |
| ஆல் – கல்லெறிந்தான் | கல்லாலெறிந்தான் |
| கு– கொற்றன்மகன் | கொற்றனுக்குமகன் |
| இன் – மலைவீழருவி | மலையின்வீழருவி, |
| அது – சாத்தன்கை | சாத்தனதுகை |
| கண்– குன்றக்கூகை | குன்றத்தின்கட் கூகை, ஆக–12. |

**(அல்வழிப் புணர்ச்சி)**

| | | |
|---|---|---|
| வினைத்தொகை | – | கொல்யானை, அடுகளிறு. |
| பண்புத்தொகை | – | கருங்குதிரை,செந்தாமரை |
| இருபெயரொட்டு பண்புத்தொகை | – | சாரைப்பாம்பு, ஆயன்சாத்தன். |

| | | |
|---|---|---|
| உவமைத்தொகை | – | மதிமுகம், பவளவாய். |
| உம்மைத்தொகை | – | சேர, சோழபாண்டியர், இராப்பகல். |
| அன்மொழித்தொகை | – | பொற்றொடி, தாழ்குழல் |
| எழுவாய் | – | சாத்தன் வந்தான், கொற்றன் கண்டான் |
| விளி | – | சாத்தா வா, கொற்றா கொள் |
| பெயரெச்சம் | – | வந்தசாத்தன், வருகின்ற சாத்தன் |
| வினையெச்சம் | – | வந்து போனான், வரப்போனான் |
| தெரிநிலைவினைமுற்று | – | வந்தான் சாத்தன், கண்டான் கொற்றன். |
| வினைக்குறிப்புமுற்று | – | குழையன் கொற்றன், பெரியன் சாத்தன் |
| இடைச்சொல் | – | மற்றொன்று, கொன்னேகழிந்தன்று. |
| உரிச்சொல் | – | "நனிபேதையே" கடிக்கமலம் |
| அடுக்கு | – | பாம்புபாம்பு, நெருப்பு நெருப்பு. |

ஆக – 14.

இவை "தழுவுதொடர்" எனவே, அவ்விரு வழியிலுந் தாழா தொடருஞ் சில வுண்டென்ப தாயிற்று. " கைக்களிறு" என்பது கையை யுடைய களிறு என விரிக்கப்படுதலால் கை என்பது களிறு என்பதைத் தழுவாமையால் இப்படி வருகின்றவைக ளெல்லாந் தழாத் தொடராகிய வேற்றுமைப் புணர்ச்சியாம். "சுரையாழ அம்பி மிதப்ப" என்பது சுரைமிதப்ப, வம்மி ஆழ எனக் கூட்டப்படுதலால் "சுரை" என்பது "ஆழ" என்பதையும், "அம்மி" என்பது "மிதப்ப" என்பதையும் தழுவாமையால் இப்படி வருகின்றவைக ளெல்லாந் தழாத் தொடராகிய அல்வழிப் புணர்ச்சியாம்.

## ஆ- முத்துத்தம்பிப் பிள்ளை

அல்வழி வேற்றுமைப்புணர்ச்சிகள் இவையெனக் கூறும் சூத்திரம் யாது?

வேற்றுமை யைம்முத லாறா மல்வழி
தொழில்பண் புவமை யும்மை யன்மொழி

எழுவாய் விளியீ ரெச்சமுற் றிடையுரி
தழுவு தொடரடுக் கென வீரேழே.

(வேற்றுமை ஐமுதல் ஆறாம்;
அல்வழி தொழில் பண்பு உவமை உம்மை அன்மொழி
எழுவாய் விளி ஈரெச்சம் முற்று இடைஉரி
தழுவு தொடர் அடுக்கு என ஈரேழே).

**இ—ள்.:– வேற்றுமை ஐ முதல் ஆறாம்** – வேற்றுமைப் புணர்ச்சி ஐ ஆல் கு இன் அது கண் என்னும் ஆறுருபுகளும் மறைந்தாயினும் வெளிப்பட்டாயினும் வரப்பதங்கள் பொருந்துந் தொடர்ச்சியாம்; **அல்வழி** – அல்வழிப் புணர்ச்சி, **தொழில் தழுவுதொடர்** – வினைத்தொகையும், **பண்பு** (தழுவுதொடர்) – பண்புத்தொகையும், **உவமை** (தழுவுதொடர்) – உவமைத்தொகையும், **அன்மொழி** (தழுவுதொடர்)– அன்மொழித்தொகையும், **எழுவாய்** (தழுவுதொடர்) – எழுவாய்த்தொடரும், **விளி** (தழுவுதொடர்) – விளித்தொடரும், **ஈர் எச்சம்** (தழுவுதொடர்) – பெயரெச்சத்தொடரும், வினையெச்சத் தொடரும், **முற்றுத்** (தழுவுதொடர்)– தெரிநிலை வினைமுற்றுத் தொடருங் குறிப்பு வினை முற்றுத்தொடரும், **இடை** (தழுவுதொடர்) – இடைச் சொற்றொடறும், **உரி** (தழுவுதொடர்) – உரிச்சொற்றொடரும் **அடுக்குத்** (தழுவுதொடர்) **என ஈரேழே**– அடுக்குத்தொடரும் எனப் பதங்கள் பொருந்துந் தொடர்ச்சி பதினான்காம், **எ—று.**

அவ்வழிப்புணர்ச்சி வேற்றுமைப்புணர்ச்சி என்னு மிரண்டனுள் வேற்றுமைப்புணர்ச்சி எவை?

"வேற்றுமை ஐம்முதலாறாம்"

**வேற்றுமை**

**உ—ம்.:–**

| **வேற்றுமைத்தொகை** | **வேற்றுமை விரி** |
|---|---|
| (1) நிலக்கடந்தான் .... (ஐ) | நிலத்தைக் கடந்தான் |
| (2) கல்லெறிந்தான் ... (ஆல்) | கல்லா லெறிந்தான் |
| (3) கொற்றன்மகன்.... (கு) | கொற்றனுக்கு மகன் |
| (4) மலைவீழருவி ...... (இன்) | மலையின்வீழருவி |
| (5) சாத்தன்கை .... (அது) | சாத்தனது கை, |
| (6) குன்றக்கூகை ... (கண்) | குன்றத்தின் கட் கூகை. |

அல்வழிப்புணர்ச்சி யெவை?

"அவ்வழி, தொழில்பண் புவமை யும்மையன்மொழி,
எழுவாய் விளியீ ரெச்சமுற் றிடையுரி தழுவு தொட
ரடுக்கெனவீ ரேழே"

இப்பதினான்கனுள்ளே தொகைநிலைத் தொடரெத்தனை?

வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என ஐந்து.

அல்வழி

உ–ம்.:–

(1) கொல்யானை......... வினைத்தொகை.
(2) கருங்குதிரை .... பண்புத்தொகை
(3) சாரைப்பாம்பு ....... இருபெயரொட்டுப் பண்புத்தொகை
(4) மதிமுகம் ...... உவமைத்தொகை
(5) இராப் பகல் .......... உம்மைத்தொகை
(6) பொற்றொடி ...... அன்மொழித்தொகை.

ஐந்துதொகைநிலைத்தொடர்

தொகாநிலை தொடர்களெவை?

எழுவாய்த்தொடர், விளித்தொடர், பெயரெச்சத்தொடர் வினையெச்சத்தொடர், தெரிநிலை வினைமுற்றுத் தொடர், குறிப்புவினை முற்றுத்தொடர். இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குத்தொடர், என ஒன்பதுமாம்.

உ–ம்.:–

(1) சாத்தன்வந்தான்.... எழுவாய்த்தொடர்
(2 சாத்தாவா...... விளித்தொடர்
(3) வந்தசாத்தன் ......பெயரெச்சத்தொடர்
(4) வந்துபோனான் ... வினையெச்சத்தொடர்
(5) வந்தான்சாத்தன் ... தெரிநிலைவினைமுற்றுத் தொடர்
(6) பெரியன்சாத்தன் ... குறிப்புவினைமுற்றுத்தொடர்
(7) மற்றொன்று ..... இடைச்சொற்றொடர்
(8) நனிபேதை ...... உரிச்சொற்றொடர்

(9) பாம்பு பாம்பு .... அடுக்குத்தொடர்.

ஒன்பது தொகாநிலைத் தொடர்.

இவற்றுட் கருங்குதிரையென்பது எப்படி விரியும்?

கரியதாகிய குதிரையென விரியும். கருமையாகிய குதிரையென்றாயினும் கருமையினையுடைய குதிரையென்றாயினும் விளிக்குமிடத்து வழுவாம். கருமையாகிய குதிரையெனின் சாரையாகிய பாம்பென்பதுபோல் கருமையும் ஒரு குதிரையாம். இனிக் கருமையினை யுடைய குதிரையென்று விரியின் வேற்றுமைத்தொகையாம்.

தழுவு தொடராவது யாது?

தழுவுதொடர் பொருட்பொருத்தமுறத் தழுவுந்தொடர்

தழுவுதொடரென இவ்விருபது தொடரும் அடக்கப்படுதலின் தாழாத் தொடரு முண்டென்றாராயிற்று. தாழாத் தொடராவது யாது?

தழாத்தொடராவது நிலைமொழியானது வருமொழியோடு பொருட்பொருத்தமுறத் தழுவாத தொடர்.

உ–ம்.:–

கைக்களிறு என்பது கையையுடைய களிறு என விரிக்கப்படுதலால், கையென்பது களிறென்பதைத் தழுவாது தொடர்ந்தது; இது தழாத்தொடராகிய வேற்றுமைப் புணர்ச்சி. சுரையாழ வம்மிமிதப்ப என்பது சுரைமிதப்ப அம்மியாழ எனக் கூட்டப்படுதலால், சுரையென்பது ஆழ என்பதையும் அம்மியென்பது மிதப்ப என்பதையுந் தழுவாது தொடர்ந்தன. இவை தழாத்தொடராகிய அல்வழிப்புணர்ச்சி.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** அல்வழி வேற்றுமை யென்பன இவை யென வுணர்த்துகின்றது.

**இ–ள்.: வேற்றுமை** –வேற்றுமைப் பொருட்புணர்ச்சி, **ஐமுதலாறாம்** – ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னும் ஆறு உருபுகளும் தொக்காவது விரிந்தாவது நிற்கப் பதங்கள் புணரும் அறுவகைத் தொடர்ச்சியாம், **அல்வழி** – அல்வழிப் புணர்ச்சி, **தொழில் (தழுவுதொடர்)** – வினைத்தொகையும், **பண்பு (தழுவுதொடர்)** – பண்புத்தொகையும், **உம்மை (தழுவுதொடர்)** – உம்மைத்தொகையும், **அன்மொழி (தழுவுதொடர்)** – அன்மொழித்தொகையும், **எழுவாய்**– தழுவுதொடர் எழுவாய்த் தொடரும், **விளி (தழுவுதொடர்)** – விளித்தொடரும், **ஈரெச்ச (தழுவுதொடர்)** –

பெயரெச்சத்தொடரும் வினையெச்சத் தொடரும், **முற்று (தழுவுதொடர்)** – தெரிநிலைமுற்றுத் தொடரும் குறிப்புமுற்றுத் தொடரும், **இடை (தழுவுதொடர்)** – இடைத்தொடரும், **உரி (தழுவுதொடர்)** – உரித்தொடரும், **அடுக்கு**–அடுக்குத்தொடரும், **எனவீரேழ்** – எனப் பதங்கள் பொருந்துந் தொடர்ச்சி பதினான்காம், **எ–று.**

வேற்றுமைத் தொகைநிலை தொகாநிலை யென எடாததினாலே அந்த இரண்டும் வேற்றுமைப் புணர்ச்சி யென்பதும், வினைத்தொகை முதலைந்தும் விரிந்தவழி வேறுவேறு தொடர்களாய் முடிதலாலும், வேற்றுமைத் தொகை யன்றி இந்தத் தொகைகள் தொகாநிலையுமா மென்று மேற்சூத்திரஞ் செய்யாததினாலும், இந்த ஐந்து தொடரும் தொகைநிலையே யென்பதும் பெறப்படும். இரண்டென்பதை முற்றென்பதனோடும், தழுவு தொட ரென்பதை எல்லாவற்றொடுங் கூட்டுக. அடுக்குந் தழுவுதொடராயினும் ஒருசொல் அடுக்கி வருதலால் மற்றைய போலத் தழுவுதொடரன்று என்பது அறிவித்தற்கு, அதை யிறுதியிலே வைத்தார். எட்டு வேற்றுமை யென மேற் சொல்லுவோர் இங்கே எழுவாயும் விளியும் ஒழித்து வேற்றுமை ஐ முதலா றென்றது என்னெனின், அங்கே பெயர்ப்பொருளை வேற்றுமை செய்தலால் வேற்றுமை எட்டென்பார், இங்கே எழுவாய்க்கும் விளிக்கும் உருபு, பெயரும் பெயரின் விகாரமுமே யன்றி வேறில்லாமையால் அந்த இரண்டையும் நீக்கித் தமக்கென உருபுடையன இடைநின்ற ஆறு வேற்றுமையுமே ஆதலால் அவற்றின் உருபு ஆறுந் தொக்கும் விரிந்தும் இடைநிற்க அந்த ஆறோடும் பதங்கள் புணரும் புணர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சி யென்றார் என்க. வேற்றுமை யல்லாதவழி அல்வழி எனவும், பயனிலைக்கு அல்லாதமொழி, அன்மொழி எனவுங் காண்க. பொற்றொடி வந்தாள் என்பதில், பொற்றொடி என்பது அன்மொழி, வந்தாள் என்பது பயனிலை. பொற்றொடியை யணிந்தாள் என விரியின் அதற்குப் பொருந்தும். அப்படி விரியாது தொகுதலின் அது தொகையாயிற்று எனக் காண்க.

**உ–ம்.:–**

பொன்னுடையான் – பொன்னையுடையான் :– ஐ; (2); கல்லெறிந்தான் –கல்லாலெறிந்தான் :– ஆல்; (3); சாத்தன்மகன்–சாத்தனுக்கு மகன்:– கு, (4); மழைவிழருவி – மலையின் வீழருவி:– இன்; மலையுச்சி – மலையினது

உச்சி:– அது, (6) மலைமுழை–மலையின் கண் முழை:– கண் என வேற்றுமைத் தொகைநிலை, தொகாநிலையென்னும் இருவகைப் புணர்ச்சியும் வந்தன. கொல்யானை – வினைத்தொகை; கொன்றயானை, கொல்கின்றயானை, கொல்லும் யானை என விரியும். (இனிப் பண்புத்தொகை, பண்பு தொக்க தொகையும் பெயர்தொக்க தொகையுமென இருவகைப்படும்.) கருங்குவளை – பண்புத்தொகை, ஆயன்சாத்தன் – பெயர்த்தொகை, கருமையாகிய குவளை– ஆயனாகிய சாத்தன் என விரியும்; மதிமுகம் – உவமைத்தொகை, மதிபோன்ற முகமென விரியும்; இராப்பகல் – உம்மைத்தொகை, இரவும் பகலும் என விரியும். பொற்றொடி வந்தாள்–அன்மொழித்தொகை, பொற்றொடியை அணிந்தவள் வந்தாள் என விரியும். கொற்றன் வந்தான் – எழுவாய்த் தொடர், இது முதல்வேற்றுமை. கொற்றாகொள் – விளித்தொடர், இது எட்டாம் வேற்றுமை. (இனிப் பெயரெச்சத் தொடரும் வினையெச்சத் தொடரும் முற்றுத் தொடரும் இரண்டிரண்டு வகைப்படுமெனக் கொள்க) உண்டசாத்தன் – தெரிநிலைப் பெயரெச்சத்தொடர், பெரியசாத்தன் குறிப்புப் பெயரெச்சத்தொடர், உண்டுவந்தான் – தெரி நிலை வினையெச்சத்தொடர், விருந்தின்றி யுண்ணான் – குறிப்பு வினையெச்சத் தொடர், உண்டான் சாத்தன் – தெரிநிலை முற்றுத்தொடர், குழையன் கொற்றன் – குறிப்பு முற்றுத்தொடர், அணங்குகொல் – இடைத்தொடர்; அணங்கோ என்பது பொருள், நனிபேதை – உரித்தொடர்; மிகவும் பேதை என்பது பொருள். பாம்பு பாம்பு – படைபடை – அடுக்குத்தொடர், ஆக அல்வழிப் புணர்ச்சி பதினான்கும் வந்தவா்று காண்க.

தழுவுதொடர் ஆறும் பதினான்கு மெனவே தழுவாத தொடருஞ் சிலவுள அந்த இரு வழியிலு மென்றாராயிற்று. அவை வருமாறு: கைக்களிறு, பொற்குடம், ஆடகப் பூண் என்பன, தழுவு தொடராகிய உருபும் பொருளும் உடன் தொக்கதினாலே களிறு, குடம், பூண் என்னும் வருமொழிகளோடு கை, பொன், ஆடகம் என்னும் நிலைமொழிகள் தழுவாமலே தொடர்ந்து, முறையே தோன்றல், திரிதல், கெடுத லென்னு மூன்று விகாரமும் பெற்று வந்த வேற்றுமைப் புணர்ச்சி.

"............. மருப்பிற்

பரலவ லடைய விரலை தெறிப்ப"

என்பதில் – மருப்பி னிரலை யெனக் கொண்டு கூட்டாக வந்து, மருப்பினையுடைய இரலை யென்னும் ஐயுருபும் பொருளுமுடன் தொக்கு, மருப்பு என்பது இரலை என்பதனொடு புணராமல், மருப்பிற்பரல் எனப் புணர்ந்து திரிந்தது, இத் தொடக்கத்தன வெல்லாம் தழாத்தொடராய வேற்றுமைப் புணர்ச்சி.

**சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய**
**யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப**
**கானக நாடன் சுனை**

என்னும் இச் சிந்தியல் வெண்பாவினுள் – சுரைமிதப்ப எனத் தழுவு தொடராய் வரின் இயல்பாக முடியும் எழுவாய்ப்புணர்ச்சி, மொழிமாற்றாய் வந்து சுரையாழ எனத் தழாத்தொடராய், யகர உடன்படுமெய் தோன்றி முடிந்தது. இத் தொடக்கத்தன வெல்லாந் தழாத்தொடராய அல்வழிப் புணர்ச்சியா மெனக் காண்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– வேற்றுமை** – வேற்றுமைப் புணர்ச்சியாவது, **ஐ முதல் ஆறு ஆம்** – ஐ ஆல் கு இன் அது கண் என்கின்ற ஆறுருபுகளும் மறைந்தாயினும் வெளிப்பட்டாயினும் வரப் பதங்கள் பொருந்தும் தொடர்ச்சியாம்; **அல்வழி** – அவ்வழிப் புணர்ச்சியாவது, **தொழில்** – வினைத்தொகையும், **பண்பு** – பண்புத்தொகையும், **உவமை** – உவமைத் தொகையும், **உம்மை** – உம்மைத் தொகையும், **அன்மொழி** – அன்மொழித் தொகையும், **எழுவாய்** – எழுவாய்த் தொடரும், **விளி** – விளித்தொடரும், **ஈர் எச்சம்** – பெயரெச்சத் தொடரும் வினையெச்சத் தொடரும், **(ஈர்) முற்று** – தெரிநிலை வினைமுற்றுத் தொடரும் குறிப்பு வினைமுற்றுத் தொடரும், **இடை** – இடைச்சொற்றொடரும், **உரி** – உரிச்சொற்றொடரும், **அடுக்கு** – அடுக்குத் தொடரும், **என** – என்று, **தழுவு தொடர்** – பதங்கள் பொருந்தும் தொடர்ச்சி, **ஈர் ஏழ்** – பதினான்காம்.

குறிப்பு :–

ஐ முதலிய உருபுகள் மறைந்து நிற்கப் பதங்கள் புணர்வது வேற்றுமைத் தொகைநிலை எனவும், அவ்வுருபுகள் வெளிப்பட்டு நிற்கப் புணர்வது வேற்றுமைத் தொகாநிலை அல்லது வேற்றுமை விரி எனவும் கூறப்படும். அல்வழியில்

வினைத்தொகை முதலிய ஐந்தும் தொகைநிலைகள்; மற்றை ஒன்பதும் தொகாநிலைகள்.

**வேற்றுமைப் புணர்ச்சி :**

| | தொகைநிலை | | தொகாநிலை |
|---|---|---|---|
| 2. | **ஐ** – நிலங்கடந்தான் | ... | நிலத்தைக் கடந்தான். |
| 3. | **ஆல்** – கல் எறிந்தான் | ... | கல்லால் எறிந்தான். |
| 4. | **கு** – அரசன் மகன் | ... | அரசனுக்கு மகன் |
| 5. | **இன்** – மலை வீழருவி | ... | மலையின் வீழருவி |
| 6. | **அது** – அரசன் மாளிகை | ... | அரசனது மாளிகை |
| 7. | **கண்** – பொழில் புகுந்தான் | ... | பொழிற்கண் புகுந்தான் |

**அவ்வழிப்புணர்ச்சி :**

(வேற்றுமையல்லாத வழியில் பதங்கள் புணர்வது)

**தொகைநிலைத் தொடர் :**

1. வினைத்தொகை ... கொல்யானை (கொன்ற யானை, கொல்கின்ற யானை, கொல்லும் யானை)
2. பண்புத்தொகை ... கருங்குதிரை (கருமையாகிய குதிரை)
   இருபெயரொட்டுப் பண்புத்தொகை ... சாரைப்பாம்பு (சாரையாகிய பாம்பு)
3. உவமைத் தொகை ... மதிமுகம் (மதிபோல் முகம்)
4. உம்மைத் தொகை ... சந்திரசூரியர் (சந்திரனும், சூரியனும்)
5. அன்மொழித் தொகை ... தேன்மொழி (தேன்போன்ற மொழியையுடையவள்) (சொன்னாள்)

**தொகாநிலைத் தொடர் :**

1. எழுவாய்த்தொடர் ... இராமன் வந்தான்
2. விளித்தொடர் ... இராமா வா.
3. பெயரெச்சத்தொடர் ... வந்த மனிதன்; பெரிய மனிதன்.
4. வினையெச்சத்தொடர் ... வந்து போனான்; மெல்லப்போனான்.
5. தெரிநிலை வினைமுற்றுத் தொடர் ... வந்தான் இராமன்
6. குறிப்புவினைமுற்றுத்தொடர் ... குழையன் இராமன்
7. இடைச்சொற்றொடர் ... மற்றொன்று
8. உரிச்சொற்றொடர் ... நனிபேதை
9. அடுக்குத்தொடர் ... பாம்பு பாம்பு

இவையெல்லாம் தழுவுதொடராம் : தழுவு தொடர் – நிலைமொழி வருமொழியைப் பொருட்பொருத்தமுறத் தழுவுவது; எனவே, இருவழியிலும் தழாத்தொடரும்

உளதென்றதாயிற்று; தழாத்தொடர் – நிலைமொழி வருமொழியைப் பொருட்பொருத்தமுறத் தழுவாதது.

**வேற்றுமைத் தழாத் தொடர்**

'பாற்குடம்' என்பது 'பாலை உடைய குடம்' என விரிதலால், 'பால்' என்பது 'உடைய' என்பதைத் தழுவி, 'குடம்' என்பதைத் தழுவாமையால் இது தழாத்தொடராகிய வேற்றுமைத்தொகை; இங்ஙனம் வருவது **உருபும் பயனுமுடன்றொக்கதொகை.** (பயன் –பிரயோசனம்; இங்கு உருபைப் பயன்படுத்துவது). 'மலையில் பெரிய மரங்கள் வளரும்' என்பதில் 'மலையில்' என்பது 'வளரும்' என்பதைத் தழுவிப் 'பெரிய' என்பதைத் தழுவாமையால் இது தழாத்தொடராகிய வேற்றுமைவிரி.

**அல்வழித்தழாத் தொடர்**

"சுரையாழ அம்மிமிதப்ப" என்பதில் 'சுரை' என்பது 'மிதப்ப' என்பதையும், 'அம்மி' என்பது 'ஆழ' என்பதையும் தழுவி, நின்றபடியே தழுவாமையால் இது தழாத்தொடராகிய அல்வழிப்புணர்ச்சி.

அடுக்கும் தழுவுதொடராயினும் ஒரு சொல்லே அடுக்கி வருதலால் மற்றயவை போலத் தழுவுதொடர் அன்றென்பதை அறிவித்தற்கு அதனை இறுதியில் வைத்தார். எட்டு வேற்றுமைகளுள் முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் பெயரும் பெயரின் விகாரமுமேயன்றித் தமக்கென வேறுருபு இல்லாமையால் அவ்விரண்டையும் 'எழுவாய்' 'விளி' என்று அல்வழியிற் சேர்த்து அவையொழிந்த ஆறையுமே வேற்றுமை யென்றார்.

இச்சூத்திரத்தால் பொருட்புணர்ச்சியைக் கூறினார். வருஞ்சூத்தி ரங்களால் எழுத்துப் புணர்ச்சியைக் கூறுகின்றார். இவ்வெழுத்துப் புணர்ச்சி அல்வழிவேற்றுமைப் பொருணோக்கத்தால் வருதலின் இதனைப் பின்னே கூறுகின்றார் என்க.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: வேற்றுமை ஐம்முதல் ஆறு தழுவுதொடர் ஆம்** – வேற்றுமைப் புணர்ச்சி ஐ ஆல் கு இன் அது கண் என்னும் ஆறுருபுகளும் மறைந்தாயினும் வெளிப்பட்டாயினும் வரப் பதங்கள் பொருந்துந் தொடர்ச்சியாம், **அல்வழி** –அல்வழிப் புணர்ச்சி, **தொழில்** (தழுவு தொடர்) –

வினைத்தொகையும், **பண்பு** (தழுவு தொடர்) – பண்புத் தொகையும், **உவமை** (தழுவு தொடர்) – உவமைத்தொகையும், **உம்மை** (தழுவு தொடர்) – உம்மைத்தொகையும், **அன்மொழி** (தழுவு தொடர்) – அன்மொழித் தொகையும், **எழுவாய்** (தழுவு தொடர்) – எழுவாய்த் தொடரும், **விளி** (தழுவு தொடர்) – விளித்தொடரும், **ஈரெச்சம்** (தழுவு தொடர்) – பெயரெச்சத் தொடரும் வினையெச்சத் தொடரும், (ஈர்) **முற்றுத்** (தழுவு தொடர்) – தெரிநிலை வினைமுற்றுத் தொடரும் குறிப்பு வினைமுற்றுத் தொடரும், **இடை** (தழுவு தொடர்) –இடைச்சொற் றொடரும், **உரி** (தழுவு தொடர்) – உரிச்சொற் றொடரும், அடுக்குத் தொடரும், **என ஈரேழ்** – எனப் பதங்கள் பொருந்துந் தொடர்ச்சி பதினான்காம், **எ–று.**

**உ–ம்.:–**

**வேற்றுமை**

| வேற்றுமைத்தொகை | வேற்றுமை விரி |
|---|---|
| (1.) நிலங்கடந்தான்.....(ஐ) | நிலத்தைக் கடந்தான். |
| (2.) கல்லெறிந்தான்...(ஆல்) | கல்லாலெறிந்தான்.. |
| (3.) கொற்றன்மகன்(கு) | கொற்றனுக்கு மகன். |
| (4.) மலைவீ ழருவி....(இன்) | மலையின் வீழருவி |
| (5.) சாத்தன்கை .... (அது) | சாத்தனது கை. |
| (6.) குன்றக்கூகை.... (கண்) | குன்றத்தின்கட்கூகை. |

**அல்வழி**

**உதாரணம்:–**

ஐந்து தொகைநிலைத் தொடர்கள்

1. கொல்யானை .... வினைத்தொகை
2. கருங்குதிரை.... பண்புத்தொகை
   சாரைப்பாம்பு .... இரு பெயரொட்டுப் பண்புத்தொகை
3. மதிமுகம் .... உவமைத்தொகை
4. இராப்பகல் .... உம்மைத்தொகை.
5. பொற்றொடி .... அன்மொழித்தொகை.
6. ஒன்பது தொகைநிலைத் தொடர்
7. சாத்தன்வந்தான் .... எழுவாய்த்தொடர்
8. சாத்தாவா.... விளித்தொடர்

ஐந்து தொகைநிலைத் தொடர்கள்

9. வந்தசாத்தன் .... பெயரெச்சத்தொடர்

10. வந்துபோனான்....வினையெச்சத்தொடர்

11. வந்தான்சாத்தன்....தெரிநிலைவினைமுற்றுத்தொடர்.

12. பெரியன்சாத்தன் .... குறிப்புவினைமுற்றுத்தொடர்

13. மற்றொன்று .... இடைச்சொற்றொடர்

14. நனிபேதை .... உரிச்சொற்றொடர்

15. பாம்புபாம்பு .... அடுக்குத்தொடர்

தழுவுதொடர் ஆறும் பதினான்கும் எனக் கூறவே, அவ்விரு வழியிலுந் தழாத்தொடருஞ் சில உள என்றாராயிற்று. கைக்களிறு என்பது கையை யுடைய களிறு என விரிக்கப்படுதலால், கை யென்பது களிறென்பதைத் தழுவாது தொடர்ந்தது; இது தழாத் தொடராகிய வேற்றுமைப் புணர்ச்சி. 'சுரையாழ வம்மி மிதப்ப' என்பது, சுரைமிதப்ப அம்மியாழ எனக் கூட்டப் படுதலால், சுரையென்பது ஆழ என்பதையும் அம்மி யென்பது மிதப்ப என்பதையுந் தழுவாது தொடர்ந்தன; இவை தழாத் தொடராகிய அல்வழிப் புணர்ச்சி. தழாத் தொடராவது நிலைமொழியானது வருமொழியைப் பொருட்பொருத்தமுறத் தழுவாத தொடர். பொருட் பொருத்தமுறத் தழுவியதொடர் தழுவுதொடர்.

## வ. குமாரசாமிப் புலவர்

உம்மைத்தொகையும் – **அன்மொழி** (தழுவுதொடர்) – அன்மொழித்தொகையும் – **எழுவாய்** (தழுவுதொடர்) – எழுவாய்த் தொடரும், – **விளி** (தழுவு தொடர்) – விளித்தொடரும், – **ஈரெச்சம்** (தழுவுதொடர்) – பெயரெச்சத் தொடரும் வினையெச்சத் தொடரும், – (ஈர்) **முற்று** (த்தழுவுதொடர்) – தெரிநிலை வினைமுற்றுத் தொடரும் குறிப்புவினை முற்றுத் தொடரும், – **இடை** (தழுவுதொடர்) – இடைச்சொற்றொடரும், – **உரி தழுவுதொடர்** – உரிச்சொற்றொடரும், – **அடுக்கு** – அடுக்குத்தொடரும், – **என ஈரேழே** – எனப் பதங்கள் பொருந்துந் தொடர்ச்சி பதினான்காம். **எ-று.**

ஐம்முதலாறென்றது இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை பரியந்தமுள்ள ஆறு வேற்றுமைகளையுங் குறித்து நின்றதாதலின் அவற்றின் உருபுகளனைத்

தையுங் கொள்க. எவ்வாறெனில் மூன்றாம் வேற்றுமைக்கு ஆல் என்பதும் அன்றி ஆன், ஒடு, ஓடு, கொண்டு என்பனவுங் கொள்ளப் படுதல், இப்படியே மற்ற வேற்றுமைகளின் பலவுருபுகளையுஞ் சேர்த்தறிக.

(வேற்றுமைவழி உதாரணம்)

| (வேற்றுமைத்தொகை) | | (வேற்றுமைவிரி = தொகாநிலை) |
|---|---|---|
| 1. நிலங்கடந்தான்... | ... (ஐ) | நிலத்தைக் கடந்தான் |
| 2. கல்லெறிந்தான்.... | ... (ஆல்) | கல்லாலெறிந்தான். |
| 3. கொற்றன்மகன்... | ... (கு) | கொற்றனுக்கு மகன் |
| 4. மலைவீழருவி.... | ... (இன்) | மலையின்வீழருவி |
| 5. சாத்தன்கை .... | ... (அது) | சாத்தனதுகை |
| 6. குன்றக்கூகை.... | ... (கண்) | குன்றத்தின்கட்கூகை |

(அல்வழி உதாரணம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | கொல்யானை | ... ... | வினைத்தொகை |
| 2. | கருங்குதிரை | ... ... | பண்புத்தொகை |
| | சாரைப்பாம்பு | ... ... | இருபெயரொட்டுப் பண்புத்தொகை |
| 3. | மதிமுகம் | ... ... | உவமைத்தொகை |
| 4. | இராப்பகல் | ... ... | உம்மைத்தொகை |
| 5. | பொற்றொடி | ... ... | அன்மொழித்தொகை. |
| | **இவ்வைந்தும் தொகைநிலைத் தொடர்** | | |
| 6. | சாத்தன்வந்தான் | ... ... | எழுவாய்த்தொடர் |
| 7. | சாத்தாவா | ... ... | விளித்தொடர் |
| 8. | வந்தசாத்தன் | ... ... | பெயரெச்சத்தொடர் |
| 9. | வந்துபோனான் | ... ... | வினையெச்சத்தொடர் |
| 10. | வந்தான்சாத்தன் | ... ... | தெரிநிலை வினைமுற்றுத் தொடர் |
| 11. | பெரியன்சாத்தன் | ... ... | குறிப்புவினைமுற்றுத் தொடர் |
| 12. | மற்றொன்று | ... ... | இடைச்சொற்றொடர் |
| 13. | நனிபேதை | ... ... | உரிச்சொற்றொடர் |
| 14. | பாம்புபாம்பு | ... ... | அடுக்குத்தொடர் |

தழுவுதொடர் ஆறும் பதினான்குமெனக் கூறவே, அவ்விரு வழியிலுந்தழாத் தொடருஞ் சிலவுளவென்றாராயிற்று.

கைக்களிறு என்பது கையையுடைய களிறு என விரிக்கப்படுதலால், கையென்பது களிறு என்பதைப் பொருளால் தழுவாமல் (உடைய என்பதைப் பெற்றபின்னே தழுவித்) தொடர்ந்து நின்றது: இது தழாத்தொடராகிய வேற்றுமைப் புணர்ச்சி. சுரையாழவம்மிமிதப்ப என்பது சுரைமிதப்ப அம்மி ஆழ எனக் கூட்டவேண்டுதலால், சுரையென்பது ஆழ என்பதையும், அம்மியென்பது மிதப்ப என்பதையும் (பொருளால் தழுவாது) தொடர்ந்தன; இவை தழாத்தொடராகிய அல்வழிப்புணர்ச்சி.

தழாத்தொடராவது நிலைமொழியானது வருமொழியைப் பொருட் பொருத்தமுறத் தழுவாத தொடர். பொருட் பொருத்தமுறத் தழுவிய தொடர் தழுவுதொடர்.

முதல் வேற்றுமையையும் எட்டாம் வேற்றுமையையும் அல்வழியென்றது என்னையெனின், இரண்டாம் வேற்றுமை முதலிய ஆறுவகையும் வேற்றுமையுருபை மறைவிலாவது வெளிப்படையிலாவது உடையனவாயே வரும். முதல் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் சிறுபான்மை உருபேற்றும், பெரும்பான்மை உருபேலாமல் வெறுமையாயு மிருக்கும். இப்பெரும் பான்மை யியல்புபற்றி அல்வழியென்று கொண்டார் என்க. அவ்வாறாயின் பெயரியலில் 'எட்டே' வேற்றுமை என்று வேற்றுமைக்குட் படுத்திச் சொல்லிய தென்னை யெனின்; முதல் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் பெயர்ப்பொருளைக் கருத்தாப் பொருளும் விளிப்பொருளுமாக முறையே வேற்றுமைப்படுத்தல் பற்றியேயாமென்க. எனவே உருபேற்கு நியதி பூணாமையால் அவ்வழியென்றும், பெயர்ப் பொருளை வேறுபடுத்தலால் வேற்றுமையென்றும் இரண்டற்கு முரியவாயினவென் றுணர்க.

வேற்றுமைவழிக்குச் சொல்லப்பட்ட ஆறும் தொகைநிலையாயும் வரும், தொகாநிலையாயும் வரும். எவ்வாறு வரினும் அவை வேற்றுமைவழிக் குரியனவாம்.

அவ்வழிவகை பதினான்கனுள் : – முன்னைய நான்குந் தொகைநிலையாம். பின்னைய ஒன்பதும் தொகாநிலையாம் என்றுணர்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: **வேற்றுமை** – வேற்றுமைப் புணர்ச்சியாவது, **ஐ முதல் ஆறு ஆம்** – ஐ ஆல் கு இன் அது கண் என்கின்ற ஆறு உருபுகளும் (இடையில் மறைந்தாயினும் வெளிப்பட்டாயினும் வரப் பதங்கள்) பொருந்தும் தொடர்ச்சியாம்; **அல்வழி** – அல்வழிப் புணர்ச்சி யாவது, **தொழில்** – வினைத்தொகையும், **பண்பு** – பண்புத்தொகையும், **உவமை** – உவமைத்தொகையும், **உம்மை** – உம்மைத்தொகையும், **அன்மொழி** – அன்மொழித்தொகையும், **எழுவாய்** – எழுவாய்த்தொடரும், **விளி** – விளித்தொடரும், (ஈர்) **எச்சம்** – பெயரெச்சத் தொடரும் வினையெச்சத் தொடரும், (ஈர்) **முற்று** – தெரிநிலை வினைமுற்றுத் தொடரும் குறிப்புவினை முற்றுத்தொடரும், **இடை** – இடைச்சொல் தொடரும், **உரி** – உரிச்சொல் தொடரும், **அடுக்கு** – அடுக்குத் தொடரும், **என** – என்று, **ஈர் ஏழ்** – பதினான்காம்; **தழுவு தொடர்** – (இவை யெல்லாம்) தழுவுந் தொடர்களாம்; எ–று. அல்வழி– வேற்றுமை யல்லாத வழி.

'ஈர்' என்பதை 'முற்று' என்பதனோடும் கூட்டுக.

ஐ முதலிய ஆறு வேற்றுமை யுருபுகள் இடையில் மறைந்து நிற்க நிலைமொழி வருமொழியோடு புணர்வது, வேற்றுமைத் தொகைநிலை யென்றும், அவ்வுருபுகள் வெளிப்பட்டு நிற்கப் புணர்வது, வேற்றமைத் தொகாநிலை (விரி) யென்றும் கூறப்படும். அல்வழியில் வினைத்தொகை முதலிய ஐந்தும், தொகைநிலைகள்; மற்றை ஒன்பதும், தொகாநிலைகள். இவற்றின் இலக்கணத்தை யெல்லாம், மேற் பொதுவியலில் 10 ஆஞ் சூத்திர முதல் 14 ஆஞ் சூத்திரங்களில் விவரமாகக் காணலாம்.

**வேற்றுமைப் புணர்ச்சி**

**உ–ம்:–**

| தொகை | | விரி |
|---|---|---|
| நீர் குடித்தான் | (ஐ) | நீரைக் குடித்தான் |
| கல் எறிந்தான் | (ஆல்) | கல்லால் எறிந்தான் |
| மன்னன் மகன் | (கு) | மன்னனுக்கு மகன் |
| மலைவீழருவி | (இன்) | மலையின் வீழருவி. |

பொன்னன் கை (அது) பொன்னனது கை.

வீடு புகுந்தான் (கண்) வீட்டின்கண் புகுந்தான்.

## அல்வழிப் புணர்ச்சி

தொகைநிலைத்தொடர் – 5

1. வினைத்தொகை . . . கொல்யானை (கொன்ற யானை, கொல்கின்ற யானை, கொல்லும் யானை)

2. பண்புத்தொகை . . . கருங்குதிரை (கருமையாகிய குதிரை)

   இருபெயரெட்டுப் பண்புத்தொகை . . . பனைமரம் (பனையாகிய மரம்)

3. உவமைத்தொகை . . . மதிமுகம் (மதிபோன்ற முகம்) தொகைநிலை தொடர்

4. உம்மைத்தொகை . . .கபிலபரணர் (கபிலனும் பரணனும்)

5. அன்மொழித்தொகை ... கருங்குழல் (கருமையாகிய கூந்தலையுடையவள்) (வந்தாள்)

தொகாநிலைத்தொடர் – 9

6. எழுவாய்த்தொடர் . . . பொன்னன் வந்தான்.

7. விளித்தொடர் . . . பொன்னா! வா.

8. பெயரெச்சத்தொடர் . . . வந்த மன்னன், பெரிய மன்னன்.

9. வினையெச்சத்தொடர் . . . வந்து போனான், மெல்லப் போனான்.

10. தெரிநிலை வினைமுற்றுத் தொடர் . . . வந்தான் பொன்னன்.

11. குறிப்பு வினை முற்றுத் தொடர் . . . குழையன் கொற்றன்.

12. இடைச்சொல்தொடர் . . . மற்றொன்று.

13. உரிச்சொல்தொடர் . . . நனி பேதை.

14. அடுக்குத்தொடர் . . . பாம்புபாம்பு.

இவை தழுவுதொடர் எனவே, அவ் விருவழியிலும் தழாத்தொடரும் சில உள என்றாராயிற்று. 'நீர்க்குடம்' என்பது – நீரையுடைய குடம் என விரிதலால், நீர் என்பது உடைய என்பதைத் தழுவிக் குடம் என்பதைப் பொருளால் தழுவாமல் தொடர்ந்ததனால், இது தழாததொடராகிய வேற்றுமைத்தொகை; (இவ்வாறு தொக்கு வருவது, உருபும்

பயனும் உடன்தொக்க தொகை எனப்படும். உருபும்பொருளு முடன்தொக்க தொகை யெனினும் ஒக்கும்) 'மரத்தைச் சாத்தன் வெட்டினான்' என்பதில், மரத்தை என்பது வெட்டினான் என்பதைத் தழுவிச் சாத்தன் என்பதைப் பொருளால் தழுவாமல் தொடர்ந்ததனால், இது தழாத்தொடராகிய வேற்றுமை விரி. "சுரையாழ அம்மி மிதப்ப" என்பது சுரை மிதப்ப அம்மி ஆழ எனக் கூட்டுப்படுதலால், சுரை என்பது ஆழ என்பதையும் அம்மி என்பது மிதப்ப என்பதையும் பொருளால் தழுவாமல் தொடர்ந்தன. இவை, தழாத்தொடராகிய அல்வழிப் புணர்ச்சி. தழாத்தொடராவது, நிலைமொழியானது வருமொழியோடு பொருட் பொருத்தமுறத் தழுவாத தொடர். பொருட் பொருத்தமுறத் தழுவிய தொடர் – தழுவுதொடர்.

**உருபும் பயனுமுடன் தொக்க தொகை.**

| | | | |
|---|---|---|---|
| இரண்டாம் வேற்றுமை | – | நீர்க்குடம் | (நீரையுடைய குடம்.) |
| மூன்றாம் வேற்றுமை | – | பொற்குடம் | (பொன்னலாகிய குடம்.) |
| நான்காம் வேற்றுமை | – | நோய்மருந்து | (நோய்க்குத்தரும் மருந்து) |
| ஐந்தாம் வேற்றமை | – | மலையருவி | (மலையினின்றுவிழும் அருவி) |
| ஆறாம் வேற்றுமை | – | (வந்தவழிக் கண்டுகொள்க.) | |
| ஏழாம் வேற்றுமை | – | காட்டுப்புலி | (காட்டிலுள்ள புலி) |

எட்டு வேற்றுமைகளுள் முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் பெயரும் பெயரின் விகாரமுமே யன்றித் தமக்கென வேறு உருபு இல்லாமையால், அவ் விரண்டையும் 'எழுவாய்', 'விளி' என்று அல்வழியிற் சேர்த்து, அவை ஒழிந்த ஆறையுமே வேற்றுமை யென்றார். அடுக்கும் தழுவுதொடராயினும், ஒருசொல்லே அடுக்கி வருதலால் மற்றையவை போலத் தழுவு தொடரென்பதை அறிவித்தற்கு, அதனை இறுதியில் வைத்தார்.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:– வேற்றுமை** – வேற்றுமைப்புணர்ச்சி, **ஐம்முதல் முறு தழுவு தொடர் ஆம்** – ஐ ஆல் கு இன் அது கண் என்னும் ஆறுருபுகளும் மறைந்தாயினும் வெளிப்பட்டாயினும் வரப் பதங்கள் பொருந்துந் தொடர்ச்சியாம். **அல்வழி** – அல்வழிப் புணர்ச்சி, **தொழில்** (தழுவு தொடர்) –

வினைத்தொகையும், **பண்பு** (தழுவு தொடர்) – பண்புத் தொகையும், **உவமை** (தழுவு தொடர்) – உவமைத் தொகையும், **உம்மை** (தழுவு தொடர்)– உம்மைத் தொகையும், **அன்மொழி** (தழுவு தொடர்) – அன்மொழித்தொகையும், **எழுவாய்** (தழுவு தொடர்) – எழுவாய்த் தொடரும், **விளி** (தழுவு தொடர்)– விளித் தொடரும், ஈரெச்சம் (தழுவு தொடர்) – பெயரெச்சத்தொடரும் வினையெச்சத்தொடரும், (ஈர்) **முற்று**(த் தழுவு தொடர்) – தெரிநிலை வினை முற்றுத் தொடரும் குறிப்பு வினைமுற்றுத் தொடரும், **இடை** (தழுவு தொடர்) – இடைச்சொற்றொடரும், **உரி** (தழுவு தொடர்) – தெரிநிலை வினை முற்றுத் தொடரும் குறிப்பு வினைமுற்றுத் தொடரும், **இடை** (தழுவு தொடர்) – இடைச்சொற்றொடரும், **உரி** (தழுவு தொடர்)– உரிசொற்றொடரும், **அடுக்குத் தொடரும், என ஈரேழ் –** எனப் பதங்கள் பொருந்துந் தொடர்ச்சி பதினா;னகாம். **எ—று.**

## வேற்றுமை.

(வேற்றுமையில், ஐ முதலிய ஆறு வேற்றுமையுருபுகள் இடையில் மறைந்து நிற்க நிலைமொழி வருமொழியோடு புணர்வது வேற்றுமைத் தொகை என்றும், அவ்வுருபுகள் வெளிப்பட்டு நிற்கப் புணர்வது வேற்றுமை விரி என்றும் கூறப்படும்.)

**உ—ம்.:—**

| **வேற்றுமைத் தொகை** | **வேற்றுமை விரி** |
|---|---|
| (1) நிலங்கடந்தான் ..... (ஐ) | நிலத்தைக் கடந்தான். |
| (2) கல்லெறிந்தான் .... (ஆல்) | கல்லா லெறிந்தான். |
| (3) கொற்றன்மகன் ...... (கு) | கொற்றனுக்கு மகன். |
| (4)மலைவீழருவி ..... (இன்) | மலையின் விழருவி. |
| (5) சாத்தன்கை ...... (அது) | சாத்தனது கை. |
| (6) குன்றக் கூகை. (கண்) | குன்றத்தின்கட் கூகை. |

## அல்வழி

(அல்வழியாவது வேற்றுமையல்லாவழி. அல்வழியில் வினைத்தொகை முதலிய ஐந்தும் தொகை நிலைத்தொடர் என்றும், மற்ற ஒன்பதும் தொகாநிலைத்தொடர் என்றும் கூறப்படும். வேற்றுமைத் தொகை வினைத்தொகை முதலிய ஆறு தொகைகளின் இலக்கணத்தைப் பொதுவியல் 12—வது முதல் 18—வது வரையில் உள்ள சூத்திரங்களில் விளங்கக் காணலாம்.)

உ-ம்.:-

(1) கொல்யானை ............ வினைத்தொகை.

(2) கருங்குதிரை ......... பண்புத்தொகை.

சாரைப்பாம்பு ...... இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

(3) மதிமுகம் .......... உவமைத்தொகை.

(4) இராப்பகல் ......... உம்மைத்தொகை.

(5) பொற்றொடி ........ அன்மொழித்தொகை

(6) சாத்தன் வந்தான் ............ எழுவாய்தொடர்

(7) சாத்தா வா ............ விளித்தொடர்

(8) வந்த சாத்தன் .......... பெயரெச்சத்தொடர்

(9) வந்து போனான் ........ வினையெச்சத்தொடர்.

(10) வந்தான் சாத்தன் ........ தெரிநிலை வினைமுற்றுத் தொடர்.

(11) பெரியன் சாத்தன் ......... குறிப்புவினைமுற்றுத்தொடர்.

(12) மற்றொன்று ............ இடைச்சொற்றொடர்

(13) நனிபேதை .......... உரிச்சொற்றொடர்

(14) பாம்புபாம்பு ............ அடுக்குத்தொடர்.

'தழுவுதொடர்' ஆறும் பதினான்கும் எனக் கூறவே, அவவ்ஸா வழியிலுந் தாத் தொடருஞ் சில உள என்றாயிற்று. நீர்க்குடம் என்பது நீரையுடைய குடம் என விரிக்கப்படுதலால், நிர் என்பது குடம் என்பதைத் தழுவாது தொடர்ந்து; இது தழாத் தொடராகிய வேற்றுமைப்புணர்சயீச. 'சுரை யாழ வம்மி மிதப்ப' என்பது 'சுரை மிதப்ப அம்மி யாழ' எனக் கூட்டப்படுதலால், சுரையென்பது ஆழ என்பதையும் அம்மியென்பது மிதப்ப என்பதையுந் தழுவாது தொடர்ந்தன; இவை தழாத் தொடராகிய அல்வழிப்புணர்ச்சி. (தழாத்தொடராவது நிலைமொழியானது வருமொழியைப் பொருட்பொருத்தமுறத் தழுவாத தொடர். தழுவு தொடராவது பொருட் பொருத்தமுறத் தழுவிய தொடர்.)

தழாத் தொடராகிய வேற்றுமைத் தொகை, உருவும் பயனும் உடன் தொக்க தொகை எனவும் கூறப்படும். இரண்டு முதல்

ஏழுவரையல் உள்ள ஆறு வேற்றுமைகளில் ஆறாம் வேற்றுமை யொழித்து, மற்ற ஐந்து உருபும் பயனும் உடன் தொக்க தொகையாகவரும்.

**உ–ம்.:–**

நீர்க்குடம், மட்குடம், நோய்மருந்து, மலையருவி, விட்டெலி.

வேற்றுமைகள் எட்டெனு மேல் **291**–வது சூத்திரம் முதலி யவைகளாற் கூறுவர். இங்கே ஆறு என்றது என்னெனில், முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக் கும் பெயரும்பெ பயரின் விகாரமுமறித் மக்கென வேறு உருபு இல்லாமையால், அவ்விரண்டையும் 'எழுவாய்' 'விளி' என்று அல்வழியிற் சேர்த்து அவை ஒழிந்த ஆறையுமே வேற்றுமைப் புணர்ச்சிக்கு உரியவாகக் கொண்டாரென்க.

அன்மொழித் தொகையாவது பயனிலைக்கு அல்லாத மொழித்தொகை. 'பொற்றொடி வந்தாள்' என்பதில் வந்தாள் என்னும் பயனிலை பொற்றொடிக்குப் பொருத்தமல்லாதது. 'பொற்றொடியை அணிந்தாள் வந்தாள்' என விரிக்க வேண்டியிருத்தலின் இது அன்மொழித்தொகையாயிற்று.

அடுக்கும் தழுவு தொடராயினும் ஒரு சொல்லே அடுக்கி வருதலால் மற்றைய போலத் தழுவு தொட ரன்றென்பதற்கு இறுதியில் வைத்தார்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள்.:– வேற்றுமை**–வேற்றுமைப்புணர்ச்சியாவது, **ஐம் முதல் ஆறு ஆம்** – ஐ, ஆல், கு, இன், அது, கண் என்கின்ற ஆறுருபுகளும் (மறைந்தாகிலும் வெளிப்பட்டாகிலும்) வரப் பதங்கள் பொருந்துந் தொடர்ச்சியாம்; **அல்வழி** – அல்வழிப் புணர்ச்சியாவது, **தொழில்** – வினைத்தொகையும், **பண்பு**–பண்புத்தொகையும், **உவமை** – உவமைத் தொகையும், **உம்மை** – உம்மைத் தொகையும், **அன்மொழி** – அன்மொழித் தொகையும், **எழுவாய்** – எழுவாயும், **விளி** – விளியும், **ஈர் எச்சம்** – பெயரெச்ச சினையெச்சங்களும், (ஈர்) **முற்று** – தெரிநிலைவினை குறிப்புவினை முற்றுக்களும், **இடை** – இடைச்சொல்லும், **உரி** – உரிச்சொல்லும், **அடுக்கு என** – அடுக்கு என்று, **ஈர் ஏழ்** – பதினான்கு வகையாக, தழுவு தொடர் – (பதங்கள்) பொருந்துத் தொடர்ச்சியாம். **எ–று.**

**பொ–ரை.:–**

வேற்றுமைப் புணர்ச்சியாவது ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னும் ஆறுருபுகளம் (மறைந்தாவது வெளிப்பட்டாவது) வரப் பதங்கள் பொருந்துந் தொடர்ச்சியாம்; அல்வழிப்புணர்ச்சியாவது, வினைத் தொகை முதலிய ஐந்து தொகைநிலையிலும் எழுவாய் முதலிய ஒன்பது தொடர் நிலையிலும், (பதங்கள்) பொருந்துந் தொடர்ச்சியாகிய பதினான்கும் ஆம்.

**வேற்றுமைப் புணர்ச்சி.**

**உதாரணம்.:–**

| வேற்றுமைத் தொகை | வேற்றுமை விரி |
|---|---|
| 2. (ஐ) – நீர்குடித்தான். | நீரைக்குடித்தான். |
| 3. (ஆல்) – கல்லெறிந்தான். | கல்லாலெறிந்தான். |
| 4. (கு) – கொற்றன்மகன். | கொற்றனுக்குமகன். |
| 5. (இன்) – மலைவீழருவி. | மலையின்வீழருவி. |
| 6. (அது) – சாத்தன்கை. | சாத்தனதுகை. |
| 7. (கண்) – குன்றக் கூகை | குன்றத்தின்கட்கூகை. |

**அல்வழிப் புணர்ச்சி**

(தொகைநிலைத்தொடர்–5)

1. வினைத்தொகை – கொல்யானை (கொன்ற யானை, கொல்கின்ற யானை, கொல்லும் யானை.), அடுகளிறு.

2. பண்புத்தொகை – கருங்குதிரை (கருமையாகிய குதிரை.), செந்தாமரை.

இருபெயரொட்டுப் பண்புத்தொகை – சாரைப்பாம்பு (சாரையாகிய பாம்பு.), ஆயன் சாத்தன்.

3. உவதைத்தொகை – மதிமுகம் (மதிபோன்ற முகம்.), பவளவாய்.

4. உம்மைத்தொகை – கபில பரணர் (கபிலனும் பரணனும்.), இராப்பகல்.

5. அன்மொழித்தொகை – கருங்குழல் வந்தாள் (கருமையாகிய கூந்தலையுடையவள் வந்தாள்.), பொற்றொடி வந்தாள்.

(தொகாநிலைத்தொடர்–9.)

6. எழுவாய்த்தொடர் – சாத்தன் வந்தான், கொற்றன் கண்டான்.

7. விளித்தொடர் – சாத்தா வா, கொற்றா கேள்.

8. பெயரெச்சத்தொடர் – வந்த சாத்தன், பெரிய கொற்றன்.

9. வினையெச்சத்தொடர்–வந்து போனான், மெல்லப் பேசினான்.

10. தெரிநிலை வினைமுற்றுத்தொடர்–வந்தான் சாத்தான், கண்டான் கொற்றன்.

11. குறிப்பு வினைமுற்றுத்தொடர் – குழையன் கொற்றன், பெரியன் சாத்தன்.

12. இடைச்சொற்றொடர் – மற்றொன்ற, கொன்னே கழிந்தன்று.

13. உரிச்சொற்றொடர் – நனி பேதை, கடிக் கமலம்.

14. அடுக்குத்தொடர் – பாம்பு பாம்பு, நெருப்பு நெருப்பு.

இவை 'தழுவு தொடர்' எனவே, அவ் விருவழியிலும் தழாத் தொடரும் சில உண்டெடன்பதாயிற்று. 'கைக்களிறு' என்பது கையை யுடைய களிறு என விரிக்கப்படுதலால், 'கை' என்பது 'களிறு' என்பதைத் தழுவாமையால், இப்படி வருகின்றவைக ளெல்லாம் தழாத்தொடராகிய வேற்றுமைத் தொகைப் புணர்ச்சியாம். இவ்வாறு தொக்குவருவது உருபும் பயனு முடன்தொக்க தொகை யெனப்படும்; உருபும் பொருளும் உடன்தொக்கதொகை யெனினு மொக்கும். 'மரத்தைச் சாத்தன் வெட்டினான்' என்பதில், மரத்தை என்பது வட்டினானென்பதைத் தழுவிச் சாத்தன் என்பதைத் தழுவாமையால், இது தழாத்தொடராகிய வேற்றுமை விரியாம்.

"சுரையாழ வம்மி மிதப்ப" என்பது 'சுரை மிதப்ப அம்மி யாழ' எனக் கூட்டப்படுதலால், 'சுரை' என்பது 'ஆழ' என்பதையும் 'அம்தி' என்பது 'மிதப்ப' என்பதையும் தழுவாமையால், இப்படி வருகின்றவைகளெல்லாம் தழாத்தொடராகிய அல்வழிப் புணர்ச்சியாம்.

தழாத்தொடர் – நிலைமொழியானது வருமொழியோடு பொருட் பொருத்தமுறத் தழுவாததொடர்.

தழுவுதொடர் – பொருட் பொருத்தமுறத் தழுவிய தொடர்.

எட்டு வேற்றுமைகளுள் முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் பெயரும் பெயரின் விகாரமே யன்றித்

தமக்கென வேறுருபு இல்லாமையால், அவ் விரண்டையும் 'எழுவாய்', 'விளி' என்று அல்வழியிற் சேர்த்து, அவையொழிந்த ஆறையுமே வேற்றுமை யென்றார்.

அடுக்கும் தழுவு தொடராயினும், ஒருசொல்லே அடுக்கி வருதலால் மற்றவைபோலத் தழுவு தொட ரன்றென்பதை அறிவித்தற்கு அதனை இறுதியில் வைத்தார்.

## கா.நமச்சிவாய முதலியார்

**வேற்றுமை தழுவுதொடர்** – வேற்றுமைப் பொருட் புணர்ச்சியாவது, **ஐம்முதல் ஆறாம்** – ஐ ஆல் கு இன் அது கண் என்கின்ற ஆறு உருபுகளும் மறைந்தாகிலும் வெளிப்பட்டாகிலும் வரப் பதங்கள் பொருந்துந் தொடர்ச்சியாம்; **அல்வழி** (தழுவுதொடர்) – அல்வழிப் பொருட் புணர்ச்சியாவது, **தொழில்** – வினைத் தொகையும், **பண்பு** – பண்புத்தொகையும், **உவமை** – உவமைத் தொகையும், **உம்மை** – உம்மைத் தொகையும், **அன்மொழி** – அன்மொழித் தொகையும், **எழுவாய்** – எழுவாயும் , **விளி** – விளியும், **ஈரெச்சம்** – பெயரெச்ச வினையெச்சங்களும், (ஈர்) **முற்று** – தெரிநிலை வினைமுற்று குறிப்புவினை முற்றுக்களும், **இடை** – இடைச் சொல்லும், **உரி** – உரிச்சொல்லும், **அடுக்கு** – அடுக்கும், **என** – என்று, **ஈரேழ்** – பதினான்கு வகையாம்.

'**தழுவு தொடர்**' என்பதை வேற்றுமையொடும், அல்வழியொடும் கூட்டுக.

**உதாரணம்:–**

**(வேற்றுமைப் புணர்ச்சி – 6)**

| | | வேற்றுமைத் தொகை | வேற்றுமை விரி |
|---|---|---|---|
| 1. | ஐ : | நிலங்கடந்தான் | நிலத்தைக் கடந்தான் |
| 2. | ஆல் : | கண் பார்த்தான் | கண்ணால் பார்த்தான் |
| 3. | கு : | கொற்றன்மகன் | கொற்றனுக்கு மகன் |
| 4. | இன் : | மலைவீழருவி | மலையின் வீழருவி |
| 5. | அது : | சாத்தன்கை | சாத்தனதுகை |
| 6. | கண் : | வீடு புகுந்தான் | வீட்டின்கண் புகுந்தான் |

**(அல்வழிப்புணர்ச்சி – 14)**

தொகைநிலைத் தொடர் – 5.

1. வினைத்தொகை – கொல்யானை, அடுகளிறு
2. பண்புத்தொகை – கருங்குதிரை, செந்தாமரை

| | | |
|---|---|---|
| | இருபெயரொட்டுப் பண்புத்தொகை | – சாரைப்பாம்பு, ஆயன் சாத்தன் |
| 3. | உவமத்தொகை | – மதிமுகம், பவளவாய் |
| 4. | உம்மைத்தொகை | – சேரசோழபாண்டியர், இராப்பகல் |
| 5. | அன்மொழித்தொகை | – பொற்றொடி, தாழ்குழல் |

தொகாநிலைத் தொடர் – 9

| | | |
|---|---|---|
| 1. | எழுவாய்த்தொடர் | – சாத்தன்வந்தான், கொற்றன்கண்டான் |
| 2. | விளித்தொடர் | – சாத்தாவா, கொற்றாகேள் |
| 3. | பெயரெச்சத்தொடர் | – வந்தசாத்தன், வருகின்ற சாத்தன் |
| 4. | வினையெச்சத்தொடர் | – வந்துபோனான், வரப்போனான் |
| 5. | தெரிநிலைவினைமுற்று | – வந்தான் சாத்தான், கண்டான் கொற்றன் |
| 6. | குறிப்பு வினைமுற்று | – குழையன் கொற்றன், பெரியன் சாத்தன் |
| 7. | இடைச்சொற்றொடர் | – மற்றொன்று, கொன்னே கழிந்தன்று |
| 8. | உரிச்சொற்றொடர் | – நனி பேதை, கடிக்கமலம் |
| 9. | அடுக்குத்தொடர் | – பாம்புபாம்பு, நெருப்பு நெருப்பு |

இவை தழுவுதொடர் எனவே, அவ்விரு வழியிலுந் தழாத்தொடருஞ் சில உண்டென்றதாயிற்று.

**வேற்றுமைத் தழாத்தொடர்**

| | | |
|---|---|---|
| 1. | கைக்களிறு | – கையையுடைய களிறு |
| 2. | மரக்கதவு | – மரத்தால் செய்த கதவு |
| 3. | தரும சத்திரம் | – தருமத்திற்குக் கட்டிய சத்திரம் |
| 4. | மலை யருவி | – மலையினின்றும் வீழ் அருவி |
| 5. | குன்றக் கூகை | – குன்றத்தில் உள்ள கூகை |

இவற்றுள், கைக்களிறு என்பது, கையைக் களிறு என இரண்டாம் வேற்றுமை விரிக்கப்பட்ட பொழுதும் பொருட்பொருத்தமுறத் தழுவாமையால், இது வேற்றுமைத் தழாத்தொடராயிற்று; ஆதலால், இடையே உடைய என்னும் ஒரு சொல் தந்து முடிக்கப்பட்டது. இஃது **உருபும் பயனும் உடன்தொக்க தொகை** என்றுஞ் சொல்லப்படும். மற்ற வேற்றுமைகளையும் இவ்வாறே கொண்டு முடிக்க. இஃது ஆறாம் வேற்றுமைக்கு வருவதில்லை.

**'சுரையாழ அம்மிமிதப்ப'** என்பது, சுரைமிதப்ப அம்மியாழ எனக் கூட்டப்படுதலின், சுரை என்பது ஆழ என்பதையும், அம்மி என்பது மிதப்ப என்பதையுந் தழுவாமையால், இப்படி

வருகின்றவைக ளெல்லாந் தழாத்தொடராகிய அல்வழிப் புணர்ச்சியாம்.

தழுவு தொடராவது, நிலைமொழியானது வருமொழியைப் பொருட் பொருத்தமுறத் தழுவும் தொடராம்.

தழாத்தொடராவது, நிலைமொழியானது வருமொழியைப் பொருட் பொருத்தமுறத் தழுவாத தொடராம்.

முதல் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் பெயரும் பெயரின் விகாரமுமே யாதலன்றி, அவற்றிற்குத் தமக்கென வேறு உருபு இல்லாமையால், அவ்விரண்டையும் எழுவாய், விளி என்று அல்வழியில் சேர்த்து, அவையொழிந்த ஆறையும் வேற்றுமைப் புணர்ச்சி யென்றார்.

வேற்றுமை அல்லாத வழி அல்வழி என்க.

## மோசசு பொன்னையா

ஐ முதலிய ஆறு வேற்றுமை உருபுகள் மறைந்து தொகை நிலைப்பட்டும், வெளிப்பட்டுத் தொகா நிலைப்பட்டும் வேற்றுமைப் பொருணோக்கால் நிலைவரு மொழிகள் புணரும்தழுவு தொடர் ஆறும் வேற்றுமைத் தொடர்களாம்; வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை, எழுவாய்த்தொடர், விளித்தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், தெழில்வினைமுற்றுத் தொடர், குறிப்பு வினைமுற்றுத்தொடர், இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர் என்னும் தழுவு தொடர் பதின்மூன்றும் அடுக்குத்தொடர் ஒன்றுஞ் சேர்ந்த பதினான்கும் அல்வழித் தொடர்களாம், எ–று.

இஃது எழுத்ததிகாரமாதலின், எழுத்து வகையாலல்லாமல் சொற்பொருள் வகையால் மட்டுமே வேறுபாடுடைய எழுவாய் விளி என்னும் இருவேற்றுமைகளையும் நீக்கி, வேற்றுமை ஆறு என்றார். வினை முதல் ஐந்தும் விரிந்தவழி வேறு தொடர்களாய் முடிதலின், அவற்றின் தொகைநிலைகளே ஈண்டுக் கூறப்பட்டன என்பது பெறப்படும். இரண்டு என்பதை முற்றொடும் கூட்டுக. ஒரு சொல்லே அடுக்கி ஒரு சொல்லின் விகாரமாக நிற்கும் அடுக்குத்தொடரை வேறு பிரித்துக் கூறினார். வேற்றுமை அல்லாத வழி அல்வழி எனவும், பயனிலை அல்லாததாய்ப் பொருள் முடிவைப் பெற்று நிற்கும் மொழி அன்மொழி எனவும் கொள்க.

**வேற்றுமைப் புணர்ச்சி**

**தொகைநிலைத் தொடர்** **தொகாநிலைத் தொடர்**

| (தொகை) | | (விரி) |
|---|---|---|
| 1. நிலங்கடந்தான் | (ஐ) | நிலத்தைக் கடந்தான். |
| 2. கல்லெறிந்தான் | (ஆல்) | கல்லால் எறிந்தான். |
| 3. தாலிப்பொன் | (கு) | தாலிக்குப்பொன். |
| 4. மலை வீழருவி | (இன்) | மலையின்வீழருவி. |
| 5. சாத்தன் கை | (அது) | சாத்தனது கை. |
| 6. வீடு புகுந்தான் | (கண்) | வீட்டின்கண் புகுந்தான். |

### அல்வழிப் புணர்ச்சி

| | | |
|---|---|---|
| 1. கொல்யானை | – | வினைத்தொகை. |
| 2. கருங்குதிரை | – | பண்புத்தொகை. |
| சாரைப்பாம்பு | – | இருபெயரொட்டுப் பண்புத்தொகை. |
| 3. மதிமுகம் | – | உவமைத்தொகை. |
| 4. இராப்பகல் | – | உம்மைத்தொகை. |
| 5. தகர ஞாழல் | – | அன்மொழித்தொகை. |
| 6. சாத்தன் வந்தான் | – | எழுவாய்த்தொடர். |
| 7. சாத்தா வா | – | விளித்தொடர். |
| 8. வந்த சாத்தன் | – | பெயரெச்சத்தொடர். |
| 9. வந்து போனான் | – | வினையெச்சத்தொடர். |
| 10. வந்தான் சாத்தான் | – | தெரிநிலை வினைமுற்றுத்தொடர். |
| 11. சிறியன் இவன் | – | குறிப்பு வினைமுற்றுத்தொடர். |
| 12. மற்றொன்று | – | இடைச்சொற்றொடர். |
| 13. நனி பேதை | – | உரிச்சொற்றொடர். |
| 14. பாம்புபாம்பு | – | அடுக்குத்தொடர். |

பிற தொடர்களெல்லாம் தொகைநிலை வகையானும், பயனிலை வகையானும் தொடர்ந்துநிற்கும் இருவேறு பொருளுடை இருவேறு சொற்களின் கூட்டமாக அமைய, ஒரு சொல்லே அடக்கி நின்று எண்ணு நிலையாற் றொடர்ந்து அல்வழித் தொடராகநிற்பதால், அடுக்குத் தொடரை வேறு பிரித்துக் கூறினார் ஆசிரியர். அதனையும் தழுவு தொடர்களுட் சேர்த்து, தழாஅத் தொடர் என்ற ஒன்றைப் படைத்து, கைக்களிறு, பொற்குடம், சுரை ஆழ, அம்மி மிதப்ப என்பவற்றை எடுத்துக்காட்டுகள்க

கூறுவாரும் உளர். அவை சேய்மையில் தழுவி நின்று தொடர்வன ஆதலின், தழுவு தொடர்களேயாம் என்க. அவற்றைத் தழாஅத் தொடர் என்பாருக்கு, வினைத்தொகை முதலிய தொகைகள் புணர்ச்சிக்கண் தழுவு தொடராக அமைந்த தெங்கனமோ? தழாத் தொடரென ஒன்றைக் கொள்ளின், தொடர் ஆறும்பதினான்கும் என வரையறுத்து நூற்பா செய்தமை குன்றக் கூறலாய்க் குற்றப்படும் என்பதுமறிக.

மொழியியலார் தொடர் என்று கருதுவது இரண்டு சொல்லுறுப்புக்களின் தொடர்ச்சியாகவோ, இரண்ட தொடர்களின் தொடர்ச்சியாகவோ இருக்கலாம். தொடருவது சொல்லானாலும், தொடரானாலும் அது தொடரின் உறுப்பு என்று கொள்ளப்படும். அவர்கள் கொள்கைப்படி, ஆடு மேய்கிறது; நல்ல ஆடு; ஓடிக் குதித்தான் என்பவை இரண்டிரண்டு சொல்லுறுப்புக்கள் அடுத்தடுத்து நின்று தொடர்ந்த தொடர்களாம். இம்மூன்று தொடர்களிலும் சொற்கள் அண்மை உறுப்புக்களாக அமைகின்றன. 'காரிமாடு விரைந்து நடக்கிறது' என்ற வாக்கியத்தில் காரி + மாடு ஒரு தொடராகவும், விரைந்து + நடக்கிறது மற்றொரு தொடராகவும் நின்று, இரு தொடர்களும் ஒன்றிற்கு ஒன்று அண்மை உறுப்பாகித் தொடர்ந்து தொடர்நிலைபெற்று முடிகின்றன. எனவே,

**ஆடு மேய்கிறது;நல்ல ஆடு; ஓடிக் குதித்தான்** என இவ்வாறு சொற்கள் அண்மை உறுப்புக்களாக நின்று தொடர்வதையும்,

**காரி மாடு விரைந்து நடக்கிறது** என இவ்வாறு தொடர்கள் அண்மை உறுப்புக்களாக நின்று தொடர்வதையும் மொழியியலார் தொடர் என்றே குறிப்பிடுவர். 'ஆடு மேய்கிறது' என ஒரு தொடரே ஒரு வாக்கியமாகவும், 'காரிமாடு விரைந்து நடக்கிறது' என இரண்டு முதலிய தொடர்கள் இணைந்து ஒரு வாக்கியமாகவும் அமையலாம் என்பது மனங் கொளற்குரியது.

இந்நூற்பாவில் தழுவுதொடர்கள் எனக் குறிப்பிடப் பட்டுள்ள பதினான்கும் இரு சொல்லுறுப்புக்களை அண்மையுறுப்புக்களாகப் பெற்ற தொடர்களே. சேர,சோழ,பாண்டியர்; அறம், பொருள்,இன்பம், வீடு

என்பவை முறையே மூன்றும், நான்குமான சொற்களை அண்மையுறுப்புக்களாகப் பெற்ற தொடரகள். அவற்றை,

சேர சோழ பாண்டியர்,

அறம் பொருள், இன்பம் வீடு

என இவ்வாறு குறிப்பிடலாம்.

இவ்வாறு தொடரிலமைந்த அண்மையுறுப்புக்களைப் பகுத்துக் காணும் போக்கை அண்மையுறுப்புப் பகுப்பு முறை என்றும், அண்மை உறுப்புக்களுள் ஒவ்வொன்றையும் அண்மை உறுப்பு என்றும் மொழி யியலார் குறிப்பிடுவர். ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் அணுகி ஒன்றாகத் தொடரின் அதைப் பன்மை அண்மையுறுப்புத் தொடர் எனக் குறிப்பிடுவது மரபு.

தழுவு தொடர் என நன்னூலார் குறிப்பிட்டதனால் அண்மையில் தழுவாத் தொடரும் உண்டென்று அறிகிறோம். அதற்கு எடுத்துக் காட்டாக, 'சுரை ஆழ அம்மி மிதப்ப' என்பதைக் கூறுவது வழக்கம். அதனை மொழியியல் முறைப்படி,

சுரை ஆழ அம்மி மிதப்ப

(சுரை மிதப்ப அம்மி ஆழ)

என இவ்வாறு குறிப்பிடலாம். மொழியியலார் அதனை அண்மைத் தொடர்பில்லா அண்மையுறுப்புத் தொடர் என்பர்.

புலிகொல்யானை; மீன்விழுங்கிய மனிதன் என இவ்வாறு அமையும் வேற்றுமை மயக்கத் தொடர்களை முறையே புலி + கொல்யானை அல்லது புலிகொல் + யானை என்றும்; மீன் + விழுங்கிய மனிதன் அல்லது மீன்விழுங்கிய + மனிதன் என்றும் புணருமாறு அண்மை உறுப்புக்களை அமைக்கலாம். இவ்வாறு அமையும் தொடர்களை மயங்கு அண்மையுறுப்புத் தொடர்கள் என்பர்.

பேதுருமாமி சுரமாய்க்கிடந்தாள் என்ற சொற்றொடரில் நான்கு சொற்களும் சொல்லுவான் கருத்திற் கேற்பத் தனித்தனி இசையழுத்தம் பெற்று ஒரு தொடராய் அமைந்து வெவ்வேறு சிறப்புப் பொருள் சேர்க்கின்றன. இதனால் இவ்வாக்கியம் பெறும் இசையழுத்தமும், இவ்வாக்கியமும் ஒத்தியல் அண்மையுறுப்புக்கள் ஆகின்றன என்பர் ஆதலின், இத்தொடர் ஒத்தியல் அண்மையுறுப்புத் தொடராகும்.

தொடர் என்பது ஒரு வாக்கியத்தில் பெயர் அல்லது

வினைச்சொல் பெறும் விரிவே யாதலின் அவை தலையாக அமையும் தொடர்களை முறையே அவ்வற்றின் பெயரால் குறிப்பிட்டு, அவை அடையாகப் பெறும் உறுப்பை அடை என்பர்.

தொடர்களைத் தன்னிலே பொருள் முடியும் உள்வட்டத் தொடர் என்றும்; தனக்கு வெளியே பொருள் முடியும் வெளிவட்டத் தொடர் என்றும் இருவகையாகப் பகுப்பர். தழுவு தொடர்கள் பதினான்கில் எழுவாய்த் தொடரும் முற்றுத் தொடரும் உள்வட்டத் தொடர்கள்; ஏனைய வெளிவட்டத் தொடர்கள் எனக் கொள்க.

நம் உள்ளக் கருத்துக்கு ஒலிவடிவம் கொடுக்கும் முயற்சிக்குத் தேவையான தொடர் அமைப்புக்களைப் பெற்றிருப்பது மொழியின் இயல்பு அண்மையுறுப்புப் பகுப்பு முறை அத்தொடர் அமைப்புக்களின் புற அமைப்பு விளக்கத்திற்குப் பயன்படுகிறது. புறவடிவான சொற்றொடர்கட்கெல்லாம் அடிப்படையான உள்ளறிவு என்ற ஒன்று மொழியியலில் மிக அடிப்படையானது என்று கருதப்படுகிறது. அது பேசுபவர் – கேட்பவர் தம் அடி மனங்களிலே அமைந்து கிடக்கும் மொழியமைப்புப் பற்றிய அறிவாகும். அவ்வறிவு மக்களாவார் அனைவருக்கும் உண்டு. அவ்வுள்ளறிவு காரணமாகவே மக்கள் எண்ணிறந்த சொற்றொடர்களை ஆக்கவும், புரிந்து கொள்ளவும் தகுதி யுள்ளவர்களாகின்றனர். அவ்வுள்ளறிவே சொற்றொடரின் ஒலிவடிவாகிய புற அமைப்புக்கும், பொருள் வடிவாகிய அக அமைப்புக்கும் இணைப்பு உண்டாக்குகின்றது. தொடரின் உள்ளறிவு சார்ந்த புதை அமைப்பை விளக்குவதற்கு அண்மை யுறுப்புப் பகுப்பு முறை மட்டும் போதியதாகாது என்று மாற்றிலக்கணக்காரர் கருதுகின்றனர். அமெரிக்க மொழியியலறிஞர் ஹாரிஸ் என்பவர் மாற்றிலக்கண முறையைப் பயன்படுத்தித் தொடரமைதியை விளக்கினார். அவர் மாணவரும் இரசிய மொழியியல் அறிஞருமான சோம்ஸ்கி 1957ஆம் ஆண்டில் வெளியிட்ட தம் நூலில் மாற்றிலக்கண முறையை நன்கு தெளிவுபடுத்தி உலகுக்குச் சொற்றொடர் ஆய்வில் ஒரு மறுமலர்சியைத் தோற்றுவித்துள்ளார்.

மாற்றிலக்கணக்காரர் வாக்கியப் புற அமைப்புச் சார்ந்த சொற்றொடர் அமைப்பு, புதையமைப்புச் சார்ந்த மாற்றல்

விதிகள், உறுப்புகள் இணைதல் சார்ந்த உருபொலியமைதி என்ற மூன்றையும் தெளிவுபடுத்திச் சொற்றொடர்களைப் பகுத்து ஆய்வர்.

அண்மையுறுப்புப் பகுப்பு முறைப்படிக் கண்ட உறுப்புக்களுக்குக் குறியீடு செய்து வாக்கிய முறையில் அமைத்துக் காட்டுவதே மாற்றிலக்கணக்காரரின் சொற்றொடர் அமைப்பு ஆய்வாகும். அதன்படி, சொற்றொடர்களைப் பெயர்த்தொடர், வினைத்தொடர் என்று பகுத்துக் குறியீடு செய்வதும், பெயர் தலைமையுறுப்பாய் அமைந்த பெயர்த் தொடர்களைப் பெயரடை + பெயர் எனப் பகுத்துக் குறியீடு செய்வதும், வினை தலைமையுறுப்பாக உள்ள வினைத்தொடர்களை வினையடை + வினை எனப் பகுத்துக் குறியீடு செய்வதும், பயனிலையாம் வினைத்தொடர்களில் அடங்கிய பெயர்களைப் பெயர் + இலக்கணக்குறி எனப் பாகுபாடு செய்வதும், அக்குறியீட்டை அமைத்துச் சொற்றொடர் அமைப்பு முறையில் எழுதிக் காட்டுவதும் சொற்றொடர் அமைப்புச் சார்ந்த மாற்றிலக்கண முறையாகும். அம்முறைப்படி 'பெரிய மாடு ஆட்டை ஓடி முட்டியது' என்ற வாக்கியத்தைக் கீழ்வருமாறு எடுத்துக் காட்டலாம்.

1. பெரியமாடு + ஆட்டை ஓடி முட்டியது – பெயர்தொடர் + வினைத்தொடர்.
2. பெரிய + மாடு – பெயரடை + பெயர்.
3. ஆட்டை + ஓடி முட்டியது – வேற்றுமைத் தொடர் + வினைத்தொடர்.
4. ஆடு + ஐ – பெயர் + இலக்கணக் குறி.
5. ஓடி + முட்டியது – வினையடை + வினை.
6. பெரியமாடு ஆட்டை ஓடி முட்டியது – பெ.அ + பெ + பெ + இ.கு + வி.அ + வி.

கீழ்வருமாறு அதைப் படமரத்தில் அமைத்துக் காட்டலாம்.

வா

| | | | | |
|---|---|---|---|---|
| பெ | தொ | | வி | தொ |
| பெ.அ | பெ | | வே.தொ. | வி |
| | | பெ | இ.கு. | வி.அ. |

வி

பெரிய மாடு ஆடு ஐ ஓடி முட்டியது

மாற்றிலக்கணக்காரரின் மாற்றல் விதிப்பகுதி ஒருவர் பெறும் புற அமைப்புச் சொற்றொடரை மனித மனத்திலமைந்த உட்பொருள் சார்ந்த புதை அமைப்பு அடிநிலை வாக்கிய அடிப்படையில் மாற்றியமைத்து அமைதி கூறி விளக்குவதாகும். அவ்வாறு விளக்கு வதற்குப் பயன்படும் விதிகளை மாற்றல் விதிகள் என்பர். அவ்விதிகளை, உள்ளதன் நீக்கம், வேறுபடுத்தல், விரித்தல், குறைத்தல், கூட்டல், முறைமாற்றல் என்று இவ்வாறு குறிப்பிடுவர்.

'இராமன் வீடு திரும்பினான்' என்ற வாக்கியத்தைக் கேட்ட அளவில், ஒருவர் தம் மனத்துள் அமைந்த உட்பொருள் அடிப்படையில் கீழ்வரும் வாக்கியங்கள் போன்றவற்றை அவ்வடிப்படை வாக்கியப் பொருள் கெடாமல் அமைக்கலாம்.

1.இராமன் வீட்டிற்குத் திரும்பி வந்தான்.

2.நேற்றுக் கல்லூரிக்குச் சென்ற இராமன் வீடு திரும்பினான்.

3.நேற்று நண்பரோடு கல்லூரிக்குச் சென்ற இராமன் தனியே வீடு திரும்பினான்.

4.நேற்று நண்பரோடு கல்லூரிக்குச் சென்ற இராமன் இன்று தனியே வீடு திரும்பினான்.

5.நேற்றுக் கோபத்துடன் கல்லூரிக்குச் சென்ற இராமன்இன்று திரும்பி வந்தான்.

6.இராமன்வீட்டுக்குத் திரும்பி வந்தானா?

7.இராமன் வீட்டுக்குத் திரும்பி வரவே இல்லை.

இவை அனைத்தும் இராமன் வீடு திரும்பினான் என்ற வாக்கியத்தின் மாற்று வாக்கியங்களே.

தொல்காப்பியர் கிளவியாக்கத்தில் வாக்கிய அமைதி பற்றிக் கூறி, வேற்றுமை இயல், வேற்றுமை மயங்கியல் ஆயவற்றில் மாற்று வாக்கியங்கள் பற்றியே விளக்கி யுள்ளார் என்பதைக் கூர்ந்தறிந்து கற்றற்கு இம்மாற் றிலக்கணம் நன்கு உதவும். வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்களை விரித்து மாற்றி வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்களை அமைக்கிறோம். 'பாவை' வந்தாள் என்ற ஆகுபெயர்த் தொடரை, பெண் பாவை போன்றாள்; பெண் வந்தாள் என இரண்டாக்கி மாற்றிப் பொருள் காண்கிறோம். 'துடியிடை'

என்றால் துடியைப் போன்ற இடையை யுடைய பெண் எனக் கூட்டியும் விரித்தும் மாற்றிப்பொருள் காண்கிறோம். 'வளைந்தான்' என்றால் செய்பவன் முதலிய ஆறையும் விரித்து மாற்றல் வாக்கியங்களை நிரல்பட அமைக்கிறோம். இவை எல்லாம் எவ்வெம் மாற்றல் விதியாலமைக்கப் படுகின்றன என அறிதல் நல்ல பயிற்சியாகும்.

மாற்றிலக்கணக்காரர் கொள்ளும் உருபொலியமைப்பு விளக்கம்அண்மை யுறுப்பிணைவு, மாற்றல் வாக்கியங் கள்,ஆயவற்றில் அமையும் உருபொலி மாற்ற விளக்கமாகும். அது புணரியல் உரையில் ஆங்காங்கே விரித்துரைக்கப்படும்.

(2)

**152. விகார மனைத்து மேவல தியல்பே.**

**விகாரம் அனைத்தும் மேவல் அலது இயல்பே**

vikāram an̲aiṭṭum mēval alaṭu iyalpē

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Natural Combination**

Natural combination is that in which no changes take place (in the union of any two contiguous words.)

## ஒப்புமைப் பகுதி

**விகார மனைத்து மேவல தியல்பே**

**(மு.வீ.: 162)**

## மயிலை நாதர்

எ–ன், மேல் இயல்பொடு விகாரத்தியைவ தென்றார், அவற்றுள் இயல்பாவது இஃதென்ப துணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:–** மேல் வரும் விகாரவகை மூன்றும் மேவாதது யாது, அஃது இயல்புப் புணர்ச்சி, எ – று.

**வ–று.:–**

பொன்மலை, புகழழகிது, ஒளிமணி என வரும்.

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின்,** மேல் இயல்பொடு விகாரத்தியைவது என்றார் அவற்றுள் இயல்பாவது **உணர் – ற்று.**

இ–ள்: மேல் வரும் விகார வகையனைத்தும் மேவாதது இயல்பு புணர்ச்சியாம், **எ–று.**

**வ–று.:–**

பொன்மலை, புகழழகிது, ஒளிமணி என வரும்.

இயல்புக்கு விதி கூறவேண்டுவது என்னையெனின்:– மலர்க்கணை தொடுத்தான் என விகாரமாயவழி மலராகியகணையைத் தொடுத்தான் எனவும், மலர்கணை தொடுத்தான் என இயல்பாயவழி மலரையும் கணையையும் தொடுத்தான் எனவும் பொருள் வேறுபடுதலின் கூறவேண்டும் என்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** மேல் 'இயல்பொடு விகாரத்' தென்றார்; அவற்றுள் இயல்பாவது இதுவென உரைத்தது.

**இ–ள்.:– விகார மனைத்தும்** – மேற் கூறப்பட்ட விகார வகை மூன்றும், **மேவலதியல்பே** – மேவாதது யாது அது இயல்பு புணர்ச்சியாம் **எ–று.**

**உ–ம்.:–**

மண் மலை, கொற்றன் வந்தான், பாடினான் வந்தான், பாடினான் சாத்தன் என வரும்.

## விசாகப் பெருமாளையர்

**இது,** முன் சொல்லப்பட்ட இயல்பு விகாரங்களில் இயல்பு உணர்த்துகின்றது.

**இ–ள்.:– விகார மனைத்தும்** – மேல் வரும் விகார வகை யனைத்தும், **மேவலது** – அடையாதது, **இயல்பு**–இயல்பாகும், **எ–று.**

**உ–ம்.:–**

பொன்மலை, புகழழகிது, ஒளிமணி என வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

இயல்பு புணர்ச்சியாவது யாது?

விகார மனைத்து மேவல தியல்பே.

(விகாரம் அனைத்தும் மேவலது இயல்பே)

**இ—ள்.:— விகாரம் அனைத்தும்** – மேல்வரும் விகாரவகையனைத்தும்; **மேவலது இயல்பு** – அடையாதது இயல்பு புணர்ச்சியாம், **எ—று.**

**உ—ம்.:—**

பொன்—மலை – பொன்மலை, புகழ் – அழகு—புகழழகு, ஒளி— மணி— ஒளிமணி, எனவரும்.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** மேல், 'இயல்பொடு விகாரத்தியைவது' என்றார் அவற்றுள் இயல்புப்புணர்ச்சி யுணர்த்திற்று.

**இ—ள்.:— விகார மனைத்தும்** – மேற் சொல்லப்படும் விகாரவகை முழுவதும், **மேவலது** – பொருந்தாதது, **இயல்பு** – இயல்பு புணர்ச்சியாம், எ—று.

**வ—று.:—**

பொன்மலை, புகழழகிது, ஒளிமணி என வரும்.

இயல்புக்கு விதி கூற வேண்டுவ தென்னெனின், 'மலர்க்கணை தொடுத்தான்' என விகாரமான போது, மலராகிய கணையைத் தொடுத்தான் எனவும், மலர்கணைதொடுத்தான் என இயல்பாகிய போது, மலரையுங் கணையையுந் தொடுத்தான் எனவும் பொருள் வேறுபடுதலாற் கூற வேண்டு மென்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :— **விகாரம் அனைத்தும்** – (வருஞ் சூத்திரத்திற் கூறப்படும்) விகாரவகை முழுவதையும், **மேவலது** – அடையாதது, **இயல்பு** – இயல்பு புணர்ச்சியாம்.

**உ—ம் :—**

பொன் + மணி = பொன்மணி; புகழழகிது; ஒளிமணி.

குறிப்பு :—

இயல்புக்கு விதி கூறிய தென்னையெனின், 'மலர்ச் சோலை' என விகாரமானபோது மலரை உடைய சோலை எனவும், 'மலர் சோலை' என இயல்பானபோது மலர்ந்த சோலை எனவும் பொருள்வேறுபாடு, தோன்றலின் என்க.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: விகாரம் அனைத்தும் மேவலது இயல்பு**–மேல் வரும் விகாரவகையனைத்தும் அடையாதது இயல்பாகும், **எ–று.**

**உ–ம்.:–**

பொன்மலை, புகழழகிது, ஒளிமணி எனவரும்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள்.:– தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்** – எழுத்தாயினுஞ் சாரியையாயினுந் தோன்றுதலும் வேறுபடுதலும் கெடுதலும் முன்சொன்ன விகாரமாகும், **– மூன்றும் மொழி மூவிடத்தும் ஆகும் –** இம்மூவகை விகாரமும் நிலைமொழி வருமொழிகளுடைய முதல் இடை கடை என்னு மூன்றிடத்தும் ஏற்றபடி வரும். **எ–று.**

**உ–ம்.:–**

பூ + கொடி = பூங்கொடி வருமொழி முதலில் மெய் தோன்றிற்று. பல + தலை = பஃறலை நிலைமொழி யீற்றிலும் வருமொழி முதலிலும் உள்ள மெய்கள் திரிந்தன. நிலம் + வலயம் = நிலவலயம் நிலைமொழி யீற்றுமெய் கெட்டது. ஆறு+பத்து = அறுபது நிலைமொழி முதலுயிர் திரிந்து வருமொழி யிடையொற்றுக் கெட்டது. பல+பொருள் = பல்பொருள் நிலைமொழியீற்றுயிர் கெட்டது. நாழி + உரி = நாடுரி நிலைமொழியீற்றுயிர் மெய்கெட்டு டகரமெய் தோன்றிற்று. தமிழ் + பிள்ளை = தமிழப்பிள்ளை நிலைமொழி யீற்றிற் சாரியை தோன்றிற்று. பனை + காய் = பனங்காய் நிலைமொழியீற்றுயிர் கெட்டு அம் சாரியை தோன்றி அவ் வம் சாரியையீற்றுமகரம் ஙகரமாய்த் திரிந்தது. இப்படியே இவ்விகாரங்கள் நிலைமொழியைச் சார்ந்து வருவனவும், வருமொழியைச் சார்ந்து வருவனவுமேயன்றி, அவ்விரு மொழியைச் சார்ந்து வருனைவும் உண்டெனக் கொள்க. **உ–ம்.** நீயோ + அரசன் = நீயோவரசன் என நிலைமொழி வருமொழிகளுக்கிடையில் வகரவுடம்படுமெய் தோன்றியது.

உரி+நெய்=உரியநெய் இடையில் யகரந் தோன்றிற்று. புளி + காய் = புளியங்காய் இடையில் அம் தோன்றி அதன் ஈற்று மகரம் ஙகரமாய்த் திரிந்தது. மேலுமிவ்வாறே காண்க. இவை நிலைமொழி வருமொழிகளுக்கிடையில் வந்தனவென்றறிக.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ—ள்.:— விகாரம் அனைத்தும்** — (வருஞ் சூத்திரத்திற் சொல்லப்படும்) விகார வகை முழுவதையும், **மேவலது** — அடையாதது, **இயல்பு**— இயல்பு புணர்ச்சியாம்; **எ—று.**

**உ—ம்:—**

மணி+பெரிது = மணிபெரிது. புகழ்+அழகு = புகழழகு.

## பவானந்தம் பிள்ளை

இ—ள்.:— விகாரம் அனைத்தும் மேவலது இயல்பு — மேல் வரும் விகாரவகையனைத்தும் அடையாதது இயல்பு புணர்ச்சியாகும். எ—று.

**உ—ம்.:—**

புகழ் + அழகிது = புகழழகிது, ஒளி + மணி = ஒளிமணி.
பொன்+ மலை = பொன்மலை.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ—ள்.:— விகாரம் அனைத்தும்** — (மேல்வரும்) விகாரவகை அனைத்தும், **மேவலது** — அடையாதது, **இயல்பு** — இயல்பாகும். **எ—று.**

**பொ—ரை.:—**

பின்வரும் விகாரவகை எல்லாவற்றையும் அடையாதது இயல்பு புணர்ச்சியாம்.

**உ—ம்.:—**

பொன்+மலை = பொன்மலை.

புகழ் + அழகிது = புகழழகிது.

ஒளி + மணி = ஒளிமணி.

இயல்புக்கு விதி கூறியது, இயல்புக்கும் விகாரத்திற்கும் பொருள் வேறுபாடும் இலக்கண வேறுபாடும் இருத்தலை நோக்கி.

உ–ம்.:–

மலர்கணை – (மலரும் கணையும்) உம்மைத்தொகை.

மலர்க்கணை – (மலராகிய கணை) பண்புத்தொகை.

## கா.நமச்சிவாய முதலியார்

**விகாரம் அனைத்தும்** – மேல்வரும் விகாரவகை யனைத்தையும், **மேவலது** – அடையாதது, **இயல்பு** – இயல்பு புணர்ச்சியாம்.

**உதாரணம்.:–**

பொன் + மலை = பொன்மலை
புகழ் + அழகிது = புகழழகிது

## மோசசு பொன்னையா

மேற்சொல்லப்படும் விகார வகைகளுள் ஏதேனும் பொருந்தாதது எதுவோ,அது இயல்பு புணர்ச்சியாம், எ–று.

அனைத்தும் என்பது ஒன்றாயினும் என்ற பொருளில் நின்றது.

நேமிநாத ஆசிரியரும், தொல்காப்பியரே போல் இயல்பு புணர்ச்சி என்ற ஒன்றைத் தனியே கூறவில்லை. அதன் உரையாசிரியர், 'இயல்பு சந்திகளின் மிக்கும் திரிந்தும் கெட்டும் வருவன இல்லையாதலான், முடிக்கவேண்டுஞ் சந்திகள் இல்லாமலே நீக்கினார் எனக்கொள்க' என்று கூறியுள்ளமை நோக்கத்தக்கது.

(3)

**153. தோன்ற றிரிதல் கெடுதல் விகாரம்**
**மூன்று மொழிமூ விடத்து மாகும்.**

**தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்**
**மூன்றும் மொழி மூ இடத்தும் ஆகும்.**

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### MUTATION

### Mutational combinations

Mutational combination consists of three changes viz. Insertion, omission and Transmutation; and these may occur in any of three parts of a word.

## ஒப்புமைப் பகுதி

அவைதாம்
மெய்பிறி தாதல் மிகுதல் குன்றலென்று
இவ்வென மொழிப திரியு மாறே.

(தொல்.: 110)

நின்றசொல் லீறும்வருஞ் சொன்முதலும் நிரவித்தம்முள்
ஒன்றிடும்போதும் ஓரோமொழிக் கண்ணு முலகிற் கொப்பி
னன்றிய மும்மை விகாரம்வந் தெய்திடும் நன்கியல்பிற்
குன்றுத லின்றி வருதலு முண்டென்று கூறுவரே

(வீர.: 9)

தோன்றல் திரிதல் கெடுதலெனத் தூமொழியாய்
மூன்றென்ப சந்தி முடிவு . . . . . . . .

(நேமி.: 12:3–4)

விகாரமொற் றுயிருயிர்மெய் சாரியை மிகுத
றிரிதல் கெடுத லெனமூ வகைத்தே

(இ.வி.: 56)

திரிபு அழிவு ஆக்கம்
திரட்டு நால் விகாரம்

(தொன்.: 21)

ஆக்கந் திரிபழி வாகும் விகாரம்

(மு.வீ.: 162)

...... எழுத்து மொழி தோன்ற
றிரிதல் கெடன் மாறல் விகாரம்...

(சுவாமி.: 27:3)

## மயிலை நாதர்

எ–ன், [1]விகார வகை யுணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: சாரியை பெறுதலும், உயிரே ஒற்றே உயிர்மெய்யே [2]என்றிவை மிகுதலும் தோன்ற லென்பதாம். இச்சொன்ன பெற்றியே முன்னின்ற வெழுத்து வேறுபட நிற்றல் திரிபென்பதாம். இவற்றுள் ஒன்றும் பலவும் தொகுதல் கேடென்பதாம். இம் மூன்று விகாரமும் இருமொழி மூவிடத்துமாம், எ–று.

---

பாட வேறுபாடு.:–

1. விகாரமூன்றையும்

2. என்றிவை வருமெழுத்துத்தானாதல் அதற்கினமாதல் பிறிதொன்றாதல் மிகுதலும்

இனமிகுதலை ஏற்புழிக்கோட லென்பதனான் [3]ஏற்குமிடனறிந்து கொள்க.

**வ–று.:–**

புளியங்காய் எனச் சாரியை மிக்கது. [4]வானவில், மலைத்தலை, உரியநெய் எனவும்; அறுபது, மட்குடம், "திருத்தார் நன்றென்றேன்றி யேன்" எனவும்; பல்சாத்து, மரவேர், அங்கை எனவும் முறையே உயிர்,ஒற்று, உயிர்மெய்கள் மூன்றும் தோன்றியும் திரிந்தும் கெட்டும் விகாரம் ஏற்றவாறு காண்க. உயிர் மெய்க்கு இவ்வாறன்றித் திரிபுண்டாயினும் காண்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின்,** விகாரம் உணர் – ற்று.

**இ–ள்.:** மெய்யேனும் உயிரேனும் உயிர்மெய்யேனும் சாரியையேனும் ஒன்றும் பலவும் தோன்றுதலும் திரிதலும் கெடுதலும் மேற் சொன்ன விகாரமாம்; இம்மூவகை விகாரமும் நிலைமொழி வருமொழிகளின் முதல் இடை கடை என்னும் மூன்றிடத்தும் ஏற்றபெற்றி வரும், எ–று.

**உ–ம்.:–**

பூக்கொடி, பூங்கொடி: வருமொழிக்கு முதலில் மெய்தோன்றின. பஃறலை: வருமொழி முதலினும் நிலைமொழி யீற்றினும் மெய்திரிந்தன. நிலவலயம்: நிலைமொழி யீற்றின் மெய் கெட்டது. அறுபது: நிலைமொழி முதல்உயிர் திரிந்து வருமொழி இடையொற்றுக் கெட்டது. பல்பொருள்: நிலைமொழி யீற்றுயிர் கெட்டது. நாடுரி: நிலைமொழி யீற்று உயிர்மெய் கெட்டு, டகரம் தோன்றிற்று. தமிழப்பிள்ளை, பனங்காய்: நிலைமொழி யீற்றில் சாரியை தோன்றின. காட்டா தொழிந்தன வந்தவழிக் காண்க.

இவ் விகாரங்கள், நிலைமொழி வருமொழிகளுள் ஒரு மொழியைச் சார்ந்து வந்தன.

---

பாட வேறுபாடு.:–

1. ஒற்றிற்கே கொள்க

2.வெளஉவினான்

ஒருமொழி தொடர்மொழி என விதவாது பொதுப்பட 'மொழி மூவிடத்தும் ஆகும்' என்றமையின், இருமொழியைச் சார்ந்து வருவனவும் உள எனக் கொள்க. அவை வருமாறு:-

ஆவழகிது: வகர உடம்படுமெய் தோன்றிற்று, உரிய நெய்: யகர உயிர்மெய் தோன்றிற்று. புளியங்காய்: அம்முச் சாரியை தோன்றிற்று. இத்தோன்றல் விகாரங்கள் நிலைமொழி வருமொழிகளுள் ஒருமொழிக்கே உரியவன்றி, இரு மொழியையும் சார்ந்து வந்தமை காண்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** விகார முறைமை இவையென உரைத்தது.

**இ—ள்.:— தோன்றல்** — சாரியையே உயிரே ஒற்றே உயிர்மெய்யே என்றிவை மிகுதல் தோன்றல் என்பதாம், **திரிதல்**— சொன்ன பெற்றியே முன்னின்ற எழுத்து வேறுபட நிற்பின் திரிவு என்பதாம், **கெடுதல்**—இவற்றுள் ஒன்றும் பலவும் தொகுத்தல் கேடென்பவாம், **விகார மூன்றும்** — இத் தன்மையாய் வருகிற விகார வகை மூன்றும், **மொழி மூவிடத்துமாகும்** — நிலைமொழியிடத்தும் வருமொழியிடத்தும் இருமொழியிடத்தும் வந்து பொருந்தும், **எ—று.**

**உ—ம்.:—**

புளியங்காய் எனச் சாரியை மிக்கது. உரினு மாட்சி யென உயிர் மிக்கது. மலைத்தலை யென ஒற்று மிக்கது. உரிய நெய் யென உயிர்மெய் மிக்கது எனவும், அறுகலம் என உயிர் திரிந்தது. மட்குடம் என ஒற்றுத் திரிந்தது. "திருத்தார் நன்றென்றேன் றியேன்" என உயிர்மெய் திரிந்தது எனவும், பல்சாத்து என உயிர் கெட்டது. மரவேரென ஒற்றுக் கெட்டது. அங்கை என உயிர்மெய் கெட்டது எனவுமாம். மரவேர் என நிலைமொழி விகாரம். மலைத்தலை என வருமொழி விகாரம். அறுபது என இருமொழியும் விகாரம் எனவும் வந்தன. மலைத்தலை, மட்குடம், மரவேர் இவை பெயரொடு பெயர் புணர்ந்து மூன்று விகாரமும் வந்தன. பலர்க் கொணர்ந்தான், சொற் கேட்டான், மா நட்டான் இவை பெயரொடு தொழில் புணர்ந்து மூன்று விகாரமும் வந்தன. கோடாப் பொருள், வந்தானாற் சாத்தன், ஒடுநாகம் தொழிலொடு பெயர் புணர்ந்து மூன்று விகாரமும் வந்தன. பாடப் போயினான், வந்தாற் கொள்க. சாகா நின்றான் இவை தொழிலொடு தொழில் புணர்ந்து மூன்று விகாரமும்

வந்தன. அவற்றுள்,

**நிறுத்த சொல்லின் ஈறா கெழுத்தொடு**
**குறித்துவரு கிளவி முதலெழுத் தியையப்**
**பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்**
**பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலும்**
**தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலும்**
**மூன்றே திரிபிடன் ஒன்றே இயல்பென**
**தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலும்**
**ஆங்கந் நான்கே மொழிபுணர் இயல்பே.**

எனத் தொல்காப்பியர் விகாரம் மூன்றும் திரிபென்று கூறியதும் கொள்க.

**“மெய்பிறி தாதல் மிகுதல் குன்றலென்று இவ்வென**
**மொழிப திரியுமாறே”**

## விசாகப் பெருமாளையர்

**இது,** விகார முணர்த்துகின்றது,

**இ–ள்.: தோன்றல்** – எழுத்தாவது சாரியை யாவது தோன்றுதலும், **திரிதல்** – வேறுபடுதலும், **கெடுதல்** – கெடுதலும், **விகாரம்** – முன் சொன்ன விகார மாகும், **மூன்றும்** – இம் மூவகை விகாரமும், **மொழி** – நிலைமொழி வருமொழிகளுடைய, **மூவிடத்தும்** – முதலிடைகடை என்கின்ற மூன்றிடத்தும், **ஆகும்** – ஏற்றபடிவரும், எ – று.

**உ–ம்.:–**

பூ+கொடி–பூங்கொடி, வருமொழிமுதலில் மெய்தோன் றிற்று, பல்–தலை–பஃறலை, வருமொழி முதலிலும், நிலைமொழி யீற்றிலுமுள்ள மெய்கள் திரிந்தன.

நிலம் + வலயம் – நிலவலயம், நிலைமொழியீற்று மெய் கெட்டது, ஆறு + பத்து – அறுபது, நிலைமொழி முதலுயிர் திரிந்து வருமொழியிடையொற்றுக் கெட்டது,

பல+பொருள்– பல்பொருள், நிலைமொழி யீற்றுயிர்
கெட்டது,

நாழி+உரி–நாடுரி, நிலமொழி யீற்றுயிர் மெய்கெட்டு டகரமெய் தோன்றிற்று, பனை+காய்–பனங்காய், சாரியை தோன்றிற்று.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

விகாரமிதுவென்றும் அஃதித்தனை வகைப்படுமென்றும் அவை இல்விடத்து வருமென்றும் உணர்த்தும் சூத்திரம் யாது?

தோன்ற றிரிதல் கெடுதல் விகாரம்
மூன்று மொழிமூ விடத்து மாகும்.

(தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்
மூன்றும் மொழிமூவிடத்தும் ஆகும்).

இ—ள்.:— **தோன்றல்**—எழுத்தாயினுஞ் சாரியையாயினுந் தோற்றுதலும் **திரிதல்** – வேறுபடுதலும், **கெடுதல்** – கெடுதலும் விகாரம்—முன்சொன்ன விகாரமாகும்; **மூன்றும்** —இம்மூவகை விகாரமும், **மொழி மூவிடத்தும் ஆகும்** – நிலைமொழி வருமொழிகளுடைய முதல் இடை கடை என்னு மூன்றிடத்தும் ஏற்றபடி வரும், **எ—று.**

விகாரமாவது யாது?

"தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்"

அவை மொழியின்கண் எங்கே வரும்?

"மூன்றுமொழி மூவிடத்துமாகும்"

தோன்றலாவது யாது?

புணர்ச்சிக்கண் எழுத்து மிகுவது.

திரிதலாவது யாது?

புணர்ச்சிக்கண் எழுத்து வடிவு வேறுபடுதல்.

கெடுதலாவது யாது?

புணர்ச்சிக்கண் எழுத்து நீங்குதல்.

**உ—ம்.:—**

**தோன்றல்**

(1) பூ –கொடி–பூங்கொடி வருமொழி முதலில் மெய்தோன்றிற்று.

(2) தமிழ்–பிள்ளை–தமிழப்பிள்ளை என நிலைமொழி யீற்றிற் சாரியை தோன்றிற்று.

(3) நெடு– அரவு–நெட்டரவு என நிலைமொழி நடுவில் டகரம் தோன்றிற்று.

**திரிதல்**

(1) ஆறு–பத்து–அறுபது என நிலைமொழிமுதலில் ஆகாரம் அகரமாகத் திரிந்து.

(2) பல்–தலை–பஃறலை என நிலைமொழியீற்று லகரம் ஆய்தமாய்த் திரிந்தது.

(3) இரும்பு– ஆணி– இருப்பாணி என நிலைமொழி யிடையில் மகரம் பகரமாய்த் திரிந்தது.

**கெடுதல்**

(1) நிலவலயம் என்பதில் நிலைமொழியீற்றுமெய் கெட்டது.

(2) அறுபது என்பதில் வருமொழியிடைமெய் கெட்டது.

(3) மரத்துக்கண் என்பதில் அத்து என்பதன் அகரம் வருமொழி முதலிற் கெட்டது.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** விகாரப் புணர்ச்சி யுணர்த்திற்று.

**இ–ள்.: தோன்றல்** – (மெய்யாயினும் உயிராயினும் உயிர்மெய் யாயினுஞ் சாரியை யாயினும்) மிகுதலும், **திரிதல்** – அவை வேறுபடுதலும், **கெடுதல்** – அவை ஒழிதலும், **விகாரம்** – மேற்கூறிய விகாரப் புணர்ச்சியாம், **மூன்றும்** – இந்த மூவகை விகாரங்களும், **மொழி** – நிலைமொழி வருமொழிகளின், **மூவிடத்து மாகும்** – முதல் இடை கடை யென்கின்ற மூன்றிடத்தும் ஏற்றபடி வரும், **எ – று.**

**வ–று.:–**

பூக்கொடி, பூங்கொடி; இவை வருமொழி முதலிலே மெய்தோன்றின. பல்தலை என்பது பஃறலை எனத் திரிந்த போது வருமொழி முதலிலும் நிலைமொழி யீற்றிலும் மெய் திரிந்தன. நிலவலயம் என்பது நிலைமொழி யீற்றில் மெய்கெட்டது. அறுபது என்பது நிலைமொழி யுயிர் திரிந்து வருமொழி யிடை ஒற்றுக் கெட்டது. பலபொருள்– நிலைமொழி யீற்றுயிர் கெட்டது. நாழியுரி என்றது நாடுரி யென்று ஆன போது, நிலைமொழி யீற்று உயிர்மெய் கெட்டு, டகரந் தோன்றிற்று. தமிழப்பிள்ளை – நிலைமொழி யீற்றிற் சாரியை தோன்றிற்று. பனங்காய் – நிலைமொழி யீற்று உயிர் கெட்டுச் சாரியை தோன்றிற்று. பிறவும் வந்தவழிக் காண்க.

இவ் விகாரங்க ளெல்லாம் நிலைமொழி வருமொழிகளுள்

ஒருமொழியைச் சார்ந்து வந்தன. பொதுப்பட, 'மொழி மூவிடத்து மாகு'மென்றதினால் இருமொழியைச் சார்ந்து வருவனவு முளவெனக் கொள்க. அவை வருமாறு: ஆவழகிது – இது, வகர உடன்படுமெய் தோன்றிற்று; உரியநெய்–யகர உயிர்மெய் தோன்றிற்று; புளியங்காய் – அம்முச் சாரியை தோன்றிற்று; இத் தோன்றல் விகாரம் நிலை வரு மொழிக ளிரண்டையுஞ் சார்ந்து வந்தன, பிறவு மிவ்வாறு காண்க. விகாரம் தோன்றல் திரிதல் கெடுதலா மெனவும், மூன்றும் மூவிடத்துமாகு மெனவும் இருமுடிபாக முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :–** **தோன்றல்** – (எழுத்தாவது சாரியையாவது) தோன்றலும், **திரிதல்** – (ஒரெழுத்து மற்றோரெழுத்தாகத்) திரிதலும், கெடுதல் – (உள்ள எழுத்துக்) கெடுதலும், **விகாரம்** – விகாரப்புணர்ச்சியாம்; **மூன்றும்** – இம்மூவகை விகாரங்களும், **மொழி** – நிலைமொழி வருமொழிகளினுடைய, **மூ இடத்தும்** – (முதல் இடை கடை என்னும்) மூன்றிடத்திலும், **ஆகும்** – (ஏற்றபடி) வரும்.

**உதாரணம் :–**

| | | | | |
|---|---|---|---|---|
| பூ | + பொழில் | = | பூம்பொழில் | (எழுத்துத் தோன்றிற்று) |
| புளி | +பழம் | = | புளியம்பழம் | (சாரியைதோன்றிற்று) |
| எள் | +நெய் | = | எண்ணெய் | (நிலைமொழி யீற்றிலும் வருமொழி முதலிலுமுள்ள மெய்கள்திரிந்தன) |
| நிலம் | +வளம் | = | நிலவளம் | நிலைமொழியீற்றுமெய்கெட்டது) |
| ஆறு | +பத்து | = | அறுபது | (நிலைமொழி முதல் உயிர் திரிந்து வருமொழி யிடைமெய் கெட்டது) |
| பனை | +காய் | = | பனங்காய் | (நிலைமொழி யீற்றுயிர் கெட்டுச் சாரியை தோன்றி அதன் ஈறு திரிந்தது). |
| ஒன்பது | +பத்து | = | தொண்ணூறு | (நிலைமொழி வருமொழிகள் மூன்றிடத்தும் விகாரப்பட்டன.) |

**குறிப்பு :–**

இவ்விகாரங்கள் வழக்கிடத்தும் செய்யுளிடத்தும் நிலைமொழி வருமொழிப் புணர்ச்சியில் மாத்திரம் வருமென்றறிக.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்** – எழுத்தாயினுஞ் சாரியையாயினுந் தோன்றுதலும் வேறுபடுதலும் கெடுதலும் முன் சொன்ன விகாரமாகும், **மூன்றும் மொழி மூவிடத்தும் ஆகும்** – இம்மூவகை விகாரமும் நிலைமொழி வருமொழிகளுடைய முதலிடைகடை என்னு மூன்றிடத்தும் ஏற்றபடி வரும், எ – று.

**உ–ம்.:–**

பூ+கொடி = பூங்கொடி – வருமொழி முதலில் மெய் தோன்றிற்று. பல்+தலை = பஃறலை – வருமொழி – முதலிலும் நிலைமொழி யீற்றிலும் உள்ள மெய்கள் திரிந்தன. நிலம் + வலயம் = நிலவலயம்– நிலைமொழி யீற்றுமெய் கெட்டது. ஆறு+பத்து = அறுபது நிலைமொழி முதலுயிர் திரிந்து வருமொழியிடை யொற்றுக் கெட்டது. பல+பொருள் = பல்பொருள் நிலைமொழி யீற்றுயிர் கெட்டது. நாழி + உரி = நாடுரி – நிலைமொழி யீற்றுயிர் மெய் கெட்டு டகரமெய் தோன்றிற்று. தமிழ் + பிள்ளை = தமிழப்பிள்ளை நிலைமொழி யீற்றிற் சாரியை தோன்றிற்று. பனை+காய் = பனங்காய் நிலைமொழியீற்றுயிர் கெட்டுச் சாரியை தோன்றிற்று.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள்.:– வலித்தல்** – மெல்லொற்றை வல்லொற்றாக்கலும், – **மெலித்தல்** – வல்லொற்றை மெல்லொற்றாக்கலும், **நீட்டல்** – குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்கலும், – **குறுக்கல்** – நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்கலும், – **விரித்தல்** – இல்லாதவெழுத்தை வருவித்தலும், – **தொகுத்தல்** – உள்ளவெழுத்தை நீக்கலும், – **செய்யுள் வேண்டுழி வரும்** – செய்யுளிடத்து அடிதொடை முதலானவைகளை அமைக்க வேண்டுமிடத்து வருவனவாம்.

**உ–ம்:–**

"குறுத்தாட்பூதஞ்சுமந்துஅறக்கதிராழி யெம்மண்ணலைத் தொழினே" இதில் குறுந்தாள் எனற்பாலது குறுத்தாள் என வலிந்து நின்றது. "தண்டையினக்கிளிகடிவோள் பண்டை யளல்லண் மானோக்கினளே" இங்கே தட்டை எனற்பாலது தண்டை என மெலிந்து நின்றது. "தீத்தொழிலே கன்றித் திரிதந்தெருவைபோற் போத்தறார் புல்லறிவினார்". இங்கே பொத்தறார் எனற்பாலது போத்தறார் என நீண்டு நின்றது.

"யானை யெருத்தத்திருந்த விலக்கிலை வேற்றென்னன் றிருத்தார் நன்றென்றேன்றியேன்" இங்கே தீயேன் எனற்பாலது தியேன் எனக்குறுகி நின்றது. "சிறியிலை வெதிரினெல் விளையும்மே" இங்கே விளையுமே எனற்பாலது விளையும்மே என மகரமெய் "விரிந்து நின்றது. சிறியவிலை எனற்பாலது சிறியிலை என யகரவுயிர்மெய் தொக்கு நின்றது.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

**இ—ள்.: தோன்றல்** – (எழுத்தாவது சாரியையாவது) தோன்றுதலும், **திரிதல்** – (ஓர்எழுத்து மற்றோர் எழுத்தாக) வேறுபடுதலும், **கெடுதல்** – (உள்ள எழுத்துக்) கெடுதலும், விகாரம் – விகாரப் புணர்ச்சியாம்; **மூன்றும்** – இம் மூவகை விகாரங்களும், **மொழி** – நிலைமொழி வருமொழிகளின், **மூ இடத்தும்** – (முதல் இடை கடை என்னும்) மூன்று இடத்திலும், **ஆகும்** – வரும்; **எ—று.**

**உ—ம்.:—**

பூ+கொடி = பூங்கொடி – வருமொழி முதலில் மெய்தோன்றிற்று.

அல் + திணை = அஃறிணை – வருமொழி முதலிலும், நிலைமொழி யீற்றிலும் உள்ள மெய்கள் திரிந்தன.

நிலம் + வலயம் = நிலவலயம்–நிலைமொழி யீற்றுமெய் கெட்டது.

ஆறு + பத்து = அறுபது–நிலைமொழி முதலுயிர் திரிந்து வருமொழியிடையொற்றுக் கெட்டது.

பனை + காய் = பனங்காய் – நிலைமொழி யீற்றுயிர் கெட்டு 'அம்' சாரியைதோன்றி அதன்ஈறு திரிந்தது.

ஒன்பது + பத்து = தொண்ணூறு – நிலைமொழிவருமொழிகள் மூன்றிடத்தும் (முழுவதும்) விகாரப்பட்டன.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள்.:— தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்** – எழுத்தாயினுஞ் சாரியையாயினுந் தோன்றுதலும் வேறுபடுதலும் கெடுதலும் முன் சொன்ன

விகாரமாகும். **மூன்றும் மொழி மூவிடத்தும் ஆகும்** – இம் மூவகை விகாரமும் நிலைமொழி வருமொழிகளுடைய முதலிடைகடை என்னும் மூன்றிடத்தும் ஏற்றபடி வரும். எ–று.

**உ–ம்.:–**

பூ + கொடி = பூங்கொடி (வருமொழி முதலில்மெய் தோன்றிற்று.)

பல் + தலை = பஃறலை (வருமொழி மதலிலும் நிலைமொழியீற்றிலும் உள்ள மெய்கள் திரிந்தன.) நிலம் + வலயம் = நிலவலயம் (நிலைமொழியீற்று மெய் கெட்டது.) ஆறு + பத்து அறுபது (நிலைமொழி முதலுயிர் திரிந்து வருமொழியிடையொற்றுக் கெட்டது.) பல + பொருள் = பல்பெருள் (நிலைமொழியீற்றுயிர் கெட்டது.) நாழி + உரி = நாடுரி (நிலைமொழியீற்றுயிர் மெய் கெட்டு டகரமெய் தோன்றிற்று). பனை + காய் = பனங்காய் (நிலைமொழியீற்றுயிர் கெட்டுச் சாரியை தோன்றிற்று.)

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள்.:– தோன்றல்** – (எழுத்தாவது சாரியையாவது) தோன்றுதலும், **திரிதல்** – வேறுபடுதலும், **கெடுதல்** – கெடுதலும், விகாரம் – (முன்சொன்ன) விகாரமாகும்; **மூன்றும்** – இம் மூவகை விகாரமும், **மொழி** – நிலைமொழி வருமொழிகளுடைய, **மூவிடத்தும்** – (முதல் இடை கடை என்கின்ற) மூன்றிடத்தும், **ஆகும்** – (ஏற்றபடி) வரும். **எ–று.**

**பொ–ரை.:–**

(எழுத்தாவது சாரியையாவது) ஒன்றும் பலவும் தோன்றுதலும். திரிதலும், கெடுதலும் (மேற்சொன்ன) விகாரம் ஆம்; இம் மூவகை விகாரமும், நிலைமொழி வருமொழிகளுடைய (முதல், இடை, கடை என்கின்ற) மூன்றிடத்திலும் (ஏற்றபடி) வரும்.

**உ–ம்.:–**

பூ+கொடி=பூங்கொடி–வருமொழி முதலில் மெய் தோன்றிற்று.

பல்+தலை=பஃறலை–வருமொழி முதலிலும், நிலைமொழி ஈற்றிலுமுள்ள மெய்கள் திரிந்தன.

நிலம்+வலயம்=நிலவலயம்–நிலைமொழி யீற்றுமெய் கெட்டது.

ஆறு+பத்து=அறுபது–நிலைமொழி முதலுயிர் திரிந்து வருமொழி யிடையொற்றுக் கெட்டது.

பல+பொருள்=பல்பொருள்–நிலைமொழியீற்றுயிர் கெட்டது.

நாழி+உரி=நாடுரி–நிலைமொழி யீற்றுயிர் மெய் கெட்டு டகரமெய் தோன்றிற்று.

பனை+காய்=பனங்காய்–நிலைமொழி யீற்றுயிர் கெட்டுச் சாரியை தோன்றிச் சாரியை யீற்று மகரம் ஙகரமாயிற்று.

ஒன்பது+பத்து=தொண்ணூறு–நிலைமொழி வருமொழிகள் மூன்றிடத்தும் (முழுவதும்) விகாரப்பட்டன.

## கா.நமச்சிவாய முதலியார்

**தோன்றல்** – (எழுத்தாவது சாரியையாவது) தோன்றுதலும், **திரிதல்** - வேறுபடுதலும், கெடுதல் – கெடுதலும், **விகாரம்** – விகாரமாகும்; **மூன்றும்** - இம்மூவகை விகாரமும், **மொழி** – நிலைமொழி வருமொழிகளுடைய, **மூவிடத்தும்** – முதல் இடை கடை என்கின்ற மூன்றிடத்தும், **ஆகும்** – ஏற்றபடி) வரும்.

**உதாரணம்:–**

பூ + கொடி = பூங்கொடி (வருமொழி முதலில் மெய் தோன்றிற்று.)

பல் + தலை = பஃறலை (நிலைமொழி யீற்றிலும், வருமொழி முதலிலும் உள்ள மெய்கள் திரிந்தன.)

நிலம் + வலயம் = நிலவலயம் (நிலைமொழியீற்று மெய் கெட்டது.)

ஆறு + பத்து = அறுபது (நிலைமொழி முதலிலுள்ள உயிர் திரிந்தது ; வருமொழியின் இடையிலுள்ள ஒற்றுக் கெட்டது.)

பல + பொருள் = பல்பொருள் (நிலைமொழியீற்று உயிர் கெட்டது)

நாழி + உரி = நாடுரி (நிலைமொழியீற்று உயிர்மெய்
கெட்டது ; டகர மெய்
தோன்றிற்று.)

பனை + காய் = பனங்காய் (நிலைமொழியீற்று உயிர்
கெட்டது ; சாரியை
தோன்றிற்று ; அதன்
ஈறு திரிந்தது.)

## மோசகு பொன்னையா

மெய், உயிர், உயிர்மெய், சாரியை என்னும் இவற்றுள் ஒன்றோ பலவோ தோன்றுதலும் வேறுபடுதலும், கெடுதலும் விகாரப் புணர்ச்சியாம். இம்மூவகை விகாரங்களும் நிலைவருமொழிகளின் முதலிடை கடை என்னும் மூவிடங்களினும் ஏற்றப் பெற்றி வரும், எ–று.

எ–டு.:–

பூ + கொடி – பூங்கொடி (தோன்றல்)

பல் + தலை – பஃறலை (திரிதல்)

நிலம் + வலயம் – நிலவலயம் (கெடுதல்)

ஆறு + பத்து – அறுபது (கெடுதலும், தோன்றலும், திரிதலும்)

தொல்காப்பியர் திரிதல்எனக் கொண்ட மெய் பிறிதாதல்,மிகுதல், குன்றல் என்னும் மூன்றையுமே இவ்வாசிரியர் புணர்ச்சி விகாரங்கள் என்றார். செய்யுளில் இசை நயம் காரணமாகப் புலவரால் தெரிந்து இசைக்கப்படும் விகாரத்தினும் இதனை வேறுபடுத்தித் திரிதல் எனக் குறியிட்டு வழங்கின் ஆட்சிக்கு மிகப்பொருத்தமாக அமையும்.

(4)

**154. வலித்தன் மெலித்த னீட்டல் குறுக்கல்**
**விரித்த றொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி.**

**வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்**
**விரித்தல் தொகுத்தலும் வரும் செய்யுள் வேண்டுழி.**

valiṭṭal meliṭṭal nīttal kuṛukkal
viriṭṭal ṭokuṭṭalum varum seyyuḻ vēṇtuḷi.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Poetical mutation

The following changes take place in poetry for the sake of meter: Hardening, softening, leangthening, shortening, inserting and omitting (any letter in a word).

## ஒப்புமைப் பகுதி

அந்நாற் சொல்லும் தொடுக்குங் காலை
வலிக்கும் வழி வலித்தலும் மெலிக்ளகும்வழி மெலித்தலும்
விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கும் வழித் தொகுத்தலும்
நீட்டும்வழி நீட்டலும் குறுக்கும்வழிக் குறுக்கலும்
நாட்டல் வலிய என்மனார் புலவர்.

(தொல்.: 397)

மெலித்தல் குறுக்கல் விரித்தல் தொகுத்தல்
வலித்தலே நீட்டல் வரினும் – ஒலிக்கும்
வரிவளாய் தொல்குறைச் சொல் வந்திடினும் உண்மை
தெரிதலாம் கற்றோர் செயல்

(நேமி.: 91)

வலித்தல் மெலித்த னீட்டல் குறுக்கல்
விரித்த றொகுத்தலும் வருஞ் செய்யுள் வேண்டுழி

(இ.வி.: 57)

மெலிவுறின் பாவிடை மென்மை வன்மை
குறுமை நீட்சி குறுந்தொகை விரிவே
மற்றுஒரு மொழி மூவழி குறைதலும் என
வேண்டுழித் தனிமொழி விகாரம் ஒன்பதே

(தொன்.: 37)

அந்நாற் சொல்லுந் தொடுக்குங் காலை
வலித்தன் மெலித்த னீட்டல் குறுக்கல்
விரித்த றொகுத்தலும் வருஞ்செயுள் வேண்டுழி

(மு.வீ.: 696)

.......விரித்த னீட்டல்

**ஆர்குறுக்கல் வலிமெலி முக்குறை தொகுத்தன் முன்**
**மூன்றாம் ஒன்று நானாலாய்ச் சொல்லினும் உய்குவரேள.**
(சுவாமி.: 27:3–4)

## மயிலைநாதர்

எ – ன், இதுவும் ஒருசார் விகார வகை உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– மெல்லெழுத்தை வல்லெழுத்தாக்குதல் முதலான இவ்வாறு விகாரமும் செய்யுளிடத்து வேண்டுழி [1]வரும், எ – று.

வ–று.:–

"குறுத்தாட்பூதஞ் சுமந்த, அறக்கதி ராழியெம் மண்ணலைத் தொழினே." இது, குறுந்தா[2]ளெனற் பாலதனைக் குறுத்தாளென வலித்தவாறு. "தண்டையி னினக்கிளி கடிவோள், பண்டைய ளல்லண் மானோக்கினளே." இது, தட்டை யெனற்பாலதனைத் தண்டை யென்று மெலித்தவாறு. "தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற், போத்தறார் புல்லறிவினார்." இது, பொத்தறார் எனற்பாலதனைப் போத்தறாரென நீட்டியவாறு. "யானை, எருத்தத் திருந்த விலங்கிலை வேற் றென்னன், திருத்தார்நன் றென்றேன் றியேன்." இது, தீயே னெனற்பாலதனைத் தியேனெக் குறுக்கியவாறு. "தன்னந் துறைவர் தகவிலரே தற்சேர்ந்தார், வண்ணங் கடைப்பிடியாதார்" இது தண்டுறைவ ரெனற்பாலதனைத் தண்ணந்துறைவரென விரித்தவாறு. "வேண்டார் வணக்கி விறன்மதி றான்கோடல், வேண்டுமாம்[1]வேண்டார் மகன்" இது, [2]வேண்டாதா ரெனற்பாலதனை [3]வேண்டாரெனத் தொகுத்தவாறு. பிறவுமன்ன.

## –ங்கர நமச்சிவாயர்

எ–னின், செய்யுள் விகாரம் உணர் – ற்று.

இ–ள்.: அல்வழி வேற்றுமையான் வரும் மேற்கூறிய மூன்று விகாரமுமே யன்றி, ஆறாக இங்ஙனம் கூறிய விகாரங்களும் வருவனவாம்; செய்யுளகத்து அடி தொடை முதலிய நோக்கி அமைக்க வேண்டுமிடத்து, எ – று.

இவ்வதிகாரத்துள் கூறும் செய்யுள் முடிபும், பிறவும் அடங்குதற்கு இன்னது நோக்கி என வரைந்து கூறாராயினார்.

வ – று.:–

**“குறுத்தாட் பூதம் சுமந்த அறக்கதி**
**ராழியெம் அண்ணலைத் தொழினே”**
இது குறுந்தாள் எனற்பாலது குறுத்தாள் என வலித்தவாறு.

**“தண்டையின் இனக்கிளி கடிவோள்**
**பண்டையள் அல்லள் மானோக் கினளே”**
இது தட்டை எனற்பாலது தண்டை என மெலித்தவாறு.

**“தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோல்**
**போத்தறார் புல்லறிவி னார்”**
இது பொத்தறார் எனற்பாலது போத்தறார் என நீட்டியவாறு.

**“யானை, எருத்தத் திருந்த விலங்கிலைவேல்**
**தென்னன் திருத்தார்நன் றென்றேன் றியேன்.”**
இது தீயேன் எனற்பாலது தியேன் எனக் குறுக்கியவாறு.

**“சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே”**
இது விளையுமே எனற்பாலது விளையும்மே என ஒற்றில்வழி ஒற்றை விரித்தவாறு. இதனுள் சிறியவிலை எனற்பாலது சிறியிலை எனத் தொகுத்தவாறு.

**“தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு”**
இதுவும் தொட்டது கற்றது எனற்பாலது தொட்டு, கற்று எனத் தொகுத்தவாறு. பிறவும் அன்ன.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், இதுவும் ஒரு சார் விகாரவகை இவையென உரைத்தது.

இ–ள்.:– **வலித்தல்** – மெல்லெழுத்தை வல்லெழுத்தாக்கலும், **மெலித்தல்** – வல்லெழுத்தை மெல்லெழுத்தாக்கலும், **நீட்டல் குறுக்கல்** – குறுக்கலை நீட்டலும் நீட்டலைக் குறுக்கலும், **விரித்தல் தொகுத்தலும்** –

தொகுத்தலை விரித்தலும் விரித்தலைத் தொகுத்தலும், **வரும் செய்யுள வேண்டுழி** – செய்யுளிடத்து வேண்டுழி வரப் பெறும், **எ–று.**

**உ–ம்.:–**

'குறுத்தாட்பூதம்', குறுந்தாளென்பதனைக் குறுத்தாளென வலித்தவாறு. 'தண்டையின் இனக்கிளி கடிவோர்'. இது தட்டை யென்பதனைத் தண்டை யென்று மெலித்தவாறு. "போத்தறார் புல்லறிவினார்". இது பொத்தறா ரென்றதனைப் போத்தறாரென நீட்டியவாறு. "திருத்தார நன்றென்றேன் றியேன்." இது தீயேன் என்றதனைத் தியேன் என்று குறுக்கியவாறு. "தண்ணந் துறைவனென்". இது தண்டுறைவன் என்றதனைத் தண்ணந் துறைவனென விரித்தவாறு. "வேண்டார் பெரியர் விறன்மதி நான்கோடல்." இது வேண்டாதாரென்பதனை வேண்டார் எனத் தொகுத்தவாறு. பிறவுமன்ன.

## விசாகப் பெருமாளையர்

**இது**, செய்யுள்விகார முணர்த்துகின்றது,

**இ–ள்.:– வலித்தல்** – மெல்லொற்றை வல்லொற் றாக்கலும், **மெலித்தல்**– வல்லொற்றை மெல்லொற் றாக்கலும், **நீட்டல்** – குற்றெழுத்தை நெட்டெழுத் தாக்கலும், **குறுக்கல்** – நெட்டெழுத்தைக் குற்றெழுத் தாக்கலும், **விரித்தல்** – இல்லாத வெழுத்தை வருவித்தலும், **தொகுத்தல்** – உள்ள வெழுத்தை நீக்கலும், **வரும்**–வருவனவாம், **செய்யுள்**–செய்யுளிடத்து, **வேண்டுழி**–அடி தொடை முதலானவைகளை நோக்கி அமைக்க வேண்டுமிடத்து, எ – **று.**

**உ–ம்.:–**

**"குறுத்தாட் பூதஞ் சுமந்த வறக்க திராழியெம் மண்ணலைத் தொழினே"**

குறுந்தாளில் நகர மெல்லொற்று வல்லொற் றாக்கப்பட்டது.

**"தண்டையினி னக்கிளி கடிவோள் பண்டையள லலண் மானோக் கினளே"**

தட்டையில் – டகர வல்லொற்று மெல்லொற் றாக்கப்பட்டது.

**"தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற் போத்தறார் புல்லறிவினார்"**

பொத்தில் குற்றெழுத்து நெட்டெழுத் தாக்கப்பட்டது.

**"யானை யெருத்தத் திருந்த விலங்கிலை வேற் றென்னன், றிருந்தார் நன்றென்றேன் றியேன்"**

தீயேனில் – நெட்டெழுத்துக் குற்றெழுத் தாக்கப்பட்டது,

**"சிறியிலை வெதிரி னெல் விளையும்மே"**

விளையும்மே என்பதில், மகர மெய் விரிக்கப்பட்டது, சிறியவிலையில் அகர வுயிர் தொகுக்கப்பட்டது.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

செய்யுள் விகாரங் கூறுஞ் சூத்திரம் யாது?

வலித்தன் மெலித்த னீட்டல் குறுக்கல்
விரித்த றொகுத்தலும் வருஞ் செய்யுள் வேண்டுழி

(வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்
விரித்தல் தொகுத்தலும் வரும் செய்யுள் வேண்டுழி)

**இ–ள்.:– வலித்தல்** – மெல்லொற்றை வல்லொற்றாக்கலும், **மெலித்தல்** – வல்லொற்றை மெல்லொற்றாக்கலும், நீட்டல்– குற்றெழுத்தை நெட்டெழுத் தாக்கலும், **குறுக்கல்** –நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்கலும், **விரித்தல்** – இல்லாதவெழுத்தை வருவித்தலும், **தொகுத்தலும்**– உள்ளவெழுத்தை நீக்கலும், **செய்யுள் வேண்டுழிவரும்**– செய்யுளிடத்து அடி தொடை முதலானவைகளை நோக்கி அமைக்க வேண்டுமிடத்து வருவனவாம், எ–று.

**உ–ம்.:–**

(1) "குறுத்தாட்பூதஞ் சுமந்த வறக்கதி ராழியெம் மண்ண லைத்தொழினே" இங்கே குறுந்தான் எனற்பாலது தண்டை என வலிந்துகின்றது.

(2) "தண்டையி னினக்கிளி கடிவோள், பண்டைய ளல் லண்மானோக் கினளே" இங்கே தட்டை எனற்பாலது குறுத்தாள் என மெலிந்துநின்றது.

(3) "தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற் போத்தறார் புல்லறிவினார்" இங்கே பொத்தறா ரெனற்பாலது போத்தறா ரென நீண்டு நின்றது.

(4) "யானை–யெருத்தத் திருந்த விலங்கிலைவேற்

றென்னன்றிருத்தார் நன்றென்றேன் றியேன்" இங்கே தீயேன் எனற்பாலது தியேன் எனக் குறுகிநின்றது.

(5) "சிறியிலை வெதிரினெல்விளையும்மே" இங்கே விளையுமே எனற்பாலது விளையும்மே என மகரமெய் விரிந்து நின்றது.

(6) சிறியவிலை எனற்பாலது சிறியிலை என யகரவுயிர்மெய் தொக்கு நின்றது.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** செய்யுள் விகார முணர்த்திற்று.

**இ–ள்.:– வலித்தல்** – மெல்லொற்றை வல்லொற்றாக்கலும், மெலித்தல் – வல்லொற்றை மெல்லொற் றாக்கலும், **நீட்டல்** – குற்றெழுத்தை நெட்டெழுத் தாக்கலும், **குறுக்கல்** – நெட்டெழுத்தைக் குற்றெழுத் தாக்கலும், **விரித்தல்** – இசை சுருங்கு மாயின் எழுத்தாயினுஞ் சாரியை யாயினும் பெய்து விரிப்பதும், **தொகுத்தல்**–இசை நீளின் எழுத்தாயினுஞ் சாரியை யாயினுங் குறைத்துச் சுருக்குதலும், (ஆகிய அறுவகை விகாரங்களும்) **செய்யுள்** – பாட்டுக்களிலே, **வேண்டுழிவரும்** – (அடி தொடை முதலிய நோக்கி அமைக்க) வேண்டுமிடத்து வரும், **எ–று.**

> இன்னது நோக்கி இவ் விகாரங்கள் வரு மெனக் கூறா தொழிந்தார், இந்த அதிகாரத்திலே கூறப்படுஞ் செய்யுள் முடிபும் பிறவும் அடங்குதற் பொருட்டு.

**வ–று.:–**

'குறுத்தாட்பூதம்' – இது, குறுந்தாள் எனப்படுவது வலிந்து நின்றது; 'தண்டையி னக்கிளி கடிவோள்' – இது, தட்டையின் எனப்படுவது மெலிந்து நின்றது; 'போத்தறார் புல்லறிவினார்' – இது, பொத்தறார் எனப்படுவது நீண்டு நின்றது; 'திருத்தார் நன்றென்றேன் றியேன்' – இது, தீயேன் எனப்படுவது குறுகி நின்றது; நெல்விளையும்மே இது விளையுமே எனப்படுவது மகர ஒற்று விரிந்து நின்றது; 'சிறியிலை வெதிரின்' – இது சிறியவிலை யெனப்படுவது யகரங் குறைந்து நின்றது; பிறவு மிவ்வாறு காண்க.

**'தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறு மறிவு'**

இக் குறளினுள் தொட்டது, கற்றது எனப்படுவது, தொட்டு, கற்று எனவும், 'கண்டிரண் முத்தங் கொண்டு வந்து'–

இதனுள் வந்தது என்பது வந்து எனவும் குறைந்து நிற்பதினாலே இவையுந் தொகுத்தல் விகாரமா மென்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :– **வலித்தல்** – மெல்லொற்றை வல்லொற்றாக்கலும், **மெலித்தல்** – வல்லொற்றை மெல்லொற்றாக்கலும், **நீட்டல்** – குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்கலும், **குறுக்கல்** – நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்கலும், **விரித்தல்** – இல்லாத எழுத்தை வருவித்தலும், **தொகுத்தலும்** – உள்ள எழுத்தை நீக்கலும், **செய்யுள்** – செய்யுளிடத்து, **வேண்டு உழி** – (அடிதொடை முதலியவற்றை நோக்கி அமைக்க) வேண்டுமிடத்து, **வரும்**

**உதாரணம் :–**

| | | | |
|---|---|---|---|
| 1. | "பிறைக்கடைபிறக்கிட" | (பிறங்கிட) | – வலித்தல் |
| 2. | "தண்டையினினக்கிளி" | (தட்டை) | – மெலித்தல் |
| 3. | "**போ**த்தறார்புல்லறிவினார்" | (**பொ**த்தறார்) | – நீட்டல் |
| 4. | "நன்றென்றேன் **தி**யேன்" | (**தீ**யேன்) | – குறுக்கல் |
| 5. | "நெல்விளையு**ம்**மே' | (விளையுமே) | – விரித்தல் |
| 6. | "சிறி**யி**லைவெதிரின்" | (சிறியவிலை) | – தொகுத்தல் |

குறிப்பு :–

இவ்வலித்தல் முதலிய விகாரங்கள் ஆறும் ஒருமொழி யிடத்தும் தொடர்மொழியிடத்தும் செய்யுளில் மாத்திரம் **வேண்டுமிடத்து** வரும் என்றறிக. வழக்கிடத்தும் பகுபதங்களுட் பயின்றுவரும் இவ்விகா ரங்களைச் செய்யுளுக்கே உரியன என்றது என்னையெனின், அப்பகுபதங்களில் இவற்றை **மாட்டெறிந்தொழுகல்** என்னும் உத்தியால் **தழுவிக்** கொண்டதன்றி, செய்யுளில் வேண்டுழி வருதல்போல வாராமையால் என்க.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: வலித்தல்** – மெல்லொற்றை வல்லொற் றாக்கலும், **மெலித்தல்** – வல்லொற்றை மெல்லொற் றாக்கலும், **நீட்டல்** – குற்றெழுத்தை நெட்டெழுத் தாக்கலும், **குறுக்கல்** – நெட்டெழுத்தைக் குற்றெழுத் தாக்கலும், **விரித்தல்** – இல்லாத வெழுத்தை வருவித்தலும், **தொகுத்தல்** – உள்ள வெழுத்தை நீக்கலும் , **செய்யுள் வேண்டுழி வரும்** – செய்யுளிடத்து அடி தொடை முதலானவைகளை நோக்கி அமைக்க வேண்டு மிடத்து வருவனவாம், **எ – று.**

**உ–ம்.:–**

**“குறுத்தாட் பூதஞ் சுமந்த வறக்கதிராழியெம்**
**மண்ணலைத் தொழினே”**

இங்கே குறுந்தாள் எனற்பாலது குறுத்தாள் என வலிந்து நின்றது.

**“தண்டையி னினக்கிளி கடிவோள் பண்டைய**
**உளல்லண் மானோக் கினளே”**

இங்கே தட்டை எனற்பாலது தண்டை என மெலிந்து நின்றது.

**“தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற்**
**போத்தறார் புல்லறிவினார்”**

இங்கே பொத்தறார் எனற்பாலது போத்தறார் என நீண்டு நின்றது.

**“யானை யொத்தத் திருந்த**
**விலங்கிலை வேற்றென்னன் றிருத்தார்**
**நன்றென்றேன் றியேன்”**

இங்கே தீயேன் எனற்பாலது தியேன் எனக் குறுகி நின்றது.

**“சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே”**

இங்கே விளையுமே எனற்பாலது விளையும்மே என மகரமெய் விரிந்து நின்றது. சிறிய விலை எனற்பாலது சிறியிலை என யகர வுயிர்மெய் தொக்கு நின்றது.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். வலித்தல்** – மெல்லொற்றை வல்லொற்றாக்கலும், – **மெலித்தல்** – வல்லொற்றை மெல்லொற்றாக்கலும், – **நீட்டல்** – குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்கலும், – **குறுக்கல்** – நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்கலும், – **விரித்தல்** – இல்லாதவெழுத்தை வருவித்தலும், – **தொகுத்தல்** – உள்ளவெழுத்தை நீக்கலும், – **செய்யுள் வேண்டுழி வரும்** – செய்யுளிடத்து அடிதொடை முதலானவைகளை அமைக்க வேண்டுமிடத்து வருவனவாம்.

**உ–ம்:–**

“குறுத்தாட் பூதஞ்சுமந்து அறக்கதிராழி யெம் மண்ணலைத் தொழினே” இதில் குறுந்தாள் எனற்பாலது குறுத்தாள் என வலிந்து நின்றது. “தண்டையினக்கிளிகடிவோள் பண்டைய ளல்லண் மானோக்கினளே” இங்கே தட்டை எனற்பாலது

தண்டை என மெலிந்து நின்றது. "தீத் தொழிலே கன்றித் திரிதந்தெருவைபோற் போத்தறார் புல்லறி வினார்". இங்கே பொத்தறார் எனற்பாலது போத்தறார் என நீண்டு நின்றது. "யானை யெருத்தத்திருந்த விலக்கிலை வேற்றென்னன் றிருத்தார் நன்றென் றேன்றியேன்" இங்கே தீயேன் எனற்பாலது தியேன் எனக்குறுகி நின்றது. "சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே" இங்கே விளையுமே எனற்பாலது விளையும்மே என மகரமெய் "விரிந்துநின்றது. சிறியவிலை எனற்பாலது சிறியிலை என யகரவுயிர்மெய் தொக்கு நின்றது.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.:— **வலித்தல்** – (மெல்லொற்றை) வல்லொற் றாக்கலும், **மெலித்தல்** – (வல்லொற்றை) மெல்லொற் றாக்கலும், **நீட்டல்** – (குற்றெழுத்தை) நெட்டெழுத் தாக்கலும், **குறுக்கல்** – (நெட்டெழுத்தைக்) குற்றெழுத் தாக்கலும், **விரித்தல்** – (இல்லாத எழுத்தை) வருவித்தலும், **தொகுத்தலும்** – (உள்ள எழுத்தை ) நீக்குதலும், **செய்யுள்** – செய்யுளிடத்து, **வேண்டுஉழி** – (செய்யுளிலக்கணத்தை நோக்கி) அமைக்க வேண்டுமிடத்து, **வரும்; எ—று.**

| | | | |
|---|---|---|---|
| (1) | "முத்தை வரூஉங் காலம்" | – | முந்தை யென்பது வலிந்து நின்றது. |
| (2) | "தண்டையி னினக்கிளி" | – | தட்டை யென்பது மெலிந்து நின்றது. (தட்டை – கிளி யோட்டுங் கருவி) |
| (3) | "கற்பக நீழல்" | – | நிழலென்பது நீண்டு நின்றது. |
| (4) | "நன்றென்றேன் தியேன் | – | தீயேனென்பது குறுகி நின்றது, |
| (5) | "நெல்விளையும்மே" | – | விளையுமே யென்பது மகர மெய் விரிந்து நின்றது. |
| (6) | "நீ நாடுகென" | – | நாடுக வென வென்பது அகரம் தொக்கு நின்றது. |

புணர்ச்சி விகாரத்துக்கும் செய்யுள் விகாரத்துக்கும் வேறுபாடு:—புணர்ச்சி விகாரம், நிலைமொழி வருமொழிப் புணர்ச்சியில் மாத்திரமே வரும்; தனிமொழியில் வாராது; இது, உலகவழக்குச் செய்யுள்வழக்கு என்னும்

இரண்டுக்கும் உரியதாம். செய்யுள்விகாரம், செய்யுளில் மாத்திரமே வரும்; உலகவழக்கில் வாராது; இது, தனிமொழி தொடர்மொழி இரண்டுக்கும் பொது.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:–** **வலித்தல்** – மெல்லொற்றை வல்லொற்றாக்கலும், **மெலித்தல்–** வல்லொற்றை மெல்லொற்றாக்கலும், **நீட்டல்** – குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்கலும், **குறுக்கல்** – நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்கலும், **விரித்தல்** – இல்லாத எழுத்தை வருவித்தலும், **தொகுத்தல்** – உள்ள எழுத்தை நீக்கலும், **செய்யுள் வேண்டுழி வரும்** – செய்யுளிடத்து அடி தொடை முதலானவைகளை நோக்கி அமைக்க வேண்டுமித்து வருவனவாம். **எ–று.**

**உ–ம்.:–**

“குறுத்தாட் பூதஞ் சுமந்த வறக்கதி ராழியெம் மண்ணலைத் தொழினே” இங்கே ‘குறுந்தாள்’ எனற்பாலது ‘குறுத்தாள்’ என வலிந்து நின்றது.

“தண்டையி னினக்கிளி கடிவோள் பண்டைய ளல்லண் மானோக்கினளே” இங்கே ‘தட்டை’ எனற்பாலது ‘தண்டை’ என மெலிந்து நின்றது.

“தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவை போற் போத்தறார் புல்லறிவினார்” இங்கே ‘பொத்தறார்’ எனற்பாலது ‘போத்தறார்’ என நீண்டு நின்றது.

“யானை –யெருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன் றிருத்தார் நன்றென்றேன றியேன்” இங்கே ‘தீயேன்’ எனற்பாலது ‘தியேன்’ எனக் குறுகி நின்றது.

“சிறியிலை வெதிரி னெல் விளையும்மே இங்கே விளையுமே” எனற்பாலது ‘விளையும்மே’ என மகரமெய் விரிந்து நின்றது சிறிவிலை எனற்பாலது சிறியிலை என யகரவுயிர் மெய் தொக்கு நின்றது.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள்.:–** **வலித்தல்**–(மெல்லொற்றை) வல்லொற்றாக்கலும், **மெலித்தல்–** (வல்லொற்றை) மெல்லொற்றாக்கலும், **நீட்டல்** – (குற்றெழுத்தை) நெட்டெழுத்தாக்கலும், **குறுக்கல்** – (நெட்டெழுத்தைக்) குற்றெழுத்தாக்கலும், **விரித்தல்** – (இல்லாத எழுத்தை) வருவித்தலும், **தொகுத்தல்**–(உள்ள எழுத்தை) நீக்கலும், **வரும்** – வருவனவாம்; **செய்யுள்**–

செய்யுளிடத்து, **வேண்டுழி** –(அடி தொடை முதலானவைகளை நோக்கி) அமைக்கவேண்டுமிடத்து. எ–று.

**பொ–ரை.:–**

பாட்டில் வேண்டுமிடத்தில், வலித்தல் முதலாகிய ஆறு விகாரங்களும் வரும்.

**உ–ம்.:–**

"குறுத்தாட் பூதஞ் சுமந்த, வறக்கதி ராழியெம் மன்னலைத் தொழினே"–குறுந்தாளில் நகர மெல்லொற்று வல்லொற்றாக்கப்பட்டது.

"தண்டையி னினக்கிளி கடிவோள், பண்டைய எல்லண் மானோக் கினளே"–தட்டையில் டகர வல்லொற்று மெல்லொற்றாக்கப்பட்டது.

"தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற், போத்தறார் புல்லறிவினார்"–போத்தறாரென்பதில் குற்றெழுத்து நெட்டெழுத்தாக்கப்பட்டது.

"யானை, யெருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன், றிருத்தார்ந்ன றென்றேன் றியேன்"– தீயேனில் நெட்டெழுத்து குற்றெழுத்தாக்கப்பட்டது.

"சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே"–விளையுமே என்பதில் மகரமெய் விரிக்கப்பட்டது; சிறிய இலையில் அகரவுயிர் தொகுக்கப்பட்டது.

(தட்டை–கிளிகடியுங் கருவி. இவ் விகாரங்கள் செய்யுளின்ப நோக்கியெனக் கொள்க.)

## கா.நமச்சிவாய முதலியார்

**வலித்தல்** – (மெல்லொற்றை) வல்லொற்றாக்கலும், **மெலித்தல்** – (வல்லொற்றை) மெல்லொற்றாக்கலும், **நீட்டல்** – (குற்றெழுத்தை) நெட்டெழுத்தாக்கலும், **குறுக்கல்** – (நெட்டெழுத்தைக்) குற்றெழுத்தாக்கலும், **விரித்தல்** – (இல்லாத எழுத்தை) வருவித்தலும், **தொகுத்தல்** – (உள்ள எழுத்தை) நீக்கலும், **செய்யுள்** – செய்யுளிடத்து, **வேண்டுழி** – (அடிதொடை முதலானவைகளை நோக்கி) அமைக்க வேண்டுமிடத்து, **வரும்** – வருவனவாம்.

**உதாரணம்:–**

'குறுத்தாட் பூதஞ் சுமந்த

**அறக்கதி ராழியெம் மண்ணலைத் தொழினே'**

இதில், குறுந்தாள் என்பது 'குறுத்தாள்' என நகரமெல்லொற்றுத் தகர வல்லொற்றாக்கப்பட்டது.

**'தண்டையி னினக்கிளி கடிவோள்**
**பண்டையளல்லள் மானோக் கினளே'**

இதில், தட்டை என்பது 'தண்டை' என டகரவல்லொற்று ணகர மெல்லொற்றாக்கப்பட்டது.

**'தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற்**
**போத்தறார் புல்லறிவி னார்'**

இதில், பொத்தறார் என்பது 'போத்தறார்' எனக் குற்றெழுத்து நெட்டெழுத்தாக்கப்பட்டது.

**'யானை, யெருத்தத் திருந்த விலங்கிலைவேற்**
**றென்னன்**
**றிருந்தார் நன்றென்றேன் றியேன்'**

இதில், தீயேன் என்பது, 'தியேன்' என முதல் நெட்டெழுத்துக் குற்றெழுத்தாக்கப்பட்டது.

**'சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே'**

இதில், விளையுமே என்பது, 'விளையும்மே' என மகரமெய் விரிக்கப்பட்டது ; சிறிய இலை என்பது 'சிறியிலை' என அகரவுயிர் தொகுக்கப்பட்டது.

புணர்ச்சி விகாரத்திற்கும் செய்யுள் விகாரத்திற்கும் வேறுபாடு பதவியல் 6–ஆம் சூத்திரத்திற் கூறப்பட்டுள்ளது.

## மோசகு பொன்னையா

மெல்லொற்றை வல்லொற்றாக்கலும், வல்லொற்றை மெல்லொற்றாக்கலும், குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்கலும், நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்கலும், இல்லாத எழுத்தை வருவித்தலும், உள்ள எழுத்தை நீக்கலும் செய்யுளில் அடிதொடை அமைக்க வேண்டுமிடத்து வருவனவாம், எ–று.

எ–டு.:–

1.குறுத்தாட் பூதஞ் சுமந்த – குறுந்தாள் – குறுத்தாள் – **வலித்தல்.**

2.தண்டை யினக்கிளி கடிவோள் – தட்டை – தண்டை – **மெலித்தல்.**

3.தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற் போத்தறார் புலலறிவி னார் – பொத்தறார் – போத்தறார் – **நீட்டல்.**

4.திருத்தார் நன்றென்றேன் தியேன் – தீயேன் – தியேன் – **குறுக்கல்.**

5.சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே – விளையுமே – விளையும்மே

– **விரித்தல்.**

6.சிறியவிலை – சிறியிலை – **தொகுத்தல்.**

**(5)**

**155. ஒருமொழி மூவழிக் குறைதலு [1]மனைத்தே.**

**ஒருமொழி மூ வழிக் குறைதலும் அனைத்தே**

orumoḷi mū vaḷik kuṟaitalum aṉaittē

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

The omission of an initial, medial or a final is also of the same nature (as the above)

## மயிலை நாதர்

இதுவுமது.

இ–ள்.:– புணர்மொழியல்லா ஒருமொழியின் முதலும் இடையும் கடையும் குறைதலும் செய்யுள் வேண்டுமிடத்தேயாம், எ–று.

வ–று.:–

"மரையிதழ் புரையு மஞ்செஞ் சீறடி" எனவும், "வேதின வெரிநி னோதிமுது போத்து" எனவும், "நீலுண் டுகிலிகை கடுப்ப" எனவும், முறையே தாமரை [2]ஒந்தி நீலம் எனற்பால

---

பாட வேறுபாடு.:–

1. உரித்தே

2. ஒத்தி

[3]குறைந்தவாறு காண்க. இம் மூன்றும் தனிமொழிக் கண்ணா மெனவே, ஏனைய எல்லா மொழிக்கண்ணும் வருமெனக் கொள்க.

புணர்ச்சி விகாரமன்றி யாப்பிற்கே யுரிய இவற்றை ஈண்டு வைத்தது என்னையோ வெனின், விகாரம் அதிகாரப்பட்ட மையானும், மேலிற் பகுபத முடிபிற்கும் சிறுபான்மை வேண்டுதலானும், யாப்பிற்கே யுரிய பிறவும் இவ்வதி காரத்துள்ளே சொல்லப்படுதலானும், விரித்தல் தோன்றலாகவும், வலித்தலும் மெலித்தலும் நீட்டலும் குறுக்கலும் திரிபாகவும், தொகுத்தலும் மூவிடத்தும் குறைதலும் கெடுதலாகவும் அடக்கிச் செய்யுள் விகாரம் இம்மூன்று மெனவும் அமையுமென்பது போதருதற்கும் ஈண்டே வைத்தாரெனக் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ – னின்,** இதுவும் அது.

**இ–ள்.:** அடி தொடை முதலிய நோக்கித் தொகுக்கும் வழித் தொகுத்தலன்றி, வழக்கின்கண் மரூஉப்போலச் செய்யுட்கண் மரூஉவாய், அடிப்பாடாக ஒருமொழி முதல் இடை கடை என்னும் மூன்றிடத்தும் குறைந்து வருதலும் செய்யுள் விகாரமாம், **எ – று.**

**வ – று.:–**

"**மரையிதழ் புரையும் அஞ்செஞ் சீறடி**" எனவும்,
"**வேதின வெரிநின் ஓதிமுது போத்து**" எனவும்,
"**நீலுண்டு கிலிகை கடுப்ப**" எனவும் முறையே தாமரை, ஒந்தி, நீலம் எனற்பாலன குறைந்தவாறு காண்க.

செய்யுட்கே உரிய விகாரங்களை ஈண்டுக் கூறியது என்னை யெனின்:– செய்யுளகத்து அல்வழி வேற்றுமையான் வரும் மூன்று விகாரமும், இவ் வொன்பது விகாரமும் வருதலின் வேறுபாடு அறிதற் கென்க.

---

**பாடவேறுபாடு.:–**

**1. குறைத்தவாறு**

## கூழங்கைத் தம்பிரான்

**சூ-ம்,** புணர்மொழியல்லா ஒரு மொழிக்கண் விகாரம் வருமாறு உரைத்தது.

**இ-ள்.:-** **ஒரு மொழி** - புணர்மொழி யல்லாத ஒரு மொழியின், **மூவழிக் குறைதலும்** - முதலும் இடையும் கடையும் குறைதலும், **அனைத்தே** - மேற்கூறிய செய்யுள் விகாரத்தோடு ஒப்பனவாம், எ-று.

**உ-ம்.:-**

"மரையிதழ் புரையு மஞ்செஞ் சீறடி" எனவும், "வேதினவெரிநி னோதிமுது போத்து" எனவும், "நீலுண்டுகிலிகை கடுப்ப" எனவும் முறையே தாமரை, ஒந்தி, நீலம் என்றதில் முதல், இடை, கடை குறைந்தவாறு காண்க. இங்ஙனம் வரும் செய்யுள் விகாரம் ஒன்பதையும் விரித்தல் தோன்றல் விகாரமாகவும், வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல் திரிபு விகாரமாகவும், தொகுத்தலும் மூவிடத்தினும் குறைதலும் கெடுதல் விகாரமாகவும் அடக்கச் செய்யுள் விகாரம் இம்மூன்று மென அமையுமென்பது போதற்கே ஈண்டே வைத்தாரென்க.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

**இ-ள்.: ஒருமொழி**-ஒரு சொல்லினுடைய, **மூ வழி** - முதலிடை கடையென்கிற மூன்றி லோரிடத்து, **குறைதலும்** - குறைந்து வருதலும், **அனைத்து** - அச் செய்யுள் விகாரமாம், எ - று.

**உ-ம்.:-**

"மரையிதழ் புரையுமஞ்செஞ்சீறடி" தாமரையில் முதலெழுத்துக் குறைந்தது, "வேதின வெரிநினோதி முதுபோத்து" ஒந்தியில் இடையெழுத்துக் குறைந்தது, "நீலுண்டுகிலிகைகடுப்ப" நீலத்திற் கடை யெழுத்துக் குறைந்தது, (இன்னும் "குறைதலும்" என்ற வெச்ச வும்மையால் விதியின்றி வருகிற விகாரங்களுஞ் சிலவுண்டு, அவை வருமாறு:- யாது யாவது எனத் தோன்றலும், மாகி- மாசி எனத் திரிதலும், யார்-ஆர் எனக் கெடுதலும், பொழுது-போழ்து என நீளலும், மிஞிறு - ஞிமிறு, தசை சதை என வெழுத்தும், நகர்ப்புறம் புறநகர் இல்முன்

மூன்றில்'' எனச்சொல்லும் நிலை மாறுதலும் ஆகிய விவை முதலாயியனவாம்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

இவ்வாறு விகாரங்களேயன்றி வேறு செய்யுள் விகாரங்களு முளவோ?

ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே

(ஒருமொழி மூவழிக் குறைதலும் அனைத்தே)

**இ–ள்.:–ஒருமொழி மூவழிக்குறைதலும் அனைத்து–** ஒருசொல்லினுடைய முதலிடை கடையென்னு மூன்றில் ஓரிடத்துக் குறைந்து வருதலும் அச்செய்யுள் விகாரமாம், **எ–று.**

**உ–ம்.:–**

(1) ''மரையிதழ் புரையு மஞ்செஞ் சீறடி'' இங்கே தாமரை எனற்பாலது மரை என முதற்குறைந்து நின்றது.

(2) ''வேதின வெரி நினோதி முதுபோத்து'' இங்கே ஓந்தி எனற்பாலது ஓதி என இடைக் குறைந்து நின்றது.

(3) ''நீலுண் டுதலிகை கடுப்ப'' இங்கே நீலம் எனற்பாலது நீல் எனக் கடைக் குறைந்து நின்றது.

புணர்ச்சிக்கண் விகாரங்களெவை?

தோன்றல் திரிதல் கெடுதல் நீளல் நிலைமாறல் என்பன.

**உ–ம்.:–**

யாது–யாவது; இதுதோன்றல். மாகி–மாசி; கண்ணகல் பரப்பு–கண்ணகன் பரப்பு; உயர்திணைமேல – உயர்திணை மேன; இவை திரிதல். யாவர் – யார்; யார் – ஆர், யானை – ஆனை, யாடு– ஆடு, யாறு– ஆறு, இவை கெடுதல் பொழுது–போழ்து, பெயர் – பேர் இவை நீளல், வைசாகி – வைகாசி, மிஞிறு– ஞிமிறு, சிவிறி– விசிறி தசை–சதை, இவை எழுத்து நிலைமாறுதல், கண்மீ–மீகண், இல்வாய்–வாயில், நகர்ப்புறம்– புறநகர், இவை சொன்னிலை மாறுதல்.

## முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

**இ–ள்.:** **ஒருமொழி** – ஒவ்வொரு சொற்கள், **மூவழிக்கு றைதலும் –**

முதலிலாவது இடையிலாவது கடையிலாவது குறைந்து வருதலும், **அனைத்து** – அத் தன்மைத்தாகிய செய்யுள் விகாரமாம், எ – று.

**வ—று.:—**

'மரையிதழ் புரையு மஞ்செஞ் சீறடி' இதில் தாமரையிதழ் எனப்படுவது முதல் குறைந்தது;

'வேதின வெரினி னோதி முதுபோத்து' இதில் ஒந்தி எனப்படுவது இடைக் குறைந்தது;

'நீலுண்டு கிலிகை கடுப்ப' இதில் நீலம் என்பது கடைக் குறைந்தது, பிறவுங் காண்க.

செய்யுளுக்கே உரிய இந்த ஒன்பது விகாரங்களை இங்கே சொல்லிய தென்னெனின்: செய்யுளிடத்தும் அல்வழி வேற்றுமையால் வரும் மூன்று விகாரமும், இந்த ஒன்பது விகாரமும் வருதலால், வேறுபாடறிதற்கும்; விரித்தல் தோன்றல் விகாரமாகவும், வலித்தலும் மெலித்தலும் நீட்டலும் குறுக்கலும் திரிதலாகவும், தொகுத்தலும் மூவழிக் குறைதலும் கெடுதலாகவும், இந்த மூவகையுள் அவ் வொன்பது வகை விகாரங்களும் அடங்குமென்பது அறிவித்தற்கு மென்க.

இனி இச் சூத்திரத்திற்கு வழக்கின்கண் மரூஉப் போலச் செய்யுட்கண் மரூஉவா யடிப்பாடாக இவ் விரகாரங்கள் வருமெனப் பொருள் கூறுவாரு முளர், அது இச் சூத்திரக் கருத்தன்று. என்னெனின், மேலைச் சூத்திரக் கருத்து அறுவகை விகாரங்களும் செய்யுட் செய்யுஞ் சான்றோ ரழகுபெற அச்செய்யுளிலே வேண்டுழி வருவிக்க வருமென்பதன்றே; அதை நோக்கி இச்சூத்திரத்தை மாட்டெறிந்தா ராதலால் இதற்குஞ் செய்யுட் செய்யுஞ் சான்றோர் வருவித்துழி வருமென்பதே கருத்தாதல் வேண்டும். இது கருதி யன்றே ஒவ்வொரு மொழி யென்பதை ஒருமொழி யென இவர் இச் சூத்திரஞ் செய்தது மென்க. இன்னுமது பொருந்தா தென்பதற்கு 'பசும்புற் றலைகாண் பரிது' இதிற் காண்ப தென்பது காண்பெனக் கடைக் குறைந்ததும் 'சான்றோ ரென்பிலர் தோழி' இதிற் சான்றோ ரென்பா ரிலரென்பது என்பிலரெனக் கடைக் குறைந்ததுமே சான்றாத லுணர்க.

இனி வழக்கிடத்தும் இலைக்கறியை, லைக்கறி எனவும், நிலாவுதித்த தென்பதற்கு லாவுதித்த தெனவும், இராப்பக

லென்பதற்கு, ராப்பக லெனவும், கேள்வரகு – கேவரகு, நீர்ச்சீலை – நீச்சீலை, போகிறான்–போறான், பாடுகிறான் – பாடுறான் எனவும், ஆணை யேறும் பெரும் பறைய னென்று மரபு பற்றி வந்த, தோட்டியான் என்பதைத் தோட்டி எனவும், தண்ணீர் – தண்ணீ, வெந்நீர் – வெந்நீ எனவும் முறையே இம் மூவகை விகாரங்களும் வருத லுரையிற் கொள்க, பிறவுமன்ன.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :–** **ஒருமொழி** – ஒரு சொல்லினுடைய, **மூவழி** – (முதல் இடை கடை என்னும்) மூன்றில் ஓரிடத்து, **குறைதலும்** – குறைந்து வருதலும், **அனைத்தே** – அச்செய்யுள் விகாரமேயாம்.

**உதாரணம் :–**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | "மரை யிதழ்புரையும்" | (தாமரை) | – | முதற்குறை |
| 2. | "ஓதி முதுபோத்து" | (ஓந்தி) | – | இடைக்குறை |
| 3. | "நீலுண்டுகிலிகை, கடுப்ப" | (நீலம்) | – | கடைக்குறை |

குறிப்பு :–

தொகுத்தலும் குறைகளும் எழுத்து மறைதலாதலின் தம்முளொக்கு மெனினும், தொகுத்தல் பகுபதத்துள்ளும் முதலிடை கடைக்குறைகள் பகாப்பதத் துள்ளும் வருமென வேறுபாடறிக. (செய்யுளுக்கே உரிய இவ்வொன்பது விகாரங்களையும் இங்குக் கூறியதென்னையெனின், செய்யுளிடத்தும் அல்வழி வேற்றுமையால் வரும் மூன்று விகாரங்களும் இவ்வொன்பது விகாரங்களும் வருதலின் வேறு பாடறிதற்கும்; விரித்தல் தோன்றலுள்ளும், வலித்தலும் மெலித்தலும் நீட்டலும் குறுக்கலும் திரிதலுள்ளும், தொகுத்தலும் மூவழிக் குறைதலும் கெடுதலுள்ளுமாக இவ்வொன்பது விகாரங்களும் அம்மூவகைப் புணர்ச்சி விகாரங்களுள் அடங்கு மென்பதும் அறிவித்தற்கும் என்பது **இராமானுச கவிராயர்** கருத்து.)

இனி, **உரையிற்கோடல்** என்னும் உத்தியால் விதியின்றி வருவனவாகிய புணர்ச்சியில் விகாரங்களும் கொள்ளுவர்; அவை : தோன்றல், திரிதல், கெடுதல், நீளல், நிலைமாறுதல்;

**உ–ம்.:–**

யாது – யாவது (தோன்றல்); மாகி – மாசி (திரிதல்);

யாவர் – யார் (கெடுதல்); பொழுது – போழ்து (நீளல்);

வைசாகி – வைகாசி, (எழுத்து நிலை மாறுதல்); நகர்ப்புறம் – புறநகர் (சொல் நிலைமாறுதல்).

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:– ஒருமொழி மூவழிக் குறைதலும்** – ஒரு சொல்லினுடைய முதலிடை கடை யென்னு மூன்றில் ஒரிடத்துக் குறைந்து வருதலும், **அனைத்து** – அச் செய்யுள் விகாரமாம், **எ – று.**

**உ–ம்.:–**

"மரையிதழ் புரையு மஞ்செஞ் சீறடி" இங்கே தாமரை எனற்பாலது மரை என முதற் குறைந்து நின்றது. "வேதின வெரிநி னோதி முதுபோத்து" இங்கே ஒந்தி எனற்பாலது ஓதி என இடைக் குறைந்து நின்றது. "நீலுண் டுகிலிகை கடுப்ப" இங்கே நீலம் எனற்பாலது நீல் எனக் கடைக் குறைந்து நின்றது.

**உரையிற்கோடலால்,** விதியின்றி வருவனவாகிய புணர்ச்சியில் விகாரங்களுங் கொள்க. அவை தோன்றல், திரிதல், கெடுதல், நீளல் நிலைமாறுதல் என்பனவாம்.

**உ–ம்.:–**

யாது – யாவது இது தோன்றல். மாகி–மாசி, கண்ணகல் பரப்பு – கண்ணகன் பரப்பு; உயர்திணை மேல – உயர்திணை மேன இவை திரிதல். யாவர்–யார்; யார்–ஆர்; யானை–ஆனை; யாடு–ஆடு; யாறு – ஆறு இவை கெடுதல். பொழுது–போழ்து; பெயர்–பேர் இவை நீளல். வைசாகி – வைகாசி; மிஞிறு – ஞிமிறு; சிவிறி – விசிறி; தசை–சதை இவை எழுத்து நிலைமாறுதல். கண்மீ – மீகண்; இல்வாய் – வாயில்; நகர்ப்புறம்–புறநகர் இவை சொன்னிலைமாறுதல்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள்.:– ஒருமொழி மூவழிக் குறைதலும்** – ஒருசொல்லினுடைய முதல் இடை கடை என்னுமூன்றில் ஒரிடத்துக் குறைந்து வருதலும், – **அனைத்து** – அச்செய்யுள் விகாரமாம். **எ–று.**

**உ–ம்.:–**

"மரையிதழ்புரையுமஞ்செஞ்சீறடி" இங்கே தாமரை எனற்பாலது மரை என முதற் குறைந்து நின்றது.

"வேதினவெரிநினோதிமுதுபோத்து" இங்கே ஒந்தி எனற்பாலது ஓதி என இடைகுறைந்து நின்றது. "நீலுண்டுகிலிகைகடுப்ப" இங்கே நீலம் எனற்பாலது நீல் எனக் கடை குறைந்து நின்றது. உரையிற்கோடலால் விதியின்றி வருவனவாகிய புணர்ச்சியில் விகாரங்களுங் கொள்க. அவை : தோன்றல், திரிதல், செடுதல், நிலைமாறுதல் என்பனவாம்.

உ-ம்.:-

யாது – யாவது இது தோன்றல். மாகி – மாசி; கண்ணகல் பரப்பு – கண்ணகன்பரப்பு; உயர்திணைமேல – உயர்திணைமேன இவை திரிதல். யாவர் – யார், ஆர்; யானை – ஆனை; யாடு – ஆடு; யாறு – ஆறு இவை கெடுதல். வைசாகி – வைகாசி; மிஞிறு – ஞிமிறு; சிவிறி – விசிறி; தசை – சதை இவை எழுத்து நிலைமாறுதல். கண்மீ – மீகண்; இல்வாய் – வாயில்; நகர்ப்புறம் – புறநகர் இவை சொன்னிலை மாறுதல்.

செய்யுளுக்குரிய இந்த ஒன்பது விகாரங்களை இங்கே சொல்லிய தென்னெனின்; வழக்கினிடத்து வருதலு மன்றிச் செய்யுளிடத்தும் அல்வழி வேற்றுமையால் வரும் மூன்று விகாரமும் இந்த ஒன்பது விகாரமும் வருதலால் வேறுபாடறிதற்கும்; விரித்தல் தோன்றல் விகாரமாகவும், வத்தலு மெலித்தலு நீட்டலுங் குறுக்கலும் திரிதல் விகாரமாகவும், தொகுத்தலு முதற்குறை இடைக்குறை கடைக்குறைகளுங் கெடுதல்விகாரமாகவும் இந்த மூவகை விகாரங்களுள் அந்த ஒன்பது விகாரங்களும் ஒருவாற டங்குமென்றறிவித்தற்குமென்க. அன்றியும்; வா; சா; தா என்பன முதலிய பலபகுதிகள் வந்தான், வருகிறான், வருவான்; செத்தான், சாகிறான், சாவான்; தந்தான், தருகிறான், தருவான் என்று பலவாறு வேறுபட்டு வருதற்கு விதியாக இச்செய்யுள் விகாரம் உபயோகப் படுதல் பற்றியுமாமென்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.:–** **ஒருமொழி** – ஒரு சொல்லினுடைய, **மூ வழி** – (முதல் இடை கடை என்னும்) மூன்றில் ஓரிடத்து; **குறைதலும்** – குறைந்து வருதலும், **அனைத்து** – அச் செய்யுள் விகாரமாம்; எ–று.

உ—ம்.:—

"மரை யிதழ்" – தாமரை என்பது முதல் குறைந்தது.

"ஓதி முதுபோத்து" – ஓந்தி என்பது இடை குறைந்தது.

"நீலுண் துகிலிகை" – நீலம் என்பது கடை குறைந்தது.

(ஓந்தி—ஓணான்)

தொகுத்தல் விகாரம் பகுபதத்திலும், முதல் இடை கடைக் குறை விகாரங்கள் பகாப்பதத்திலும் வருமென வேறுபாடு கொள்க.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள்.:— ஒருமொழி மூவழிக் குறைதலும்** – ஒரு சொல்லினுடைய முத லிடை கடையென்னும் மூன்றில் ஓரிடத்துக் குறைந்து வருதலும், அனைத்து – அச் செய்யுள் விகாரமாம். எ—று.

உ—ம்.:—

"மரையிதழ் புரையு மஞ்செஞ் சீறடி" இங்கே 'தாமரை' எனற்பாலது 'மரை' என முதற்குறைந்து நின்றது.

"வேதி செரிநி னோதி முதுபோத்து" இங்கே 'ஓந்தி' எனற்பாலது 'ஓதி' என இடைக்குறைந்து நின்றது.

"நீலுண் டுயீகலிகை கடுப்ப" இங்கே 'நீலம்' எனற்பாலது 'நீல்' எனக் கடைக்குறைந்து நின்றது.

உரையிற்கோடலால், விதியின்றி வருவனவாகிய புணர்ச்சியில் விகாரங்களுங் கொள்க. அவை தோன்றல், திரிதல், கெடுதல், நீளல், நிமைாறுதல் என்பனவாம்.

உ—ம்:—

யாது – யாவது (இது தோன்றல்)

மாகி – மாசி; கண்ணகல் பரப்பு – கண்ணகன் பரப்பு, உயர்திணைமேல – உயர்திணை மேன (இவை திரிதல்)

யாவர் – யார்; யார் – ஆர்; யானை – ஆனை; யாடு – ஆடு; யாறு – ஆறு (இவை கெடுதல்)

பொழுது – போழ்து; பெயர் – பேர் (இவை நீளல்)

வைசாகி – வைகாசி; மிஞிறு – ஞிமிறு; சிவிறி – விசிறி; தசை – சதை (இசை எழுத்து நிலைமாறுதல்)

கண்மீ—மீகண்; இல்வாய் —வாயில்; நகர்ப்புறம் – புறநகர்

(இவை சொல்நிலை மாறுதல்.)

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள்.:– ஒருமொழி** – ஒரு சொல்லினுடைய, **மூ வழி** – (முதல் இடை கடை என்கிற) மூன்றில் ஓரிடத்து, **குறைதலும்** – குறைந்து வருதலும், **அனைத்து** –அச் செய்யுள் விகாரமாம். எ–று.

**பொ–ரை.:–**

ஒரு சொல்லின் (முதல், இடை, கடையாகிய) மூன்றிடத்தில் ஓரிடத்துக் குறைந்து வருதலும் அச் செய்யுள் விகாரமாம்.

**உ–ம்.:–**

"மரையிதழ் புரையு மஞ்செஞ் சீறடி"–தாமரையில் முதலெழுத்துக் குறைந்தது.

"வேதின வெரிநி னோதிமுது போத்து"–ஒந்தியில் இடையெழுத்துக் குறைந்தது. (ஒத்தி–ஓணான்)

"நீலுண் டுகிலிகை கடுப்ப"–நீலம் என்பதில் கடை குறைந்தது. (அம்–குறைந்தது.)

இன்னும் "குறைதலும்" என்ற எச்ச உம்மையால் விதியின்றி வருகிற விகாரங்களும் சில வுண்டு.

**உ–ம்.:–**

யாது–யாவது–தோன்றல்.

மாகி–மாசி–திரிதல்.

யார்–ஆர்–கெடுதல்.

பொழுது–போழ்து–நீளல்.

மிஞறு–ஞமிறு–எழுத்து நிலைமாறுதல்

தசை–சதை ,,

நகர்ப்புறம்–புறநகர்–சொல் நிலைமாறுதல்.

இன்முன்–முன்றில் ,,

(இவ் விகாரங்கள் வருமொழியால் நிலைமொழிப்பொரு ளின்ன தெனப் புலப்படுத்தும். இவ்வாறு விதியின்றி வரும் விகாரங்களைப் புணர்ச்சியில் விகாரமென்பர்.)

## கா.நமச்சிவாய முதலியார்

**ஒருமொழி** – ஒரு சொல்லினுடைய, **மூவழி** – முதல் இடை கடையென்னும் மூன்றில் ஓரிடத்து, **குறைதலும்** – குறைந்து வருதலும், **அனைத்து** – அச்செய்யுள் விகாரமாம்.

**உதாரணம்:-**

**'மரையிதழ் புரையு மஞ்செஞ் சீறடி'**

இதில், தாமரை என்பது, 'மரை' என முதலெழுத்துக் குறைந்தது.

**'வேதின வெரிநி னோதிமுது போத்து'**

இதில், ஓந்தி என்பது, 'ஓதி' என இடையெழுத்துக் குறைந்தது.

**'நீலுண் டுகிலிகை கடுப்ப'**

இதில், நீலம் என்பது, 'நீல்' எனக் கடை குறைந்தது.

## மோசகு பொன்னையா

ஒரு சொல் முதல் இடை கடை என்ற மூவிடங்களிலும் குறைந்து வருதலும் செய்யுள் விகாரமேயாகும், எ—று.

எ—டு.:-

1. மரையிதழ் புரையு மஞ்செஞ் சீறடி – தாமரை + மரை
   – **முதற்குறை**
2. வேதின வெரிநி னோதிமுது போத்து – ஓந்தி + ஓதி
   – **இடக்குறை**
3. நீலுண் டுகிலிகை கடுப்ப – நீலம் + நீல்
   – **கடைக்குறை**

முற்கூறப்பட்ட ஆறும் அடி தொடை நோக்கியே அமைத்துக் கொள்ளப்படும்; இம்மூன்றும் அவ்வா றன்றியும் செய்யுளிடத்து அடிப்பட்டு வழங்கி வரும். அவ் வேறுபாடு உண்டெனினும், இதனையும்செய்யுள் விகாரம் எனவே கொள்க என்பார் குறைதலும் அனைத்தே என எச்ச உம்மை புணர்த்தித் தழுவி யுரைத்தார். இவ்வாசிரியர் திரிதல் புணர்ச்சியை விகாரப் புணர்ச்சி என்று குறியிட் டாண்டமையால் விகாரம் அதிகாரப் பட்டமையின், செய்யுட்கே உரிய இவ்வொன்பது விகாரங் களையும் இரு வகை வழக்கிற்கும், உரிய அம்மூன்றனுடன் கூறினார். வழக்கின்கண்வரும் யாது, யார், ஆர், ஆனை, அடு, ஆறு, பேர் ஞிமிறு, விசிறி, சதை, மீகண், வாயில், புறநகர், ராப் பகல், கேவரகு, தண்ணீ, வெந்நீ எனக் குறைந்தும், முன் பின் மாறியும் வருவனவற்றை மரூஉ எனவும், இலக்கணப் போலி எனவும், அமைப்பர் எனக் கொள்க.

**156. ஒருபுணர்க் கிரண்டு மூன்று முறப்பெறும்**

**ஒரு புணர்க்கு இரண்டு மூன்றும் உறப் பெறும்**

oru puṇarkku iraṇṭu mūṉṟum uṟap peṟum

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

There may be even two or three Changes (in a single combination).

## ஒப்புமைப் பகுதி

**ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே**

(இ.வி.: 58)

## மயிலை நாதர்

**எ—ன்,** எய்தாத தெய்துவித்தல் நுதலிற்று.

**இ—ள்.:** ஒரு புணர்ச்சி யிடத்து ஒன்றே யன்றி இரண்டு மூன்று விகாரம் ஒருங்கே வரவும் பெறும், **எ – று.**

**வ – று.:–**

நிலப்பனை, பனங்காய் என முறையே காண்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ—னின்,** அவ்வழி வேற்றுமைப் புணர்ச்சி விகாரத்தின் வருவதோர் ஐயம் அறுத்து உணர் – **ற்று.**

**இ – ள்.:–** ஒரு புணர்ச்சிக்கண் தோன்றல் திரிதல் கெடுதல் என்ற விகாரம் எத்துணைவரும் என்று ஐயுறற்க; ஒன்றே யன்றி, இரண்டும் மூன்றும் வரப்பெறும், **எ – று.**

'விகாரத்தியைவது புணர்ப்பு' எனவே ஒன்று வருதல் கூறாதே அமைதலின், இரண்டும் மூன்றும் என்றார்.

**வ—று.:–**

யானைக்கோடு, நிலப்பனை, பனங்காய் என முறையே காண்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** ஒரு புணர்ச்சிக்கண் விகாரமனைத்தும் வருவன உரைத்தது.

இ–ள்.: **ஒரு புணர்ப்பு** – ஒரு புணர்ச்சியினிடத்து ஒன்றேயன்றி, **இரண்டும் மூன்றும்** – இரண்டு விகாரமும் மூன்று விகாரமும், **உறப்பெறும்** – ஒருங்கு வரவும் பெறும், எ–று.

உ–ம்.:–

நிலவாகை, நிலப்பனை, பனங்காய் என முறையே காண்க.

## விசாகப் பெருமாளையர்

இது, புணர்ச்சி விகாரத்தில் வருவதோ ரையம் ஒழிக்கின்றது,

இ–ள்.:– **ஒரு புணர்க்கு**–ஒரு புணர்ச்சிக்கு, **இரண்டு மூன்றும்**–ஒன்றே யல்லாம லிரண்டு மூன்றும், **உறப்பெறும்**–வரப் பெறும், எ–று.

உ–ம்.:–

| | |
|---|---|
| யானை+கோடு–யானைக்கோடு | ஒரு விகாரம், |
| நிலம்+பனை–நிலப்பனை, | இரண்டு விகாரம், |
| பனை+காய்–பனங்காய், | மூன்று விகாரம். |

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

மொழிக்குறைக்கும் தொகுத்தலுக்கும் வேறுபாடு யாது?

குறை ஒருமொழியின் முதலிடை கடைகளி லோரிடத்தில் எழுத்துக் குறைதல், தொகுத்தல் மொழியிறுதியிலே விதிவகையால் வந்த விகுதி குறைந்து நிற்றல்.

ஒரு புணர்ச்சிக்கண் ஒருவிகாரந்தான் வருமோ?

ஒருபுணர்க் கிரண்டு மூன்று முறப்பெறும்

(ஒருபுணர்க்கு இரண்டும் மூன்றும் உறப்பெறும்)

இ–ள்.:– **ஒரு புணர்க்கு** – ஒருபுணர்ச்சிக்கு, **இரண்டும் மூன்றும் உறப்பெறும்** – விகாரம் ஒன்றேயன்றி இரண்டு மூன்றும் வரப்பெறும். எ–று.

உ–ம்.:–

(1) யானை–கோடு–யானைக்கோடு ஒருவிகாரம்

(2) நிலம்–பனை–நிலப்பனை இரண்டு விகாரம்

(3) பனை– காய் – பனங்காய் மூன்று விகாரம்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, புணர்ச்சி விகாரம் பற்றி வருவதோர் சந்தேகம் அகற்றுகின்றது.

**இ–ள்.:– ஒருபுணர்க்கு** – ஒரு புணர்ச்சிக்கு, **இரண்டும்** – ஒரு விகாரமே யன்றி யிரண்டு விகாரங்களும், **மூன்றும்** – மூன்று விகாரங்களும், **உறப் பெறும்** – வரப் பெறும், எ–று.

யானைக்கோடு – இதிலே தோன்றல் விகாரமொன்று வந்தது. நிலப்பனை – இதிலே கெடுதலுந் தோன்றலு மாகிய இரண்டுவிகாரங்கள் வந்தன; பனங்காய் – இதிலே முறையே கெடுதலுந் தோன்றலுந் திரிதலுமாகிய மூன்று விகாரங்களும் வந்தன; பிறவுமன்ன. இதிலே அதுவென்னுஞ் சுட்டுப்பெயர் குறைந்து நின்றது. பெறுமென்பதை அதன் பயனிலையாக்கி முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– ஒரு புணர்க்கு** – ஒரு புணர்ச்சிக்கே, **இரண்டும்** – (ஒரு விகாரமேயன்றி) இரண்டு விகாரங்களும், **மூன்றும்** – மூன்று விகாரங்களும், **உற பெறும்** – வரப்பெறும்.

**உ–ம் :–**

குதிரை + கால் = குதிரைக்கால் (தோன்றல்)
நிலம் + பனை = நிலப்பனை (கெடுதலும் தோன்றலும்)
பனை + காய் = பனங்காய் (கெடுதலுந் தோன்றலுந் திரிதலும்)

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:– ஒரு புணர்க்கு** – ஒரு புணர்ச்சிக்கு, **இரண்டு மூன்றும் உறப்பெறும்** – ஒன்றே யன்றி இரண்டு மூன்றும் வரப்பெறும், எ – று.

**உ–ம்.:–**

யானை + கோடு = யானைக்கோடு ஒரு விகாரம். நிலம்+பனை = நிலப்பனை இரண்டு விகாரம். பனை+காய்= பனங்காய் மூன்று விகாரம்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். ஒரு புணர்க்கு** – ஒரு புணர்ச்சிக்கு, – **இரண்டும் மூன்றும்** – ஒன்றேயன்றி இரண்டு விகாரமும் மூன்று விகாரமும், – **உறப் பெறும்** – வரப்பெறும். எ–று.

**உ—ம்.:—**

யானை + கோடு = யானைக்கோடு ஒரு விகாரம். (தோன்றல்) நிலம் + பனை = நிலப்பனை இரண்டு விகாரம். (கெடுதலுந் தோன்றலும்,) பனை + காய் = பனங்காய் மூன்று விகாரம். (கெடுதலுந் தோன்றலுந் திரிதலும்).

## வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

**இ—ள்.: ஒரு புணர்க்கு** — ஒரு புணர்ச்சிக்கே, **இரண்டும்** — (ஒரு விகாரமே யன்றி) இரண்டு விகாரங்களும், **மூன்றும்**—மூன்று விகாரங்களும், **உற பெறும்** — வரப்பெறும்; எ — று.

**உ—ம்.:**

1.யானை + கொம்பு = யானைக்கொம்பு — தோன்றல்.

2. நிலம் + பனை = நிலப்பனை — கெடுதலும் தோன்றலும்.

3.பனை + காய் = பனங்காய் — கெடுதலும் தோன்றலும் திரிதலும்.

பிறவும் இவ்வாறே காண்க.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள்.:— ஒருபுணர்க்கு** — ஒரு புணர்ச்சிக்கு, **இரண்டு மூன்றும் உறப் பெறும்** — ஒன்றேயன்றி இரண்டு மூன்றும் வரப்பெறும். **எ—று.**

**உ—ம்.:—**

யானை + கோடு = யானைக்கோடு (ஒரு விகாரம்)
நிலம் + பனை = நிலப்பனை (இரண்டு விகாரம்)
பனை + காய் = பனங்காய் (மூன்று விகாரம்)

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ—ள்.:— ஒரு புணர்க்கு** — ஒரு புணர்ச்சிக்கே, **இரண்டு மூன்றும்.** (ஒன்றே யல்லாமல்) இரண்டும் மூன்றும், **உறப்பெறும்** — வரப்பெறும். **எ—று.**

**பொ—ரை.:—** ஒரு புணர்ச்சியில், தோன்றல் திரில் கெடுதல் என்னும் மூன்று விகாரங்களுள் (ஒன்று மாத்திரமல்லாமல்) இரண்டும் மூன்றும் வரப்பெறும்.

உ–ம்.:–

யானை+கோடு=யானைக்கோடு– தோன்றலாகிய ஒரு விகாரம்.

நிலம்+பனை=நிலப்பனை–கெடுத்தலும் தோன்றலுமாகிய இரண்டு விகாரம்.

பனை+காய்=பனங்காய்–கெடுதலும் தோன்றலுந் திரிதலுமாகிய மூன்று விகாரம்.

(புணர்ச்சி விகாரத்துக்கும், செய்யுள் விகாரத்துக்கும் வேறுபாடு.)

**புணர்ச்சி விகாரம்:–**

நிலைமொழி வருமொழிப் புணர்ச்சியில் மாத்திரமே வரும்; தனிமொழியில் வாராது; இஃது உலகவழக்குச் செய்யுள் வழக்கு என்னும் இரண்டுக்கும் உரியதாய் விதிபற்றிவரும். செய்யுள் விகாரம்:– செய்யுளில் மாத்திரமே வரும்; உலக வழக்கில் வாராது; இது தனிமொழி தொடர்மொழி இரண்டுக்கும் பொதுவாய் விதியன்றி அடி தொடை முதலிய நோக்கி வரும்.

(தொகுத்தல் விகாரம் பகுபதத்திலும், முதல் இடை கடைக்குறை விகாரங்கள் பகாப்பதத்திலும் வருமென வேறுபாடு அறிக.

இம்முதல் இடை கடைக் குறைவிகாரங்கள் அடி தொடை முதலிய நோக்கித் தொகுக்கும்வழித் தொகுத்தலன்றி வழக்கின் கண் மரூஉப்போலச் செய்யுட்கண் மரூஉவாய் அடிப்பாடாக ஒரு மொழி மூவிடத்தும் குறைந்து வருதலாம்.)

## கா.நமச்சிவாய முதலியார்

**ஒரு புணர்க்கு** – ஒரு புணர்ச்சிக்கு, **இரண்டும் மூன்று** – (ஒன்றேயல்லாமல்) இரண்டு மூன்று விகாரங்களும், **உறப்பெறும்** – வரப்பெறும்.

**உதாரணம்:–**

யானை + கோடு = யானைக்கோடு – தோன்றல்.
நிலம் + பனை = நிலப்பனை – கெடுதலும் தோன்றலும்
பனை +காய் = பனங்காய் – கெடுதலும் தோன்றலும் திரிதலும்

## மோசசு பொன்னையா

ஒரு புணர்ச்சிக்கு ஒன்றேயன்றி, இரண்டு மூன்று விகாரங்களும் வரப்பெறும், எ—று.

எ—டு.:—

யானை + கோடு – யானைக்கோடு (தோன்றல்)
நிலம் + பனை – நிலப்பனை (கெடுதல், தோன்றல்)
பனை + காய் – பனங்காய் (கெடுதல், தோன்றல், திரிதல்)

(7)

157. எண்மூ வெழுத்திற் றெவ்வகை மொழிக்கும்
முன்வரு ஞநமய வக்க ளியல்பும்
குறில்வழி யத்தனி யைந்நொது முன்மெலி
மிகலுமாம் ணளனல வழிநத் திரியும்.

எண் மூ எழுத்து ஈற்று எவ் வகை மொழிக்கும்
முன் வரு ஞ ந ம ய வக்கள் இயல்பும்
குறில் வழி அத் தனி ஐ நொது முன் மெலி
மிகலும் ஆம் ண ள ன ல வழி நத் திரியும்.

eṇ mū eḷuṭṭu īṟṟu ev vakai moḷikkum
mun̲ varu ña na ma ya vakkaḻ iyalpum
kuṟil vaḷi aṭ ṭan̲i ai noṭu mun̲ meli
mikalum ām ṇa ḻa n̲a la vaḷi naṭ ṭiriyum.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### GENERAL COMBINATION

No change take place in the combination of the twenty-four finals with the initials, ñ, 'n', 'm', 'y', and 'v'; the nasalinitials, however, are doubled after 'y' preceded by a single Short Vowel, after 'ai' used by itself, and after the verbs no and tu' while 'n' is changed after the finals n, l and i.

## ஒப்புமைப் பகுதி

ஞநமய வவென்னும் முதலாகு மொழியும்
உயிர்முத லாகிய மொழியும் உளப்பட

அன்றி யனைத்து மெல்லா வழியும்
நின்ற சொன்முன் இயல்பா கும்மே

(தொல்.: 145)

அவற்றுள்
மெல்லெழுத் தியற்கை யுறழினும் வரையார்
சொல்லிய தொடர்மொழி யிறுதி யான

(தொல்.: 146)

என்மூ வெழுத்திற் றெவ்வகை மொழிக்கு
முன்வரு ஞநமய வக்க ளியல்புங்
குறில்வழி யத்தனி யைநொது முன்மெலி
மிகலுமாம் ணளலன வழிநத் திரியு
மெல்லெழுத் தியற்கை யுறழினும் வரையார்
நன்மதி நாட்டத் தென்மனார் புலவர்

(இ.வி.: 69)

தனிவழி ஐயும் தனிக்குறில் யவ்வும்
துவ்வும் நொவ்வும் தொடர்மெலி மிகுமே

(தொன்.:35)

ணனமுன் குறில்வழி நகரம் ணன ஆம்

(தொன்.:24:4)

லளமுன் மெலிவரின் இருவழி னண ஆம்
அவற்றுள் ணத்திரிந்து அழிவாம் தனிக்குறில்
நண்ணிய லளமுன் நவ்வும் னண ஆம்

(தொன்.:26:6–8)

இருவழி யினுமுயி ரிறுதி முன்னர்
ஞநமய வரினியல் பாமென மொழிப

(மு.வீ.: 185)

அவற்றுள்
மெல்லெழுத் தியற்கை யுறழினும் வரையார்

(மு.வீ.: 186)

ணள டணவாம் னல றனவாந்த நவரின்

(மு.வீ.: 191)

னண முன் தற்றவாய் நன்னணவாய்ப் பின் திரிவே

..........................................................................................

**திணிநகரம் லளமுன்னியைந் தேனணவாய் இருசொற்**
**றிரிதல்மப் பாலவமதா னிலையுவ்வை யுறலே**

(சுவாமி.: 30-2, 4)

## மயிலை நாதர்

**எ-ன்,** எல்லா ஈற்றின் முன்னும், மெல்லினமும் இடையினமும் வந்து புணருமாறு தொகுத் துணர்த்துதல் நுதலிற்று.

**இ-ள்.:-** இருபத்து நாலெழுத்தையும் ஈறாக வுடைய இயற்சொல் திரிசொலென்னும் இரு வகையவான பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச் சொல், உரிச்சொல், திசைச்சொல், வடசொல், உருபுகளாம் மொழிகளின் முன் வரும் ஞகர நகர மகர யகர வகரங்கள் அல்வழி வேற்றுமையாம் இருவழியும் இயல்பாம்; குற்றெழுத்தோடு கூடிய யகாரமே ஒரெழுத்தொரு மொழியான ஐகாரமே நொவ்வே துவ்வே என்னும் இவற்றின் முன்னர் ஞகர நகர மகரங்கள் மிகுவனவாம்; ணகர ளகர னகர லகரங்களின் பின்வரும் நகரம் திரியப் பெறும், எ - று.

**வ-று.:-**

(விள, பலா, புளி, தீ, கடு, தூ, ஏஎ, சே, பனை, ஒஒ, [1]கோ, [2]வௌ, உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், யாழ், தாள், எஃகு) + (ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது) எனவும்; (ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை) எனவும் இருவழியும் ஞ ந ம ய வக்கள் இயல்பாயின. (வேதா, விதி) + (ஞான்றான், நீண்டான், மாண்டான், யாவன், வலியன்) எனவும்; (ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை) எனவும் வடமொழிப் பெயர்கள் முன் இருவழியும் அவை இயல்பாயின. சாத்தற்கு நல்கினான், சாத்தனது மாட்சி என உருபுகளின் முன் அவை இயல்பாயின. (மெய், பொய், கை) + (ஞான்றது, நீண்டது, மாண்டது) எனவும், (ஞாற்சி, நீட்சி, மாட்சி) எனவும் இருவழியும் மெலி மிக்கன. ஒழிந்த சொற்களின் முன்னும் இவ்வாறே ஒட்டுக. (ஞெ, து) + (ஞெள்ளா, நாகா, மாடா) என இவை ஏவல் வினையாகலின், [3]அல்வழியாய் மிக்கன;

பாட வேறுபாடு.:-

1. (1) ஓ (2) சோ
2. ஔ
3. அல்வழியான்

[4](மண், முள், பொன், கல்) + (நன்று, நன்மை) என நகாரம், நிலைமொழி யீற்றில் நின்ற ணளனலக்களின் முன் இருவழியும் ணகாரமும் னகாரமுமாகத் திரிந்தவாறு காண்க.புணரியலிடத்து எங்கும் இன்னதென்று விதந்துரையா விடத்து அல்வழி வேற்றுமையாம் ஈரிடமும் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின்**, பொதுப்புணர்ச்சி **உணர் – ற்று.**

**இ–ள்:–** இயல்பாகவும் விதியாகவும் இருபத்துநான்கு எழுத்தையும் ஈறாகவுடைய பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல் திசைச்சொல் வடசொல் என்பன நிலைமொழியாக நிற்க, இவற்றிற்கு முன்னர் வரும் ஞகார நகார மகார யகார வகாரங்கள், அல்வழி வேற்றுமையாய இருவழியும் இயல்பாதலும், குற்றெழுத்தின் பின் வரும் யகர வொற்றே ஓரெழுத் தொருமொழியான உயிர் உயிர்மெய் என்னும் ஐகாரமே நொவ்வே துவ்வே என்பனவற்றிற்கு முன்னர் வரும் ஞகார நகார மகாரங்கள் பிற சொற்கள் முன் இயல்பாதலன்றி மிக்கு முடதலுமாம்; ணகார ளகார னகார லகாரங்கட்கு முன் வரும் நகாரம், பிற ஈற்றின்முன் இயல்பாதலன்றித் திரியும், எ– று.

எவ்வகை மொழிக்கும் என்றமையான், விதியீறும் பெற்றாம். நகரம் இவ்வாறு திரியும் என ஈண்டுக் கூறிக் குறைவறா மையின், மேலவற்றோடு ஒருங்கு எண்ணாது விதந்தார். புணரியலிடத்து யாண்டும் அல்வழி வேற்றுமை எனக் குறிப்பாயேனும் வெளிப்படையாயேனும் விதவாராயின் இருவழியும் கொள்க.

**உ–ம்.:–**

விள, பலா, புளி, தீ, கடு, பூ, சே, பனை, கோ, கௌ, உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், யாழ், வாள், எஃகு என நிறுத்தி, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது எனவும்; ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை எனவும்; விளவை நாட்டினான், மண்ணை வைத்தான் எனவும் வருவித்து, இருவழியும் வருமொழிக்கு முதலாய மென்கணமும் இடைக்கணமும் 'இயல்பாயவாறு காண்க. ஒழிந்த உயர்திணைப்பெயர் முதலிய அறுவகைச் சொற்களினும் இவ்வாறே ஒட்டுக. மெய், கை: ஞான்றது, நீண்டது, மாண்டது எனவும்; ஞாற்சி, நீட்சி, மாட்சி எனவும் இருவழியும் மிக்கன. நொ, து: ஞெள்ளா, நாகா, மாடா என

இவை வினையாகலின் அல்வழியில் மிக்கன. தொழிற்பெயர் இறுதிமெய் உகரம்பெறுதலும் நகரத்திரிபும் மேல்வரும் சிறப்புச் சூத்திரத்துள் காண்க.

மெலி மிகலுமாம் என எண்ணின்கண் நிற்கும் எச்சவும்மையானே, நொ து என்னும் இரண்டு சொல் முன்னும் இடையினம் மிகலுமாம் எனக் கூறினாராயிற்று.

அவை வருமாறு:– நொய்யவனா, நொவ்வளவா, துய்யவனா, துவ்வளவா என வரும். இடையின மிகுதல், குறில்வழி யவ்விற்கும் தனி ஐக்கும் பொருந்தாமையின் உம்மையால் தழீஇயினார். இவ்வாறு இடையினம் மிகுதலை ஆசிரியர் தொல்காப்பியரும்,

**"அவற்றுள்,**
**மெல்லெழுத் தியற்கை உறழினும் வரையார்"**

என உம்மையால் தழீஇயினார். அச் சூத்திரத்திற்கு அவ்வாசிரியர் கருத்தன்றி வேறு உரை செய்வாரும் உளர். நொ, து என்னும் இவ்விரண்டு சொல்முன்னும் மெல்லினமும் இடையினமும் மிகாவேல் புணர்ச்சி யின்றி விட்டிசை போலும்; அற்றேல் வாழைபழம், கீரைகறி என்றாற் போலும்.

எகர ஈற்றிற்கு உதாரணம் காட்டிற்றிலம். அது வினா இடைச்சொற்கண் அன்றி ஈறாகாமையானும் அவ் வினாவிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி மேல் கூறுதலானும் என்க.

இச் சூத்திரம் முதலியன **தொடர்ச்சொற் புணர்த்தல்** என்னும் உத்தி.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** எல்லா ஈற்றொடும் மெல்லினமும் இடையினமும் வந்து புணருமாறு தொகுத்துரைத்தது.

**இ–ள்.:– என் மூவெழுத்தீற்று** – இருபத்துநாலு எழுத்தையும் ஈறாகவுடைய, **எவ்வகை மொழிக்குமுன்**–இயற்சொல் திரிசொல் என்னும் இருவகையிற் பெயர் வினை இடை உரி திசைச் சொல் என்னும் இம்மொழிகளின் முன், **வரு ஞந மய வக்கள் இயல்பும்** – வருமொழி முதலாக வரும் ஞகார நகார மகார யகார வகாரங்கள் இயல்பாவனவாம், **குறில்வழி ய** – ஒரு குற்றெழுத்தை அடுத்து வந்த யகார ஒற்றே, **தனி ஐ நொது முன் –**

தனியே வந்த ஐகாரமே நொவ்வே துவ்வே என்றிவற்றின் முன், **மெலி மிகலுமாம்** – வருமொழி முதலாக வரும் மெல்லெழுத்தாகிய ஞகார நகார மகாரங்கள் மிகுவனவாம், **ண ள ன ல வழி** – நிலைமொழி யீற்று ணகார ளகார னகார லகாரங்கள் முன், **நத் திரியும்** – வருமொழி முதலாக வரும் நகாரம் திரியப்பெறும், **எ–று.**

**உ–ம்.:–**

விள, பலா, புளி, தீ, கடு, தூ, ஏஎ, சே, பனை, ஓஒ, சோ, ஔ, உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், யாழ், தாள், எஃகு ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது எனவும், ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை எனவும் இருவழியும் இயல்பாயின. மெய், பொய், கை, என நிறுத்தி ஞான்றது, நீண்டது, மாண்டது, ஞாற்சி, நீட்சி, மாட்சி என வருவித்து மெல்லினம் இருவழியும் மிக்கு முடித்துக் காண்க. நொ, து நிறுத்தி ஞெள்ளா, நாகா, மாடா என வருவித்து மிக்கு வந்தது காண்க. இவை ஏவல் வினையாகலின் அல்வழிப் புணர்ச்சி என்க. கண், முள், பொன், கல் என நிறுத்தி நன்று என வருவித்து கண்ணன்று, முண்ணன்று, பொன்னன்று, கன்னன்று என நகரத்திரிபு வந்தவாறு காண்க. வேதா, விதி என நிறுத்தி ஞான்றான், நீண்டான், மாண்டான், யாவன், வலியான் எனவும் ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை எனவும் வருவித்து வடசொல் இருவழியும் மெல்லினம் வர இயல்பாயினவாறு காண்க. சாத்தற்கு நல்கினான், சாத்தனது மாட்சியென உருபின்கண்ணும் இயல்பாயினவாறு காண்க. இன்னதென்று விதந்து உரையாவிடத்துப் புணரியலிடத்து எஞ்ஞான்றும் அல்வழி வேற்றுமையாம் ஈரிடத்தும் கொள்க.

## விசாகப் பெருமாளையர்

**இது,** பொதுப் புணர்ச்சி யுணர்த்துகின்றது,

**இ–ள்.: எண்மூவெழுத்து** – இருபத்து நான்கெழுத்துகளையும், **ஈற்று–** இயல்பினா லாயினும் விதியினா லாயினும் ஈறாகவுடைய, **எவ்வகை மொழிக்கும்** – பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல் திசைச்சொல் வடசொல் என்கின்ற பலவகைப்பட்ட சொற்களுக்கும், **முன்–** முன்னே, **வரும்–**வருகிற, **ஞ ந ம ய வக்கள்–**ஞகர நகர மகர யகர வகரங்கள், **இயல்பும்** – அல்வழி வேற்றுமை யிரண்டிலு மியல்பாதலும், **குறில் வழிய** – குற்றெழுத்தின் பின்னின்ற யகர மெய்யே, **தனியை** – உயிர் உயிர்மெய் என்கிற

ஐகாரமே, **நொ**–நொவ்வே, **து**–துவ்வே, **முன்** – என்பவைகளுக்கு முன் வருகிற, **மெலி**–ஞகார நகார மகாரங்கள், **மிகலும்** – பிற சொற்களுக்கு முன் இயல்பாத லன்றி மிக்கு முடிதலும், **ஆம்**–ஆகும், **ணளனல வழி**–ண ள ன லக்களின் முன் வருகிற, **ந**–நகரமானது, **திரியும்** – மற்றை யீறுகளுக்கு முன் னியல்பாத லன்றித் திரியும், **எ – று.**

புணரியலி லெங்கும் அல்வழி வேற்றுமைகளி லொன்றைக் குறிப்பாக வானாலும் வெளிப்படையா வானாலுங் காட்டாமற் போனால் அவ் விரண்டையுங் கொள்க.

**உ–ம்.:–**

விள, பலா, கிளி, தீ, கடு, பூ, சே, பனை, கோ, கௌ, உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர்,வேல், தெவ், யாழ், வரள், எஃகு – இவற்றின் முன் ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது, ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை இவற்றை வருவித்து,

| **(அல்வழி)** | **(வேற்றுமை)** |
|---|---|
| விள+ஞான்றது–விளஞான்றது, | விள+ஞாற்சி–விளஞாற்சி, |
| நீண்டது–விளநீண்டது, | நீட்சி–விளநீட்சி, |
| மாண்டது–விளமாண்டது, | மாட்சி–விளமாட்சி, |
| யாது–விளயாது, | யாப்பு–விளயாப்பு |
| வலிது–விளவலிது, | வலிமை–விளவலிமை, |

என முறையே கூட்டி எல்லா வீற்றின் முன்னும் ஞ ந ம ய வக்க ளியல்பாதல் காண்க.

| | |
|---|---|
| உரிஞ்+ஞான்றது – | உரிஞுஞான்றது, |
| பொருந்+ஞான்றது– | பொருநுஞான்றது |
| வேல்+ஞான்றது – | வேஞ்ஞான்றது, |
| வாள்+ஞான்றது – | வாண்ஞான்றது, |
| மரம்+ஞான்றது – | மரஞான்றது, |

என நிலைமொழி யீறுகள் விகாரப்படுதல் அவ்வவ் வீற்றுச் சிறப்பு விதிகளிற் காண்க.

| **(அல்வழி)** | **(வேற்றுமை)** |
|---|---|
| மெய்+ஞான்றது–மெய்ஞ்ஞான்றது | மெய்+ஞாற்சி–மெய்ஞ்ஞாற்சி, |

மெய் + நீண்டது–மெய்ந்நீண்டது, நீட்சி–மெய்ந்நீட்சி

மெய் – மாண்டது–மெய்ம்மாண்டது மாட்சி –மெய்ம்மாட்சி

கை+ஞான்றது–கைஞ்ஞான்றது, கை+ஞாட்சி–கைஞ்ஞாட்சி,

கை+நீண்டது–கைந்நீண்டது, நீட்சி–கைந்நீட்சி

கை+மாண்டது–கைம்மாண்டது, மாட்சி–கைம்மாட்சி,

எனக் குறின் முன்னின்ற யகரத்தின் முன்னுந் தனி ஐம் முன்னு மெலி மிகுதல் காண்க. "நொதுமுன்மெலிமிகலுமாம்" என்ற வெச்சவும்மையால் அவ் விரண்டன் முன்னும் இடையெழுத்து மிகலுமா மென்றதாயிற்று.

நொ+ ஞெள்ளா–நொஞ்ஞெள்ளா, து+ஞெள்ளா–துஞ்ஞெள்ளா,

நொ+ நாகா–நொந்நாகா, து+நாகா–துந்நாகா,

நொ+ மாடா – நொம்மாடா து+மாடா –தும்மாடா

நொ+ யவனா–நொய்யவனா, து+யவனா–துய்யவனா,

நொ+ வளவா–நொவ்வளவா, து+வளவா–துவ்வளவா,

இவை வினைச் சொற்க ளாதலால் அல்வழியிலே மிகுந்தன. "ணளனலவழிநத்திரியும்" என்றது பின்வரும் "னலமுன் றனவும்" என்னுஞ் சூத்திரத்திலே காண்க, இச்சூத்திர முதலாக வொன்றற் கொன்று தொடர்ச்சியாகப் புணர்த்தலால் தொடர்சொற் புணர்த்தல், என்னு முத்தி.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

பொதுப்புணர்ச்சி கூறுஞ் சூத்திரம் யாது?

எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும்
முன்வரு ஞ ந ம ய வக்க ளியல்புங்
குறில்வழி யத்தனி யைந்நொது முன்மெலி
மிகலுமாம் ண ள ன ல வழிநத்திரியும்

(எண்மூவெழுத்து ஈற்று எவ்வகை மொழிக்கும்
முன்வரு ஞ ந ம ய வக்கள் இயல்பும்
குறில்வழியத் தனிஐ நொ து முன் மெலி
மிகலும் ஆம் ண ள ன ல வழிநத் திரியும்)

**இ—ள்.:– எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும் முன்வரும் ஞந ம ய வக்கள் இயல்பும்** – இயல்பினாலாயினும் விதியினாயினும் இருபத்துநான் கெழுத்தையும் ஈறாகவுடைய பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல் என்னும் நாக்கு சொற்களுக்கும் முன்னே வரும் ஞகர நகர மகர யகர வகரங்கள் அல்வழி வேற்றுமை இரண்டிலும்இயல்பாதலும், **குறில்வழி ய** – குற்றெழுத்தின் பின்னின்ற யகர மெய்யே, **தனி ஐ** –ஒரெழுத்தொரு மொழியாகிய உயிர் உயிர்மெய் என்னும் ஐகாரமே, **நொ து முன் மெலி மிகலும் ஆம்** – நொவ்வே துவ்வே யென்பவைகளுக்கு முன் வரும் ஞகார நகார மகாரங்கள் பிற சொற்களின் முன் இயல்பாதலன்றி மிக்கு முடிதலும் ஆகும், **ணளனல வழி நத்திரியும்** – ணள ன லக்களின் முன் வரும் நகரம் பிறவீற்றின்முன் இயல் பாதலன்றித் திரியும், **எ—று.**

விதியீறாவது இயல்பாக நின்ற உயிரேனும் ஒற்றேனும் போய் மற்றோருயிரீறாகவேனும் ஒற்றீறாகவேனும் நிற்பது.

புணரியலில் அல்வழி வேற்றுமைகளுள் ஒன்றைக் குறிப்பாக வேனும் வெளிப்படையாகவேனும் விதவாத இடமெல்லாம் அவ்விரண்டையும் கொள்க.

இச்சூத்திரத்திலே சொல்லப்பட்ட இரு கணமும் யாவை?

மென்கணம் இடைக்கணம்.

ஞ ந ம ய வ என்னுமெழுத்துக்கள் எங்கே இயல்பாம்?

"எண்மூ வெழுத்தீ றெவ்வகை மொழிக்கும்

முன்வரு ஞநமய வக்க ளியல்பும்"

ஞநம என்னும் மூன்றும் இயல்பாதலேயன்றி வேறுசெய்கையும் பெறுமோ?

" குறில்வழி யத்தனி யைந் நொ து முன்மெலி மிகலுமாம்"

அம்மூன்றனுள் நகரம் இயல்பும் மிகலுமேயன்றி வேறுசெய்கையும் பெறுமோ?

" ண ள ன ல வழிநத் திரியும்"

இச்சூத்திரத்திலே நிலைமொழிச் செய்கையா, வருமொழிச் செய்கையா, எது கூறப்பட்டது?

வாள்—ஞான்றது வாண் ஞான்றது எனவும், வேல் ஞான்றது வேன்ஞான்றது எனவும் சில நிலைமொழியீறுகள் இங்கே கூறப்பட்ட எழுத்துக்களோடு புணரும்போது விகாரப்படுதலின் வருமொழிச் செய்கையே கூறப்பட்டது. நிலைமொழிச்செய்தி மேல்வரும் சிறப்பு விதிகளிற் கூறப்படும்.

உ–ம்.:–

(1) விள, பலா, புளி, தீ, கடு, பூ, சே, பனை, கோ, கௌ, உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், யாழ், ஊழ், வாள், எஃகு என்னும் நிலைமொழி களோடு, அல்வழிப்புணர்ச்சிக்கு உதாரண மாக, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது என்னும் வருமொழி களையும், வேற்றுமைப் புணர்ச்சிக்கு உதாரணமாக ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வன்மை என்னும் வருமொழிகளையுங் கூட்டி,

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| விளஞான்றது | விளஞாற்சி |
| விளநீண்டது | விளநீட்சி |
| விளமாண்டது | விளமாட்சி |
| விளயாது | விளயாப்பு |
| விள்வலிது | விளவன்மை |

என எல்லாவீற்றின் முன்னும் ஞ ந ம ய வக்கள் இயல்பாதல் காண்க.

(2)

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| மெய்ஞ்ஞான்றது | மெய்ஞ்ஞாற்சி |
| மெய்ந்நீண்டது | மெய்ந்நீட்சி |
| மெய்ம்மாண்டது | மெய்ம்மாட்சி |
| கைஞ்ஞான்றது | கைஞ்ஞாற்சி |
| கைக்நீண்டது | கைந்நீட்சி |
| கைம்மாண்டது | கைம்மாட்சி |

எனக் குறின் முன்னின்ற யகரத்தின் முன்னுந் தனி ஐமுன்னும் மெலிமிகுதல் காண்க.

(3) நொ து முன் மெலி மிகலுமாம் என்ற எச்சவும்மையால், அவ்விரண்டன் முன்னும் இடை யெழுத்து மிகலுமாம் என்றாராயிற்று.

நொ ஞெள்ளா–நொஞ்ஞெள்ளா து ஞெள்ளா–துஞ்ஞெள்ளா

நொ நாகா–நொந்நாகா து நாகா–துந்நாகா

நொ யவனா–நொய்யவனா து யவனா–துய்யவனா

நொ வளவா–நொவ்வளவா து வளாவா –துவ்வளவா

இவை வினைச்சொற்களாதலால், அல்வழியிலே மிகுந்தன.

ண ள ன ல வழி நத்திரியுமென்றது பின் வரும்.

“ன ல முன்றனவும்” என்னுஞ் சூத்திரத்திலே காண்க.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** பொதுப்புணர்ச்சி யுணர்த்துகின்றது.

**இ–ள்.:– எண்மூ வெழுத்தீற்று** – இயற்கையாக வாயினும் செயற்கையாக வாயினும் இருபத்துநான் கெழுத்தையும் ஈறாகவுடைய, **எவ்வகை மொழிக்கும்** – (பெயர் வினை இடை உரி திசை வடசொல் எனப்பட்ட) எல்லா மொழிகளுக்கும், **முன் வரு** – முன்னே வருகின்ற, **ஞநமயவக்க ளியல்பும்** – இவ் வைந்தெழுத்தும் (அல்வழி வேற்றுமை யிரண்டிடத்தும்) இயல்பாதலும், **குறில்வழி ய** – குற்றெழுத்தின் பின்னின்ற யகர ஒற்றும், **தனி ஐ** – தனித்த ஐகாரமும், **நொது முன்**– நொவ்வுந் துவ்வுமாகிய இவற்றின் முன், **மெலி** – ஞநமக்கள், **மிகலுமாம்** – (பிற சொற்களின் முன் இயல்பாத லன்றி) மிக்கு முடியவும் பெறும், **ணள னல வழி** – இந்த நான்கு மெய் யீற்றின் பின், **நத் திரியும்** – வருகின்ற நகரம் (பிற ஈற்றின் முன் னியல்பாத லன்றி) வடிவு வேறுபடும், **எ – று.**

செயற்கை, விதி என்பன ஒருபொருள். விதி யீறாவது, இயல்பாக நின்ற உயிராவது ஒற்றாவது போய் மற்றொரு உயிரீறாகவாவது ஒற்றீறாகவாவது நிற்பது. நகரத் திரிபு மேல் வகுத்துக் கூறுவாராதலால் இங்கே இவ்வாறு திரியு மென்னாது தொகுத்துக் கூறினார். புணரியலிலே எந்த இடத்தினலாயினும் அல்வழி வேற்றுமை யெனக் குறிப்பாக ஆயினும் வெளிப்படையாக ஆயினுங் கூறாராயின் இரு வழிக்குங் கூறினா ரெனக் கொள்க.

**உ–ம்.:–**

விள, பலா, புளி, தீ, கடு, பூ, சே, பனை, கோ, கௌ, உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், யாழ், வாள், எஃகு, என நிறுத்தி, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது, எனவும்; ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வன்மை எனவும் வருவித்து, விளஞான்றது, விளநீண்டது, விளமாண்டது, விளயாது, விளவலிது எனவும்; விளஞாற்சி விளநீட்சி, விளமாட்சி, விளயாப்பு, விளவன்மை எனவும் ஒட்டி, அல்வழி வேற்றுமை

யிரண்டிடத்தும் முறையே இயல்பாதல் காண்க. பிறவற்றொடு மிவ்வாறே யொட்டுக. ஒழிந்த உயர்திணைப்பெயர் முதலிய அறுவகைச் சொற்களிலும் இவ்வாறே யொட்டி இயல்பாதல் காண்க. மெய், கை என நிறுத்தி, ஞான்றது, நீண்டது, மாண்டது எனவும்; ஞாற்சி, நீட்சி, மாட்சி எனவும் வருவித்து, மெய்ஞ் ஞான்றது, கைஞ்ஞான்றது,மெய்ஞ்ஞாற்சி, கைஞ்ஞாற்சி என ஒட்டி, குறில் வழி யகரத்தின் முன்னுந் தனி ஐம்முன்னும் இருவழியும் மெலி மிகுதல் காண்க. பிறவற்றையு மொட்டுக. நொ,து என நிறுத்தி, ஞெள்ளா, நாகா, மாடா என வருவித்து, நொஞ்ஞெள்ளா, துஞ்ஞெள்ளா என ஒட்டி, நொ து முன் மெலி மிகுதல் காண்க. பிறவற்றையு மொட்டுக. இந்த இரண்டும் வினைச் சொல்லாதலால் அல்வழியில் மிக்கன. உரிஞு ஞான்றது, பொருநுஞான்றது என உரிஞ், பொருந் என்னுந் தொழிற் பெயர் உகரம் பெறுதலும், நகரத் திரிபும் பின்வருஞ் சிறப்புச் சூத்திரங்களாற் காண்க. மெலிமிகலுமாமென்ற உம்மையால், நொ, து முன் இடையின மிகலுமா மெனக் கூறினாராயிற்று. அவை வருமாறு: நொய் யவனா, துய்யவனா நொவ்வளவா துவ்வளவா என வரும்.

இடையின மிகல் குறில்வழி யவ்விற்குந் தனி யைக்கும் பொருந்தாமையால் உம்மையால் தழுவினார். நொ–து என்னுமிவ் விரண்டின் முன் மெல்லினமும் இடையினமு மிகாதாயின், புணர்ச்சி யின்றி விட்டிசைந்து நிற்கு மெனக் காண்க. இவற்றின் முன் வல்லின மிகுதல் கூறாதே யமைதலால் உயிர் வரின் உடன்படுமெய் யிரட்டு மென்பது பெற்றாம்.

**உ–ம்.:–**

நொஅரசா–நொவ்வரசா, துஅரசா–துவ்வரசா எனவரும்.

இனி **ஒப்பின்முடித்தலால்** ஒழிந்த தனிக்குறில் முன்னும் இவ்விதி பெறுதல் கொள்க.

**உ–ம்.:–**

'நம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே', 'குவ்வரும்' 'உவ்வருமே', 'உக்குறுகும்' 'பவ்வி', 'எய்யாமுதலும்' என வரும், பிறவுமன்ன.

இனி **உரையிற்கோடலால்** பிறவற்றின் முன்னும் மெலி **மிகலுமா மெனக் கொள்க.**

**உ-ம்.:-**

கதிர் ஞெரி – கதிர்ஞ்ஞெரி, கதிர் நுனை – கதிர்ந்நுனை, கதிர் முனை – கதிர்ம்முனை எனவும்; இதழ் ஞெரி – இதழ்ஞ்ஞெரி, நுனை–முனை எனவும்; பூ ஞெரி–பூஞ்ஞெரி, நுனை–முனை எனவும்; காய் ஞெரி–காய்ஞ்ஞெரி, நுனை–முனை எனவுங் காண்க. எகரம் வினாவிடைச் சொற்கண் ணன்றிப் பிறவழி யீறாகாமையா லிங்கே விலக்கப்பட்டது. இச் சூத்திர முதலியன **தொடர்ச்சொற் புணர்த்தலென்னும்** உத்தி. இவையிவை இயல்பாதலும் மிகலும் ஆம் எனவும், நந்திரியும் எனவும் இரண்டு முடிபாக முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– எண் மூ எழுத்து** – இருபத்துநான் கெழுத்துக்களையும், **ஈறு** – இறுதியாக உடைய, **எ வகைமொழிக்கும்** – (பெயர் வினை இடை உரி திசை வடசொல் எனப்படும்) எல்லாச் சொற்களுக்கும், **முன்** – முன்னே, **வரும்** – ஞ ந ம ய வக்கள் – ஞ முதலான இவ்வைந்தெழுத்துக்களும், **இயல்பும்** – இயல்பாதலும், **குறில் வழி ய** – தனிக்குற்றெழுத்தின்பின் நின்ற யகர மெய்யும், **தனி ஐ** – ஓரெழுத்தொருமொழியாகிய (உயிர் உயிர்மெய் என்னும்) ஐகாரமும், **நொ து** – (ஓரெழுத்தொருமொழியாகிய) நொ என்பதும் து என்பதும் (ஆகிய இவற்றுக்கு), **முன்** – முன்வருகிற, **மெலி** – ஞகர நகர மகரங்கள், **மிகலும்** – மிகுதலும், **ஆம்** – ஆகும்; **ணள னலவழி** – ணகர ளகர னகர லகர மெய்களின் பின் வருகிற, **ந** – நகரமானது, திரியும்.

**குறிப்பு :–**

இச்சூத்திரம் அல்வழி வேற்றுமை யிரண்டிற்குமென்க. புணரியலில் அல்வழி வேற்றுமைகளில் ஒன்றை வெளிப்படையாகவேனும் குறிப்பாகவேனும் கூறாத விடங்களி லெல்லாம் அவ்விரண்டையுங் கொள்க.

மெல்லின இடையினங்களில் மற்றைய எழுத்துக்கள் மொழி முதலாகாமையால் 'ஞநமயவக்கள்' என்றார். இனி வரும் சூத்திரங்களில் வலி, மெலி, இடை என்பனவும் அவ்வவ்வினங்களில் மொழிக்கு முதலில் வருமெழுத்துக் களையே குறிக்குமென உணர்க.

**உதாரணம் :–**

விள, பலா, புளி, தீ, கடு, பூ, சே, பனை, கோ, கௌ, உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், யாழ், வாள், எஃகு என்பவற்றின் முன் அல்வழிக்கு ஞான்றது,

நீண்டது, மாண்டது, யாது, வலிது என்பவற்றையும்; வேற்றுமைக்கு ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை என்பவற்றையும் கூட்டுக.

| | | அல்வழி | வேற்றுமைவழி |
|---|---|---|---|
| 1. | விள + ஞான்றது | = விளஞான்றது | விளஞாற்சி |
| | விள + நீண்டது | = விளநீண்டது | விளநீட்சி |
| | விள + மாண்டது | = விளமாண்டது | விளமாட்சி |
| | விள + யாது | = விளயாது | விளயாப்பு |
| | விள + வலிது | = விளவலிது | விளவலிமை |

(மற்றைய ஈற்றுமொழிகளோடும் இவ்வாறே புணர்க்க எல்லா வீற்றின் முன்னும் **ஞநமயவக்கள்** இயல்பாதல் காண்க.)

| | | அல்வழி | வேற்றுமைவழி |
|---|---|---|---|
| 2. | மெய் + ஞான்றது | = மெய்ஞ்ஞான்றது | மெய்ஞ்ஞாற்சி |
| | மெய் + நீண்டது | = மெய்ந்நீண்டது | மெந்நீட்சி |
| | மெய் + மாண்டது | = மெய்ம்மாண்டது | மெய்ம்மாட்சி |

(குறில்வழி யம்முன் மெலிமிக்கன).

| | | அல்வழி | வேற்றுமைவழி |
|---|---|---|---|
| 3. | கை + ஞான்றது | = கைஞ்ஞான்றது | கைஞ்ஞாற்சி |
| | கை + நீண்டது | = கைந்நீண்டது | கைந்நீட்சி |
| | கை + மாண்டது | = கைம்மாண்டது | கைம்மாட்சி |

(தனி ஐமுன் மெலிமிக்கன).

| | | அல்வழி | வேற்றுமைவழி |
|---|---|---|---|
| 4. | நொ + ஞொள்ளா | = நொஞ்ஞொள்ளா | து+ஞொள்ளா = துஞ்ஞொள்ளா |
| | நொ + நாகா | = நொந்நாகா | து+நாகா = துந்நாகா |
| | நொ + மாடா | = நொம்மாடா. | து + மாடா = தும்மாடா |

(நொது முன்மெலி மிக்கன).

'நொது முன்மெலி மிகலுமாம்' என்ற எச்ச உம்மையால் அவ்விரண்டின் முன் இடையெழுத்தும் மிகும் என்றதாயிற்று.

உ–ம் :–

நொ + யவனா = நொய்யவனா. துய்யவனா

நொ + வளவா = நொவ்வளவா. துவ்வளவா

நொ து என்பன வினையாதலால் அல்வழியாம். 'ணளனலவழிநத் திரியும்' என்றதை மெய்யீற்றுப் புணரியலில் 'னலமுன்றனவும்'' என்னும் சூத்திரத்திற் காண்க. .

இச்சூத்திரம் முதலியவற்றை ஒன்றற்கொன்று தொடர்ச்சியாகப் புணர்த்தலால் **தொடர்சொற் புணர்த்தல்** என்னும் உத்தி.

## ஆறுமுக நாவலர்

**இ—ள்.:— எண்மூவெழுத்து ஈற்று எவ்வகை மொழிக்கும் முன் வரும் ஞ ந ம ய வக்கள் இயல்பும்** – இயல்பினா லாயினும் விதியினா லாயினும் இருபத்துநான் கெழுத்தையும் ஈறாகவுடைய பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல் திசைச்சொல் வடசொல் என்னும் பலவகைப்பட்ட சொற்களுக்கும் முன்னே வரும் ஞகர நகர மகர யகர வகரங்கள் அல்வழி வேற்றுமை இரண்டிலும் இயல்பாதலும், **குறில் வழி ய தனி ஐ நொ து முன் மெலி மிகலும் ஆம்** – குற்றெழுத்தின் பின்னின்ற யகர மெய்யே, ஒரெழுத்தொரு மொழியாகிய உயிர் உயிர்மெய் யென்னும் ஐகாரமே நொவ்வே துவ்வே யென்பவைகளுக்கு முன் வரும் ஞகார நகார மகாரங்கள் பிற சொற்களின் முன் இயல்பாதலன்றி மிக்கு முடிதலும் ஆகும், **ண ள ன ல வழி ந திரியும்** – ண ள ன லக்களின் முன் வரும் நகரம் பிற வீற்றின் முன் இயல்பாத லன்றித் திரியும், **எ—று.**

விதி யீறாவது இயல்பாக நின்ற உயிரேனும் ஒற்றேனும் போய் மற்றோருயிரீறாகவேனும் ஒற்றீறாகவேனும் நிற்பது.

புணரியலில் அல்வழி வேற்றுமைகளுள் ஒன்றைக் குறிப்பாகவேனும் வெளிப்படையாகவேனும் விதவாத இடமெல்லாம் அவ் விரண்டையுங் கொள்க.

**உ—ம்.:—**

(1) விள, பலா, புளி, தீ, கடு, பூ, சே, பனை, கோ, கௌ, உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், யாழ், வாள், எஃகு என்னும் நிலைமொழிகளோடு, அல்வழிப் புணர்ச்சிக்கு உதாரணமாக, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது என்னும் வருமொழிகளையும், வேற்றுமைப் புணர்ச்சிக்கு உதாரணமாக ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வன்மை என்னும் வருமொழிகளையுங் கூட்டி,

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| விளஞான்றது | விளஞாற்சி |
| விளநீண்டது | விளநீட்சி |
| விளமாண்டது | விளமாட்சி |
| விளயாது | விளயாப்பு |
| விளவலிது | விளவன்மை |

என எல்லா வீற்றின் முன்னும் ஞ ந ம ய வக்கள் இயல்பாதல் காண்க.

உரிஞ் + ஞான்றது = உரிஞுஞான்றது; பொருந் + ஞான்றது = பொருநுஞான்றது; வேல் + ஞான்றது = வேன்ஞான்றது; வாள் + ஞான்றது = வாண்ஞான்றது; மரம் + ஞான்றது = மரஞான்றது என நிலைமொழி யீறுகள் விகாரப்படுதல் அவ்வவ் வீற்றுச் சிறப்புவிதிகளிற் காண்க.

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| (2) மெய்ஞ்ஞான்றது | மெய்ஞ்ஞாற்சி |
| மெய்ந்நீண்டது | மெய்ந்நீட்சி |
| மெய்ம்மாண்டது | மெய்ம்மாட்சி |
| கைஞ்ஞான்றது | கைஞ்ஞாற்சி |
| கைந்நீண்டது | கைந்நீட்சி |
| கைம்மாண்டது | கைம்மாட்சி |

எனக் குறின் முன்னின்ற யகரத்தின் முன்னுந் தனி ஐம் முன்னும் மெலி மிகுதல் காண்க.

(3) நொ து முன் மெலி மிகலுமாம் என்ற எச்ச வும்மையால், அவ் விரண்டன் முன்னும் இடை யெழுத்து மிகலுமாம் என்றாராயிற்று.

| | |
|---|---|
| நொ + ஞெள்ளா– நொஞ்ஞெள்ளா | து + ஞெள்ளா –துஞ்ஞெள்ளா |
| நொ + நாகா–நொந்நாகா | து + நாகா –துந்நாகா |
| நொ + மாடா –நொம்மாடா | து + மாடா –தும்மாடா |
| நொ + யவனா– நொய்யவனா | து + யவனா– துய்யவனா |
| நொ + வளவா– நொவ்வளவா | து + வளவா– துவ்வளவா |

இவை வினைச் சொற்களாதலால், அல்வழியிலே மிகுந்தன.

(4) ண ள ன ல வழி நத்திரியு மென்றது பின்வரும் **"னல முன் ற னவும்"** என்னுஞ் சூத்திரத்திலே காண்க.

இச் சூத்திர முதலியன, ஒன்றற் கொன்று தொடர்ச்சி யாகப் புணர்த்தலால், **தொடர்ச் சொற் புணர்த்த** லென்னு முத்தி.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ-ள். எண்மூவெழுத்து ஈற்று** - (இயல்பினாலாயினும் விதியினாலாயினும்) இருபத்துநான்கெழுத்தையும் ஈறாகவுடைய, - **எவ்வகை மொழிக்கும் முன் வரும்** - பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல் திசைச்சொல் வடசொல் என்னும் பலவகைப்பட்ட சொற்களுக்கும் முன்னே வரும், - **ஞநமயவக்கள் இயல்பும்** - ஞகர நகர மகர யகர வகரங்கள் அல்வழி வேற்றுமை இரண்டிலும் இயல்பாதலும், - **குறில் வழிய தனி ஐ நொது முன் மெலி மிகலுமாம்** - குற்றெழுத்தின் பின்னின்ற யகரமெய்யே ஒரெழுத்தொருமொழியாகிய உயிர் உயிர்மெய் என்னும் ஐகாரமே நொவ்வே துவ்வே என்பவைகளுக்கு முன்வரும் ஞகார நகார மகாரங்கள் (பிறசொற்களின்முன் இயல்பாதலன்றி) மிக்குமுடிதலுமாகும், - **ணளனலவழி ந திரியும்** - ணளன லக்களின்முன் வரும் நகரம். (பிறவீற்றின்முன் இயல்பாதலன்றித்) திரியும். **எ-று.**

விதியீறாவது இயல்பாகநின்ற உயிரேனும் ஒற்றேனும் போய் மற்றோருயிரீறாகவேனும் ஒற்றீறாகவேனும் நிற்பது. உ-ம். விளா என்பது விள எனவும் வட்டம் என்பது வட்ட எனவும் வாழிய என்பது வாழி எனவும் விதியீறாய் வருதல் காண்க.

புணரியலில் அல்வழி வேற்றுமைவழிகளுள் ஒன்றைக் குறிப்பாக வேனும் வெளிப்படையாகவேனும் விதவாத இடமெல்லாம் அவ்விருவழிகளையுங் கொள்க.

**உ-ம்.:-**

விள, பலா, புளி, தீ, கடு, பூ, சே, பனை, கோ, கௌ, உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், யாழ், வாள், எஃகு என்னும் நிலைமொழிகளோடு, அல்வழிப் புணர்ச்சிக்கு உதாரணமாக ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது என்னும் வருமொழிகளையும்; வேற்றுமை வழிப்புணர்ச்சிக்கு உதாரணமாக ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வன்மை என்னும் வருமொழிகளையுங் கூட்டி,

**உ-ம்.:-**

| | **அல்வழி** | **வேற்றுமைவழி** |
|---|---|---|
| (1) | விளஞான்றது | விளஞாற்சி |
| | விளநீண்டது | விளநீட்சி |
| | விளமாண்டது | விளமாட்சி |
| | விளயாது | விளயாப்பு |
| | விளவலிது | விளவன்மை |

என எல்லாவீற்றின்முன்னும் ஞநமய வக்கள் இயல்பாதல் காண்க.

உரிஞ் + ஞான்றது = உரிஞுஞான்றது; பொருந் + ஞான்றது = பொருநுஞான்று; வேல் + ஞான்றது = வேன்ஞான்றது; வான் + ஞான்றது = வாண்ஞான்றது; மரம் + ஞான்றது = மர ஞான்றது எனவரும் நிலைமொழியீறு சன் விகாரப்படுதல் அவ்வவ்வீற்றுச் சிறப்புவிதிகளிற் காண்க.

| | அல்வழி | வேற்றுமைவழி |
|---|---|---|
| உ–ம்.:– | மெய்ஞ்ஞான்றது | மெய்ஞ்ஞாற்சி |
| | மெய்ந்நீண்டது | மெய்ந்நீட்சி |
| | மெய்ம்மாண்டது | மெய்ம்மாட்சி |
| | கைஞ்ஞான்றது | கைஞ்ஞாற்சி |
| | கைந்நீண்டது | கைந்நீட்சி |
| | கைம்மாண்டது | கைம்மாட்சி |

எனக் குறின் முன்னின்ற யகரத்தின் முன்னுந் தனி ஐம்முன்னும் மெலிமிகுதல் காண்க.

நொ, து முன் மெலி மிகலுமாம் என்ற எச்ச வும்மையால் அவ்விரண்டன் முன்னும் இடையெழுத்து மிகலுமாம் என்றாராயிற்று.

| | |
|---|---|
| நொ+ஞெள்ளா = நொஞ்ஞெள்ளா | து+ஞென்னா = ஞெ்ஞெள்ளா |
| நொ + நாகா = நொந்நாகா | து+நாகா = துந்நாகா |
| நொ+மாடா = நொம்மாடா | து+மாடா = தும்மாடா |
| நொ+யவனா = நொய்யவனா | து+யவனா = துய்யவனா |
| நொ+வளவா = நொவ்வளவா | து+வளவா = துவ்வளவா |

நொ, து என்பவை வினைச்சொற்களாதலின் அல்வழியின் மாத்திரம் வந்தன.

(4) ணளனல வழி நந்திரியுமென்றது பின்வரும் 'ணல முன் றனவும்' என்னுஞ் சூத்திரத்தில் வகைபடக் காண்க.

இடைமிகும் என்று எடுத்துக் கூறாது 'குறில்வழியத் தனியைந் நொதுமுன் மெலிமிகலுமாம்' என்றதில் மெலிமிகலுமாம் என்னும் உம்மையால் இடையின மிகுமென்று தழுவியது, இடையின மிகுதல் குறில்வழி யவ்விற்கும், தனி ஐக்கும் பொருத்தமின்மையா

லென்றறிக. நொ, து என்னுமிவ்விரண்டின் முன் மெல்லினமு மிடையினமு மிகாவாயின் புணர்ச்சியின்றி விட்டிசைத்து வழுவுறுமாதலின் உம்மையாற்றழுவி நொதுக்களின் முன் இடையின மிகுதி கொள்ளப்படுதலாவசியக மென்றறிக.

நொதுமுன் மெலி மிகலுமாம் என்றெடுத்துரைத்ததி னாலும் உம்மை யாலுங் கொள்ளப்பட்ட மெலிமிகுதலை யும் இடையினமிகுதலையும் (நொ, து போலும்) ஏனைய தனிக்குறின் முன்னுங் கொள்க.

உ-ம் 'ஙம்மன்' 'வம்முன்' குவ்வரும் 'உவ்வருமே' எனவரும்.

இச்சூத்திர முதலியன ஒன்றற்கொன்று தொடர்ச்சியாகப் புணர்த்தலால் தொடர்ச் சொற் புணர்த்தலென்னு முத்தி.

## வை.மு. சடகோபாராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ-ள்.:- எண்மூ எழுத்து** - இருபத்துநான்கு எழுத்துக்களையும், **ஈறு** - இறுதியாகவுடைய, **எவ் வகை மொழிக்கும்** - எல்லா வகைச் சொற்களுக்கும்; **முன்** - முன்னே, **வரும்** - வருகின்ற, ஞ **ந ம ய வக்கள்** - ஞகர நகர மகர யகர வகரங்கள், **இயல்பும்** - இயல்பாதலும்; **குறில்வழி ய** - தனிக்குற்றெழுத்தின் பின் நின்ற யகர மெய்க்கும், **தனி ஐ** - ஒரெழுத்தொரு மொழியாகிய (உயிர் உயிர்மெய் யென்னும்) ஐகாரத்துக்கும், **நொது**- (ஒரெழுத்தொரு மொழியாகிய) நொ என்பதற்கும் து என்பதற்கும், **முன்** - முன் வருகின்ற, **மெலி** - ஞகர நகர மகரங்கள், **மிகலும்** - மிகுதலும், **ஆம்** - ஆகும்; **ண ள ன ல வழி** - ணகர ளகர னகர லகர மெய்களின் பின் வருகின்ற, **ந**- நகரமானது, **திரியும்**-; **எ-று.**

புணரியலிலே அல்வழி வேற்றுமைகளில் ஒன்றை வெளிப்படையாக வாயினும் குறிப்பாக வாயினும் கூறாத இடங்களி லெல்லாம் அவ் விரண்டையும் கொள்க.

'ஞநமயவக்கள்' என்றது, மெல்லின இடையினங்களில் மற்றை எழுத்துக்கள் மொழிக்கு முதலாகாவாதலால்; பின்வருஞ் சூத்திரங்களில் வலி, மெலி, இடை என்பனவும் அந்தந்த இனங்களில் மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களையே குறிக்கும்.

**உதாரணம்:–**

| (1) அல்வழி | வேற்றுமை |
|---|---|
| இள + ஞாயிறு = இளஞாயிறு | வலி+ஞமலி = வலிஞமலி |
| பனை + நீண்டது = பனைநீண்டது | பூ + நீட்சி = பூநீட்சி |
| பொன் + மெலிது = பொன்மெலிது | மண்+மாட்சி = மண்மாட்சி |
| வேர்+யாது = வேர்யாது | கல்+யானை = கல்யானை |
| எஃகு + வலிது = எஃகுவலிது | வாள் + வலிமை = வாள்வலிமை |

ஞ ந ம ய வக்கள் இயல்பாயின; மற்றை ஈறுகட்கும் இங்ஙனமே காண்க.

| (2) அல்வழி | வேற்றுமை |
|---|---|
| மெய் + ஞான்றது = மெய்ஞ்ஞான்றது | + ஞாற்சி = மெய்ஞ்ஞாற்சி |
| நீண்டது = மெய்ந்நீண்டது | நீட்சி = மெய்ந்நீட்சி குறில் வழிய |
| மாண்டது = மெய்ம்மாண்டது | மாட்சி = மெய்ம்மாட்சி |
| கை + ஞான்றது = கைஞ்ஞான்றது | + ஞாற்சி= கைஞ்ஞாற்சி |
| நீண்டது= கைந்நீண்டது | நீட்சி = கைந்நீட்சி தனி ஐ. |
| மாண்டது= கைம்மாண்டது | மாட்சி= கைம்மாட்சி |

குறில்வழி ய, தனி ஐ முன் மெலி மிக்கன.

| | |
|---|---|
| நொ + ஞெள்ளா = நொஞ்ஞெள்ளா | து+ஞெள்ளா= துஞ்ஞெள்ளா |
| நாகா= நொந்நாகா | நாகா +துந்நாகா |
| மாடா= நொம்மாடா | மாடா + தும்மாடா |

நொது முன் மெலிமிக்கன. இவை வினையாதலால், அல்வழி. (நொ– வருந்து. து–உண். இவை இரண்டும் ஒருமையேவல். ஞெள்ளாமுதலியன – விளிப்பெயர்)

| (3) அல்வழி | வேற்றுமை |
|---|---|
| மண் + நீண்டது = மண்ணீண்டது | மண் + நீட்சி = மண்ணீட்சி |
| முள் + நீண்டது = முண்ணீண்டது | முள் + நீட்சி = முண்ணீட்சி |
| பொன் + நீண்டது = பொன்னீண்டது | பொன் + நீட்சி = பொன்னீட்சி |
| கல் + நீண்டது = கன்னிண்டது | கல் + நீட்சி = கன்னீட்சி |

ண ள ன ல வழி ந திரிந்தது.

"ண ள ன ல வழி நத் திரியும்" என்றது, பின் மெய்யீற்றுப்புணரியலில் வரும் "னலமுன்றனவும்" என்னுஞ் சூத்திரத்தில் விவரிக்கப்படும்.

இச்சூத்திரம், வருமொழிச் செய்கை கூறியது.

சிறுபான்மை நிலைமொழி யீறுவிகாரப்படுதல், மேல் அவ்வவ் வீற்றுச் சிறப்புவிதியாற் பெறப்படும்.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள்.:— எண்மூவெழுத்து ஈற்று எவ்வகை மொழிக்கும் முன் வரும் ஞ ந ம ய வக்கள் இயல்பும்** — இயல்பினாலாயினும் விதியினாலாயினும் (107—ம் சூத்திரத்திற் கூறிய) இருபத்து நான்கெழுத்தையும் ஈறாகவுடைய பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல் திசைச்சொல் வடசொல் என்னும் பலவகைப்பட்ட சொற்களுக்கும் முன்னே வரும் ஞகர நகர மகர யகர வகரங்கள் அல்வழி வேற்றுமை இரண்டிலும் இயல்பாதலும், **குறில் வழி ய தனி ஐ நொ து முன் மெலி மிகலும் ஆம்** — குற்றெழுத்தின் பின்னின்ற யகரமெய்யே ஓரெபத்தொருமொழியாகிய உயிர் உயிர்மெய் என்னும் ஐகாரமே நொவ்வே துவ்வே யென்பவைகளுக்கு முன் வரும் ஞகார நகார மகாரங்கள் பிற சொற்களின் முன் இயல்பாதலன்றி மிக்கு முடிதலும் ஆகும். **ண ள ன ல வழி ந திரியும்** — ண ள லக்களின் முன் வரும் நகரம் பிற வீற்றின் முன் இயல்பாதலன்றித்திரியும்.எ—று.

விதியீறாவது, இயல்பாக நின்ற உயிரேனும் ஒற்றேனும் போய் மற்றோ ருயிரீறாகவேனும் ஒற்றிறாகவேனும் நிற்பது.

**குறிப்பு:—**

புணரியலில் அல்வழி வேற்றுமைகளுள் ஒன்றைக் குறிப்பாவேனும் வெளிப்படையகவேனும் கூறாத இடமெல்லாம் அவ்விரண்டைங் கொள்க.

உ—ம்.:—

(1) (எண் முவெழுத்தீற்றெவ்வகை .......... இயல்பும்)

விள +

பலா+

புளி+

தீ +

கடு +

பூ +

சே +

பனை +

கோ+

கௌ +

உரிஞ் +

மண் +

பொருந் +
மரம் +
பொன் +
வேய் +
வேர் +
வேல் +
தெவ் +
யாழ் +
வாள் +
எஃகு + என்னும் (எண்மூவெழுத்தீற்றவாய்) இவைகளின் முன் அல்வழிப்புணர்ச்சிக்கு உதாரணமாக ஞான்றது
நீண்டது
மாண்டது
யாது வலிது
என்னும் இவற்றையும், வேற்றுமைப் புணர்ச்சிக் உதாணமாக
ஞாற்சி
நீட்சி
மாட்சி
யாப்பு

வன்மை என்னும் இவற்றையும் கூட்டிஇருபத்து நான்கு எழுத்துக்கள் ஈறாகுமேனும், எகரம் வின விடைச் சொற்கண்ணும் அபெடையினுமன்றி ஈறாகாமையின் அதனையும், அளபெடையொழித்த நவ்வொடு கூடியே ஈறாகும் (சூ – 108) ஒகரம் 'நொதுமுன்மெலி' மிகலுமாம் எனப் பின்னர் வேறு விதி பெறுதலின் அதனையும் நீக்கி மற்ற 22 ஈறுகளே காட்டப்பட்டன.

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| விளஞான்றது | விளஞாற்சி |
| விளநீண்டது | விளநீட்சி |
| விளமாண்டது | விளமாட்சி |
| விளயாது | விளயாப்பு |
| விளவலிது | விளவன்மை |

என இவ்வாறே எல்லாவிற்றின் முன்னும் ஞ ந ம ய வக்கள் இயல்பாதல் காண்க.

(உரிஞ் + ஞான்றது = உரிஞு ஞான்றது. (சூ. 207); பொருந் + ஞான்றது = பொருநு ஞான்றது (சூ. 207); வேல் +

ஞான்றது ஷ வேன்ஞானற்து (சூ. 227); வாள் + ஞான்றது = வாண்ஞானறது (சூ. 227); மரம் + ஞான்றது = மர ஞான்றது (சூ. 219) என நிலைமொழியீறுகள் விகாரப்படுதல் அவ்வவ் வீற்றுச் சிறப்பு விதிகளிற் காண்க.)

(2) (குறில்வழி ய தனி ஐ—முன் மெலி மிகலுமாம்.)

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| மெய்ஞ்ஞான்றது | மெய்ஞ்ஞாற்சி |
| மெய்ந்நீண்டது | மெய்ந்நீட்சி |
| மெய்ம்மாண்டது | மெய்ம்மாட்சி |
| கைஞ்ஞான்றது | கைஞ்ஞாற்சி |
| கைந்நீண்டது | கைந்நீட்சி |
| கைம்மாண்டது | கைம்மாட்சி |

எனக் குறின் முன்னிற் யகரத்தின் முன்னும் தனி ஐம்முன்னும் மெலி மிகுதல் காண்க.

(3) (நொ து முன் மெலி மிகலுமாம் என்ற எச்ச வும்மையால், இவ்விரிண்டன் முன்னும் இடையெபத்து மிகலுமாம் என்றாயிற்று.)

நொ + ஞெள்ளா ஷ நொஞ்ஞெள்ளா

நாகா = நொந்நாகா

மாடா = நொம்மாடா — மெலிமிக்கது

யவனா = நொய்யவனா

வளவா = நொவ்வளவா — இடையெழுத்து மிக்கது.

து + ஞெள்ளா = துஞ்ஞெள்ளா

நாகா = துந்நாகா

மாடா = தும்மாடா — மெலிமிக்கது.

யவனா = துய்யவனா

வளவா = துவ்வளவா— இடையெழுத்து மிக்கது.

இவை வினைச்சொற்களாதலால், அல்வழியிலே மிகுந்தன.

(4) (ண ள ன ல வழி நத்திரியும்)

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| கண் + நீண்டது = கண்ணீண்டது | கண் + நீட்சி = கண்ணீட்சி |

முள் + நீண்டது = முண்ணீண்டது  முள் + நீட்சி = முண்ணீட்சி

பொன் + நீண்டது = பொன்னீண்டது பொன் + நீட்சி = பொன்னீட்சி

புல் + நீண்டது = புன்னீண்டது  புல் + நீட்சி = புன்னிட்சி

என ண ள ன ல வழி ந திரிந்தது. இது பின் 'னலமுன்றனவும்' என்னும் 237–ம் சூத்திரத்தில் விவரிக்கப் பட்டுள்ளது,

இச்சூத்திர முதலியன, ஒன்றற்கொன்று தொடர்சியாகப் புணர்த்தலால், 'தொடர்ச்சொற்புணர்த்தல்' என்னும் உத்தி.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள்.:– எண்மூ எழுத்து ஈற்று**–இருபத்து நான்கெழுத்துக்களையும் (இயல்பினாலாயினும் விதியினாலாயினும்) ஈறாக வுடைய, **எவ்வகை மொழிக்கும் முன்** – (பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல் திசைச்சொல் வடசொல் என்கிற) பலவகைப் பட்ட சொற்களுக்கும் முன்னே, **வரும் ஞ ந ம ய வக்கள்** – வருகிற ஞகர நகர மகர யகர வகரங்கள், **இயல்பும்**– (அல்வழி வேற்றுமை இரண்டிலும்) இயல்பாதலும்; **குறில் வழிய** – குற்றெழுத்தின் பின்னின்ற யகர மெய்யும், **தனி ஐ** – (உயிர் உயிர்மெய் என்கிற) ஐகாரமும், **நொ து** – நொ து என்னும் ஒரெழுத்து மொழிகளும், **முன்** – (ஆகிய இவைகளுக்கு) முன் வருகிற, **மெலி** – ஞகர நகர மகரங்கள், **மிகலும்** – (பிறசொற்களுக்கு முன் இயல்பாதலன்றி) மிகுதலும், **ஆம்** – ஆகும்; **ண ள ன ல வழி**–ணகர ளகர னகர லகரங்களின் முன் வருகிற, **ந**–நகரமானது, **திரியும்** – (மற்றை ஈறுகளுக்கு முன் இயல்பாதலன்றித்) திரியும். எ–று.

**பொ–ரை.:–**

மொழிக்கு கடைசியில் வரக்கூடிய இருபத்து நான்கு எழுத்துக்களையும் இறுதியிலுடைய சொற்களின் பின்வரும் ஞ ந ம ய வக்கள் ஆகிய இவை அல்வழியிலும் வேற்றுமை யிலும் இயல்பாம்; குற்றெழுத்தின் பின்வரும் ய, ஐ, நொ, து என்பவற்றிற்குப் பின்வரும், ஞ ந ம (பிறசொற்களுக்கு முன் இயல்பாதலன்றி) மிகுந்தும் வரும்; ண ள ன ல ஆகிய இவற்றிற்குப் பின்வரும் நகரமானது (பிற ஈற்றின் முன் இயல்பாதலன்றித்) திரியும்.

**விதிஈறாவது:**—இயல்பாக ஈற்றில் நின்ற உயிராவது ஒற்றாவது போய் மற்றொரு உயிரீறாகவாவது ஒற்றீறாக வாவது நிற்பது செயற்கை, விதி என்பன ஒரு பொருட் சொற்கள்.புணரியலில் எங்கும் அல்வழி வேற்றுமைகளி லொன்றைக் குறிப்பாகவானாலும் வெளிப்படையாக வானாலும் கூறாராயின் அவ் விரண்டையுங் கொள்க.

ஞ ந ம ய வக்கள் என்றது, மெல்லின இடையினங்களில் மற்றை எழுத்துக்கள் மொழிக்கு முதலாகா வாதலால், பின்வருஞ் சூத்திரங்களில் வலி, மெலி, இடை என்பனவும் அந்தந்த இனங்களில் மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களையே குறிக்கும்.

உ—ம்.:—

விள, பலா, கிளி, தீ, கடு, பூ, சே, பனை, கோ, கௌ, உரிஞ், மண், பொருந் மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், யாழ், வாள், எஃகு இவற்றின் முன் ஞான்றது—நீண்டது—மாண்டது—யாது—வலிது; ஞாற்சி—நீட்சி—மாட்சி—யாப்பு—வலிமை இவற்றை வருவித்து.

**அல்வழி**

விள+ஞான்றது=விளஞான்றது.

நீண்டது=விளநீண்டது.

மாண்டது=விளமாண்டது.

யாது=விளயாது.

வலிது=விளவலிது.

**வேற்றுமை.**

விள+ஞாற்சி=விளஞாற்சி.

நீட்சி=விளநீட்சி.

விள+மாட்சி=விளமாட்சி.

யாப்பு = விளயாப்பு.

வலிமை = விளவலிமை.

என முறையே கூட்டி எல்லாவீற்றின் முன்னும் ஞ ந ம ய வக்கள் இயல்பாதல் காண்க.

**அல்வழி.**

மெய் + ஞான்றது = மெய்ஞ்ஞான்றது.

நீண்டது = மெய்ந்நீண்டது.

மாண்டது = மெய்ம்மாண்டது.

கை + ஞான்றது = கைஞ்ஞான்றது.

நீண்டது = கைந்நீண்டது.

மாண்டது = கைம்மாண்டது.

**வேற்றுமை.**

மெய் + ஞாற்சி = மெய்ஞ்ஞாற்சி.

நீட்சி = மெய்ந்நீட்சி.

மாட்சி = மெய்ம்மாட்சி.

கை + ஞாற்சி = கைஞ்ஞாற்சி.

நீட்சி = கைந்நீட்சி.

மாட்சி = கைம்மாட்சி.

என முறையே கூட்டி எல்லாவீற்றின் முன்னும் ஞ ந ம ய வக்கள் இயல்பாதல் காண்க.

**அல்வழி.**

மெய் + ஞான்றது = மெய்ஞ்ஞான்றது.

நீண்டது = மெய்ந்நீண்டது.

மாண்டது = மெய்ம்மாண்டது.

கை + ஞான்றது = கைஞ்ஞான்றது.

நீண்டது = கைந்நீண்டது.

மாண்டது = கைம்மாண்டது.

**வேற்றுமை.**

மெய் + ஞாற்சி = மெய்ஞ்ஞாற்சி.

நீட்சி = மெய்ந்நீட்சி.

மாட்சி = மெய்ம்மாட்சி.

கை + ஞாற்சி = கைஞ்ஞாற்சி.

நீட்சி = கைந்நீட்சி.

மாட்சி = கைம்மாட்சி.

எனக் குறின்முன்னின்ற யகரத்தின் முன்னும், தனி ஐம் முன்னும் மெலி மிகுதல் காண்க.

நொ + ஞெள்ளா = நொஞ்ஞெள்ளா.

நாகா = நொந்நாகா.

மாடா = நொம்மாடா.

யவனா = நொய்யவனா.

வளவா = நொவ்வளவா.

து + ஞெள்ளா = துஞ்ஞெள்ளா.

நாகா =துந்நாகா.

மாடா = தும்மாடா.

யவனா = துய்யவனா.

வளவா = துவ்வளவா.

"நொ துமுன் மெலி மிகலுமாம்" என்ற எச்ச வும்மையால் அவ் விரண்டன் முன்னும் இடையெழுத்து மிகலுமா மென்றதாயிற்று.

(நொ–வருந்து, து–உண், இவை இரண்டும் ஒருமை ஏவல். ஞெள்ளா முதலியன விளிப்பெயர்.)

இவை வினைச்சொற்க ளாதலால் அல்வழியில் மெல்லினமும் இடையினமும் மிகுந்தன. "ணளனல வழி நத்திரியும்" என்றது பின்வரும் "னலமுன்றனவும்" என்னும் சூத்திரத்திலே காண்க.

இச் சூத்திர முதலாக ஒன்றற்கொன்று தொடர்ச்சியாகப் புணர்த்தலால், 'தொடர்சொற்புணர்த்தல்' என்னும் உத்தி. (தொடர்சொல் புணர்த்தலாவது – ஒன்றற்கொன்று சம்பந்தமுடைய சொற்களைச் சேர்த்து வைத்தல்.)

## கா.நமச்சிவாய முதலியார்

**(1) எண்மூவெழுத்து** – இருபத்துநான்கெழுத்துக்களையும், **ஈறு** – (இயல்பினாலாயினும் விதியினாலாயினும்) ஈறாகவுடைய, எவ்வகை **மொழிக்கும்** – (பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல் திசைச்சொல் வடசொல் என்கிற) பல வகைப்பட்ட சொற்களுக்கும், **முன்**– முன்னே, **வரும்** – வருகிற, **ஞநமயவக்கள்** – ஞகர நகர மகர யகர வகரங்கள், **இயல்பும்** – (அல்வழி வேற்றுமையிரண்டிலும்) இயல்பாதலும் ;

**(2) குறில் வழிய** – குற்றெழுத்தின் பின் நின்ற யகர மெய்க்கும், **தனி** ஐ–ஒரெழுத் தொருமொழியாய் (உயிராயும் உயிர்மெய்யாயும் வருகிற) ஐகாரத்திற்கும், **நொ** – நொ என்பதற்கும், **து**–து என்பதற்கும், **முன்**–முன் வருகிற, **மெலி** – ஞகர நகர மகரங்கள், **மிகலும்** – (இயல்பாதலன்றி) மிகுந்து முடிதலும், **ஆம்** – ஆகும் ;

**(3) ணள னல வழி** – ணகர ளகர னகர லகரங்களின் முன்வருகிற, **ந**–நகரமானது, **திரியும்** – (இயல்பாதலன்றித்) திரிந்தும் வரும்.

புணரியலிலெங்கும் அல்வழி வேற்றுமைகளில் ஒன்றைக் குறிப்பாகவாயினும் வெளிப்படையாக வாயினுங் காட்டாமற் போனால் அவ்விரண்டையுங் கொள்க.

**உதாரணம்:–**

விள, பலா, கிளி, தீ, கடு, பூ, சே, பனை, கோ, கௌ, உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், யாழ், வாள், எஃகு என நிறுத்தி, இவற்றின் முன் அல்வழிக்கு ஞான்றது நீண்டது – மாண்டது – யாது – வலிது எனவும், வேற்றுமைக்கு ஞாற்சி – நீட்சி – மாட்சி – யாப்பு – வன்மை எனவும் வருவித்து,

(1) விள + ஞான்றது = விளஞான்றது
விள + நீண்டது = விளநீண்டது
விள + மாண்டது = விளமாண்டது – அல்வழி
விள + யாது = விளயாது
விள + வலிது = விளவலிது

விள + ஞாற்சி = விளஞாற்சி
விள + நீட்சி = விளநீட்சி
விள+ மாட்சி = விளமாட்சி – வேற்றுமை
விள+ யாப்பு = விளயாப்பு
விள+ வன்மை = விளவன்மை

என முறையே கூட்டி எல்லா ஈற்றின் முன்னும் ஞகர நகர மகர யகர வகரங்கள் இயல்பாதல் காண்க.

உரிஞ் + ஞான்றது = உரிஞுஞான்றது
பொருந் + ஞான்றது = பொருநுஞான்றது
வேல் + ஞான்றது = வேன்ஞான்றது
வாள் + ஞான்றது = வாண்ஞான்றது
மரம் + ஞான்றது = மரஞான்றது

என நிலைமொழியீறுகள் விகாரப்படுதல் அவ்வவ்வீற்றுச் சிறப்பு விதிகளிற் காண்க.

| | | | | |
|---|---|---|---|---|
| (2) மெய் | + ஞான்றது | : | மெய்ஞ்ஞான்றது | |
| | + நீண்டது | : | மெய்ந்நீண்டது | |
| | + மாண்டது | : | மெய்ம்மாண்டது | – அல்வழி |
| கை | + ஞான்றது | : | கைஞ்ஞான்றது | |
| | + நீண்டது | : | கைந்நீண்டது | |
| | + மாண்டது | : | கைம்மாண்டது | |
| மெய் | + ஞாற்சி | : | மெய்ஞ்ஞாற்சி | |
| | + நீட்சி | : | மெய்ந்நீட்சி | |
| | + மாட்சி | : | மெம்மாட்சி | |
| கை | + ஞாற்சி | : | கைஞ்ஞாற்சி | – வேற்றுமை |
| | + நீட்சி | : | கைந்நீட்சி | |
| | + மாட்சி | : | கைம்மாட்சி | |

எனக் குறிலின் முன்நின்ற யகரத்தின் முன்னுந் தனி ஐம்முன்னும் மெலிமிகுதல் காண்க.

'நொ து முன் மெலி மிகலுமாம்' என்ற எச்ச வும்மையால், அவ்விரண்டன் முன்னும் இடையெழுத்து மிகலுமாம் என்றதாயிற்று.

| | | | |
|---|---|---|---|
| நொ | + ஞெள்ளா | : | நொஞ்ஞெள்ளா |
| | + நாகா | : | நொந்நாகா |
| | + மாடா | : | நொம்மாடா |
| | + யவனா | : | நொய்யவனா |
| | + வளவா | : | நொவ்வளவா |
| து | + ஞெள்ளா | : | துஞ்ஞெள்ளா |
| | + நாகா | : | துந்நாகா |
| | + மாடா | : | தும்மாடா |
| | + யவனா | : | துய்யவனா |
| | + வளவா | : | துவ்வளவா |

இவை, வினைச்சொற்களாதலால் அல்வழியில் மாத்திரமே வரும்.

(3) 'ண ள ன ல வழி நத் திரியும்' என்றது பின்வரும், 'னல முன்றனவும்' (சூ–237) என்னுஞ் சூத்திரத்திற் காண்க.

இச்சூத்திர முதலாக ஒன்றற் கொன்று தொடர்ச்சியாகப் புணர்த்தலால், இது, **தொடர்ச்சொற்புணர்த்தல்** என்னும் உத்தி

## மோசசு பொன்னையா

மொழி யீற்றில் வரும் என்ற இருபத்து நான்கு எழுத்துக்களில் யாதானுமொன்றை இயல்பாகவோ விதியாலோ ஈற்றில் பெற்ற பெயர், வினை, இடை, உரி என்னும் சொற்களில் யாதானுமொன்று நிலைமொழியாக நிற்க, ஞகர நகர மகர யகர வகரங்களுள் ஒன்று வந்து புணரின், அல்வழி வேற்றுமை என்னும் இரு வழியும் இயல்பாக முடியும். தனிக் குறிலையடுத்து நிற்கும் யகர ஒற்றும், உயிராகவோ உயிர்மெய்யாகவோ நிற்கும் ஒரெழுத்தொருமொழி ஐகாரமும், நொ, து என்னும் ஒரெழுத்தொரு மொழிகளும் ஆகிய இவற்றின் முன் ஞகர நகர மகரங்கள் மிக்கு முடிதலும் உண்டு. பிற ஈறுகளின் முன்னர் இயல்பாகும் நகரம், ணகர ளகர னகர லகரங்களின் முன்னர்திரிந்து முடியும், எ–று.

விதந்து கூறாததினால் உயிரீற்றுப் புணர்ச்சிக்கு விதிக்கும் விதியீறு ஈண்டும் கொள்ளப்பட்டது. பொதுப்படக் கூறினமையின், இருவழிப் புணர்ச்சிகளும் கொள்ளப்பட்டன. அவ்வாறே பின்னரும் கொள்க. னல முன்றனவும் எனப் பின்னர் விரித்துரைப்பார் ஆதலின், நகரத்தை இறுதிக்கண் வைத்தார்.

எ–டு.:–

| அல்வழி | வேற்றுமை | |
|---|---|---|
| விளஞான்றது | – விளஞாட்சி | – அம்முன் ஞ ந ம ய வ |
| விளநீண்டது | – விளைநீட்சி | இயல்பாயின. |
| விளமாண்டது | – விளமாட்சி | – ஏனையவற்றிற்கும் |
| விளயாது | – விளயாப்பு | இவ்வாறே |
| விளவலிது | – விளவலிமை | கூட்டியுரைக்க. |

| | | |
|---|---|---|
| மெஞ்ஞான்றது | – மெய்ஞ்ஞாட்சி | |
| மெய்ந்நீண்டது | – மெய்ந்நீட்சி | – குறில்வழி ய முன் |
| மெய்ம்மாண்டது | – மெய்ம்மாட்சி | மெலிமிக்கது. |
| கைஞ்ஞான்றது | – கைஞ்ஞாட்சி | |
| கைநீண்டது | – கைந்நீட்சி | – தனி ஐமுன் மெலி மிக்கது. |
| கைமாண்டது | – கைம்மாட்சி | |

நொஞ்ஞெள்ளா
நொந்நாகா – அல்வழிக்கண் நொ து முன் மெலிமிக்கன
நொம்மாடா (விளையாதலின் வேற்றுமைப் புணர்ச்சி இல்லை)
துஞ்ஞெள்ளா
துந்நாகா
தும்மாடா

மண்ணீண்டது – மண்ணீட்சி
முண்ணீண்டது – முண்ணீட்சி
பொன்னீண்டது – பொன்னீட்சி
கன்னீண்டது – கன்னீட்சி

– ண, ள, ன, ல முன் ந திரிந்தது.

ஆசிரியர் தொல்காப்பியர்,

*ஞநமய வவெனும் முதலாகு மொழியும்*
*உயிர்முத லாகிய மொழியும் உளப்பட*
*அன்றி யனைத்தும் எல்லா வழியும்*
*நின்ற சொன்முன் இயல்பா கும்மே.*

எனக் கூறுவதாலும், அந்நூற்பாவின் உரையில் இளம்பூரணர், 'எல்லாம்' என்றதனான், ஒற்றிரட்டலும், உடம்படு மெய்கோடலும் உயிரேறி முடிதலும் என வரும் இக்கருவித் திரிபு (மூன்று திரிபும் அன்மையின்) திரிபெனப்படா வென்பது கொள்க' எனக் கூறுவதாலும், ஒற்றிரட்டுதலும், உடம்படுமெய் பெறுதலும், உயிரேறி முடிதலும் மெய்பிறிதாதல், மிகுதல், குன்றல் என்னும் மூவகைத் திரிபுகளுள் அடங்கா என்பதே அவர் கருத்து என்பது போதரும். இவ்வாசிரியர் அந்நூற்பாவில், மெய்யீற்றின் முன் மெய்யூர்ந்தும், உயிரீற்றின் முன் உடம்படுமெய் பெற்றும் புணரும் இயல்பினதாய உயிர் முதன் மொழியைக் கூறாது விடுத்து, ஏனை மென்கணமும் இடைக்கணமும் எல்லாவற்றின் முன்னரும் இயல்பாய் வரும் என்றார்.

தொல்காப்பியர்,

*அவற்றுள்,*
*மெல்லெழுத் தியற்கை யுறழினும்வரையார்*
*சொல்லிய தொடர்மொழி யிறுதி யான.*

எனக் கூறியதை இவ்வாசிரியர்,

*குறிழ்வழி யத்தனி யைந்நொது முன்மெலி*
*மிகலுமாம்*

எனக் கூறினார். மெலி மிகலும் ஆம் என்றது, மிகாது இயல்பாதலும் ஒரோவழி ஆம் எனப்பொருள்பட்டு 'மெல்லெழுத் தியற்கை உறழினும் வரையார்' என்பதையே அமைத்து நின்றது எனக் கொள்க. இவ்வாறு

பொருள்கொள்ளாது, மெலி மிகலும் ஆம் என எண்ணின்கண் நின்ற எச்ச உம்மையானே நொ, து என்னும் இரண்டு சொல் முன்னும் இடையினம் மிகலும் ஆம் என விரித்தலும், உறழினும் வரையார் என உம்மையால் இடையினம் மிகலைத் தழுவினார் என உரை கூறலும் பொருந்தாமை அறிக.

(8)

**158. பொதுப்பெய ருயர்திணைப் பெயர்க ளீற்றுமெய்
வலிவரி னியல்பா மாவி யரமுன்
வன்மை மிகாசில விகாரமா முயர்திணை.**

**பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கள் ஈற்று மெய்
வலி வரின் இயல்பு ஆம் ஆவி ய ர முன்
வன்மை மிகா சில விகாரம் ஆம் உயர்திணை.**

potuppeyar uyartiṇaip peyarkaḻ īṟṟu mey
vali variṉ iyalpu ām āvi ya ra muṉ
vaṉmai mikā sila vikāram ām uyartiṇai.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

The consonant finals of Epicene and Personal Nouns remain unchanged before Hard initials; the Hard initials (themselves) remain undoubled after all vowel finals and the final y and r (of those Nouns) In the case, however, of a few personals (ending in consonants), changes do take place (in the finals, as well as initials)

## ஒப்புமைப் பகுதி

உயிரீறாகிய உயர்திணைப் பெயரும்
புள்ளி யிறுதி உயர்திணைப் பெயரும்
எல்லா வழியும் இயல்பென மொழிப.

(தொல்.: 154)

அஃறிணை விரவுப் பெயர் இயல்புமா ருளவே

(தொல்.: 156)

இருவழி யினுமுட லுயிரையு மிறுதியாம்
உயர்திணை முனரெலா முற்றவியல் பாகும்

(மு.வீ.: 193)

இருமைக்கும் பொது வியல்பா தலுமுள

(மு.வீ.: 195)

## மயிலை நாதர்

எ—ன், இவ்விருபெயரும் வல்லினத்தொடு புணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.:– இரு திணைக்கும் பொதுவான பெயர்க்கும் உயர்திணைப் பெயர்க்கும் ஈறான மெய்கள் வல்லின முதன்மொழி வந்தால் இயல்பே யாம்; உயிரே யகரமே ரகரமே என்ற ஈற்று அவ் விருபெயர் முன்னரும் க ச த பக்கள் மிகாவாம்; இவ்வாறன்றி, உயர்திணைப் பெயர்களுட் சில விகாரப்பட்டு வருவன வுளவாம், எ—று.

வ – று.:–

(சாத்தன், கொற்றன், மகன், ஆண்) + (குறிது, சிறிது, தீது, பெரிது) எனவும்; (குறியன், சிறியன், தீயன், பெரியன்) எனவும்; (கை, செவி, தலை, புறம்) எனவும்; (பெண், மகள்) + (குறிது, சிறிது, தீது, பெரிது) எனவும்; (குறியள், சிறியள், தீயள், பெரியள்) எனவும்; (கை, செவி, தலை, புறம்) எனவும் பொதுப்பெயரீற்று மெய்கள் வன்மைவர இருவழியும் இயல்பாயின. (ஊரன், அவன், தோன்றல், மால்) + (குறியன், சிறியன், தீயன், பெரியன்) எனவும்; (கை, செவி, தலை, புறம்) எனவும் உயர்திணைப் பெயரீற்று மெய்கள் வன்மை வர இருவழியும் இயல்பாயின.

இவை வலிவரின் இயல்பா மெனவே, ஏனை யிரண்டினமும் வந்தால் தமக்கேற்ற வண்ணம் விகாரப்படுவனவா மென்றவாறு. அவை, மருத்துவ மாணி, இறைவனெடு வேட்டுவன் எனவும்; மகணீண்டாள் தோன்றனீண்டான், தோன்றன் மாண்டான், மகனீண்டான் எனவும் வரும். பிறவுமன்ன.

(சாத்தி, கொற்றி, தாய்) + (குறிது, சிறிது, தீது, பெரிது) எனவும்; (குறியள், சிறியள், தீயள், பெரியள்) எனவும்; (கை, செவி, தலை, புறம்) எனவும் பொதுப் பெயர்கள் முன் க ச த பக்கள் இருவழியும் இயல்பாயின. ரவ்வீறு பொதுப்பெயர்கள் ஏலாவென்க. (நம்பி, விடலை, சேய்) + (குறியன், சிறியன், தீயன், பெரியன்) எனவும்; (கை, செவி, தலை, புறம்) எனவும்; (தோழி, நங்கை, ஆய்) + (குறியள், சிறியள், தீயள், பெரியள்) எனவும்; (கை, செவி, தலை, புறம்) எனவும்;

(அவர், யாவர், ஒருவர்) + (குறியர், சிறியர், தீயர், பெரியர்) எனவும்; (கை, செவி, தலை, புறம்) எனவும் [1]உயிரே யகரமே ரகரமே என இவ்வீற்று உயர்திணைப்பெயர் முன் வந்த க ச த பக்கள் இயல்பாயின.

'ஆவியரமுன் வன்மைமிகா' எனவே, பிற வீறுகள் முன்வரின், வல்லினம் சில விகாரமா மெனக் கொள்க. அவை கொற்றன்றீயன், அவன் [2]றண்ணியன் என்றற் றொடக்கத்தன. பிறவுமன்ன.

ஆடூஉக்குறியன், மகடூஉக்குறியள் எனவும்; ஆடூஉக்கை, மகடூஉக்கை (ஆடூஉ, மகடூஉ) + (செவி, தலை, புறம்) எனவும்; எட்டிப்பூ, எட்டிப்புரவு, காவிதிப்பூ, காவிதிப்புரவு, நம்பிப்பூ, நம்பிப்பேறு எனவும் உயர்திணைப் பெயர்முன் சில மிக்கன. மக்கட்குணம்; (மக்கள்) + (சுட்டு, தலை, புறம்) எனத் திரிந்தன. கபிலபரணர், பலசான்றார் என ஈறுகெட்டு இயல்பாயின. ஆசீவகப்பள்ளி, கணக்காயப்பள்ளி, ஈழவக்கத்தி, கோலிகப்புடைவை, [1]வண்ணாப்பெண்டிரென நிலைமொழி யீறு கெட்டு வருமொழி மிக்கன. வாசுதேவ கோட்டம் வாசுதேவக் கோட்டம், பிராமகோட்டம் பிரமக்கோட்டம் என நிலைமொழியீறு கெட்டு வருமொழி விகற்பமாயிற்று. பார்ப்பனக்கன்னி, (பார்ப்பான்) + (சேரி, தோட்டம், பிள்ளை, மரபு, வாழ்க்கை) என ஈற்றயல் குறுகி அகரம் மிக்கது. பிறவும் இவ்வாறு வருவன வெல்லாம் கண்டு கொள்க.

உயர்திணைப் பெயரைப் பின் வைத்தார், பின்பும், எடுத்து விதத்தற் கொன்க.

'ஈற்றுமெய்' என்றும் 'ஆவியரமுன்' என்றும் பகுத்தோதியது, யாண்டும் நிலைமொழி வருமொழி விகாரங்கள் தெரிந்து கோடற்கென்க.

மகன், மகள், மக்கள் என்பன, மக்கட்கதி யிலுள்ளாரை யுணர்த்தி நிற்பின் உயர்திணைப் பெயர்களாம்; முறையை யுணர்த்தி நிற்பின் பொதுப் பெயர்களாம். ஈண்டு உயர்திணையான காலைக்குத் திரிபு காட்டினா மென்க.

---

பாட வேறுபாடு:–

1. து

ஈண்டு இயற்பெயர் மாத்திரையே தொகுத்துணர்த்தியது; இவற்றின் வினா விளி யுருபு முதலாயின வெல்லாம் மேல் ஏற்ற விடங்களிற் காண்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ– னின்,** இதுவும் அது.

**இ–ள்.:** இருதிணைப் பொதுவான பெயர்க்கும் உயர்திணைப் பெயர்க்கும் ஈறான மெய்கள் வல்லின முதன்மொழி வந்தால் இயல்பாம். உயிரே, யகரமே, ரகரமே என்னும் இவ்வீற்று அவ்விருபெயர்கள் முன்னரும் வரும் க ச த பக்கள் மிகாவாம். மெய் உயிர் ஈற்று உயர்திணைப் பெயர்கள் நாற்கணங்களோடும் புணருமிடத்து நிலைமொழி வருமொழிகள் விகாரப்படுவனவும் சில உளவாம், **எ – று.**

வல்லினத்துள் மயங்காதன மயங்கின் ஈற்றுமெய் விகாரப்படு வனவும் உளவாதலின் பொதுப்பட வலிவரின் என்றும், வல்லினம் மிகுதற்கு உரிய ழகரம் அஃறிணைக்கன்றி இவ்விரு பெயர்க்கும் ஈறாகாமை யின் அதனை ஒழித்து ய ர முன் என்றும், வன்கணமே யன்றி ஏனைக்கணங்கள் புணரினும் விகாரப்படும் ஆதலின் இறந்தது தழீஇய எச்சவும்மை கொடுத்து விகாரமுமாம் என்னாது விகாரமாம் என்றும், அவ்விகாரம் நிலைமொழி வருமொழி இரண்டினும் ஏற்றபெற்றியாக வருதலின் உயர்திணை யீறென்னாது உயர்திணை என்றும் கூறினார். உயர்திணைப் பெயரைப் பின்வைத்தார் பின்பும் எடுத்து விதத்தற் கென்க.

**உ – ம்.:–**

சாத்தன், கொற்றன், ஆண்: குறிது, சிறிது, தீது, பெரிது; குறியன், சிறியன், தீயன், பெரியன் எனவும்; கை, செவி, தலை, புறம் எனவும் பொதுப்பெயரிறுதி னகர ணகரங்கள் வன்மை வர இருவழியும் இயல்பாயின. ஊரன், அவன்: குறியன், சிறியன், தீயன், பெரியன் எனவும்; கை, செவி, தலை, புறம் எனவும் உயர்திணைப்பெயர்கள் ஈற்று னகரம் வன்மை வர இருவழியும் இயல்பாயிற்று. பிறவும் அன்ன.

சாத்தி, கொற்றி, தாய்: குறிது, சிறிது, தீது, பெரிது; குறியள், சிறியள், தீயள், பெரியள் எனவும்; கை, செவி, தலை, புறம் எனவும் பொதுப்பெயரீற்று இகர யகரங்கள்முன் வந்த வல்லினம் இருவழியும் மிகாவாயின. நம்பி, விடலை; குறியன், சிறியன், தீயன், பெரியன் எனவும்; கை, செவி,

தலை, புறம் எனவும்; சேய்: குறியன் சிறியன், தீயன், பெரியன் எனவும்; கை, செவி, தலை, புறம் எனவும்; அவர், ஒருவர்: குறியர், சிறியர், தீயர், பெரியர் எனவும்; கை, செவி, தலை, புறம் எனவும் உயர்திணை இகர ஐகார யகர ரகரங்கள்முன் வந்த வல்லினம் இருவழியும் மிகாவாயின. பிறவும் அன்ன.

கபிலபரணர், வடுகநாகன், அரசவள்ளல் எனவும், ஆசீவகப்பள்ளி, குமரகோட்டம், குமரக்கோட்டம் எனவும் இருவழியும் உயர்திணையுள் சில தமக்கு ஏற்ற விகாரமாயின. பிறவும் அன்ன.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** உயர்திணைப் பெயரும் பொதுப்பெயரும் வல்லினத்தோடு புணருமாறு கூறியது.

**இ–ள்.:– பொதுப் பெயர்** – உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவான பெயர்க்கும், **உயர்திணைப் பெயர்கள் ஈற்று மெய்** – உயர்திணைப் பெயர்க்கும் ஈறான மெய்கள், **வலி வரின் இயல்பாம்** – வருமொழி முதலாக வல்லினம் வந்தால் இயல்பேயாம், **ஆவி யர முன்** – உயிரே யகரமே ரகரமே என்றிவ்வீற்று அவ்விரு பெயர் முன்னரும், **வன்மை மிகா** – வருமொழி முதலாக வந்த வல்லினம் மிகாவாம், சில **விகாரமாம் உயர்திணை** – உயர்திணைப் பெயர்களுட் சில விகாரப்பட்டு வருவனவும் உள **எ–று.**

**உ–ம்.:–**

சாத்தன், கொற்றன், மகன், மகள், ஆண், பெண் என நிறுத்தி, குறிது, சிறிது, தீது, பெரிது எனவும் குறியன், சிறியன், தீயன், பெரியன் எனவும் கை, செவி, தலை, புறம் எனவும் வருவித்துப் பொதுப்பெயர்க்கண் வல்லினம் வர இருவழியும் இயல்பாயினவாறு காண்க. "வலி வரின் இயல்பாம்" எனவே ஏனை இரண்டினமும் வந்தால் தத்தமக் கேற்றவாறு விகாரப்படுவனவாம் என்க. உதாரணம் மருத்துவமாமணி, இறைவனொடு வேட்டுவன் என வரும். சாத்தி, கொற்றி, தாய் என நிறுத்தி, குறிது, சிறிது, தீது, பெரிது எனவும் குறியள், சிறியள், தீயள், பெரியள் எனவும் கை, செவி, தலை, புறம் எனவும் வருவித்துப் பொதுப்பெயர் முன் க ச த பக்கள் இருவழியும் இயல்பாயினவாறு காண்க. ரவ்வீறு பொதுப்பெயர் ஏலாவென்க. நம்பி, விடலை, ஆய்,

சேய் என நிறுத்தி, குறியன், சிறியன், தீயன், பெரியன் எனவும் கை, செவி, தலை, புறம் எனவும் தோழி, நங்கை என நிறுத்தி குறியள் சிறியள் தீயள் பெரியள் எனவும் கை, செவி, தலை, புறம் எனவும் வருவித்து அவர், யாவர், ஒருவர் என நிறுத்தி, குறியர், சிறியர், தீயர், பெரியர் எனவும் கை, செவி, தலை, புறம் எனவும் வருவித்து உயிரே யகரமே ரகரமே என்று இவ்வீற்று உயர்திணைப் பெயர் முன் வந்த க ச த பக்கள் இரு வழியும் இயல்பாயினவாறு காண்க.

"ஆவி ய ர முன் வன்மை மிகா" எனவே பிற ஈறுகள் முன்வரின் பிற விகாரங்களாமெனக் கொள்க. அவை கொற்றன்றீயன், அவன்றண்ணியன் என வரும். இனி ஆடூஉக் குறியன், மகடூஉக் குறியள், கை, செவி, தலை, புறம் எனவும் எட்டிப் பூ, எட்டிப்புரவு, காவிதிப்பூ, காவிதிப்புரவு, நம்பிப்பூ, நம்பிப் பேறு எனவும் உயர்திணைப் பெயர் முன் சில மிக்கன. மக்கட் குணம், சுட்டு, தலை, பிணம் எனச் சில திரிந்தன. கபிலபரணர், பல சான்றார் எனச் சில ஈறுகெட்டு இயல்பாயின. ஆசீவகப் பள்ளி, கணக்காயப்பள்ளி என ஈறு கெட்டு வருமொழி மிக்கன. வாயு தேவகோட்டம், பிரமகோட்டம், பிரமக்கோட்டம் எனச் சில ஈறு கெட்டு வருமொழி உறழ்ந்தன. பார்ப்பனக்கன்னி, பார்ப்பனச்சேரி, தோட்டம், பிள்ளை, மரபு, வாழ்க்கை எனச் சில ஈற்றயல் குறுகி அகரம் மிக்கன. பிறவும் இவ்வாறு வருவன வெல்லாம் கண்டு கொள்க.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

**இ—ள்.:—** **பொதுப்பெயர்**—இரு திணைகளுக்கும் பொதுவான பெயர்களுக்கும், **உயர்திணைப் பெயர்கள்** – உயர்திணைப் பெயர்களுக்கும், **ஈற்று மெய்** – ஈற்றிலுள்ள மெய்கள், **வலி**—வல்லெழுத்து முதன் மொழிகள், **வரின்**—வந்தால், **இயல்பாம்** – இயல்பாகும், **ஆவி**—உயிரையும், யர—யகர ரகர மெய்களையு மீறாகவுடைய, அவ்விரு வகைப் பெயர்களுக்கும், **முன்**—முன் வருகிற, **வன்மை**—வல்லெழுத்துக்கள், **மிகா**—மிகாவாம், **உயர்திணை**—உயிரீறு மெய்யீறுமாகிய உயர்திணைப் பெயர்கள் நாற் கணங்களோடும் புணருமிடத்து, **சில விகாரமாம்**—நிலைமொழி வருமொழிகள் விகாரப்படுவனவுஞ் சில வுளவாம், **எ—று.**

**உ—ம்.:—**

சாத்தன், கொற்றன், ஆண் இவற்றின் முன் குறிது, சிறிது, தீது, பெரிது, குறியன், சிறியன், தீயன், பெரியன், கை, செவி, தலை, புறம் இவற்றை வருவித்து; சாத்தன்குறிது, சாத்தன்குறியன், சாத்தன் கை என முறையே கூட்டிப் பொதுப்பெயரீற்று மெய் இயல்பாதல் காண்க. ஊரன், அவன் இவற்றின் முன், குறியன், சிறியன், தீயன், பெரியன், கை, செவி, தலை, புறம் இவற்றை வருவித்து ஊரன்குறியன், ஊரன் கை, என முறையே கூட்டி உயர்திணைப் பெயரீற்று மெய் இயல்பாதல் காண்க. மற்றவையு மிப்படியே. சாத்தி, கொற்றி, தாய் இவற்றின் முன் குறிது, சிறிது, தீது, பெரிது; குறியள், சிறியள், தீயள், பெரியள், கை, செவி, தலை, புறம் இவற்றை வருவித்து சாத்திகுறிது, சாத்திகுறியள், சாத்திகை எனமுறை கூட்டிப் பொதுப்பெயரீற்று உயிர் யகர முன் வலி இயல்பாதல் காண்க. நம்பி, விடலை இவற்றின் முன் குறியன், சிறியன், தீயன், பெரியன், கை, செவி, தலை, புறம் இவற்றையும், அவர், ஒருவர் இவற்றின் முன், குறியர், சிறியர், தீயர், பெரியர், கை, செவி, தலை, புறம் இவற்றையும் வருவித்து நம்பிகுறியன்; நம்பி கை, அவர்குறியர், அவர்கை எனமுறையே கூட்டி உயர்திணைப் பெயரீற்று உயிர் ரகரமுன் வலி இயல்பாதல் காண்க, மற்றவையு மிப்படியே,

கபிலர் + பரணர் – கபிலபரணர்

வடுகன் + நாதன் – வடுகநாதன்

அரசன் + வள்ளல் – அரசவள்ளல்

ஆசீவகன் + பள்ளி – ஆசீவகப்பள்ளி

குமரன் + கோட்டம் – குமரகோட்டம்; குமரக்கோட்டம்;

என விருவழியும் உயர்திணையுட் சில தமக்கேற்ற விகாரமாயின; மற்றவைகளு மிப்படியே.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

மெய்யீற்றுப் பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்களும் உயிரீற்றுப் பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்களும் வன்கணத்தோடு புணருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

பொதுப்பெயருயர் திணைப் பெயர்க ளீற்றுமெய்
வலிவரி னியல்பா மாவி யரமுன்
வன்மை மிகாசில விகாரமா முயர்திணை.
(பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்கள் ஈற்று மெய்

வலி வரின் இயல்பு ஆம்; ஆவியர முன்
வன்மை மிகா சில விகாரமாம் உயர்திணை)

**இ—ள்.:— பொதுப் பெயர் உயர்திணைப்பெயர்கள் ஈற்றுமெய் வலிவரின் இயல்பாம்** — பொதுப்பெயர்களுக்கும் உயர்திணைப் பெயர்களுக்கும் ஈற்றிலுள்ள மெய்கள் வல்லெழுத்து முதன்மொழிகள் வரின் இயல்பாகும். ஆவி யரமுன் வன்மைமிக—உயிரையும் யகர ரகர மெய்களையும் ஈறாகவுடைய அவ்விருவகைப் பெயர்களுக்கும் முன்வரும் வல்லெழுத்துக்கள் மிகாவாம். **உயர்திணை சில விகாரம் ஆம்** — மெய்யீறும் உயிரீறுமாகிய உயர்திணைப்பெயர்களுட் சிலபெயர்கள் நாற்கணங்களோடும் புணருமிடத்து நிலைமொழி வருமொழிகள் விகாரப்படுதலும் உடையனவாம், எ—று.

நாற்கணமாவன வன்கணம், மென்கணம், இடைக்கணம், உயிர்க்கணம் என்பனவாம்.

நிலைமொழிச் செய்கையாய்த் திரிதற்குரிய எழுத்துக்கள் திரியாதியல்பாதலும், வருமொழிச் செய்கையாய் மிகுதற்குரிய எழுத்துக்கள் மிகாதியல்பாதலுங் கருதி, ஈற்றுமெய் இயல்பாம் என்றும், வன்மை மிகா என்றும், பகுத் தோதினார். உயிர்போல வருமொழிச் செய்கையாய் வன்மை மிகுதற் குரியனவாகிய யரழக்கண் மூன்றினுள்ளும் ழகரம் பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்களுக்கு ஈறாகாமையால், இங்கே ஒழிக்கப்பட்டது.

பொதுப்பெயராவது யாது?

பொதுப்பெயராவது உயர்திணை அஃறிணை யிரண்டுக்கும் பொதுவாய் வரும் பெயர். பொதுப்பெயர் விரவுப்பெயர் என்பன ஒரு பொருட்சொற்கள். உயர்திணை அஃறிணை இரண்டினும் விரவுதலுடைய பெயர் விரவுப்பெயர். விரவுதல்—கலத்தல்.

**உ—ம்.:—**

சாத்தன் செல்வன் என்பன மனுஷர்க்கும் மாடு குதிரை யானைகளுக்கும் இடப்படுதலின் பொதுப்பெயராம்.

உயர்திணைப் பெயராவது யாது?

மனுஷர் தேவர் முதலியோர் பெயர் உயர்திணைப் பெயராம்.

இச்சூத்திரத்திலே சொல்லப்பட்ட பெயர்கள் யாவை?

மெய்யீற்றுப் பொதுப்பெயர், மெய்யீற்றுயர்திணைப் பெயர், உயிரீற்றுப் பொதுப்பெயர், உயிரீற்றுயர்திணைப்பெயர்.

இவை எக்கணத்தோடு புணரும் புணர்ச்சி இங்கே கூறப்பட்டது?

வன்கணத்தோடு புணரும் புணர்ச்சி.

இச்சூத்திரத்திலே என்ன ஈறு முதலோடு புணரும் புணர்ச்சி கூறப்பட்டது?

மெய்யீறும் உயிரீறும் வருமொழிமுதல் வன்கணத்தோடு புணரும் புணர்ச்சி கூறப்பட்டது.

மெய்யீற்றுப் பொதுப்பெயரும் உயர்திணைப்பெயரும் வல்லினத்தோடு எப்படிப்புணரும்?

"பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்க ளீற்றுமெய், வலிவரின் இயல்பாம்"

உ–ம்.:–

(1) சாத்தன், கொற்றன், ஆண் இவற்றின்முன், குறிது, சிறிது, தீது, பெரிது, குறியன், சிறியன், தீயன், பெரியன்; கை, செவி, தலை, புறம், இவற்றை வருவித்து. சாத்தன்குறியது, சாத்தன் குறியன், சாத்தன்கை என முறையே கூட்டிப், பொதுப்பெயரீற்று னகர ணகர மெய் இருவழியும் இயல்பாதல், காண்க. ஊரன், அவன் இவற்றின்முன், குறியன், சிறியன், தீயன், பெரியன்; கை, செவி, தலை, புறம் இவற்றை வருவித்து ஊரன்குறியன், ஊரன்கை, என முறையே கூட்டி, உயர்திணைப் பெயரீற்று னகரமெய் இருவழியும் இயல்பாதல் காண்க. தோன்றல், வேள் இவற்றின் முன், குறியன், சிறியன், பெரியன்; கை, செவி, தலை, புறம் இவற்றை வருவித்து, தோன்றல்குறியன், தோன்றல்கை, வேள்குறியன், வேள்கை, என முறையே கூட்டி, உயர்திணைப்பெயரீற்று லகரளகரமெய் இருவழியும் இயல்பாதல் காண்க. தோன்றல்–தீயன்–தோன்றறீயன், தோன்றல்–தலை–தோன்றறலை. எனவும் லகர மெய்யும், வேள்–தீயன்–வேடீயன், வேள்–தலை–வேடலை, எனவும் ளகரமெய்யும் தகரம் வருமிடத்துக் கெடுதல் மயக்கவிதின்மை பற்றியென்றறிக.

உயிரீற்றுப்பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்களும், யகர ரகர வீற்றுப் பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்களும் வல்லினத்தோடு எவ்வாறு புணரும்?

" (பொதுப்பெய ருயர்திணைப் பெயர்களீற்று) ஆவியர முன் வன்மை மிகா"

(2) சாத்தி, கொற்றி, தாய் இவற்றின் முன் குறிது, சிறிது தீது, பெரிது; குறியள், சிறியள், தீயள், பெரியள்; கை, செவி, தலை, புறம் இவற்றை வருவித்து, சாத்திகுறிது, சாத்திகுறியள்; சாத்திகை என முறையே கூட்டிப்

பொதுப்பெயரீற்று உயிர் யகரமுன் வலி இருவழியும் இயல்பாதல் காண்க. நம்பி, விடலை இவற்றின்முன் குறியன், சிறியன், தீயன், பெரியன்; கை, செவி, தலை, புறம் இவற்றையும் அவர் ஒருவர் இவற்றின்முன் குறியர் சிறியர் தீயர் பெரியர்; கை, செவி, தலை, புறம் இவற்றையும் வருவித்து, நம்பி குறியன், நம்பிகை அவர்குறியர், அவர்கை, என முறையே கூட்டி, உயர்திணைப்பெயரீற்று உயிர் ரகர முன் வலி யிருவழியும் இயல்பாதல் காண்க.

உயர்திணைப் பெயர்களுட் சில விகாரப்படுதலு முண்டோ?

"சில விகாரமாமுயர்திணை"

(3) கபிலன்–பரணன் –கபிலபரணர், வடுகன்–நாதன்–வடுகநாதன், அரசன்–வள்ளல்–அரசவள்ளல், இவை ஈறுகெட்டியல்பாய் முடிந்தன. ஆசீவகர்,–பள்ளி–ஆசீவகப்பள்ளி,வாணிகர் தெரு–வாணிகத்தெரு, இவை ஈறுகெட்டு, வருமொழி வல்லெழுத்து மிக்கு முடிந்தன. குமரன்–கோட்டம், குமரகோட்டம், குமரக்கோட்டம்; வாசுதேவன்–கோட்டம், வாசுதேவகோட்டம். வாசுதேவக் கோட்டம், இவை ஈறுகெட்டு, வருமொழி வல்லெழுத்து இயல்பாயும் மிக்கும் முடிந்தன. பார்ப்பான்–கன்னி–பார்ப்பனக்கன்னி, இது ஈற்றயல்குறுகி, அகரச்சாரியை பெற்று வருமொழி வல்லெழுத்துமிக்கு முடிந்தது. வேளாளன்–பிள்ளை–வேளாண்பிள்ளை என நிலைமொழி யீற்று அன்கெட்டு ளகர மெய் ணகரமெய்யாகத் திரிந்து முடிந்தது. மக்கள்– பண்பு–மக்கட்பண்பு. மக்கள்–சுட்டு–மக்கட்சுட்டு, என நிலைமொழியீற்று மெய்திரிந்து முடிந்தது.

## முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

**இ–ள்.: பொதுப் பெயர் உயர்திணைப் பெயர்களீற்று மெய் –** பொதுப்பெயரும் உயர்திணைப் பெயர்களுமாகிய இவற்றிற்கு ஈறாகி வரு மெய்கள், **வலிவரி னியல்பாம்** – வல்லின முதல் மொழிவந்து புணரின் விகாரப்படாம லியல்பாம், **ஆவி யர முன்** – உயிரீறும் ய ர வென்னும் இரண்டு ஒற்றீறுமாகிய அவ் விருவகைப் பெயர்களுக்கு முன், **வன்மை மிகா** – வல்லெழுத்து மிக்கு முடியாவாம், **உயர்திணை** – உயர்திணை யிடத்து (நிலைமொழி வருமொழிகள்), **சில விகாரமாம்**–சில தமக்கேற்ற விகாரப்பட்டும் வருவனவாம், **எ – று.**

வல்லினத்துள்ளே மயங்காதன மயங்குமாயின் ஈற்றுமெய் விகாரப்படுவனவு முளவாகலின் பொதுப்பட 'வலிவரி' னென்றும், வன்கணமே யன்றி மற்றக்கணம் வரினும் விகாரப்படுவனவு முளவாகலின் இறந்தது தழுவிய எச்சவும்மை கொடுத்து விகாரமுமா மென்னாமல் 'விகாரமா' மென்றும், அந்த விகாரங்கள் நிலைமொழி வருமொழி யிரண்டினும் ஏற்றபடி வருமாதலின், உயர்திணை ஈறென்னாமல் 'உயர்திணை' யென்றுங் கூறினார்.

உ–ம்.:–

சாத்தன், கொற்றன், ஆண் என நிறுத்தி, குறிது, சிறிது, தீது, பெரிது, குறியன், சிறியன், தீயன், பெரியன் எனவும்; கை, செவி, தலை, புறம் எனவும் வருவித்து, சாத்தன் குறிது, சாத்தன்குறியன், சாத்தன்கை என முறையே ஒட்டி, அல்வழி வேற்றுமை யிரண்டிடத்தும் பொதுப்பெயரிறுதி னகர ணகரங்கள் வலிவர இயல்பாயினவாறு காண்க. பிறவற்றோடும் ஒட்டுக.

ஊரன், அவன் என நிறுத்தி, குறியன், சிறியன், தீயன், பெரியன் எனவும்; கை, செவி, தலை, புறம் எனவும் வருவித்து அவ்வாறு ஒட்டி, உயர்திணைப் பெயரீற்று னகரம் இரண்டிடத்தும் இயல்பாதல் காண்க. சாத்தி, கொற்றி, தாய் என நிறுத்தி, குறிது, சிறிது, தீது, பெரிது, குறியள், சிறியள், தீயள், பெரியள் எனவும் கை, செவி, தலை, புறம் எனவும் வருவித்து, ஒட்டிப் பொதுப்பெயரீற்று இகர யகரங்களின் முன்வந்த வல்லினம் இருவழியும் இயல்பாதல் காண்க. நம்பி, விடலை என நிறுத்தி, குறியன், சிறியன், தீயன், பெரியன் எனவும்; கை செவி தலை புறம் எனவும் வருவித்து ஒட்டி முறையே உயர்திணை இகர ஐகாரங்களின் முன் வந்த வல்லினம் இருவழியும் இயல்பாதல் காண்க. கபிலபரணர், வடுகநாதன், அரசவள்ளல் இவை யீறுகெட்டுப் புணர்ந்த அல்வழிச் சந்தி. வாணிகத்தெரு, ஆசீவகப்பள்ளி இவை ஈறுகெட்டு வல்லெழுத்து மிக்குப் புணர்ந்த வேற்றுமைச் சந்தி. பிரமகோட்டம், பிரமக்கோட்டம், வாசுதேவ கோட்டம், வாசுதேவக்கோட்டம் இவை யீறுகெட்டு வல்லெழுத்து இயல்பாயும் மிக்கும் புணர்ந்த வேற்றுமைச் சந்தி. இவ்வாறு உயர்திணை யிடத்துச் சில தமக்கேற்ற விகாரமாய் வந்தன.

இனி **ஒப்பின் முடித்தலால்,** உயர்திணைப் பெயர்ச் சொல் லிறுதிகள் போல உயர்திணை வினைச்சொல் லிறுதிகளும்

வலிவரின் இயல்பாமெனக் கொள்க. அவை வருமாறு: உண்டான்குமரன், உண்டாள்குமரி, உண்டார்குமாரர், ஓதுப்புலவர் என வரும். பிறவு மிவ்வாறு காண்க. மெய் இயல்பாம், வன்மை மிகா, சிலவிகாரமாம் என மூன்று முடிபாக முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– பொதுப்பெயர்** – (இருதிணைகளுக்கும்) பொதுவான பெயர்களுக்கும், **உயர்திணை பெயர்** – உயர்திணைப் பெயர்களுக்கும், **ஈறுமெய்** – இறுதியிலுள்ள மெய்கள், **வலிவரின்** – (வருமொழி முதலில்) வல்லெழுத்துவந்தால், **இயல்பாம்** – இயல்பாகும்; **ஆவியரமுன்** – (பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்களின் இறுதியில் வருகின்ற) உயிரெழுத்துக்களின் முன்னும் யர என்னும் இரண்டு மெய்களின் முன்னும் வருகிற, **வன்மை** – வல்லெழுத்துக்கள், **மிகா** – மிகாவாம்; **சில உயர்திணை** – (மெய் உயிர் ஈற்றுச்) சில உயர்திணைப் பெயர்கள் (நாற்கணங்களோடும் புணருமிடத்து), **விகாரம் ஆம்** – (நிலமொழி வருமொழிகள்) விகாரப்பட்டு வருவனவாம்.

**குறிப்பு :–**

பொதுப்பெயராவது – உயர்திணை அஃறிணை இரண்டிற்கும் பொதுவாய் வரும் பெயர். பொதுப்பெயர், விரவுப்பெயர் என்பன ஒரு பொருளன; (விரவுதல் – கலத்தல்). 'பொதுப்பெய ருயர்திணைப் பெயர்க ளீற்றுமெய்' என்றது ண ன ல ளக்களை என்க. 'வலி' என்றது **க ச த ப**க்களை. நாற்கணமாவன : வன்கணம், மென்கணம், இடைக்கணம், உயிர்க்கணம்.

வல்லினம் வந்தால் திரிதற்குரிய நிலைமொழியீற்று மெய்கள் திரியாமல் இயல்பாதலால் 'ஈற்றுமெய் இயல்பாம்' என்றும். ஆவியரக்களுக்கு முன் மிகுதற்குரிய வருமொழி முதல் வல்லெழுத்துக்கள் மிகாமல் இயல்பாதலால் 'வன்மை மிகா' என்றும் பிரித்துக் கூறினார்.

**உதாரணம்.:–**

| அல்வழி | | வேற்றுமை |
|---|---|---|
| கொற்றன் + குறிது | = கொற்றன்குறிது. | |
| கொற்றன் + சிறிது | = கொற்றன்சிறிது | |
| கொற்றன் + தீது | = கொற்றன்தீது. | |
| கொற்றன் + பெரிது | = கொற்றன்பெரிது. | கொற்றன்கை |

| | | |
|---|---|---|
| கொற்றன் + குறியன் | = கொற்றன்குறியன். | கொற்றன்செவி |
| கொற்றன் + சிறியன் | = கொற்றன்சிறியன் | கொற்றன்றலை |
| கொற்றன் + தீயன் | = கொற்றன்தீயன் | கொற்றன்படை |
| கொற்றன் + பெரியன் | = கொற்றன்பெரியன் | |

(பொதுப் பெயரீற்றுமெய் வலிவர இயல்பாயிற்று. பொதுப்பெயரின் மற்றை யீறுகளின் முன்னும் இவ்வாறே அமைத்துக்காண்க).

| அல்வழி | | வேற்றுமை |
|---|---|---|
| அவன் + குறியன் | = அவன்குறியன் | அவன்கை |
| அவன் + சிறியன் | = அவன்சிறியன் | அவன்செவி |
| அவன் + தீயன் | = அவன்தீயன் | அவன்றலை |
| அவன் + பெரியன் | = அவன்பெரியன் | அவன்படை |

(உயர்திணைப் பெயர்களீற்றுமெய் வலிவர இயல்பாயிற்று)

| அல்வழி | | வேற்றுமை |
|---|---|---|
| சாத்தி + குறிது | = சாத்திகுறிது | |
| சாத்தி + சிறிது | = சாத்திசிறிது | |
| சாத்தி + தீது | = சாத்திதீது | சாத்திகை |
| சாத்தி + பெரிது | = சாத்திபெரிது | சாத்திசெவி |
| சாத்தி + குறியள் | = சாத்திகுறியள் | சாத்திதலை |
| சாத்தி + சிறியள் | = சாத்திசிறியள் | சாத்திபணி. |
| சாத்தி + தீயள் | = சாத்திதீயள் | |
| சாத்தி + பெரியள் | = சாத்திபெரியள் | |

| அல்வழி | | வேற்றுமை |
|---|---|---|
| தாய் + குறிது | = தாய்குறிது | |
| தாய் + சிறிது | = தாய்சிறிது | |
| தாய் + தீது | = தாய்தீது | தாய்கை |
| தாய் + பெரிது | = தாய்பெரிது | தாய்செவி |
| தாய் + குறியள் | = தாய்குறியள் | தாய்தலை |
| தாய் + சிறியள் | = தாய்சிறியள் | தாய்பணி. |
| தாய் + தீயள் | = தாய்தீயள் | |
| தாய் + பெரியள் | = தாய்பெரியள் | |

அல்வழி

நீர் + குறியீர் = நீர்குறியீர். நீர் + தெரியீர் = நீர்தெரியீர்
நீர் + சிறியீர் = நீர்சிறியீர். நீர் + பெரியீர் = நீர்பெரியீர்
(பொதுப்பபெயரீற்று ஆவியரமுன் வன்மை மிகாவாயின)

இப்பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்கள் இருபெயரொட்டுப் பண்புத்தொகையாயவிடத்து வலிமிக்குவருமென்றறிக. இதனைச் 'சில விகாரமாமுயர்திணை' என்றதனுள் அடக்குக.

| அல்வழி | | வேற்றுமை |
|---|---|---|
| நம்பி + குறியன் | = நம்பிகுறியன் | நம்பிகை |
| நம்பி + சிறியன் | = நம்பிசிறியன் | நம்பிசெவி |
| நம்பி + தீயன் | = நம்பிதீயன் | நம்பிதலை |
| நம்பி + பெரியன் | = நம்பிபெரியன் | நம்பிபுறம் |
| அவர் + குறியர் | = அவர்குறியர் | அவர்கை |
| அவர் + சிறியர் | = அவர்சிறியர் | அவர்செவி |
| அவர் + தீயர் | = அவர்தீயர் | அவர்தலை |
| அவர் + பெரியர் | = அவர்பெரியர் | அவர்புறம் |

(உயர்திணைப் பெயரீற்று ஆவி ரகாரமுன் வன்மை மிகாவாயின.)

'சிலவிகாரமாமுயர்திணை' என்றதற்கு வருமொழி முதலெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்ளப்படும்.

**அல்வழி.**

உ–ம் :– கபிலன் + பரணன் = கபிலபரணன்
நம்பி + கொற்றன் = நம்பிக்கொற்றன்
வடுகன் + நாதன் = வடுகநாதன்
அரசன் + வள்ளல் = அரசவள்ளல்
விராடன் + அரசன் = விராடவரசன்

**வேற்றுமை**

ஆசீவகர் + பள்ளி = ஆசீவகப்பள்ளி
குமரன் + கோட்டம் = குமரகோட்டம், குமரக்கோட்டம்

(இருவழியும் உயர்திணையுள் சில தமக்கேற்றபடி விகாரமாயின)

'சில விகாரமா முயர்திணை' எனப் பொதுப்படக்கூறி யிருப்பினும் நிலைமொழி உயர்திணையாகவே யிருத்தல் வேண்டும் என்றறிக. இனி, **ஒப்பின் முடித்தல்** என்னும் உத்தியால் உயர்திணைப் பெயர்ச்சொல்லின் இறுதிபோல உயர்திணை வினைச்சொல்லின் இறுதிகளும் இயல்பாமென்ப.

**உ–ம் :–**

உண்டான்புலவன்.

இச்சூத்திரம் நிலைமொழி வருமொழி இரண்டின் செய்கைக்கும் விதிகூறிற்று

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கள் ஈற்று மெய் வலிவரின் இயல்பு ஆம்**–பொதுப்பெயர்களுக்கும் உயர்திணைப் பெயர்களுக்கும் ஈற்றிலுள்ள மெய்கள் வல்லெழுத்து முதன்மொழிகள் வரின் இயல்பாகும், **ஆவி யர முன் வன்மை மிகா** – உயிரையும் யகர ரகர மெய்களையும் ஈறாகவுடைய அவ் விருவகைப் பெயர்களுக்கும் முன் வரும் வல்லெழுத்துக்கள் மிகாவாம், **உயர்திணை சில விகாரம் ஆம்** – மெய்யீறும் உயிரீறுமாகிய உயர்திணைப் பெயர்களுட் சில பெயர்கள் நாற்கணங்களோடும் புணருமிடத்து நிலைமொழி வருமொழிகள் விகாரப்படுதலும் உடையனவாம், **எ–று.**

பொதுப்பெயராவது உயர்திணை அஃறிணை இரண்டுக்கும் பொதுவாய் வரும் பெயர். பொதுப்பெயர் விரவுப்பெயர் என்பன ஒரு பொருட்சொற்கள். உயர்திணை அஃறிணை இரண்டினும் விரவுதலுடைய பெயர் விரவுப் பெயர். விரவுதல் – கலத்தல்.

நாற்கணமாவன வன்கணம், மென்கணம், இடைக்கணம், உயிர்க்கணம் என்பனவாம்.

நிலைமொழிச் செய்கையாய்த் திரிதற்குரிய எழுத்துக்கள் திரியா தியல்பாதலும், வருமொழிச் செய்கையாய் மிகுதற்குரிய எழுத்துக்கள் மிகாதியல்பாதலும் கருதி, ஈற்றுமெய் இயல்பாம் என்றும், வன்மை மிகா என்றும் பகுத்தோதினார். உயிர்போல வருமொழிச் செய்கையாய் வன்மை மிகுதற் குரியனவாகிய யரழக்கண் மூன்றினுள்ளும் ழகரம் பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்களுக்கு ஈறாகாமையால், இங்கே ஒழிக்கப்பட்டது.

**உ – ம்.: –**

(1) சாத்தன், கொற்றன், ஆண் இவற்றின் முன், குறிது, சிறிது, தீது, பெரிது; குறியன், சிறியன், தீயன், பெரியன்; கை, செவி, தலை, புறம் இவற்றை வருவித்து, சாத்தன்குறிது, சாத்தன்குறியன், சாத்தன் கை என முறையே கூட்டிப், பொதுப்பெயரீற்று னகர ணகர மெய்

இருவழியும் இயல்பாதல் காண்க. ஊரன், அவன் இவற்றின் முன், குறியன், சிறியன், தீயன், பெரியன்; கை, செவி, தலை, புறம் இவற்றை வருவித்து, ஊரன்குறியன், ஊரன்கை என முறையே கூட்டி, உயர்திணைப் பெயரீற்று னகரமெய் இருவழியும் இயல்பாதல் காண்க. தோன்றல், வேள் இவற்றின்முன் குறியன், சிறியன், பெரியன்; கை, செவி, புறம் இவற்றை வருவித்து, தோன்றல்குறியன், தோன்றல்கை என முறையே கூட்டி, உயர்திணைப் பெயரீற்று லகர ளகரமெய் இருவழியும் இயல்பாதல் காண்க. தோன்றல் + தீயன் = தோன்றறீயன், தோன்றல் + தலை = தோன்றறலை எனவும், வேள் + தீயன் = வேடீயன், வேள் + தலை = வேடலை எனவும். லகர ளகர மெய் தகரம் வருமிடத்துக் கெடுதல் மயக்கவிதி யின்மை பற்றி யென்றறிக.

(2) சாத்தி, கொற்றி, தாய் இவற்றின் முன், குறிது, சிறிது, தீது, பெரிது; குறியள், சிறியள், தீயள், பெரியள்; கை, செவி, தலை, புறம் இவற்றை வருவித்து, சாத்தி குறிது, சாத்தி குறியள், சாத்திகை என முறையே கூட்டிப், பொதுப்பெயரீற்று உயிர் யகர முன் வலி இருவழியும் இயல்பாதல் காண்க. நம்பி, விடலை இவற்றின் முன் குறியன், சிறியன், தீயன், பெரியன், கை, செவி, தலை, புறம் இவற்றையும், அவர் ஒருவர் இவற்றின் முன், குறியர், சிறியர், தீயர், பெரியர், கை, செவி, தலை, புறம் இவற்றையும் வருவித்து, நம்பி குறியன், நம்பிகை; அவர்குறியர், அவர்கை என முறையே கூட்டி, உயர்திணைப் பெயரீரற்று உயிர் ரகர முன் வலி இருவழியும் இயல்பாதல் காண்க.

(3) கபிலன் + பரணன் = கபிலபரணர், வடுகன் + நாதன் = வடுகநாதன், அரசன்+வள்ளல் = அரசவள்ளல் இவை ஈறுகெட்டியல்பாய் முடிந்தன. ஆசீவகர்+பள்ளி = ஆசீவகப்பள்ளி, வாணிகர் + தெரு = வாணிகத்தெரு இவை ஈறுகெட்டு, வருமொழி வல்லெழுத்து மிக்கு முடிந்தன. குமரன்+கோட்டம் = குமரகோட்டம், குமரக்கோட்டம், வாசுதேவன் + கோட்டம் = வாசுதேவகோட்டம், வாசுதேவக்கோட்டம் இவை ஈறு கெட்டு, வருமொழி வல்லெழுத்து இயல்பாயும் மிக்கும் முடிந்தன. பார்ப்பான் + கன்னி = பார்ப்பனக்கன்னி இது ஈற்றயல் குறுகி, அகரச் சாரியை பெற்று வருமொழி வல்லெழுத்து மிக்கு முடிந்தது. வேளாளன் + பிள்ளை = வேளாண்பிள்ளை என நிலைமொழி யீற்று அன் கெட்டு ளகரமெய் ணகர மெய்யாகத் திரிந்து

முடிந்தது. மக்கள் + பண்பு = மக்கட்பண்பு, மக்கள் + சுட்டு = மக்கட்சுட்டு என நிலைமொழி யீற்று மெய் திரிந்து முடிந்தது.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கள் ஈற்றுமெய்** – பொதுப் பெயர்களுக்கும் உயர்திணைப் பெயர்களுக்கும் ஈற்றிலுள்ள மெய்கள், – **வலி வரின் இயல்பாம்** – வல்லெழுத்து முதன்மொழிவரின் இயல்பாகும், – **ஆவி யரமுன் வன்மை மிகா** – உயிரையும் யகர ரகரமெய்களையும் ஈறாகவுடைய அவ்விருவகைப் பெயர்களுக்கும் முன் வரும் வல்லெழுத்துக்கள் மிகாவாம், – **உயர்திணை சில விகாரமாம்** – மெய்யீறும் உயிரீறுமாகிய உயர்திணைப் பெயர்களுட் சிலபெயர்கள் நாற்கணங்களோடும் புணருமிடத்து நிலைமொழிவருமொழிகள் விகாரப்படுதலும் உடையனவாம். **எ–று.**

பொதுப்பெயராவது உயர்திணை அஃறிணை இரண்டுக்கும் பொதுவாய் வரும்பெயர். பொதுப்பெய ரெனினும் விரவுப்பெயரெனினும் ஒக்கும். உயர்திணை அஃறிணை இரண்டிலும் விரவுதலுடைய பெயர் விரவுப் பெயர். விரவுதல் – கலத்தல்.

**நாற்கணமாவன:–** வன்கணம், மென்கணம், இடைக்கணம், உயிர்க்கணம் என்பனவாம்.

நிலைமொழிச்செய்கையாய்த் திரிதற்குரிய எழுத்துக்கள் திரியாதியல் பாதலும், வருமொழிச்செய்கையாய் மிகுதற் குரிய எழுத்துக்கள் மிகாதியல் பாதலுங்கருதி, ஈற்றுமெய் இயல்பாமென்றும் வன்மை மிகா என்றும் பகுதித் தோதினார். நிலைமொழியீற்றுயிர்போல (வருமொழிச் செய்கையாய் வன்மைமிகுதற் குரியனவாகிய) யாரழக்கண் மூன்றினுள்ளும் ழகரம் பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்களுக்கு ஈறாகாமையால் இங்கே ஒழிக்கப்பட்டது.

**உ–ம்.:–**

(1)சாத்தன், கொற்றன், ஆண் இவற்றின்முன் குறிது, சிறிது, தீது, பெரிது; குறியன், சிறியன், தீயன், பெரியன்; கை, செவி, தலை, புறம் இவற்றை வருவித்து சாத்தன் குறிது, சாத்தன் குறியன், சாத்தன் கை என முறையே கூட்டிப் பொதுப்பெயரீற்று னகரணகரமெய் இருவழியும் இயல்பாதல் காண்க.

ஊரன், அவன் இவற்றின் முன் குறியன், சிறியன், தீயன்,

பெரியன், கை, செவி, தலை, புறம் இவற்றை வருவித்து ஊரன்குறியன், ஊரன்கை என முறையே கூட்டி உயர்திணைப் பெயரீற்று னகரமெய் இருவழியும் இயல்பாதல் காண்க.

தோன்றல், வேள் இவற்றின்முன் குறியன், சிறியன், பெரியன், கை, செவி, புறம் இவற்றை வருவித்து தோன்றல் குறியன், தோன்றல் கை என முறையே கூட்டி உயர்திணைப் பெயரீற்று லகரளகரமெய் இருவழியும் இயல்பாதல்காண்க.

தோன்றல் + தீயன் = தோன்றறீயன், தோன்றல் + தலை = தோன்றறலை. எனவும். வேள் + தீயன் = வேடீயன், வேள் + தலை = வேடலை. எனவும். லகர ளகரமெய் தகரம் வருமிடத்துக் கெடுதல் மயக்கவிதி யின்மை பற்றியென்றறிக.

(2)சாத்தி, கொற்றி, தாய் இவற்றின்முன் குறிது, சிறிது, தீது, பெரிது; குறியள், சிறியள், தீயள், பெரியள்; கை, செவி, தலை, புறம் இவற்றை வருவித்து சாத்தி குறிது, சாத்தி குறியள்; சாத்திகை என முறையே கூட்டிப் பொதுப்பெயரீற்று உயிர்முன்னும் யகரவொற்றின்முன்னும் வலி இருவழியும் இயல்பாதல் காண்க.

நம்பி, விடலை இவற்றின்முன் குறியன், சிறியன், தீயன், பெரியன், கை, செவி, தலை, புறம் இவற்றை வருவித்து நம்பிகுறியன், நம்பிகை என முறையே கூட்டியும், அவர், ஒருவர் இவற்றின்முன் குறியர், சிறியர், தீயர், பெரியர்; கை, செவி, தலை, புறம் இவற்றை வருவித்து அவர் குறியர்; அவர்கை என முறையே கூட்டியும் உயர்திணைப் பெயரீற்று உயிர்முன்னும் ரகரவொற்றின் முன்னும் வலி இருவழியு மியல்பாதல் காண்க.

(3)கபிலன் + பரணன் = கபிலபரணர், வடுகன் + நாதன் = வடுகநாதன், அரசன் + வள்ளல் = அரசவள்ளல். இவை நிலைமொழி யீறுகெட்டு வருமொழி இயல்பாய் முடிந்தன.

ஆசீவகர் + பள்ளி = ஆசீவகப்பள்ளி, வாணிகர் + தெரு = வாணிகத் தெரு, இவை நிலைமொழி ஈறுகெட்டு வருமொழி வல்லெழுத்து மிக்குமுடிந்தன.

குமரன் + கோட்டம் = குமரகோட்டம், குமரக்கோட்டம்; வாசுதேவன் + கோட்டம் = வாசுதேவகோட்டம், வாசுதேவக் கோட்டம் இவை நிலைமொழியீறு கெட்டு வருமொழி வல்லெழுத்து இயல்பாயும், மிக்கும் முடிந்தன.

பார்ப்பான் + கன்னி = பார்ப்பனக்கன்னி இது நிலைமொழியீற்றயல் குறுகி அகரச்சாரியை யீற்றிற்பெற்று வருமொழி வல்லெழுத்து மிக்குமுடிந்தது. வேளாளன் + பிள்ளை = வேளாண்பிள்ளை என நிலைமொழியீற்று அன்கெட்டு ளகரமெய் ணகரமெய்யாகத் திரிந்து முடிந்தது.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.: பொதுப்பெயர்** – (இருதிணைகட்கும்) பொதுவான பெயர்களுக்கும், **உயர்திணைப் பெயர்கள்** – உயர்திணைப் பெயர்களுக்கும், **ஈறு மெய்** – இறுதியிலுள்ள மெய்கள், **வலி வரின்** – (வருமொழி முதலில்) வல்லெழுத்து வந்தால், **இயல்புஆம்** – இயல்பாகும், **ஆ வி ய ர முன்**– (பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்களின் ஈற்றில் வருகின்ற) உயிரெழுத்துக்களின் முன்னும் யகர ரகர மெய்களின் முன்னும் வருகின்ற, **வன்மை** – வல்லெழுத்துக்கள், **மிகா** – மிகாவாம்; (இவ்வாறன்றி), **சில உயர்திணை** – (மெய்யீறும் உயிரீறுமாகிய) சில உயர்திணைப் பெயர்கள், (நாற் கணங்களோடும் புணருமிடத்து), **விகாரம் ஆம்** – (நிலைமொழி வருமொழிகள்) விகாரப்பட்டு வருதலும் உண்டு; **எ–று.**

பொதுப்பெயராவது – உயர்திணை அஃறிணை இரண்டுக்கும் பொதுவாக வரும் பெயர். பொதுப்பெயர் விரவுப்பெயர் என்பன ஒருபொருட் சொற்கள். உயர்திணை அஃறிணை இரண்டிலும் கலத்தலுடைய பெயர் – விரவுப்பெயர்; விரவுதல் – கலத்தல்.

'வலி' 'வன்மை' என்றது – மொழிக்கு முதலில் வரும் க ச த பக்களை.

நாற்கணமாவன–வன்கணம், மென்கணம், இடைக்கணம், உயிர்க்கணம்.

வல்லினம் வந்தால் திரிதற்கு உரிய நிலைமொழி யீற்று மெய்யெழுத்துக்கள் (ண் ள் ன் ல்) திரியாமல் இயல்பாதல் பற்றி 'ஈற்றுமெய் இயல்பாம்' என்றும், ஆவி யரக்களின் முன் மிகுதற்கு உரிய வருமொழி முதல் வல்லெழுத்துக்கள் மிகாமல் இயல்பாதல் பற்றி 'வன்மை மிகா' என்றும் பிரித்துக் கூறினார். (முன்னது, நிலைமொழி யீற்றை நோக்கியது; பின்னது, வருமொழி முதலை நோக்கியது.)

உதாரணம்:—

| (1) அல்வழி | வேற்றுமை. |
|---|---|
| ஆண் + குறியன் = ஆண்குறியன். | ஆண் + கை = ஆண்கை. |
| ஆண் + சிறிது = ஆண்சிறிது. | ஆண்+ செவி = ஆண்செவி. |
| சாத்தன் + தீயன் = சாத்தன்றீயன். | சாத்தன் + தலை = சாத்தன் றலை. |
| சாத்தன் + பெரிது = சாத்தன்பெரிது. | சாத்தன்+புறம்= சாத்தன்புறம். |
| நான் + சிறியேன் = நான் சிறியேன் | |

எனப் பொதுப்பெயரீற்று மெய் வலி வர இயல்பாயின; பிறவும் காண்க.

'சாத்தன்' என்பது, ஒரு தெய்வத்தின் பெயராதலாலும், மனிதர்க்கும் விலங்குக்கும் பெயராக இடப்படுதலாலும், இருதிணைப் பொதுப்பெயராம்.

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| அவள் + குறியள் = அவள்குறியள் | தையல்+பெருமை= தையல் பெருமை |
| மகன் + சிறியன் = மகன்சிறியன் | மகன் + தலை = மகன்றலை. |
| குரிசில் + பெரியன் = குரிசில் பெரியன். | வேள் + சிறுமை = வேள் சிறுமை. |

என உயர்திணைப் பெயரீற்று மெய் வலி வர இயல்பாயின.

| 2. அல்வழி | வேற்றுமை |
|---|---|
| பிள்ளை + சிறியன் = பிள்ளைசிறியன் | சாத்தி + கை = சாத்திகை. |
| பிள்ளை + சிறிது = பிள்ளைசிறிது | சாத்தி + செவி = சாத்திசெவி |
| நீ + குறியை = நீகுறியை | தாய் + தலை = தாய்தலை. |
| நீர் + குறியீர் = நீர்குறியீர். | தாய் + பொருள் = தாய்பொருள். |

எனப் பொதுப்பெயரீற்று ஆவி யகர ரகர முன் வன்மை மிகாவாயின.

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| நம்பி + குறியன் = நம்பிகுறியன் | நங்கை + தலை = நங்கைதலை |
| சேய் + சிறியன் = சேய்சிறியன். | சேய் + சிறுமை = சேய்சிறுமை. |
| அவர் + பெயர் = அவர்பெயர். | அவர்+ பெருமை = அவர் பெருமை. |

என உயர்திணைப் ஏபெயரீற்று ஆவி யகர ரகர முன் வன்மை மிகா வாயின.

3. 'சிலவிகாரமா முயர்திணை' என்றதற்கு, வருமொழி முதலெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமும் கொள்ளப்பட்டன.

உ—ம்.:

கபிலன் + பரணன் கபிலபரணர்

| | | |
|---|---|---|
| நம்பி + கொற்றன் | : | நம்பிக்கொற்றன் அல்வழி. |
| வடுகன் + நாதன் | : | வடுகநாதன் |
| அரசன் + வள்ளல் | : | அரசவள்ளல் |
| விராடன் + அரசன் | : | விராடவரசன் |
| ஆசீவகர் + பள்ளி | : | ஆசீவகப்பள்ளி |
| மக்கள் + குணம் | : | மக்கட் குணம் |
| நளன் + வெண்பா | : | நளவெண்பா வேற்றுமை |
| குமரன் + கோட்டம் | : | குமரகோட்டம், குமரக்கோட்டம் |

என இருவழியும் உயர்திணையுள் சில தமக்கு ஏற்றபடி விகாரமாயின.

## பவானந்தம் பிள்ளை

இ–ள். பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கள் ஈற்று மெய் – பொதுபெயர்களுக்கும் உயர்திணைப் பெயர்களுக்கும் ஈற்றிலுள்ள மெய்கள், வலி வரின் இயல்பு ஆம் – வல்லெழுத்து முதன்மொழிகள் வரின் இயல்பாகும். ஆவியரமுன் வன்மை மிகா – உயிரையும் யகர ரகர மெய்களையும் ஈறாகவுடைய அவ்விரவகைப் பெயர்களுக்கும் முன் வரும் வல்லெழுத்துக்கள் மிகாவாம். உயர்திணை சில விகாரம்ஆம் – (மெய்யீறும் உயிரீறுமாகிய) உயர்திணைப் பெயர்களுட் சில பெயர்கள் (நாற்கணங்களோடும் புணருமிடத்து நிலைமொழி வருமொழிகள்) விகாரப்படுதலும் உடையனவாம். எ–று.

பொதுப்பெயராவது, உயர்திணை அஃறிணை இரண்டுக்கும் பொருவாய் வரும் பெயர்.

நாற்கணமாகவன வன்கணம், மென்கணம், இடைக்கணம், உயிர்க்கணம் என்பனவாம்.

'பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்க ளிற்று மெய்' என்றது ண், ன், ல், ள் என்னும் இந் நான்கு மெய்களை. 'வலி' என்றது மொழிக்கு முதலாகவரும் வல்லெபத்துக்களை; அவையாவன க, ச, த, ப, என்பன.

நிலைமொழிச் செய்கையாய்த் திரிதற்குரிய எழுத்துக்கள் திரியாதியல்பாதல் கதுதி 'ஈற்றுமெய் இயல்பாம்' என்றும், வருமொழிச் செய்கையாய் மிகுதற்குரிய எழுத்துக்கள் மிகா தியல்பாதல் கருதி 'வன்மை மிகா' என்றும் பகுத்தோதினார். உயிர்போல வருமொழிச் செய்கையாய் வன்மை மிகுதற்

குரியனவாகிய யரழக்கண் மூன்றினுள்ளும் ழகரம் பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்களுக்கு ஈறாகாமையால் இங்கே ஒழிக்கப்பட்டது.

(1) 'பொதுப்பெய ருயர்திணைப்பெயர்களீற்று மெய் வலிவரினியல்பாம்'

உ–ம்.:– + குறிது

+ சிறிது

+ தீது

+ பெரிது

+ சிறியன்

+ தீயன்

+குறியன்

+ பெரியன்

சாத்தன் கொற்றன் ஆண் – அல்வழி, சாத்தன் குறிது, சாத்தன் குறியன், சாத்தன் கை எ முறையே கூட்டிப், பொதுபெயரீற்று னகர ணகர மெய் இருவழியும் இயல்பாதல் காண்க.

+ கை

+ செவி

+ தலை

+ புறம்–வேற்றுமை

+ குறியன்

+ சிறியன்

+ தீயன்

+ பெரியன்

ஊரன்– அல்வழி

அவன் – + கை

+ செவி()

+ தலை

+ புறம் – வேற்றுமை

ஊரன் குறியன் ஊரன் கை என முறையே கூட்டி, உயர்திணைப் பெயரீற்று னகர மெய் இருவழியும் இயல்பாதல் காண்க.

தோன்றல் –குறியன்

சிறியன்

பெரியன்–அல்வழி

வேள்–கை

செவி

புறம் – வேற்றுமை

தோன்றல் குறியன், தோன்றல் கை; வேள்குறியன், வேள்கை, என முறையே கூட்டி உயர்திணைப் பெயரீற்று லகர ளகர மெய் இருவழியும் இயல்பாதல் காண்க.

தோன்றல் + தீயன் = தோன்றறீயன், தோன்றல் + தலை = தோன்றறலை.

வேள் + தீயன் = வேடீயன், வேள் + தலை = வேடலை. என லகர ளகர மெய் தகரம் வருமிடத்துக் கெடுதல் மயக்கவிதி யின்மை பற்றி யென்றறிக.

(2) 'ஆவியரமுன் வன்மை மிகா'

உ–ம்:–

சாந்தி கொற்றியதாய் – + குறிது

+ சிறிது

+ தீது

+ பெரிது

+ சிறியன்

+ தீயன்

+குறியன்

+ பெரியன்– அல்வழி

+ கை

+ செவி

+ தலை

+ புறம்–வேற்றுமை

சாத்திகுறிது, சாத்திகை, தாய்குறிது, தாய்கை என முறையே கூட்டிப் பொதுபெயரீற்று உயிர் யகரமுன் வலி இருவழியும் இயல்பாதல் காண்க.

நம்பி விடலை – + குறியன்

+ சிறியன்

+ தீயன்

+ பெரியன்– அல்வழி

+ கை

+ செவி

+ தலை

+ புறம் – வேற்றுமை

அவர் – குறியர்

சிறியர்

தீயர்

பெரியர்–அல்வழி

ஒருவர் –கை

செவி

தலை

புறம் – வேற்றுமை

நம்பிகுறியன், நம்பிகை, அவர்குறியர், அவர்கை என முறையே கூட்டி, உயர்திணைப் பெயரீற்று உயிர் ரகர முன் வலி இருவழியும் இயல்பாதல் காண்க.

(3) 'சில விகாரமா முயர்திணை',

உ–ம்.:–

கபிலன் + பரணன் = கபிலபரணர், வடுகன் + நாதன் = வடுகநாதன், அரசன் + வள்ளல் = அரசவள்ளல், (இவை டுகெட் டியல்பாய் முடிந்தன.) ஆசீவகர் + பள்ளி = ஆசீவகப்பள்ளி, வாணிகர் + தெரு = வாணிகத்தெரு (இவை ஈறுகெட்டு, வருமொழி வல்லெழுத்து மிககு முடிந்தன.) குமரன் + கோட்டம் = குமரகோட்டம், குமரக்கோட்டம்; வாசுதேவன் + கோட்டம் = வாசுதேவகோட்டம், வாசுதேவக்கோட்ம் (இவை ஈறு கொட்டு, வருமொா வல்லெழுத்து இயல்பாயும் மிககும் முடிந்தன.) பார்ப்பான் + கன்னி = பார்ப்பனக்கன்னி (இது ஈற்றயல் குறுகி, அகரச் சாரியை பெற்று வருமொழி வல்லெபத்து மிக்கு முடிந்தது.) வேளாளன் + பிள்ளை = வேளாண்பிள்ளை (நிலைமொழி யீற்று அன் கெட்டு ளகர மெய் ணகர மெய்யாகத் திரிந்து முடிந்தது.) மக்கள் + பண்ணு = மக்கட் பண்பு, மக்கள் + சுட்டு = மக்கட்சுட்டு (நிலைமொழி யீற்று மெய் திரிந்து முடிந்தது.)

ஒப்பின் முடித்தல் என்னும் உத்தியால் உயர்திணைப் பெயர்ச்

சொல் இறுதிகள் போல உயர்திணை வினைச்சொல் இறுதிகளும் வலிவரின் இயல்பாம் எனக் கூறி, உண்டான் குமரன், உண்டாள் குமரி, உண்டார் குமரர், ஓதுப புலவர் என உதாரணங் காட்டுவர் இராமானுஜ கவிராயர்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள்.:– பொதுப் பெயர்**–(இருதிணைகளுக்கும்) பொதுவான பெயர்களுக்கும், **உயர்திணைப் பெயர்கள்** – உயர்திணைப் பெயர்களுக்கும், **ஈறு மெய்** –ஈற்றிலுள்ள மெய்கள், **வலி வரின்** – வல்லெழுத்து (முதன் மொழிகள்) வந்தால், **இயல்பாம்** – இயல்பாகும்; **ஆவி** – உயிரையும், யகர ரகர மெய்களையும் (ஈறாகவுடைய அவ் விருவகைப் பெயர்களுக்கும்), **முன்**– முன்வருகிற, **வன்மை** – வல்லெழுத்துக்கள், **மிகா** – மிகாவாம்; **உயர்திணை** – (உயிரீறு மெய்யீறுமாகிய) உயர்திணைப் பெயர்கள் (நாற்கணங்களோடும் புணருமிடத்து), **சில விகாரம் ஆம்**–(நிலைமொழி வருமொழிகள்) விகாரப்படுவனவும் சில உளவாம். **எ–று.**

**பொ–ரை.:–**

(இருதிணைகளுக்கும்) பொதுவான பெயர்களுக்கும், உயர்திணைப் பெயர்களுக்கும் ஈறானமெய்கள், வல்லெழுத்தை (முதலிலுள்ள மொழிகள்) வந்தால் இயல்பாம்; உயிரையும், யகர ரகர மெய்களையும் (இறுதியிலுடைய அவ்விருவகைப் பெயர்களின்) பின்வரும் க ச த பக்கள் மிகா ஆம்; (உயிரீறும் மெய்யீறுமாகிய உயர்திணைப் பெயர்களில் சில, (நாற்கணங்களோடும் புணர்ந்தால்) விகாரப்படுவனவும் உண்டு.

(நாற்கணம் – வன்கணம் (வல்லெழுத்து), மென்கணம் (மெல்லெழுத்து), இடைக்கணம் (இடையெழுத்து), உயிர்க்கணம் (உயிரெழுத்து).

இங்கும், பின்வருஞ் சூத்திரங்களிலும், வலி மெலி முதலியன என்றால் அந்தந்தக் கணங்களில் மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களையே குறித்ததாகக் கொள்ளல் வேண்டும்.

**அல்வழி**

**உ–ம்.:–**

சாத்தன்+குறிது = சாத்தன்குறிது.

சிறிது = சாத்தன்சிறிது.

தீது = சாத்தன்றீது.

பெரிது = சாத்தன்பெரிது.

குறியன் = சாத்தன்குறியன்.

சிறியன் = சாத்தன்சிறியன்.

தீயன் = சாத்தன்றீயன்.

பெரியன்=சாத்தன்பெரியன்.

**வேற்றுமை**

சாத்தன்+கை = சாத்தன் கை.

செவி = சாத்தன்செவி.

தலை = சாத்தன்றலை.

புறம் = சாத்தன்புறம்.

கொற்றன், ஆண் முதலியவற்றோடும் மேலே காட்டியபடியே கூட்டிப் பொதுப்பெயரீற்றுமெய் வலிவர, இருவழியிலும் இயல்பாதல் காண்க.

(சாத்தன் என்பது ஒரு தெய்வத்தின் பெயராதலானும், மனிதர்க்கும் விலங்குக்கும் பெயராக இடப்படுத லானும் இருதிணைப் பொதுப் பெயராம். கொற்றன், ஆண் முதலியனவும் அங்ஙனமே உய்த்துணர்க.

பொதுப்பெயராவது உயர்திணை அஃறிணை இரண்டற்கும் பொதுவாக வரும்பெயர். பொதுப்பெயர் விரவுப்பெய ரென்பன ஒரு பொருட்சொற்கள். (விரவுப்பெயர் – இரண்டு திணையிலும் கலத்தலையுடைய பெயர்.)

**அல்வழி**

ஊரன் + குறியன் = ஊரன்குறியன்.

சிறியன் = ஊரன்சிறியன்.

தீயன் = ஊரன்றீயன்.

பெரியன் = ஊரன்பெரியன்.

**வேற்றுமை**

ஊரன் + கை = ஊரன்கை.

செவி = ஊரன்செவி.

தலை = ஊரன்தலை.

புறம் = ஊரன்புறம்.

கூனன், அவன் முதலியவற்றோடும் மேலே காட்டியபடியே

கூட்டி, உயர்திணைப்பெயரீற்றுமெய் வலிவர இருவழியும் இயல்பாதல் காண்க.

**அல்வழி**

சாத்தி+குறிது = சாத்திகுறிது.

சிறிது = சாத்திசிறிது.

தீது = சாத்திதீது.

பெரிது = சாத்திபெரிது.

குறியள் = சாத்திகுறியள்.

சிறியள் = சாத்திசிறியள்.

தீயள் = சாத்திதீயள்.

பெரியள் – சாத்திபெரியள்.

தாய்+குறிது = தாய்குறிது.

சிறிது = தாய்சிறிது.

தீது = தாய்தீது.

பெரிது = தாய்பெரிது.

குறியள் = தாய்குறியள்.

சிறியள் = தாய்சிறியள்.

தீயள் = தாய்தீயள்.

பெரியள் = தாய்பெரியள்.

**வேற்றுமை**

சாத்தி+கை = சாத்திகை

செவி = சாத்திசெவி.

தலை = சாத்திதலை

புறம் = சாத்திபுறம்.

தாய்+கை = தாய்கை.

செவி = தாய்செவி.

தலை = தாய்தலை.

புறம் = தாய்புறம்.

எனப் பொதுப்பெய ரீற்றுயிரின் முன்னும், யகரத்தின் முன்னும் வலி இருவழியும் இயல்பாயின. கொற்றி யென்பதற்குங் கூட்டிக்காண்க. மற்றவையு மிப்படியே.

நீர்+குறியீர்=நீர்குறியீர். இப்படியே சிறியீர், தீயீர், பெரியீர்

என்பவற்றைக் கூட்டி ரகரவீற்றுப் பொதுப்பெயர் அல்வழியில் மாத்திரம் இயல்பாதலறிக.

**அல்வழி**

நம்பி+குறியன் = நம்பிகுறியன்.

சிறியன் = நம்பிசிறியன்.

தீயன் = நம்பிதீயன்.

பெரியன் = நம்பிபெரியன்.

அவர்+குறியர் = அவர்குறியர்.

சிறியர் = அவர்சிறியர்.

தீயர் = அவர்தீயர்

பெரியர் = அவர்பெரியர்.

**வேற்றுமை**

நம்பி+கை = நம்பிகை.

செவி = நம்பிசெவி.

தலை = நம்பிதலை.

புறம் = நம்பிபுறம்.

அவர்+கை = அவர்கை.

செவி = அவர்செவி.

தலை = அவர்தலை.

புறம் = அவர்புறம்.

விடலை, ஒருவர் முதலியவற்றோடும் மேலே காட்டியபடி கூட்டி, உயர்திணை ஈற்றுயிரின் முன்னும், ரகரத்தின் முன்னும் வலி இருவழியும் இயல்பாதல் காண்க.

**அல்வழி.**

கபிலன் + பரணன் = கபிலபரணர்.

வடுகன் + நாதன் = வடுகநாதன்.

அரசன் + வள்ளல் = அரசவள்ளல்.

விராடன் + அரசன் = விராடவரசன்.

**வேற்றுமை.**

ஆசீவகன்+பள்ளி = ஆசீவகப்பள்ளி.

குமரன்+கோட்டம்=குமர கோட்டம். குமரக்கோட்டம்.

என இருவழியும் உயர்திணையுள் சில தமக் கேற்ற

விகாரமாயின; மற்றவைகளும் மிப்படியே. 'சில விகாரமா முயர்திணை' என்றதற்கு வருமொழி முதலெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்ளப்பட்டன. வல்லினம் வந்தால் திரிதற்குரிய நிலை மொழியீற்று மெய்யெழுத்துக்கள் (ண் ள் ன் ல்) திரியாமல் இயல்பாதல் பற்றி, 'ஈற்றுமெய் இயல்பாம்' என்றும், ஆவி ய ரக்களின் முன் மிகுதற் குரிய வருமொழி முதல் வல்லெழுத்துக்கள் மிகாமல் இயல்பாதல்பற்றி, 'வன்மை மிகா' என்றும் பிரித்துக் கூறினார்.

(முன்னது நிலைமொழி யிற்றை நோக்கியது. பின்னது வருமொழி முதலை நோக்கியது.)

## கா.நமச்சிவாய முதலியார்

(1) **பொதுப்பெயர்** – (இருதிணைகளுக்கும்) பொதுவான பெயர்களுக்கும், **உயர்திணைப் பெயர்கள்** – உயர்திணைப் பெயர்களுக்கும், **ஈற்றுமெய்** – ஈற்றிலுள்ள மெய்கள், **வலி** – வல்லெழுத்து முதன் மொழிகள், **வரின்** – வந்தால், **இயல்பாம்** – இயல்பாகும்.

(2) **ஆவி** – உயிரையும், **யர** – யகர ரகர மெய்களையும் ஈறாகவுடைய அவ்விருவகைப் பெயர்களுக்கும், **முன்**–முன் வருகிற, **வன்மை** – வல்லெழுத்துக்கள், **மிகா** – மிகாவாம் ;

(3) **உயர்திணை** – உயிரீறும் மெய்யீறுமாகிய உயர்திணைப் பெயர்கள் நாற்கணங்களோடும் புணருமிடத்து, **சில விகாரமாம்** – நிலைமொழி வருமொழிகள் விகாரப்படுவனவுஞ் சில வுளவாம் ;

> இச் சூத்திரத்துள் முதல் விதி நிலைமொழியை நோக்கியது ; இரண்டாம் விதி வருமொழியை நோக்கியது.
>
> பொதுப் பெயராவது, உயர்திணை அஃறிணை இரண்டுக்கும் பொதுவாக வரும்பெயர். பொதுப்பெயர், விரவுப்பெயர் என்பன ஒருபொருட் சொற்கள் விரவுப்பெயர் – (உயர்திணையிலும் அஃறிணையிலும்) கலத்தலுடைய பெயர்.
>
> வலி என்றது – மொழிக்கு முதலில்வரும் க ச த பக்களை. நாற்கணமாவன – வன்கணம், மென்கணம், இடைக்கணம், உயிர்க்கணம் என்பனவாம்.

**உதாரணம்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) | சாத்தன் | + | குறிது | : | சாத்தன்குறிது | |
| | | + | சிறிது | : | சாத்தன்சிறிது | |
| | | + | தீது | : | சாத்தன்றீது | |
| | | + | பெரிது | : | சாத்தன்பெரிது | |
| | | + | குறியன் | : | சாத்தன்குறியன் | – அல்வழி |
| | | + | சிறியன் | : | சாத்தன்சிறியன் | |
| | | + | தீயன் | : | சாத்தன்றீயன் | |
| | | + | பெரியன் | : | சாத்தன்பெரியன் | |
| | சாத்தன் | + | கை | : | சாத்தன்கை | |
| | | + | செவி | : | சாத்தன்செவி | |
| | | + | தலை | : | சாத்தன்றலை | – |
| **வேற்றுமை** | | | | | | |
| | | + | புறம் | : | சாத்தன்புறம் | |

எனப் பொதுப்பெயரீற்று மெய் வலி வர இயல்பாயின.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஊரன் | + | குறியன் | : | ஊரன்குறியன் | |
| | + | சிறியன் | : | ஊரன்சிறியன் | – அல்வழி |
| | + | தீயன் | : | ஊரன்றீயன் | |
| | + | பெரியன் | : | ஊரன்பெரியன் | |
| ஊரன் | + | கை | : | ஊரன்கை | |
| | + | செவி | : | ஊரன்செவி | – |
| **வேற்றுமை** | | | | | |
| | + | தலை | : | ஊரன்றலை | |
| | + | புறம் | : | ஊரன்புறம் | |

என உயர்திணைப் பெயரீற்று மெய் வலி வர இயல்பாயின.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (2) | சாத்தி | + | குறிது | : | சாத்திகுறிது | |
| | | + | சிறிது | : | சாத்திசிறிது | |
| | | + | தீது | : | சாத்திதீது | |
| | | + | பெரிது | : | சாத்திபெரிது | |
| | | + | குறியள் | : | சாத்திகுறியள் | |
| | | + | சிறியள் | : | சாத்திசிறியள் | |
| | | + | தீயள் | : | சாத்திதீயள் | |
| | | + | பெரியள் | : | சாத்திபெரியள் | |
| | தாய் | + | குறிது | : | தாய்குறிது | – அல்வழி |
| | | + | சிறிது | : | தாய்சிறிது | |
| | | + | தீது | : | தாய்தீது | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | + | பெரிது | : | தாய்பெரிது | |
| | + | குறியள் | : | தாய்குறியள் | |
| | + | சிறியள் | : | தாய்சிறியள் | |
| | + | தீயள் | : | தாய்தீயள் | |
| | + | பெரியள் | : | தாய்பெரியள் | |
| நீர் | + | குறியீர் | : | நீர்குறியீர் | |
| | + | சிறயீர் | : | நீர்சிறியீர் | |
| | + | தீயீர் | : | நீர்தீயீர் | – அல்வழி |
| | + | பெரியீர் | : | நீர்பெரியீர் | |
| சாத்தி | + | கை | : | சாத்திகை | |
| | + | செவி | : | சாத்திசெவி | |
| | + | தலை | : | சாத்திதலை | –வேற்றுமை |
| | + | புறம் | : | சாத்திபுறம் | |
| தாய் | + | கை | : | தாய்கை | |
| | + | செவி | : | தாய்செவி | – |
| **வேற்றுமை** | | | | | |
| | + | தலை | : | தாய்தலை | |
| | + | புறம் | : | தாய்புறம் | |

எனப் பொதுப்பெயரீற்று ஆவி ய ர முன் வன்மை மிகாவாயின.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நம்பி | + | குறியன் | : | நம்பிகுறியன் | |
| | + | சிறியன் | : | நம்பிசிறியன் | |
| | + | தீயன் | : | நம்பிதீயன் | |
| | + | பெரியன் | : | நம்பிபெரியன் | |
| அவர் | + | குறியர் | : | அவர்குறியர் | – அல்வழி |
| | + | சிறியர் | : | அவர்சிறியர் | |
| | + | தீயர் | : | அவர்தீயர் | |
| | + | பெரியர் | : | அவர்பெரியர் | |
| நம்பி | + | கை | : | நம்பிகை | |
| | + | செவி | : | நம்பிசெவி | |
| | + | தலை | : | நம்பிதலை | |
| | + | புறம் | : | நம்பிபுறம் | |
| அவர் | + | கை | : | அவர்கை | |
| **வேற்றுமை** | | | | | |
| | + | செவி | : | அவர்செவி | |
| | + | தலை | : | அவர்தலை | |

+ புறம் = அவர்புறம்

என உயர்திணைப் பெயரீற்று ஆவி ரகரமுன் வன்மை மிகாவாயின.

'சிலவிகாரமாம் உயர்திணை' என்றதற்கு, வருமொழி முதலெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுங் கொள்க.

**உதாரணம்**

| | | | |
|---|---|---|---|
| (3) கபிலன் + பரணன் | = | கபிலபரணன் | |
| வடுகன் + நாதன் | = | வடுகநாதன் | – அல்வழி |
| அரசன் + வள்ளல் | = | அரசவள்ளல் | |
| ஆசீவகன் + பள்ளி | = | ஆசீவகப்பள்ளி | |
| குமரன் + கோட்டம் | = | குமரகோட்டம் | –வேற்றுமை |
| | | குமரக்கோட்டம் | |

என இருவழியும் உயர்திணையுள் சில தமக்கு ஏற்றவாறு விகாரமாயின.

## மோசசு பொன்னையா

பொதுப் பெயர்களுக்கும் உயர்திணைப் பெயர்களுக்கும் ஈற்றிலுள்ள மெய்கள் வல்லெழுத்து முதன்மொழிகள் வரின் இயல்பாகும்; அவற்றின் ஈற்றிலுள்ள உயிர் எழுத்துக்களின் முன்னரும், யகர ரகர மெய்களின் முன்னரும் வரும் வல்லெழுத்துக்கள் மிகாவாம்; மெய்யீறும் உயிரீறுமாகிய சில உயர்திணைப் பெயர்களின் முன்னர் உயிர், வலி, மெலி, இடை என்னும் நாற்கணமும் வந்து புணருங்கால் நிலைவருமொழிகள் விகாரமடைதலும் உண்டு, **எ–று.**

உயர்திணை அஃறிணைகட்குப் பொதுவாய் வரும் பெயர் பொதுப்பெயர் எனவும் விரவுப்பெயர் எனவும் வழங்கும்.

**எ–டு.:–**

| **அல்வழி** | **வேற்றுமை** | |
|---|---|---|
| ஆண்குறியன் | ஆண்கை | பொதுப்பெயர் – மெய் |
| சாத்தன் பெரியன் | சாத்தன் புறம் | ஈற்றின் முன்னர் வலி வர |
| நான் சிறியன் | | இயல்பாயின. |
| அவள் குறியள் | தையல் பெருமை | உயர்திணைப் பெயர் – மெய் |
| மகன் சிறியன் | மகன் சிலை | ஈற்றின் முன்னர் வலி வர |
| குரிசில் பெரியன் | வேள் சிறுமை | இயல்பாயின. |

| | | |
|---|---|---|
| பிள்ளை சிறியன் | சாத்தி கை | பொதுப்பெயர் – ஆவி, ய, ர |
| பிள்ளை சிறிது | சாத்தி செவி | ஈற்றின் முன்னர் வன்மை |
| நீ குறியை | தாய் தலை | மிகாவாயின. |
| நீர் குறியீர் | தாய் பொருள் | உயர்திணைப் பெயர் ஆவி, |
| நம்பி குறியன் | நங்கை தலை | ய, ர ஈற்றின் முன்னர் |
| சேய் சிறியன் | சேய் சிறுமை | வன்மை மிகாவாயின. |
| அவர் பெரியர் | அவர் பெருமை | |
| கபிலபரணர் | ஆசீவகப்பள்ளி | |
| நம்பிக்கொற்றன் | மக்கட் குணம் | உயர் திணையுள் சில |
| வடுகநாதன் | நளவெண்பா | தமக்கேற்றபடி |
| அரசவள்ளல் | குமரகோட்டம் | விகாரமாயின. |
| விராடவரசன் | குமரக்கோட்டம் | |
| | வேளாண் பிள்ளை | |
| | வணிகத் தெரு | |

மயக்க விதியின்மையின் தோன்றறீயன், தோன்றறலை, வேடீயன், வேடலை என இவ்வாறு திரிவனவற்றிற்கு இவ்விதி பொருந்தாமையை அறிக. ஆடூஉ, மகடூஉ, எட்டி, காவிதி, நம்பி என்பன பொதுவிதியால் மிக்கே முடிவன ஆதலின், அவற்றைச் சில விகாரமாம் உயர்திணை என்றதனால் அமைக்க.

(9)

**159. ஈற்றியா வினாவிளிப் பெயர்முன்வலி யியல்பே.**

**ஈற்று யா வினா விளிப் பெயர் முன் வலி இயல்பே**

īṟṟu yā viṉā viḻip peyar muṉ vali iyalpē

## இலாசரகு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

The hard initials are not doubled after the following: the final Interrogatives (a, o and e), the Interrogative Pronoun ya, and Vocatives.

**விளிநிலைக் கிளவியு மவற்றோ ரன்ன**

(இ.வி.: 72)

## மயிலை நாதர்

**எ—ன்,** வினா விளிப் பெயர்கள் வல்லினத்தொடு புணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.:—** ஈற்று வினா முன்னும் யா வினா முன்னும் விளிப்பெயர்கள் முன்னும் வரும் வல்லினம் இயல்பாய்ப் புணரும், **எ—று.**

**வ—று.:—**

(உண்கா, உண்கே, உண்கோ) + (கொற்றா, சாத்தா, தேவா, பூதா) எனவும்; யாகுறிய, யாசிறிய, யாதீய, யாபெரிய எனவும் வினா முன் வல்லினம் இயல்பாயின. (+கொற்றா, சாத்தா, கொற்றீ, சாத்தீ; நாகா, நம்பீ, தோழீ, செவிலீ; நாயே, நரியே, நீரே, நிலனே) + (கொள், செல், [1]தா, போ) என முப்பெயர் விளிகள் முன்னும் வல்லினம் இயல்பாயின.

பொதுப்பெய ருயர்திணைப் பெயர்களை முன்னே முடித்து வைத்தும் வினா விளிபுரு பேற்று நிற்றலின், ஈண்டும் விதந்தோதினா ரென்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ —னின்,** இதுவும் அது.

**இ —ள்.:** மூன்று ஈற்று வினா முன்னும், யா என்னும் வினாப்பெயர் முன்னும், உயிரீறு ஒற்றீறாய விளிப்பெயர்கள் முன்னும் வரும் வல்லினம் இயல்பாம், **எ — று.**

**உ—ம்.:—**

நம்பியா கொண்டான், சென்றான், தந்தான், போயினான்; உண்கா கொற்றா, சாத்தா, தேவா, பூதா எனவும் யா குறிய, சிறிய, தீய, பெரிய எனவும் வினா முன் வல்லினம் இயல்பாயின. நம்பி, நம்பீ; விடலை, விடலாய்; கிள்ளை, கிள்ளாய்; சாத்தி, சாத்தீ; தாய், தாயே; கொள், செல், தா, போ என உயர்திணைப்பெயர் அஃறிணைப்பெயர் பொதுப்பெயரின் அண்மைவிளி முன்னும் சேய்மைவிளி முன்னும் வரும் வல்லினம் இயல்பாயின. பிறவும் அன்ன.

இறுதி ஏகார ஓகார வினா முன் வரும் வல்லினம்

இயல்பாதற்கு உதாரணம் காட்டிற்றிலம்; அவ்விரண்டற்கும் மேற் சிறப்புவிதி 'இடைச்சொல் ஏ ஒ' என்னும் சூத்திரத்துள் அடக்கிக் கூறுதலின்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், வினா விளிப் பெயர்கள் புணருமாறு கூறியது.

**இ–ள்.:– ஈற்றியா வினா** – ஈற்று வினா முன்னும் யா வினா முன்னும், **விளிப் பெயர் முன்** – விளிப் பெயர்கள் முன்னும், **வலி** – வருமொழி முதல் வல்லினம் வந்தால், **இயல்பே** – இயல்பு புணர்ச்சியாம், **எ–று.**

உ–ம்.:–

உண்கா, உண்கோ, வந்தானோ, வந்தானா, வந்தாயோ, வந்தாயா என நிறுத்தி, கொற்றா, சாத்தா, தேவா, பூதா என வருவித்து ஈற்று வினா முன் வல்லினம் வர இயல்பாயினவாறு காண்க. யா என நிறுத்தி, குறிய, சிறிய, தீய, பெரிய என வருவித்து யா வினா முன் இயல்பாயினவாறு காண்க. நாகா, நம்பீ, தோழீ, செவிலி எனவும் சாத்தா, கொற்றா, சாத்தி, கொற்றி எனவும் நாயே, நரியே, நீரே, நிலனே எனவும் நிறுத்தி, கொள், செல், து, போ என வருவித்து முப்பெயர் விளிகள் முன்னும் வல்லினம் வந்து இயல்பாயினவாறு காண்க.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

**இ–ள்.: ஈற்று** (வினாமுன்) – ஆ ஏ ஓ என்கின்ற மூன்றீற்று வினா முன்னும், **யா வினா** (முன்) – யா வினா முன்னும், **விளிப்பெயர் முன்**– உயிரீறு மெய்யீறுமாகிய விளிப்பெயர் முன்னும், **வலி** – வருகிற வல்லெழுத்துகள், **இயல்பு**–இயல்பாகும், எ – **று.**

**உ–ம்.:–**

நம்பியாகொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனவும், யாகுறியன, சிறியன, தீயன, பெரியன எனவும், வினாமுன் வலி யியல்பாதல் காண்க, நம்பி நம்பீ, விடலை விடலாய், கிள்ளை கிள்ளாய், தாய் தாயே, இவற்றின் முன் கொள், செல், தா,போ, இவற்றை வருவித்து நம்பிகொள், நம்பி செல், நம்பிதா, நம்பிபோ என முறையே கூட்டி விளிப்பெயர் முன் வலி இயல்பாதல் காண்க.

ஏகார ஒகார வினாக்களுக்கு "இடைச்சொல்லேயோ" என்னுஞ் சிறப்புச் சூத்திரத்தில் உதாரணம் பெறப்படும்.

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

ஈற்று வினா யாவினா விளிப்பெயர் என்னு மிவைமுன்னே வல்லினம் எவ்வாறு புணரும்?

ஈற்றியா வினாவிளிப் பெயர் முன்வலி யில்பே.

(ஈற்று யா வினா விளிப்பெயர் முன் வலி இயல்பே.)

**இ—ள்.:— ஈற்று யாவினா விளிப்பெயர் முன்** – ஆ ஏ ஒ என்னு மூன்றீற்று வினாமுன்னும், யாவென்னும் வினாப்பெயர் முன்னும், உயிரீறும் மெய்யீறுமாகிய விளிப்பெயர் முன்னும், **வலி இயல்பு** – வரும் வல்லெழுத்துக்கள் இயல்பாகும், **எ—று.**

**உ—ம்.:—**

(1)அரசனா கொண்டான், அரசனே சென்றான், அரசனோ தந்தான், என ஆ ஏ ஒ வீற்று வினாமுன் வலி இயல்பாதல் காண்க.

(2)யா குறியன, சிறியன, தீயன, பெரியன என யா வினாமுன் வலி இயல்பாதல் காண்க.

(3) நம்பி, நம்பீ, விடலை, விடலாய், கிள்ளை, கிள்ளாய், தாய், தாயே, இவற்றின், முன். கொள், செல், தா; போ இவற்றை வருவித்து, நம்பிகொள், நம்பிசெல். நம்பிதா, நம்பிபோ, என முறையே கூட்டி, விளிப்பெயர் முன்வலி இயல்பாதல் காண்க.

## முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

**இ—ள்.:— ஈற்று வினா**—மூன்று ஈற்று வினாச் சொல் முன்னும், **யா வினா** – இவ் வினாச்சொல் முன்னும், **விளிப்பெயர் முன்**—உயிரீறும் ஒற்றீறுமாகிய விளி வேற்றுமைப் பெயர்கள் முன்னும், **வலி யியல்பு**—வரும் வல்லெழுத்து இயல்பாம், **எ—று.**

**உ—ம்.:—**

நம்பியாகொண்டான், நம்பியோகொண்டான், நம்பியே கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் எனவும்; உண்கா கொற்றா, சாத்தா, தேவா, பூதா எனவும்; (உண்கா—

என்பது, உண்பேனா என்னும் வினையிறுதி வினா) யாகுறிய, சிறிய, தீய, பெரிய எனவும், வினாமுன் னியல்பாயின. நம்பி, நம்பீ, விடலை, விடலாய் எனவும்; கிள்ளை, கிள்ளாய் எனவும்; சாத்தி, சாத்தீ, தாய், தாயே எனவும் நிறுத்தி, கொள், செல், தா, போ என வருவித்து, நம்பிகொள், நம்பீகொள், நம்பிசெல், நம்பீசெல், நம்பி தா, நம்பீ தா, நம்பி போ, நம்பீ போ என்றாற் போல முறையே ஒட்டி, உயர்திணைப்பெயர் அஃறிணைப்பெயர் பொதுப் பெயர்களின் அண்மை விளி முன்னுஞ் சேய்மைவிளி முன்னும் வந்த வல்லினம் இயல்பாயினவாறு காண்க. பிறவு மிவ்வாறு கண்டுகொள்க. அண்மை–சமீபம். சேய்மை–தூரம். ஏகார ஓகார வினா முன் வரும் வல்லின மியல்பாதற்கு விதி, 'இடைச்சொல்லேயோ' என்னுஞ் சூத்திரத்தாற் பின்பு கூறுவாராதலால் இங்கே ஐயமறுத்தற்கு உதாரணங் காட்டப்பட்டது.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– ஈறுயாவினா** (முன்) – இறுதியில்வருகின்ற (ஆ ஓ ஏ என்னும்) மூன்று வினாவின் முன்னும் யா என்னும் வினாச்சொல்லின் முன்னும், **விளிப்பெயர் முன்** – (உயிரீறும், மெய்யீறுமாகிய) விளிவேற்றுமைப் பெயரின் முன்னும், வலி – வல்லெழுத்துக்கள், **இயல்பு** – இயல்பாகும்.

**உதாரணம்:–**

அவனா + கொண்டான் = அவனாகொண்டான்
அவனா + சென்றான் = அவனாசென்றான்
அவனா + தந்தான் = அவனாதந்தான்
அவனா + போயினான் = அவனாபோயினான்

(ஓகார ஏகார வினாக்களோடும் இவ்வாறே ஒட்டிக்காண்க.)

யா + குறியன = யாகுறியன
யா + சிறியன = யாசிறியன
யா + தீயன = யாதீயன
யா + பெரியன = யாபெரியன

(ஈற்றுவினா முன்னும் யாவினா முன்னும் வலி யியல்பாயின.)

நம்பீ + கொள் = நம்பீகொள்.
நம்பீதா

பிள்ளாய்+செல்= பிள்ளாய்செல். பிள்ளாய்போ.

## ஆறுமுக நாவலர்

**இ-ள்.: ஈற்று** (வினாமுன்) - ஆ ஏ ஓ என்னு மூன்றீற்று வினா முன்னும், **யா வினா** (முன்) - யா வென்னும் வினாப்பெயர் முன்னும், **விளிப்பெயர் முன்** - உயிரீறும் மெய்யீறுமாகிய விளிப்பெயர் முன்னும், **வலி இயல்பு** - வரும் வல்லெழுத்துக்கள் இயல்பாகும், **எ- று.**

**உ-ம்.:-**

(1)நம்பியாகொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனவும், உண்காகொற்றா, சாத்தா, தேவா, பூதா எனவும். ஈற்று வினாமுன் வலி இயல்பாதல் காண்க. (உண்கு+ஆ = உண்கா = உண்பேனா) இறுதி ஏகார ஓகார வினாக்களுக்கு உதாரணம்; "இடைச்சொல்லேயோ" என்னுஞ் சிறப்புச் சூத்திரத்திற் பெறப்படும். யா குறியன, சிறியன, தீயன, பெரியன என யா வினா முன் வலி இயல்பாதல் காண்க.

(2) நம்பி, நம்பீ; விடலை, விடலாய்; கிள்ளை, கிள்ளாய், தாய், தாயே இவற்றின் முன், கொள், செல், தா, போ இவற்றை வருவித்து, நம்பிகொள், நம்பிசெல், நம்பிதா, நம்பிபோ என முறையே கூட்டி, விளிப்பெயர் முன் வலி இயல்பாதல் காண்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ-ள்.:- ஈற்று** (வினாமுன்) - ஆஓஏ என்னுமூன்று ஈற்றுவினாமுன்னும், - **யாவினா** (முன்) - யாவென்னும் வினாப்பெயர் முன்னும், - **விளிப்பெயர்முன்** - உயிரீறும் மெய்யீறுமாகிய விளிப்பெயர் முன்னும், - **வலி இயல்பு** - வரும் வல்லெழுத்துக்கள் இயல்பாகும். **எ-று.**

**உ-ம்.:-**

(1)நம்பியாகொண்டான், சென்றான், தந்தான், போயினான். எனவும். உண்கா கொற்றா, சாத்தா, தேவா, பூதா. எனவும். (உண்கு+ஆ=உண்கா. உண்பேனா என்று பொருள்) உண்பானா கொற்றா, சாத்தா, தேவா, பூதா. எனவும். உண்பானோ கொற்றா, சாத்தா, தேவா, பூதா. எனவும். ஈற்றுவினாமுன் வலியியல்பாதல் காண்க. யாகுறியன, சிறியன, தீயன, பெரியன என யாவினாமுன் வலியியல்பாதல் காண்க.

(2)நம்பி, நம்பீ; விடலை, விடலாய்; கிள்ளை, கிள்ளாய்; தாய், தாயே இவற்றின் முன் கொள், செல், தா, போ இவற்றை வருவித்து நம்பிகொள், நம்பிசெல், நம்பிதா, நம்பியோ என முறையேகூட்டி விளிப்பெயர்முன் வலியியல்பாதல் காண்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.:–** **ஈறு** (வினா) – இறுதியில் வருகின்ற (ஆ ஓ ஏ என்னும்) மூன்று வினா வெழுத்துக்களுக்கும், **யா வினா** – யா என்னும் வினாப்பெயர்க்கும், **விளிப் பெயர்** – (உயிரீறும் மெய்யீறு மாகிய) விளி வேற்றுமைப் பெயர்களுக்கும் **முன்** – முன் வருகின்ற, **வலி**– வல்லெழுத்துக்கள், **இயல்பே** – இயல்பேயாம்; **எ–று.**

(1) **உ–ம்.:**

| | | |
|---|---|---|
| கொண்டான் | – | அவனாகொண்டான் |
| அவனா + சென்றான் | – | அவனாசென்றான் |
| கொற்றனோ + தந்தான் | – | அவனாதந்தான் என ஈற்று வினாமுன் வலி இயல்பாயின. |
| சாத்தனே+ போயினான் | – | அவனாபோயினான் |

(2) **அல்வழி** **வேற்றுமை**

யா + குறியன – யாகுறியன யா + தந்தான் – யா தந்தான்.

யா + சிறியன – யாசிறியன யா + பார்த்தான்–யா பார்த்தான்;

என யா வினா முன் வலி இயல்பாயின; (யா – யாவை)

பொன்னா+கொள் = பொன்னாகொள் தோழீ+தா = தோழீதா

பிள்ளாய்+செல் = பிள்ளாய்செல் மக்கள்+போம் = மக்கள் போம்

என விளிப்பெயர் முன் வலி இயல்பாயின.

ஈற்றுவினா மூன்றும், விளிப்பெயரும் – அல்வழி, யா வினாப்பெயர் – அல்வழி, வேற்றுமை இரண்டுக்கும் பொது.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:–** **ஈற்று** (வினாமுன்) – ஆ ஏ ஓ என்னும் முன்றீற்று வினா முன்னும், **யா வினா** (முன்) – யாவென்னும் வினாப்பெயர் முன்னும், **விளிப்பெயர் முன்** – உயிரீறும் மெய்யீறுமாகிய விளிப்பெயர் முன்னும், **வலி யியல்பு** – வரும் வல்லெழுத்துக்கள் இயல்பாகும். **எ–று.**

**உ–ம்.:–**

நம்பியா + கொண்டான்

கொற்றனோ + சென்றான்

சாத்தனே + தந்தான்

+ போயினான்

உண்கா + கொற்றா

(உண்பேனா) + சாத்தா

+ தேவா

+ பூதா

நம்பியா கொண்டான். உண்கா கொற்றா என முறையே யகூட்டி ஈற்று வினா முன் வலி இயல்பாதல் காண்க.

யா – குறியன்

+ சிறியன்

+ தற்தான்

+ பார்த்தான்

யா குறியன, யா சிறியன என முறையே யகூட்டி யாவினாமுன் வலி இயல்பாதல் காண்க.

நம்பி

நம்பீ

விடலை + கொள்

விடலாய் + செல்

கிள்ளை + தா

கிள்ளாய் + போ

தாய்

தாயே

நம்பிகொள், நம்பிசெல் என முறையே கூட்டி விளிப்பெயர்முன் வலி இயல்பாதல் காண்க.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள்.:– ஈற்று (வினாவிளிப்)** – (ஆ, ஏ, ஓ என்கிற மூன்று) ஈற்று வினாமுன்னும், **யா வினா (முன்)**– யா வினா முன்னும், **விளிப்பெயர் முன்** – (உயிரீறும் மெய்யீறு மாகிய) விளிப் பெயர் முன்னும், **வலி** – (வருகிற) வல் லெழுத்துக்கள், **இயல்பு** – இயல்பாகும். **எ–று.**

**பொ–ரை.:–**

(ஆ, ஏ, ஓ ஆகிய மூன்று) ஈற்று வினாவின் பின்னும், யா என்னும் வினாப்பெயரின் பின்னும் (உயிரீறும்) மெய்யீறுமாகிய) விளிப் பெயர்களின் பின்னும் வரும் வல்லினம் இயல்பாம்.

**உ–ம்.:–**

அவனா + கொண்டான் = அவனா கொண்டான்

சென்றான் = அவனா சென்றான்.

தந்தான் = அவனா தந்தான்.

போயினான் = அவனா போயினான்.

சாத்தனே + கொண்டாள் = சாத்தனே கொண்டான்.

சென்றான் = சாத்தனே சென்றான்.

தந்தான் = சாத்தனே தந்தான்.

போயினான் = சாத்தனே போயினான்.

கொற்றனோ + கொண்டான் = கொற்றனோ கொண்டான்.

சென்றான் = கொற்றனோ சென்றான்.

தந்தான் = கொற்றனோ தந்தான்.

போயினான் = கொற்றனோ போயினான்.

என ஈற்று வினா முன் வலி இயல்பாயின.

யா + குறியன = யா குறியன.

சிறியன = யா சிறியன.

தீயன = யா தீயன.

பெரியன = யா பெரியன.

என யா வினா முன் வலி இயல்பாயின.

(யா – யாவை.)

நம்பீ + கொள் = நம்பீகொள்.

செல் = நம்பீசெல்.

தா = நம்பீ தா.

போ = நம்பீ போ.

என விளிப்பெயர்முன் வலி இயல்பாயின.

நம்பி, விடலை, விடலாய், கிள்ளை, கிள்ளாய், தாய், தாயே, முதலியவற்றின்முன்னும் மேலே காட்டியபடியே கூட்டி,

விளிப்பெயர் முன் வலி இயல்பாதல் காண்க.

ஈற்றுவினா :மன்றும், விளிப்பெயரும் அல்வழி; யாவினாப்பெயர் அல்வழி வேற்றுமை இரண்டற்கும் பொதுவாகக் கோடலுமொன்று. அங்ஙனங் கொள்ளுங் கால் வேற்றுமைக்கு யா கொண்டான், யா சார்ந்தான், யா தந்தான், யா பார்த்தான் என வரும். (யா – யாவற்றை.)

## கா.நமச்சிவாய முதலியார்

**ஈறு யா வினா** – இறுதியில் வருகிற (ஆ ஏ ஓ என்னும் மூன்று) வினாச்சொற்களுக்கும் யா என்னும் வினாச்சொற்கும், **விளிப்பெயர்** – (உயிரீறும் மெய்யீறுமாகிய) விளிவேற்றுமைப் பெயர்க்கும், **முன்** – முன்வருகிற, **வலி** – வல்லெழுத்துக்கள், **இயல்பு** – இயல்பாகும்.

**உதாரணம்:–**

| | | | | |
|---|---|---|---|---|
| அவனா | + கொண்டான் | = | அவனா கொண்டான் | |
| | + சென்றான் | = | அவனா சென்றான் | |
| | + தந்தான் | = | அவனா தந்தான் | |
| | + போயினான் | = | அவனா போயினான் | |
| சாத்தனே | + கொண்டான் | = | சாத்தனே கொண்டான் | |
| | + சென்றான் | = | சாத்தனே சென்றான் | |
| | + தந்தான் | = | சாத்தனே தந்தான் | |
| | + போயினான் | = | சாத்தனே போயினான் | |
| கொற்றனோ | + கொண்டான் | = | கொற்றனோ கொண்டான் | |
| | + சென்றான் | = | கொற்றனோ சென்றான் | |
| | + தந்தான் | = | கொற்றனோ தந்தான் | |
| | + போயினான் | = | கொற்றனோ போயினான் | |
| யா | + குறியன | = | யா குறியன | |
| | + சிறியன | = | யா சிறியன | **– அல்வழி** |
| | + தீயன | = | யா தீயன | |
| | + பெரியன | = | யா பெரியன | |
| யா | + கொண்டான் | = | யா கொண்டான் | |
| | + சொன்னான் | = | யா சொன்னான் | |
| | + தந்தான் | = | யா தந்தான் | – |
| **வேற்றுமை** | | | | |
| | + பார்த்தான் | = | யா பார்த்தான் | |

என ஈற்று வினா முன்னும், யாவினா முன்னும் வலி இயல்பாயின.

| | | | | |
|---|---|---|---|---|
| நம்பி | + | கொள் | = | நம்பி கொள் |
| | + | செல் | = | நம்பி செல் |
| | + | தா | = | நம்பி தா |
| | + | போ | = | நம்பிபோ |
| விடலாய் | + | கொள் | = | விடலாய் கொள் |
| | + | செல் | = | விடலாய் செல் |
| | + | தா | = | விடலாய் தா |
| | + | போ | = | விடலாய் போ |

என விளிப்பெயர் முன் வலி இயல்பாயின.

## மோசகு பொன்னையா

ஆ, ஏ, ஓ என்ற ஈற்று வினா, யா என்னும் வினாப்பெயர் உயிரீறும் மெய்யீறுமாகிய விளிப்பெயர் ஆகிய இவற்றின் முன்னர் வரும் வல்லெழுத்துக்கள் இயல்பாகும், எ–று.

எ–டு.:–

அவனா கொண்டான்?
கொற்றனோ கொண்டான்?
கொற்றனே தந்தான்? – ஈற்று வினா முன்னர் வலிஇயல்பாயின

யாகுறியன?
யா சிறியன – யா வினா முன்னர் வலி இயல்பாயின.

பொன்னாகொள்
பிள்ளாய் செல்
தோழீ தா – விளிப்பெயர் முன்னர்வலி இயல்பாயின.

(10)

160. ஆவி யரழ விறுதிமுன் னிலைவினை
ஏவன்முன் வல்லின மியல்பொடு விகற்பே.

ஆவி ய ர ழ இறுதி முன்னிலை வினை
ஏவன் முன் வல்லினம் இயல்பு ஒடு விகற்பே

āvi ya ra ḻa iṟuti muṉṉilai viṉai
ēvaṉ muṉ valliṉam iyalpu oṭu vikaṟpē

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

After verbs of the 2nd Person, and Imperatives ending in Vowels and (the consonants) y,r and l the Hard initials are (as a rule) undoubled; but (in a few instances) they are doubled as well as undoubled.

## ஒப்புமைப் பகுதி

உயிரீ றாகிய முன்னிலைக் கிளவியும்
புள்ளி இறுதி முன்னிலைக் கிளவியும்
இயல்பா குநவும் உறழ்பா குநவுமென்று
ஆயீ ரியல வல்லெழுத்து வரினே.

(தொல்.: 152)

உயிரும் புள்ளியு மிறுதி யாகிய
முன்னிலை வினையே யேவ லென்றிவை
யியல்பா குநவு முறழா குநவுமென்
றாயீ ரியல வல்லெழுத்து வரினே

(இ.வி.: 73)

## மயிலை நாதர்

எ—ன், முன்னிலை வினையும் முன்னிலை யேவலும் வல்லினத்தொடு புணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.:— உயிரும் ய ர ழ வென்னும் மூன்று மெய்யும் ஈறாக வரும் முன்னிலை வினையே முன்னிலை யேவலே யென்றிவற்றின் முன் வல்லினம் இயல்பாயும் விகற்பாயும் புணரும், எ — று.

வ—று.:—

(உண்டி, தின்றி, உண்டனை, தின்றனை, உண்டாய், தின்றாய்) + (கொற்றா, சாத்தா, தேவா, பூதா) எனவும்;

([1]உண்டனிர், தின்றனிர்) + (கொற்றரே, சாத்தரே, தேவரே, பூதரே) எனவும் முன்னிலைவினை முன் வல்லினம் இயல்பாயின. விகற்பம் வந்தவழிக் கண்டு கொள்க. (கொணா, எறி, விடு, ஆய், சேர், தாழ்) + (கொற்றா, சாத்தா, தேவா, பூதா) என ஏவல்முன் வல்லினம் இயல்பாயின. நடகொற்றா நடக்கொற்றா, கிடகொற்றா கிடக்கொற்றா, [2]பெய்கொற்றா பெய்க்கொற்றா. எய்கொற்றா எய்க்கொற்றா, ஈர்கொற்றா ஈர்க்கொற்றா, தாழ்கொற்றா தாழ்க்கொற்றா, (நட, கிட, பெய், எய், ஈர், தாழ்) + (சாத்தா, தேவா, பூதா) என ஏவல்முன் வல்லினம் விகற்பமாயின. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

ழகார வீறு முன்னிலைவினை ஏலாமையிற் காட்டிற்றிலம். ஏவல் பிரித்தோதியது, விளங்குதற் கெனக் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

எ – **னின்**, இதுவும் அது.

**இ–ள்.:** உயிரையும் ய ர ழ என்னும் மூன்று ஒற்றையும் இறுதியாக உடைய விகுதி யுருபினவாய முன்னிலைவினை முன்னும் ஏவல் முன்னும் வரும் வல்லினம் இயல்புடனே விகற்பமாம், எ – **று**.

**உ – ம்.:–**

உண்டி, தின்றி, உண்டனை, தின்றனை, உண்டாய், தின்றாய், உண்டனிர், தின்றனிர்: கொற்றா, சாத்தா, தேவா, பூதா; கொற்றரே, சாத்தரே, தேவரே, பூதரே என முன்னிலை வினைமுன் இயல்பாயின. கொணா, எறி, விடு, ஆய், சேர், தாழ்: கொற்றா, சாத்தா, தேவா, பூதா என ஏவல்முன் இயல்பாயின. விகற்பம் வந்தவழிக் கண்டு கொள்க. நடகொற்றா நடக்கொற்றா, எய்கொற்றா, எய்க்கொற்றா, ஈர்கொற்றா, ஈர்க்கொற்றா, தாழ்கொற்றா, தாழ்க்கொற்றா

---

பாட **வேறுபாடு.:–**

**1. உண்டீர், தின்றீர்**

**2. போ கொற்றா, போக்கொற்றா**

என ஏவல்முன் விகற்பித்தன என்று கோடலும் ஒன்று. இவ்வாறு அருகி வருதலின், இயல்பொடு விகற்பே என விகற்பத்தைப் பிரித்துக் கூறினார். ழுகர ஈறு முன்னிலைவினை ஏலாமையின் உதாரணம் காட்டிற்றிலம்.

முன்னிலைவினை என்றார் ஏவல் என விதந்தது என்னை யெனின்: முன்னிலைவினை என்பது தன்மைவினை படர்க்கைவினை கட்கு இனமாகிய முன்னிலை வினையை உணர்த்துமல்லது இனமின்றி முன்னிலை ஒன்றற்கே யுரிய ஏவல்வினையை உணர்த்தாமையின் என்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** முன்னிலை வினைமுற்றும் முன்னிலை ஏவல் வினையும் புணருமாறு கூறியது.

**இ—ள்.:— ஆவி யரழ இறுதி** – உயிரும் ய ர ழ என்னும் இம் மூன்று மெய்யும் ஈறாக வரும், **முன்னிலை வினை ஏவல் முன்** – முன்னிலை வினைமுற்றே முன்னிலை ஏவல் வினையே என்று இவற்றின் முன், வல்லினம் – வருமொழி முதல் முன் வல்லினம் வந்தால், **இயல்பொடு விகற்பே** – இயல்பாகியும் விகற்பாகியும் புணரும், **எ—று.**

**உ—ம்.:—**

உண்டி, தின்றி, உண்டனை, தின்றனை, உண்டாய், தின்றாய், உண்டனிர், தின்றனிர் என நிறுத்தி, கொற்றா, சாத்தா, தேவா, பூதா எனவும் கொற்றரே, சாத்தரே தேவரே, பூதரே எனவும் வருவித்து முன்னிலை வினை முற்றுச் சொல்முன் இயல்பாயினவாறு காண்க. சேர், தாழ் என நிறுத்தி, கொற்றா, சாத்தா, தேவா, பூதா என வருவித்து முன்னிலை ஏவல் வினை முன் வல்லினம் வந்து இயல்பாயினவாறு காண்க. நட கொற்றா நடக் கொற்றா, ஈர் கொற்றா, ஈர்க் கொற்றா, எய் கொற்றா, எய்க் கொற்றா, தாழ் கொற்றா, தாழ்க் கொற்றா என விகற்பமும் கண்டுகொள்க. ழுவ்வீறு முன்னிலை வினைமுற்றுச் சொல் ஏலாமையிற் காட்டிற்றிலம். ஏவல் முன்பு ஓதியது விளங்குதற் கென்க.

**"உயிரீ றாகிய முன்னிலைக் கிளவியும்**
**(புள்ளியிறுதி முன்னிலைக் கிளவியும்,)**
**இயல்பாகுநவும் உறழா குநவுமென்**
**றாயீ ரியல வல்லெழுத்து வரின்"**

என்பது தொல்காப்பியம் குற்றெழுத்தோரெழுத்து

முன்னிலை ஏவல் வினைச்சொல் முன் மிக்கே முடிவன கொள்க.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

**இ–ள்.: ஆவி**–உயிரையும், **யரழ** – ய ர ழ எனகின்ற மூன்று மெய்களையும், **இறுதி**–இறுதியாகவுடைய, **முன்னிலை வினை**–முன்னிலை வினை முன்னும், **ஏவல் முன்**–ஏவல்வினை முன்னும், **வல்லினம்** – வருகிற க ச த பக்கள், **இயல்பொடு**–இயல்புடனே, **விகற்பு**–விகற்பமாம், **எ–று.**

**உ–ம்.:–**

உண்டி, உண்டனை, உண்டாய் எனவும், உண்டனிர், உண்டீர் எனவும் நிறுத்தி; சாத்தா, கொற்றா, தேவா, பூதா எனவும் சாத்தரே, கொற்றரே, தேவரே, பூதரே எனவும் வருவித்து, உண்டிசாத்தா, உண்டனிர் சாத்தரே எனக் கூட்டி, முன்னிலை வினை முன் னியல்பாதல் காண்க. கொணா, எறி விடு, ஆய், சேர், தாழ் எனநிறுத்தி, சாத்தா, கொற்றா, தேவா, பூதா என வருவித்து, கொணாசாத்தா என முறையே கூட்டி, ஏவல்வினை முன் னியல்பாதல் காண்க. விகற்பமாதல் வந்தவிடத்திற் காண்க. நடகொற்றா நடக்கொற்றா, எய்கொற்றா எய்க்கொற்றா என ஏவலின் முன் விகற்பிக்கு மென்று கொள்ளினுமாம்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

சில முன்னிலைவினை ஏவல்வினைகளுக்கு முன்வரும் வல்லினச் செய்திகூறுஞ் சூத்திரம் யாது?

ஆவி ய ர ழ விறுதிமுன் னிலைவினை
ஏவன்முன் வல்லின மியல்பொடு விகற்பே.

(ஆவி ய ர ழ இறுதி முன்னிலைவினை
ஏவல் முன் வல்லினம் இயல்பொடு விகற்பே)

**இ–ள்.: ஆவி ய ர ழ இறுதி முன்னிலைவினை ஏவல் முன்** – உயிரையும் யரழ என்னும் மூன்றுமெய்களையும் இறுதியாகவுடைய முன்னிலைவினை முன்னும் ஏவல்வினை முன்னும், **வல்லினம் இயல்பொடு விகற்பே** – வருங் க ச த ப க்கள் இயல்புடனே விகற்பமாம், **எ–று.**

முன்னிலைவினையென்றது, தன்மைவினை படர்க்கை வினைகளுக்கு இனமாய், முன்னின்றான் றொழிலை

யுணர்த்தும் வினையை. ஏவல்வினையென்றது, இனமின்றி முன்னிலை யொன்றற்கே உரியதாய்; முன்னின்றானைத் தொழிற்படுத்தும் வினையை.

விகற்பமாவது ஒரு கால் இயல்பாயும் ஒருகால் விகாரமாயும் புணர்வது. விகற்பம், உறழ்ச்சி என்பன ஒருபொருட் சொற்கள்.

**உ—ம்.:—**

(1) உண்டி, உண்டனை, உண்டாய் எனவும், உண்டனிர், உண்டீர் எனவும், நிறுத்தி, சாத்தா, கொற்றா, தேவா, பூதா எனவும், சாத்தரே, கொற்றரே, தேவரே, பூதரே எனவும், வருவித்து உண்டிசாத்தா, உண்டனிர்சாத்தரே எனக் கூட்டி, ஆவியர இறுதி முன்னிலைவினை முன் இயல்பாதல் காண்க. ழகரமெய் முன்னிலைவினைக்கு ஈறாகாது. முன்னிலைவினைமுன் விகற்பம் வந்தவழிக் கண்க.

(2) கொணா, எறி, விடு, ஆய், சேர், தாழ் என நிறுத்தி, சாத்தா, கொற்றா, தேவா, பூதா என வருவித்து, கொணா சாத்தா, என முறையே கூட்டி, ஆவி யரழ விறுதி ஏவல்வினைமுன் இயல்பாதல் காண்க. நடகொற்றா, நடக்கொற்றா, எய்கொற்றா, எய்க்கொற்றா என ஏவல்வினைமுன் விகற்பித்தல் காண்க.

## முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

**இ—ள்.: ஆவி யரழ விறுதி** – உயிரையும் ய ர ழ வென்னும் மூன்று ஒற்றையும் இறுதியாக வுடைய, **முன்னிலை வினை யேவன் முன்** – முன்னிலைவினைச் சொற்களும் ஏவல்வினைச் சொற்களுமாகிய இவற்றின் முன், **வல்லின மியல்பொடு விகற்பு** – வந்த வல்லினம் இயல்பாதலோடு விகற்பமுமாம் எ—று.

**உ—ம்.:—**

உண்டி, தின்றி; உண்டனை, தின்றனை; உண்டாய், தின்றாய்; உண்டனிர், தின்றனிர் என நிறுத்தி, கொற்றா, சாத்தா, தேவா, பூதா, கொற்றரே, சாத்தரே, தேவரே, பூதரே என வருவித்து, உண்டிகொற்றா, உண்டனிர் கொற்றரே என ஒட்டி, முன்னிலைவினை முன் இயல்பாதல் காண்க. பிறவற்றோடு மொட்டுக. கொணா, எறி, விடு, ஆய், சேர்,

தாழ் எனநிறுத்தி, கொற்றா, சாத்தா, தேவா, பூதா என வருவித்து, முன் போலவே ஒட்டி, ஏவல்முன் இயல்பாதல் காண்க. முன்னிலைவினை முன் விகற்பம் வந்தவழிக் காண்க. நடகொற்றா–நடக்கொற்றா, எய்கொற்றா, எய்க்கொற்றா ஈர்கொற்றா – ஈர்க் கொற்றா, தாழ்கொற்றா – தாழ்க்கொற்றா என ஏவல்முன் விகற்பித்தன. பிறவுமன்ன. முன்னிலைவினை யென்றவர் ஏவலென வேறு கூறிய தென்னெனின், முன்னிலைவினை யெனவே படர்க்கைவினை தன்மை வினைகளுக்கு இனமாகிய தெனவே பொருள்படுவதன்றி, இனமின்றி முன்னிலை யொன்றிற்கே யுரிய ஏவல்வினை யெனப் பொருள் படாததினாலென்க. வல்லின மியல்பொடு விகற்பமாமென முடிக்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :–** **ஆவி** – உயிரையும், **யரழ** – யரழ என்னும் மூன்று மெய்களையும், **இறுதி** – ஈறாகவுடைய, **முன்னிலைவினை** – முன்னிலைவினைகளும், **ஏவல்** – ஏவல் வினைகளும், **முன்** – ஆகிய இவற்றின் முன்வருகிற, **வல்லினம்** – கசதபக்கள், **இயல்பொடு** – இயல்புடன், **விகற்பே** – விகற்பமுமாகும். (இயல்பாயும் மிகுந்தும் வரும்).

குறிப்பு :–

**முன்னிலைவினை:–** மூன்றுகாலத்துக்கும் உரியதாய் முன்நிற்கும் பொருளினது தொழிலை உணர்த்துவது. ஏவல்வினை : எதிர் காலத்துக்கு மாத்திரம் உரியதாய் எதிர் நிற்கும் பொருளைக் கட்டளையிடுவது. ஏவலெல்லாம் முன்னிலையாம். முன்னிலையெல்லாம் ஏவலாகா.

**விகற்பமாவது:–** ஒரு புணர்ச்சிக்கே ஒருகால் ஒருவகையாகவும், மற்றொருகால் வேறு வகையாகவும் வருவது. விகற்பம், உறழ்ச்சி, பொருவு என்பன ஒரு பொருளன.

**உதாரணம் :–**

உண்டனை + கொற்றா = உண்டனைகொற்றா

உண்டாய் + சாத்தா = உண்டாய்சாத்தா

உண்டீர் + புலவரே =

உண்டீர் புலவரே.

(ஆவியர இறுதி முன்னிலைவினைமுன் வலி இயல்பாயின)

ழகரமெய்யீற்று விகுதி இல்லாமையின் ழகரமெய் முன்னிலை வினைக்கு ஈறாகாமையால் அதற்கு உதாரணமில்லை. முன்னிலை வினைமுன் விகற்பித்தல் வந்தவிடத்துக் காண்க.

வா + கொற்றா = வாகொற்றா. சேர் + தேவா = சேர்தேவா

பாய் + சாத்தா = பாய்சாத்தா. வாழ் + பூதா = வாழ்பூதா.

(ஆவியரழ இறுதி ஏவல் வினைமுன் வலி யியல்பாயின.)

நட + கொற்றா = நடகொற்றா, நடக்கொற்றா

எய் + கொற்றா = எய்கொற்றா, எய்க்கொற்றா

(ஏவல் வினைமுன் விகற்பித்தன.)

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:– ஆவி ய ர ழ இறுதி முன்னிலைவினை ஏவல் முன்–** உயிரையும் ய ர ழ என்னு மூன்று மெய்களையும் இறுதியாக வுடைய முன்னிலைவினை முன்னும் ஏவல்வினை முன்னும், **வல்லினம் இயல்பொடு விகற்பு** – வருங் க ச த ப க்கள் இயல்புடனே விகற்பமாம், **எ – று.**

முன்னிலைவினை யென்றது, தன்மைவினை படர்க்கை வினைகளுக்கு இனமாய், முன்னின்றான் றொழிலை யுணர்த்தும் வினையை.

ஏவல்வினை யென்றது, இனமின்றி முன்னிலை யொன்றற்கே உரியதாய், முன்னின்றானைத் தொழிற் படுத்தும் வினையை.

விகற்பமாவது, ஒருகால் இயல்பாயும் ஒருகால் விகாரமாயும் புணர்வது. விகற்பம், உறழ்ச்சி என்பன ஒரு பொருட் சொற்கள்.

**உ – ம்.:–**

(1) உண்டி, உண்டனை, உண்டாய் எனவும், உண்டனிர், உண்டீர். எனவும். நிறுத்தி, சாத்தா, கொற்றா, தேவா, பூதா எனவும், சாத்தரே, கொற்றரே, தேவரே, பூதரே எனவும், வருவித்து, உண்டிசாத்தா, உண்டனிர்சாத்தரே எனக் கூட்டி, ஆவி ய ர இறுதி முன்னிலை வினைமுன் இயல்பாதல் காண்க. ழகர மெய் முன்னிலை வினைக்கு ஈறாகாது.

முன்னிலை வினை முன் விகற்பம் வந்தவழிக் காண்க.

(2) கொணா, எறி, விடு, ஆய், சேர், தாழ் என நிறுத்தி, சாத்தா, கொற்றா, தேவா, பூதா என வருவித்து கொணா சாத்தா என முறையே கூட்டி, ஆ வி ய ர ழ விறுதி ஏவல்வினை முன் இயல்பாதல் காண்க. நடகொற்றா, நடக்கொற்றா, எய்கொற்றா, எய்க்கொற்றா என ஏவல்வினை முன் விகற்பித்தல் காண்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். ஆவி ய ர ழ இறுதி** – உயிரையும் யரழ என்னு மூன்று மெய்களையு மிறுதியாகவுடைய, **முன்னிலை வினை ஏவன் முன்** – முன்னிலை வினை முன்னும் ஏவல்வினை முன்னும், **வல்லினம் இயல்பொடு விகற்பு** – வருங் க ச த பக்கள் இயல்புடனே விகற்பமாம். **எ–று.**

முன்னிலை வினையொன்றது தன்மைவினை படர்க்கை வினைகளுக்கு இனமாய் முன்னின்றானது தொழிலையுணர்த்தும் வினைச்சொல். இது ஏவற்கருத்திற் பிரயோகிக்கப்படாதது; இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்று முக்காலத்திலுங் தனித்தனிவரும்.

உ–ம்.:–

உண்டனை, உண்ணாநின்றனை, உண்பை எனவரும் பிறவுமன்ன.

ஏவல் வினையென்றது தன்மையிலாவது படர்க்கையிலாவது வரமாட்டாமையால் இனமின்றி முன்னிலை ஒன்றற்கே யுரியதாய் முன்னின்றானைத் தொழிற்படுத்தும் வினையை. எறி, ஏறிவாய், எறிவிப்பி எனவரும். பிறவுமன்ன.

விகற்மாவது ஒருகால் இயல்பாயும் ஒருகால் விகாரமாயும் புணர்வது. விகற்பம், உறழ்ச்சி என்பன ஒருபொருட்சொற்கள். நியதியின்மை என்பது பொருள்.

உ–ம்.:–

(1)உண்டி, உண்டனை, உண்டாய், எனவும். உண்டனிர், உண்டீர், உண்கின்றீர், உண்பீர், எனவும். நிறுத்தி, சாத்தா, கொற்றா, தேவா, பூதா, எனவும். சாத்தரே, கொற்றரே, தேவரே, பூதரே, எனவும். வருவித்து உண்டி சாத்தா; உண்டனிர் சாத்தரே எனக் கூட்டி ஆவி யர இறுதி முன்னிலைவினை முன் வலி இயல்பாதல் காண்க. முகரமெய்

முன்னிலைவினை முன் விகற்பம் வந்தவழிக்காண்க.

(2) கொணா, எறி, விடு, ஆய், சேர், தாழ் என நிறுத்தி, சாத்தா, கொற்றா, தேவா, பூதா என வருவித்து, கொணாசாத்தா என முறையே கூட்டி ஆவி யரழ இறுதி ஏவல் வினைமுன் இயல்பாதல் காண்க. நடகொற்ற, நடக்கொற்றா; எய்கொற்ற; எய்க்கொற்றா என ஏவல்வினைமுன் வல்லினம் விகற்பித்தல் காண்க.

## வை.மு. சடகோபாராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

**இ—ள்.:— ஆவி** – உயிரையும், **ய ர ழ** – ய ர ழ என்னும் மூன்று மெய்களையும், **இறுதி** – ஈறாகவுடைய, **முன்னிலை வினை** – முன்னிலை வினை முற்றுக்களுக்கும், **ஏவல்**—ஏவல்வினை முற்றுக்களுக்கும், **முன்** – முன் வருகின்ற, **வல்லினம்** – க ச த பக்கள், **இயல்பொடு** – இயல்புடனே, **விகற்பு** – விகல்பமுமாம் (ஒன்றுக்கே இயல்பாயும் மிக்கும் வரும்); **எ—று.**

முன்னிலை வினைக்கும் ஏவல் வினைக்கும் வேறுபாடு:– முன்னிலை வினை–நடந்தாய் நடக்கின்றாய் நடப்பாய் என்றாற்போல மூன்று காலத்தும் தனித்தனி வருவதாய் முன்நிற்கும் பொருளினது தொழிலை உணர்த்தி ஏவற்பொருள் படாதது என்றும், ஏவல்வினை – நடமின் நடவும் என்றாற் போல எதிர்காலத்து மாத்திரமே வருவதாய் முன்நிற்கும் பொருளைக் கட்டளையிடுவது என்றும் வேறுபாடு அறிக. ஏவலெல்லாம் முன்னிலைவினையாம்; முன்னிலை வினையெல்லாம் ஏவலாகா.

விகற்பமாவது, ஒரு புணர்ச்சிக்கே ஒருகால் ஒரு வகையாயும், மற்றொருகால் வேறு வகையாயும் வருவது; விகற்பம், உறழ்ச்சி, பொருதல் என்பன ஒருபொருட் சொற்கள்; நியதியின்மை யென்பது பொருள்.

**உ—ம்.:–**

(1 ) உண்டனை+கொற்றா = உண்டனைகொற்றா, தேவா = உண்டனைதேவா, புலவா = உண்டனை புலவா.

உண்டாய் + சாத்தா = உண்டாய் சாத்தா
உண்டீர்சாத்தரே புலவரே = உண்டீர்புலவரே என ஆவி ய ர இறுதி முன்னிலை வினை முன் வலி இயல்பாயின.

ழகர மெய்யீற்று விகுதி இல்லாமை பற்றி ழகர மெய் முன்னிலை வினைக்கு ஈறாகாமையால், அதற்கு உதாரணம்

இல்லை.

முன்னிலை வினை முன் விகற்பித்தல் வந்தவிடத்துக் காண்க.

(2) வா +கொற்றா = வாகொற்றா சேர் +தேவா = சேர்தேவா

பாய்+சாத்தா = பாய்சாத்தா, வாழ் +புலவா = வாழ்புலவா

என ஆவி ய ர ழ இறுதி ஏவல்வினை முன் வலி இயல்பாயின.

நட +கொற்றா = நடக்கொற்றா – நடகொற்றா என ஏவல்வினை முன் வலி விகற்பத்தன.

எய்+கொற்றா= எய்க்கொற்றா – எய்க்கொற்றாவலி விகற்பித்தன.

இவையெல்லாம் வினைமுற்றுத் தொடராதலால், அல்வழிப் புணர்ச்சி

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:– ஆவி ய ர ழ இறுதி முன்னிலை வினை ஏவல் முன் –** உயிரையும் ய ர ழ என்னும் மூன்று மெய்களையும் இறுதியாகவுடைய முன்னிலை வினை முனனும் ஏவல் வினை முன்னும், **வல்லினம் இயல்பொடு விகற்பு** – (வருங்) க ச த ப க்கள் இயல்புடனே விகற்பமாம். **எ–று.**

முன்னிலைவினையென்றது, தன்மைவினை படர்க்கை வினைகளுக்கு இனமாய், முன்னின்றான் தொழிலை யுணர்த்தும் வினையை ஏவல் வினையென்றது, இனமின்றி முன்னிலை யொன்றற்கே உரியதாய், முன்னின்றானைத் தொழிற்படுத்தும் வினையை.

விகற்பமாவது, ஒருகால் இயல்பாயும் ஒருகால் விகாரமாயும் புணர்வது. (விகற்பம் உறழ்ச்சி என்பன ஒருபொருட்சொற்கள்.)

**உ–ம்.:–**

உண்டி + சாத்தா

உண்டனை + கொற்றா

உண்டாய் + தேவா

+ பூதா

உண்டனில் + சாத்தரே

உண்ர் + கொற்றரே

+ தேவரே

+ பூதரே

உண்டிச்சாத்தா, உண்டனிர் சாத்தரே என முறையே கூட்டி, ஆவி ய ர இறுதி முன்னிலைவினைமுன் இயல்பாதல் காண்க. ழகரமெய் முன்னிலை வினைக்கு ஈறாகாது. முன்னிலை வினைமுன் விகற்பம் வந்தவழிக் காண்க.

கொணா

எறி + சாத்தா

விடு + கொற்றா

ஆய் + தேவா

சேர் + பூதா

தாழ்

கொணாசாத்தா, கொணா கொற்றா என முறையே கூட்டி, ஆவி ய ர ழ விறுதி ஏவல் வினைமுன் இயல்பாதல் காண்க.

நட + கொற்றா நுடகொற்றா, நடக்கொற்றா

எய் + கொற்றா = எய்கொற்றா, எய்க்கொற்றா

ஈர் + கொற்றா = ஈர்கொற்றா, ஈர்க்கொற்றா

தாழ் + கொற்றா = தாழ்கொற்றா, தாழ்க்கொற்றா

என ஏவல்வினை முன் விகற்பித்தல் காண்க.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ—ள்.:— ஆவி**—உயிரையும், **ய ர ழ** — ய ர ழ என்கின்ற மூன்று மெய்களையும், **இறுதி** — இறதியாகவுடைய, **முன்னிலைவினை** (முன்)— முன்னிலைவினை முன்னும், **ஏவல் முன்** — ஏவல்வினை முன்னும், **வல்லினம்** — (வருகிற) க ச த பக்கள், **இயல்பொடு** — இயல்புடனே, விகற்பு — விகற்பமாம். **எ—று.**

**பொ—ரை.:—**

உயிரையும் ய, ர, ழ ஆகிய இம் மூன்று ஒற்றையும் இறுதியில் உடைய முன்னிலைவினையின் பின்னும், ஏவல் வினையின் பின்னும் வரும் வல்லினம் இயல்பும் விகற்பமும் ஆம்.

**உ—ம்.:—**

உண்டி+கொற்றா=உண்டி கொற்றா.

சாத்தா = உண்டி சாத்தா.

தேவா = உண்டி தேவா.

பூதா = உண்டி பூதா.

உண்டாய் + கொற்றா – உண்டாய் கொற்றா.

சாத்தா = உண்டாய் சாத்தா.

தேவா = உண்டாய் தேவா.

பூதா = உண்டாய் பூதா.

உண்டனிர் + கொற்றரே = உண்டனிர் கொற்றரே.

சாத்தரே = உண்டனிர் சாத்தரே.

தேவரே = உண்டனிர் தேவரே.

பூதரே = உண்டனிர் பூதரே.

உண்டனை, உண்டீர் முதலியவற்றோடும் மேலே காட்டிய படியே கூட்டி, முன்னிலைவினைமுன் வலி இயல்பாதல் காண்க.

ழகரமெய் முன்னிலை வினைக்கு ஈறாகாதாகையால் உதாரணமில்லை. விகற்பம் வந்தவழி யுணர்க.

கொணா + கொற்றா = கொணா கொற்றா.

சாத்தா = கொணா சாத்தா.

தேவா = கொணா தேவா.

பூதா = கொணா பூதா.

ஆய் = கொற்றா = ஆய் கொற்றா.

சாத்தா = ஆய் சாத்தா.

தேவா = ஆய் தேவா.

பூதா = ஆய் பூதா.

சேர் + கொற்றா – சேர் கொற்றா.

சாத்தா = சேர் சாத்தா.

தேவா = சேர் தேவா.

பூதா = சேர் பூதா.

தாழ் + கொற்றா = தாழ் கொற்றா.

சாத்தா = தாழ் சாத்தா.

தேவா = தாழ் தேவா.

பூதா = தாழ் பூதா.

எறி, விடு, கடி, வே முதலியவற்றோடும் மேலே காட்டியபடியே கூட்டி ஏவல்வினைமுன் இயல்பாதல் காண்க.

முன்னிலைவினைமுன் விகற்பம் வந்தவழிக் காண்க.

நட கொற்றா—நடக் கொற்றா, எய் கொற்றா – எய்க் கொற்றா, ஈர் கொற்றா – ஈர்க் கொற்றா, தாழ் கொற்றா – தாழ்க் கொற்றா என ஏவலின் முன் விகற்பித்தன. பிறவுமன்ன.

**விகற்பமாவது:–** ஒருபுணர்ச்சிக்கே ஒருகால் ஒரு வகையாயும், மற்றொருகால் வேறுவகையாயும் வருவது. விகற்பம், உறழ்ச்சி, பொருதல் என்பன ஒரு பொருட்சொற்கள். (விகற்பம் – நியதியின்மை யென்பது பொருள்.)

**முன்னிலை வினைக்கும் ஏவல் வினைக்கும் வேறுபாடு:–**

முன்னிலைவினை – நடந்தாய், நடக்கின்றாய், நடப்பாய் என்றாற் போல மூன்றுகாலத்தும் தனித்தனி வருவதாய் முன்னிற்கும் பொருளினது தொழிலை யுணர்த்தி ஏவற் பொருள்படாதது என்றும், ஏவல்வினை – நட, நடமின், நடவும் என்றாற்போல எதிர்காலத்துமாத்திரமே வருவதாய் முன்னிற்கும் பொருளைக் கட்டளையிடுவது என்றும் வேறுபாடு அறிக. ஏவலெல்லாம் முன்னிலைவினையாம்; முன்னிலை வினையெல்லாம் ஏவலாகா.

இவையெல்லாம் வினைமுற்றுத் தொடராதலால் அல்வழிப் புணர்ச்சி.

## கா.நமச்சிவாய முதலியார்

**ஆவி** – உயிரையும், **ய ர ழ** – ய ர ழ என்னும் மூன்று மெய்யையும், **இறுதி** – ஈறாகவுடைய, **முன்னிலை வினை** – முன்னிலை வினைகட்கும், **ஏவல்** – ஏவல் வினைகட்கும், **முன்** – முன் வருகிற, **வல்லினம்** – க ச த பக்கள், **இயல்பொடு** – இயல்புடனே, **விகற்பு** – விகற்பமுமாம் (இயல்பாயும் மிகுந்தும் வரும்).

முன்னிலைவினை – மூன்றுகாலத்துக்கும் உரியதாய் முன்நிற்கும் பொருளினது தொழிலை உணர்த்துவதென்றும், ஏவல்வினை – எதிர்காலத்துக்கு மாத்திரமே உரியதாய் முன் நிற்கும் பொருளைக் கட்டளையிடுவதென்றும் வேறுபாடு அறிக. ஏவலெல்லாம்

முன்னிலையாம் ; முன்னிலை யெல்லாம் ஏவலாகா. விகற்பமாவது – ஒரு புணர்ச்சிக்கே ஒருகால் ஒருவகை யாயும், மற்றொருகால் வேறு வகையாயும் வருவது ; விகற்பம், உறழ்ச்சி, பொருதல் என்பன ஒருபொருட் சொற்கள்.

**உதாரணம்.:–**

| | | | | |
|---|---|---|---|---|
| உண்டனை | + | கொற்றா | = | உண்டனைகொற்றா |
| | + | சாத்தா | = | உண்டனைசாத்தா |
| | + | தேவா | = | உண்டனைதேவா |
| | + | பூதா | = | உண்டனைபூதா |
| உண்டாய் | + | கொற்றா | = | உண்டாய்கொற்றா |
| | + | சாத்தா | = | உண்டாய்சாத்தா |
| | + | தேவா | = | உண்டாய்தேவா |
| | + | பூதா | = | உண்டாய்பூதா |
| உண்டனிர் | + | கொற்றரே | = | உண்டனிர்கொற்றரே |
| | + | சாத்தரே | = | உண்டனிர்சாத்தரே |
| | + | தேவரே | = | உண்டனிர்தேவரே |
| | + | பூதரே | = | உண்டனிர்பூதரே |

என ஆவி யர இறுதி முன்னிலைவினை முன் வலி இயல்பாயின.

ழகரமெய் முன்னிலைவினைக்கு ஈறாகாமையால், உதாரணம் காட்டக்கூடாமை அறிக.

முன்னிலைவினைமுன் விகற்பித்தல் வந்தவிடத்துக் காண்க.

| | | | | |
|---|---|---|---|---|
| வா | + | கொற்றா | = | வாகொற்றா |
| பாய் | + | சாத்தா | = | பாய்சாத்தா |
| சேர் | + | தேவா | = | சேர்தேவா |
| வாழ் | + | பூதா | = | வாழ்பூதா |

என ஆவி ய ர ழ இறுதி ஏவல்வினைமுன் வலி இயல்பாயின.

| | | | | |
|---|---|---|---|---|
| நட | + | கொற்றா | = | நடகொற்றா, நடக்கொற்றா |
| எய் | + | கொற்றா | = | எய்கொற்றா, எய்க்கொற்றா |

ஏவல் வினைமுன் விகற்பமாயின.

## மோசகு பொன்னையா

உயிரையும், ய ர ழ என்னும் மெய்களையும் ஈற்றிற் கொண்ட முன்னிலை வினை, ஏவல் வினை என்னும் இவற்றின் முன்னர் வரும் வல்லினம் இயல்பாகவும் மிக்கும் முடியும் எ–று.

விகற்பம் என்பது ஒருகால் இயல்பாகவும், ஒருகால் விகார மாகவும் வருவது; உறழ்ச்சி என்பதும் அது.தொல்காப்பியர்,

உயிரீ றாகிய முன்னிலைக் கிளவியும்
புள்ளி யிறுதி முன்னிலைக் கிளவியும்
இயல்பா குநவும் உறழாகு நவுமென்
றாயீ ரியல வல்லெழுத்து வரினே.

என்று கூறியதையே இவ்வாசிரியர் இந்நூற்பாவாற் கூறினார். தொல்காப்பியர் 'முன்னிலைக்கிளவி' என்றதற்கு நச்சினார்க்கினியர் இவை முன்னின்றான் தொழி லுணர்த்துவனவும், அவனைத் தொழிற்படுத்து வனவுமென இருவகைய, இ, ஐ, ஆய், முதலியன தொழி லுணர்த்துவன; நட, வா, உண், தின் முதலிய உயிரீறும் புள்ளியீறுந் தொழிற்படுத்துவன' என்று விளக்கவுரை வகுத்தார். பவணந்தியார் முன்னின்றானது தொழில் உணர்த்துவதாய்த் தன்மை படர்க்கை வினைகட்கு இனமாய் அமையும் வினையை முன்னிலைவினை எனவும், முன்னின்றானைத் தொழிற் படுத்துவதாய் முன் னிலை ஒன்றற்கேயுரியதாய் அமையும் வினையை ஏவல் வினை எனவும் விதந்து கூறியுள்ளமை பாராட்டற்கு உரியது.

எ–டு.:–

உண்டி கொற்றா
உண்டனை கொற்றா
உண்டாய் கொற்றா – முன்னிலைவினை முன்னர்வலிஇயல்பாயின.
உண்டனிர் கொற்றரே (விகற்பமாதல் வழக்கில் இல்லை)
(முகரம் முன்னிலை வினைக்கு ஈறாகாது)
கொணா கொற்றா
எரி கொற்றா
விடு கொற்றா
பாய் கொற்றா
சேர் கொற்றா
தாழ் கொற்றா – ஏவல்வினை உயிர் ய ர ழ முன்னர் இய்ல்பாயின.

நட கொற்றா, நடக்கொற்றா

எய் கொற்றா, எய்க்கொற்றா – ஏவல் வினை முன்னர்வலி இயல்போடு விகற்பமாயிற்று

(இது அருகிய வழக்கு)

11)

**161. இஈ ஐவழி யவ்வு மேனை**
**உயிர்வழி வவ்வு மேமுனிவ் விருமையும்**
**உயிர்வரி னுடம்படு மெய்யென் றாகும்.**

**இ ஈ ஐ வழி யவ்வும் ஏனை**
**உயிர்வழி வவ்வும் ஏ முன் இவ் இருமையும்**
**உயிர்வரின் உடம்படு மெய் என்று ஆகும்.**

i ī ai vaḷi yavvum ēṉai
uyirvaḷi vavvum ē muṉ iv irumaiyum
uyirvariṉ utampatu mey eṉūu ākum.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### SPECIAL COMBINATION OF VOWELS

### Consonantal glide

In the combination of Initial vowels with the (vowel) finals i,ī,ai, (the consonant) y is inserted; with the other vowel-final v is inserted; and with ê both (y and v) are inserted. The y and v are (on this account called) the "servile consonants".

## ஒப்புமைப் பகுதி

**எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே**
**உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார்**

(தொல்.: 141)

**மூன்றொடு நான்கென்ப தாமுயிர்ப் பின்னுயிர் முந்தினடு**
**ஆன்ற யகாரம்வந் தாகம மாகும் அல்லாவுயிர்க்கு**
**ஏன்ற வகாரம் எட்டேற்கும் இரண்டும் இறுதிகெட்டுத்**
**தோன்று நிலையும் ஒரோவிடத் தாமென்பர் தூமொழியே.**

(வீ.: 13)

**மூன்றுநான் கொன்பான் உயிர்ப்பின்னும் அல்லாத**
**ஆன்ற உயிர்ப்பின்னும் ஆவிவரிற் – றோன்றும்**
**யகர வகரம் இறுதியிடத் தோரோர்**
**மகரங் கெடவகரம் ஆம்.**

(நேமி.: 13)

**இஈ ஐவழி யவ்வு மேனை**
**யுயிர்வழி வவ்வு மேமுனிவ் விருமையு**
**முயிர்வரி னுடம்படு மெய்யென் றாதல்**
**வரைவின் றென்மனார் மதிங்குங் காலே**

(இ.வி.: 68)

**முதலிற் றுயிரும் மொழியே சேர்புளி**
**இஈ எஐ ஈறு இயையும் யவ்வே**
**மற்றை உயிர்க் கீழ் வகரம் புணரும்**

(தொன்.: 20)

**இஈ ஐவழி யவ்வு மேனை**
**உயிர்வழி வவ்வு மேமுன்னிவ் விருமையும்**
**உயிர்வரி னுடம்படு மெய்யென் றாகும்**

(மு.வீ.: 183)

## மயிலை நாதர்

**எ–ன்,** உயிரீற்று மொழிமுன் உயிர் முதன்மொழி வந்து புணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:–** இகர ஈகார ஐகாரங்களின் வழியே யகரமும், அ ஆ உ ஊ ஒ ஓ ஔ என்னும் இவ்வேழுயிர்களின் வழியே வகரமும், ஏகாரத்தின் வழியே யகரமும் வகரமும் உயிர்முதலாகிய சொற்கள் வந்தால் உடம்படுமெய் யென்னும் பெயரவாய் வரும், எ – று.

**வ – று.:–**

மணியழகிது, தீயழகிது, மலையழகிது எனவும்; (விள, பலா, கடு, பூ, நொ, சோ, வௌ) + (அடைந்து, [1]ஆறிற்று, [2]இடைந்தது, ஈறிற்று, உடைந்தது, [3]ஊறிற்று, எழுந்தது, [4]ஏறிற்று, ஐது, ஒழிந்தது, ஓங்கிற்று) எனவும்;

''ஏயே யிவளொருத்தி பேடியோ வென்றார்'' சேவழகிது எனவும் வந்தவாறு காண்க. மணியழகு, விளவழகு என வேற்றுமைப் பொருட்கு மொக்கும்.

ஔகாரம் தானே மொழிக்கு முதலாதல் வழக்குப்

பயிற்சியின்மையின், இன்னோரன்ன இடங்களில் வாராது. எகரமும் அளபெடையினல்லது தானாக நின்றும் மெய்யோடு கூடி நின்றும் ஈறாகாமையால், ஈற்றுக்கு வரும் விதிகளைப் பெரும்பாலும் ஏலாதென்க. இதனை, இயல்பு புணர்ச்சி யென்பாருமுளர்.

## சங்கர நமச்சிவாயர்

எ – **னின்,** உயிரீற்றுப் பதம் புணரும் சிறப்புப் புணர்ச்சி கூறுவான் தொடங்கி, உயிரீற்றின் முன் உயிர்முதல் வந்து புணருமாறு **உணர் – ற்று.**

**இ – ள்.:–** இகர ஈகார ஐகாரங்களின் வழியே யகரமும், அ ஆ உ ஊ ஒ ஓ ஔ என்னும் இவ்வேழு உயிர்களின்வழியே வகரமும், ஏகாரத்தின் வழியே யகரமும் வகரமும் உயிர்முதன் மொழி வந்தால் உடம்படுமெய் என்று வரும், **எ – று.**

இருமை என்பது,

**"ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும் தான்புக் கழுந்தும் அளறு" (குறள்.:835)**

என்றாற் போலக் குணியைக் குணமாகக் கூறுவதோர் மரபு வழுவமைதி.

**உ – ம்.:–**

மணியழகிது, தீயெழுந்தது, அவையெளவியம் எனவும்; விளவழகிது, பலாவழகிது, கடுவழகிது, பூவழகிது, நொவ்வழகிது, சோவழகிது, கௌவழகிது எனவும்;

**"ஏயே யிவளொருத்தி பேடியோ என்றார்"**
**(சீவக.652)**

சேவழகிது எனவும் அல்வழிக்கண் கூறியமுறையே உடம்படுமெய் பெற்றன. மணியொளி, விளவடி, மணியை யளித்தான் என வேற்றுமைக்கண் வந்தன. பிறவும் அன்ன.

---

பாட வேறுபாடு.:–

1. ஆடிற்று
2. இழைந்து
3. ஊற்றிற்று
4. ஏற்றிற்று

"மாயிருஞாலம்" என உரிச்சொல் ஆகார வீற்றின்வழி யகரவுடம்படுமெய் வந்தது என்னை யெனின்:- அஃது 'இடை உரி வடசொலின் இயம்பிய கொளாதாவும்' என்னும் சூத்திரத்தான் அமையும் என்க.

"விண்வத்துக் கொட்கும்" என மெய்யீற்றின் வழியும் உயிர்வரின் உடம்படுமெய் பெறும் என்பாரும் உளராலோ எனின்:-உயிரீற்றின் முன் உயிர்முதல் வரின் உயிரோடு உயிர்க்கு மயக்கம் இன்மையின் புணர்ச்சி யின்றி விட்டிசைத்து நிற்கும் ஆதலின், உடம்படாத அவ் விரண்டும் உடம்படுதற் பொருட்டு இடையே வரும் மெய்யை உடம்படுமெய் என்பவாகலின், வரும் உயிரேறி ஒற்றுமைப்பட்டுப் புணர்தற்கு உரிய மெய்யீற்றின் வழித் தோன்றும் மெய்யை உடம்படுமெய் என்பது பொருந்தாது. அவ்வகர மெய் தோன்றுதற்கு விதி வருஞ் சூத்திரத்துள் கூறுப.

உடன்படல் என்பது உடம்படலென மரீஇயிற்று. "உடம்பாடிலாதவர் வாழ்க்கை" என வருதல் காண்க. உயிரோடு உயிர்க்கு மயக்கம் இன்மையின், வரும் உயிர்க்கு உடம்பாக அடுக்கும் மெய் உடம்படுமெய் எனப் பொருள் கூறுதலும் ஒன்று.

இவ் வுடம்படுமெய்களின் தோற்றம் ஏனைத் தோன்றல்விகாரம் போலாது மயங்காதன மயங்குதற்கு ஆசு போல வந்தமையின், இப் புணர்ச்சியை இயல்புபுணர்ச்சி என்று கூறுவார் கூற்றும் அமையும் என்பார் உடம்படுமெய் தோன்றும் என்னாது, உடம்படுமெய் யென்றாகும் என்றார்.

ஈண்டும் எகர ஈறு ஒழியக் கொள்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், உயிரீற்று மொழிமுன் உயிர் முதன்மொழி வந்து புணருமாறு கூறியது.

**இ-ள்.:- இ ஈ ஐ வழி யவ்வும் -** இகர ஈகார ஐகாரங்களின் வழியே யகரமும், **ஏனை உயிர் வழி வவ்வும் -** இவை யொழிந்த அ ஆ உ ஊ ஒ ஓ ஔ என்னும் இவ்வேழு உயிர்களின் முன்னே வவ்வும், **ஏ முன் இவ்விருமையும் -** ஏகாரத்தின் வழியே யகாரமும் வகாரமும் உயிர்களின் முன் மொழிமுதல் உயிர் வந்தால், **உடம்படுமெய் யென்றாகும் -** உடம்படுமெய் யென்று பெயரவாய் வரும், **எ-று.**

உ–ம்.:–

மணி, தீ, மலை என நிறுத்தி அடைந்தது, ஆடிற்று, இடைந்தது, ஈறிற்று, உடைந்தது, ஊறிற்று, எழுந்தது, எறிந்தது, ஏறிற்று, ஐது, ஒழிந்தது, ஓங்கிற்று என வருவித்து மணியடைந்தது மணியாடிற்று என எல்லாவற்றோடும் ஒட்டி இடையே யகர உடம்படுமெய் வந்தவாறு காண்க. மணியழகு, மணியாட்டம் என வேற்றுமைப் பொருட்கும் ஒட்டுக. ஔகாரம் தானாக மொழிக்கு முதலாகவில்லை என்க. விள, பலா, கடு, பூ, நொ, சோ, ஔ என நிறுத்தி அடைந்தது, ஆடிற்று, இடைந்தது, ஈறிற்று, உடைந்தது, ஊறிற்று, எழுந்தது, ஏறிற்று, ஐது, ஒழிந்தது, ஓங்கிற்று என வருவித்து விளவடைந்தது, விளவாடிற்று என எல்லாவற்றிற்கும் ஒட்டி இடையே வகர உடம்படுமெய் வந்தவாறு காண்க. விளவழகு, விளவாட்டம், விளவிசைவு என வேற்றுமைப் புணர்ச்சிக்கும் ஒட்டி இடையே வகர உடம்படுமெய் வந்தவாறு காண்க. "ஏயேயிவளொருத்தி பேடியோ வென்றார்" 'சேவழகு' என ஏகாரத்தின் முன் யகரமும் வகரமும் வந்தன காண்க.

## விசாகப் பெருமாளையர்

இது, உயிரீறுப்பதம் புணருஞ் சிறப்புப் புணர்ச்சி சொல்லத் தொடங்கி உயிரீற்று முன் உயிரீற்றுப் பதம் வந்து புணருமாறு உணர்த்துகின்றது.

**இ–ள்.:– இஈஐவழி–**இகர ஈகார ஐகாரங்களின் முன்னே, **யவ்வும் –** யகரமும், **ஏனை யுயிர்வழி–** அ ஆ உ ஊ ஒ ஓ ஔ என்கின்ற விவ்வேழுயிர்களின் முன்னே, **வவ்வும் –** வகரமும், **ஏமுன் –** ஏகாரத்தின் முன்னே, **இவ்விருமையும் –** யகரமும் வகரமும், **உயிர் வரின் –** உயிர் முதன்மொழி வந்தால், **உடம்படுமெய் யென்றாகும் –** உடம்படுமெய் யென்று வரப்பெறும், எ – **று.**

உ–ம்.:–

மணி, தீ, பனை இவைகளுக்கு முன்னே அழகிது அழகு முதலாகிய வுயிர் முதன் மொழிகளை வருவித்து, மணியழகிது, மணியழகு எனக் கூட்டி இ ஈ ஐ முன் யகரம் பெறுதல் காண்க. விள, பல, கடு, பூ, நொ, கோ, கௌ, இவைகளுக்கு முன்னே அழகிது அழகு முதலாகிய உயிர் முதன் மொழிகளை வருவித்து, விளவழகிது, விளவழகு எனக் கூட்டி மற்றை யுயிர்களில் முன் வகரம் பெறுதல்

காண்க, அவனே இவன் அவனேயிவன், சேஅழகிது சேவழகிது என ஏமுன் அவ்விரு மெய்களும் வருதல் காண்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

உயிரீற்று மொழிமுன் உயிர்முதன்மொழிவந்து புணருமாறு கூறும் சூத்திரம் யாது?

இ ஈ ஐ வழி யவ்வு மேனை
உயிர்வழி வவ்வு மேமுனிவ் விருமையும்
உயிர்வரி னுடம்படு மெய்யென் றாகும்.
(இ ஈ ஐ வழி யவ்வும், ஏனை
உயிர்வழி வவ்வும், ஏ முன் இவ்விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய் என்று ஆகும்)

**இ—ள்.: இ ஈ ஐ வழி யவ்வும்** – இகர ஈகார ஐகாரங்களின் முன்னே யகரமும், **ஏனை உயிர்வழி வவ்வும்** –அ ஆ உ ஊ ஒ ஓ ஔ என்னும் இவ்வேழுயிர்களின் முன்னே வகரமும், **ஏ முன் இவ்விருமையும்** – ஏகாரத்தின் முன்னே யகரமும் வகரமும், **உயிர்வரின் உடம்படுமெய் என்று ஆகும்** – உயிர் முதன் மெ் வரின் உடம்படுமெய்யென்று வரப்பெறும், **எ—று.**

உடம்படுமெய்யாவது யாது?

உடம்படுமெய்யென்பது, நிலைமெ..ழியீற்றினும் வருமொழி முதலினு நின்ற உயிர்களை உடம்படுத்தும் மெய். உடம்படுத்தலெனினும், உடன்படுத்த லெனினும் ஒக்கும். வருமுயிருக்கு உடம்பாக அடுக்குமெய்யெனினும் பொருந்தும்.

யகரவுடம்படுமெய் எங்கேவரும்?

"இ ஈ ஐவழி யவ்வும்" (உயிர்வரின் உடம்படுமெய் யென்றாகும்)

**உ—ம்.:—**

மணி அழகு – மணியழகு.
தீ ஆடி – தீயாடி.
மலை அடி – மலையடி.

வகரவுடம்படுமெய் எங்கேவரும்?

"ஏனை உயிர்வழி வவ்வும்" (உயிர்வரின் உடம்படுமெய் யென்றாகும்)

**உ—ம்.:—**

விள இலை—விளவிலை.
பலா அரும்பு—பலாவரும்பு
மடு ஆழம்—மடுவாழம்

பூ அரசு–பூவரசு
ஏ அன்–எவன்
சே ஏறி–சேவேறி
நொ அழகியது–நொவ்வழகிது.
கோ உண்டான்–கோவுண்டான்
கௌ அழகிது–கௌவழகிது.

யகர வகர வுடம்படுமெய்கள் இரண்டும் எங்கேவரும்?

"ஏ முன் இவ்விருமையும் உடம்படுமெய்யென்றாகும்"

**உ–ம்.:–**

சே அடி–சேவடி
சே அடி–சேயடி
ஏ கார மளபெடுக்குமிடத்துவரும் எகரமுன்னரும் யகரமும் வகரமும் உடம்படுமெய்யாக வரும்.
உ–ம். ஏஎ இவளொருத்தி–ஏஎயிவளொருத்தி.
சேஎ அடைந்தது–சேஎவடைந்தது.

இப்புணர்ச்சி இயல்பு புணர்ச்சியோ? விகாரப் புணர்ச்சியோ?

உயிரோடுயிர் மயங்காமையின் அவை உடம்படுமெய் பெற்றுப் புணரும் புணர்ச்சியெல்லாம் இயல்புபுணர்ச்சியேயாம். அது தோன்றல் விகாரமன்று.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** உயிரீற்றுப் பதம் புணருஞ் சிறப்புப் புணர்ச்சி கூறத் தொடங்கி உயிரீற்றின் முன் உயிர் புணருமாறு ணர்த்திற்று.

**இ–ள்.:– இ ஈ யை வழி யவ்வும் –** இந்த மூன்று உயிர்களின் பின் யகர ஒற்றும், **ஏனை யுயிர் வழி வவ்வும் –** ஒழித்த உயிர்களின் பின் வகர ஒற்றும், **ஏ முனிவ் விருமையும் –** ஏகாரத்தின் பின் யகர வகர ஒற்றுக்களிரண்டும், **உயிர்வரின் –** உயிர் முதல்மொழி வந்து புணருமாயின், **உடம்படு மெய் யென் றாகும் –** உடம்படு மெய் யெனப் பெயர் பெற்று வரும், **எ–று.**

'இருமை' என்றது, இங்கே பண்பை யன்று, 'இருமை வகை தெரிந்தது' 'மும்மைத்தமிழ்' என்றாற்போல பண்புடையதை யெனக் காண்க.

**உ–ம்.:–**

மணி அழகிது–மணியழகிது, தீஎரிந்தது–தீயெரிந்தது, அவை அஞ்சாமை – அவையஞ்சாமை எனவும்; விள அழகிது–விளவழகிது, பலா அழகிது–பலாவழகிது: கடுவழகிது, பூவழகிது, நொவ்வழகிது, கோவழகிது,

கௌவழகிது எனவும்; 'ஏயே யிவளொருத்தி பேடி' அவனேயிவன், சேவழகிது எனவு முறையே அல்வழியில் உடம்படுமெய் பெற்றன. மணியொளி, தீயொளி, பனையடி எனவும்; விளிவடி, பலாவடி, கடுவருமை, பூவருமை, கோவழகு கௌவழகு எனவும் வேற்றுமையில் உடம்படுமெய் பெற்றன. பிறவுமன்ன.

இனி, அளபெடை எகரத்தின் பின்னும் யகர வகர உடம்படுமெய் பெறுதலுரையிற் கொள்க.

**வரலாறு.:–**

உண்டேஎ யிகல், சேஎவடைந்தது எனவரும். 'மாயிரு ஞாலமென' ஆகார ஈற்று உரிச்சொல் முன்னும், போயினான் என ஓகார ஈற்றுப்பகுதி யிடைச்சொல் முன்னும், யகர உடம்படுமெய் பெற்ற தென்னெனின், அது

**"இடையுரி வடசொலி னியம்பிய கொளாதவு"**

மென்னுஞ் சூத்திரத்தால் அமையுமென்க. விண்வத்துக்கொட்கு மென மெய்யீற்றின் பின்னும் உயிர்வரினுடம்படுமெய் பெறு மென்பாருமுள ரெனின், உயிரோடு உயிர்க்கு மயக்க மில்லாததினாலே, அவ்விரண்டும் உடம்படுதற் பொருட்டு இடையே வரும் மெய்யை உடம்படுமெய் யென் பாராதலால், வரும் உயிரேறி ஒன்றுபடுதற்கு உரிய மெய் ஈற்றின் பின்வரும் மெய்யை உடம்படுமெய் யென்பது பொருந்தாது. அந்த வகரமெய் தோன்றுதற்கு விதி வருஞ் சூத்திரத்தாற் காண்க. உடன்படலென்பது உடம்படலென மரூஉ வாயிற்று. இனிவரும் உயிர்க்கு உடம்பாக அடுக்குமெய் உடம்படுமெய் யெனினும் அமையும். இந்த உடம்படுமெய்யின் தோற்றம், தோன்றல் விகாரம் போலாகாது, இடைவிட்ட உலோகங்களை இணக்கும் பற்றாசு போல வருதலின் இப் புணர்ச்சியை இயல்புப் புணர்ச்சி யென்று சொல்ல வந்தவர், உடம்படு மெய்தோன்று மென்னாமல், 'உடம்படுமெய் யென்றாகு' மென்றார். இவ் விடத்தும் ஏகர ஈற்றை விலக்குக. உலோகம் – பொன் வெள்ளி செம்பு முதலியன. பற்றாசிடல் – பொடிவைத்து ஊதுதல். யவ்வும் வவ்வும் உடம்படுமெய்யா மென முடிக்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– இ ஈ ஐ வழி உயிர்வரின்** – இகர ஈகார ஐகாரங்களின் பின்னே உயிர் வந்தால், **யவ்வும்** – யகர மெய்யும், **ஏனை உயிர்வழி உயிர் வரின் – (அ ஆ உ ஊ ஒ ஓ ஔ என்னும்)** இவ்வேழு உயிர்களின் பின்னே உயிர்வந்தால், **வவ்வும்** – வகர மெய்யும், **ஏ முன் உயிர்வரின்** – ஏகாரத்தின் பின்னே உயிர்வந்தால், **இ இருமையும்** – இவ்விரண்டும் (யகர மெய்யும் வகர மெய்யும்), **உடம்படு மெய் என்று ஆகும்** – உடம்படு மெய்யாக வரும்.

**குறிப்பு :–**

உடம்படு மெய் : நிலைமொழி ஈற்றுயிரையும், வருமொழிமுதலுயிரையும் உடம்படுத்தும் மெய்; உடம்படுத்தல் எனினும், உடன்படுத்தல் எனினும் பொருள் ஒக்கும். உடம்பு அடுத்து எனப் பிரித்து வரும் உயிர் ஏறுதற்கு உடம்பாக அடுக்கும் மெய் எனினுமாம்.

**உதாரணம் :–**

| **அல்வழி** | **வேற்றுமை** |
|---|---|
| மணி + அழகிது = மணியழகிது. | மணியழகு |
| தீ + அழகிது = தீயழகிது | தீயழகு |
| பனை + அழகிது = பனையழகிது | பனையழகு |

(இ ஈ ஐ முன் யகரம் வந்தது.)

| | | |
|---|---|---|
| விள + அழகிது | = விளவழகிது | விளவழகு |
| பலா + அழகிது | = பலாவழகிது | பலாவழகு |
| மடு + அழகிது | = மடுவழகிது | மடுவழகு |
| பூ + அழகிது | = பூவழகிது | பூவழகு |
| நொ + அழகிது | = நொவ்வழகிது | நொவ்வழகு |
| கோ + அழகிது | = கோவழகிது | கோவழகு |
| கௌ + அழகிது | = கெவழகிது | கொளவழகு |

(ஏனை உயிர்களின் முன் வகரம் வந்தது.)

அவனே + அழகன் = அவனேயழகன் என இடைச்சொல் ஏ முன் யகரமும், ஏ + எலாம் = ஏவெலாம், சே + உழவு = சேவுழவு என ஒரெழுத்தொரு மொழியாகிய உயிர், உயிர்மெய் என்னும் ஏமுன் இருவழியும் வகரமும்; சே + அடி = சேயடி, சேவடி எனச் செம்மை என்னும் பண்பின் விகாரமாகிய சேமுன் யகரமும் வகரமும் உடம்படு மெய்யாக வந்தன.

இறுதியிற் கூறிய 'சேயடி' 'சேவடி' என்பதை "ஈறுபோதல்" என்ற சூத்திரத்தில் அடக்கலுமாம்.

'உடம்படுமெய் **தோன்றும்'** என்னாது, 'ஆகும்' என்றமையால் இதனை இயல்புணர்ச்சி எனக் கொள்வர் **இராமானுச கவிராயர்.**

## ஆறுமுக நாவலர்

**இ—ள்.: இ ஈ ஐ வழி யவ்வும்** – இகர ஈகார ஐகாரங்களின் முன்னே யகரமும், **ஏனை உயிர்வழி வவ்வும்** – அ ஆ உ ஊ ஒ ஓ ஔ என்னும் இவ் வேழுயிர்களின் முன்னே வகரமும், **ஏ முன் இவ் விருமையும்** – ஏகாரத்தின் முன்னே யகரமும் வகரமும், **உயிர்வரின் உடம்படு மெய் என்று ஆகும்** – உயிர் முதன் மொழி வரின் உடம்படுமெய் யென்று வரப் பெறும், எ—று.

உடம்படு மெய் யென்பது, நிலைமொழி யீற்றினும் வருமொழி முதலினு நின்ற உயிர்களை உடம்படுத்தும் மெய். உடம்படுத்த லெனினும், உடன்படுத்த லெனினும் ஒக்கும். வருமுயிருக்கு உடம்பாக அடுக்குமெய் யெனினும் பொருந்தும்.

**உ – ம்.:–**

(1) மணி, தீ, பனை இவற்றின் முன், அழகிது, அழகு முதலிய உயிர் முதன்மொழிகளை வருவித்து, மணியழகிது, மணியழகு எனக் கூட்டி, இ ஈ ஐம் முன் இருவழியும் யகரம் பெறுதல் காண்க. உடம்படுமெய்யின் மேல் வருமொழி முதலுயிரேறுதல் "உடன்மேலுயிர்" என்னுஞ் சூத்திரத்தாற் பெறப்படும்.

(2) விள, பலா, கடு, பூ, நொ, கோ, கௌ இவற்றிற்கு முன், அழகிது, அழகு முதலிய உயிர் முதன்மொழிகளை வருவித்து, விளவழகிது, விளவழகு எனக் கூட்டி, மற்றை யுயிர்களின் முன், இருவழியும் வகரம் பெறுதல் காண்க.

(3) அவனே + அழகன் = அவனேயழகன் என இடைச்சொல்லாகிய ஏ முன் யகரமும், ஏ + எலாம் = ஏவெலாம், சே+உழுதது = சேவுழுதது என ஓரெழுத்தொரு மொழியாகிய உயிர் உயிர்மெய் என்னும் ஏ முன் வகரமும், சே+அடி= சேயடி, சேவடி எனச் செம்மை யென்னும் பண்புப்பெயரின் விகாரமாகிய சேமுன் யகரமும் வகரமும் பெறுதல் காண்க.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். இஈஐ வழி யவ்வும் – இகர ஈகார ஐகாரங்களின் முன்னே யகரமும்; – **ஏனை உயிர்வழி வவ்வும்** – அஆஉஊஎஒஔ என்னும் இவ்வேழுயிர்களின் முன்னே வகரமும், – **ஏமுன் இவ்விருமையும்** – ஏகாரத்தின் முன்னே யகரமும் வகரமும், – **உயிர்வரின் உடம்படு மெய்யென்று ஆகும்** – உயிர் முதன்மொழி வரின் உடம்படுமெய்யென்று வரப்பெறும். **எ–று.**

உடம்படுமெய் யென்பது, நிலைமொழி யீற்றினும் வருமொழி முதலினு நின்ற உயிர்களை உடம்படுத்தும் மெய். உடம்படுத்தலெனினும், உடன்படுத்தலெனினும் ஒக்கும், வருமுயிருக்கு உடம்பாக அடுக்குமெய்யெனினும் பொருந்தும்.

**உ–ம்.:–**

(1)மணி, தீ, பனை இவற்றின்முன் அழகிது, அழகு முதலிய உயிர் முதன் மொழிகளை வருவித்து, மணியழகிது, மணியழகு எனக் கூட்டி இ ஈ ஐம்முன் இருவழியும் யகரம் பெறுதல் காண்க. உடம்படுமெய்யின் மேல் வருமொழி முதலுயிரேறுதல்; 'உடன்மேலுயிர்' என்னுஞ் சூத்திரத்தாற் பெறப்படும்.

(2) விள, பலா, கடு, பூ, நொ, கொ, கௌ இவற்றின்முன், அழகிது, அழகு முதலிய உயிர்முதன் மொழிகளை வருவித்து, விளவழகிது, விளவழகு எனக் கூட்டி மற்றையுயிர்களின்முன் இரு வழியும் வகரம் பெறுதல் காண்க.

(3)அவனே + அழகன் = அவனே யழகன் என இடைச்சொல்லாகிய ஏ, முன் யகரமும், ஏ+எலாம் = ஏவெலாம், சே+உழுதது=சேவுழுதது என ஓரெழுத்தொருமொழியாகிய உயிர் உயிர்மெய் யென்னும் ஏ முன் வகரமும், சே+அடி=சேயடி, சேவடி எனச் செம்மையென்னும் பண்புப்பெயரின் விகாரமாகிய சேமுன் யகரமும் வகரமும் பெறுதல் காண்க.

**"உடம்படுமெய்யே யகர வகாரம், உயிர்முதன்**
**மொழிவரூஉங் காலை யான"**

**"இறுதியு முதலு முயிர்நிலை பெறினே**
**உறுமென மொழிப வுடம்படுமெய்யே"**

என்று பிறர் கூறிய சூத்திரங்களையும் உணர்ந்து நிலைமொழியீற்றினும் வருமொழிமுதலினும் உயிர் நிற்க அவ்வுயிரிரண்டற்குமிடையே வந்த யகரமெய்யாவது வகரமெய்யாவது உடம்படுமெய்யென்று சொல்லப்படும் எனவும், செல்வுழிச் செல்க என்பதில் செல்+உழிச்செல்க என்பவற்றிடையே வந்த வகரமெய்யாதலின் நிலைமொழி யீற்றின் மெய்யெழுத்து நிற்றலால் அவ்வகரவொற்றை உடம்படுமெய்யென்று கொள்ளலாகா தெனவும் உயிரீறும் உயிர்முதலும் சந்தித்தற்கண் ஒன்று பட்டிணங்கமாட்டா மையால் அவற்றை உடம்படுத்த வந்த மெய் உடம்படுமெய் யெனப்படு மன்றி மெய்யுமுயிருமாக ஒன்றுபட்டுச் சந்திக்கத்தக்க இடத்தில் வரும் மெய் உடம்படுமெய்யெனப் படாதெனவும் அறிக.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

புணரியல் மூன்றனுள் உயிரீற்றுப் புணரியல் முதலதாதலால், அதில் முதற் பதினொரு சூத்திரங்களால் இது வரையிலும் புணர்ச்சி விதியை உயிரீற்றுக்கும் மெய் யீற்றுக்கும் பொதுப்படக் கூறி, இனி உயிரீற்றுப் புணர்ச்சிச் சிறப்புவிதி கூறுகின்றார்.

**இ–ள்.:– உயிர்வரின்** – (வருமொழிமுதலில்) உயிர்வந்தால், **இஈ ஐ வழி** – இகர ஈகார ஐகாரங்களின் பின்னே, **யவ்வும்** – யகர மெய்யும்; **ஏனை உயிர் வழி** – (அ ஆ உ ஊ ஒ ஓ ஔ என்னும்) இவ்வேழு உயிர்களின் பின்னே, **வவ்வும்** – வகர மெய்யும்; **ஏ முன்** – ஏகாரத்தின் பின்னே, **இ இருமையும்** – இவ் விரண்டும் (யகர மெய்யும் வகர மெய்யும்), **உடம்படுமெய் என்று ஆகும்** – உடம்படு மெய்யாக வரும்; **எ–று**- முன் – இடமுன்.

**உடம்படுமெய்** – நிலைமொழி யீற்றிலும் வருமொழி முதலிலும் நின்ற உயிர்களை உடம்படுத்தும் மெய்; உடம்படுத்த லென்றாலும், உடன்படுத்த லென்றாலும் பொருள் ஒக்கும். (உடம்பு அடு எனப் பிரித்து, வரும் உயிர் ஏறுதற்கு உடம்பாக அடுக்கும் மெய் என்றாலும் பொருந்தும்,)

**உதாரணம்.:–**

| **அல்வழி** | **வேற்றுமை** | |
|---|---|---|
| மணி +அழகிது = மணியழகிது | +அழகு= மணியழகு | இ ஈ ஐ |

முன்
யகரம் வந்தது.

தீ+ அழகிது = தீயழகிது +அழகு = தீயழகு

மலை + அழகிது = மலையழகிது +அழகு = மலையழகு

விள +அழகிது = விளவழகிது +அழகு = விளவழகு

பலா +அழகிது = பலாவழகிது +அழகு = பலாவழகு மற்றை உயிர்களின்

கடு+ அழகிது = கடுவழகிது +அழகு = கடுவழகு முன்வகரம் வந்தது.

பூ+ அழகிது = பூவழகிது +அழகு = பூவழகு

நொ+அழகிது = நொவ்வழகிது +அழகு = நொவ்வழகு

கோ + அழகிது = கோவழகிது +அழகு = கோவழகு

கௌ +அழகிது = கௌவழகிது +அழகு = கௌவழகு

(3) அவனே + அழகன் = அவனேயழகன் என இடைச்சொல் முன் யகரமும், ஏ+எலாம் = ஏவெலாம், சே+உழவு = சேவுழவு. தே+அடியார் = தேவடியார் எனப் பெயர்ச்சொல் முன் இருவழியும் வகரமும்;

சே+அடி = சேயடி, சேவடி எனச் செம்மை யென்னும் பண்புப்பெயரின் விகாரமாகிய 'சே' முன் யகரமும் வகரமும் உடம்படுமெய்யாக வந்தன.

சேயடி சேவடி என்பவற்றை "ஈறுபோதல்" என்ற சூத்திரத்து 'முன் நின்ற மெய் திரிதல்' என்றதில் அடக்குதலுமாம்.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– **இ ஈ ஐ வழி யவ்வும்** – இகர ஈகார ஐகாரங்களின் முன்னே யகரமும், **ஏனை உயிர் வழி வவ்வும்** – அ ஆ உ ஊ ஒ ஓ ஔ என்னும் இவ்வேழுயிர்களின் முன்னே வகரமும், **ஏ முன் இவ்விருமையும்** – ஏகாரத்தின் முன்னே யகரமும் வகரமும், **உயிர்வரின் உடம்படு மெய் என்று ஆகும்** – உயிர்முதன் மொழி வரின் உடம்படு மெய்யென்று வரப்பெறும். எ–று.

உடம்படுமெய்ன்பது, நிலைமொழியீற்றினும் வருமொழி முதலினும் நின்ற உயிர்களை உடம்படுத்தும் மெய். (உடம்படுத்தலெனினும், உடன்படுத்தலெனினும் ஒக்கும். வருமுஸாக்கு உடம்பாக அடுக்குமெய்யெனினும், பொருந்தும்.)

உ–ம்.:–

(1) மணி + அழகிது = மணியழகிது.

தீ + எழுந்தது = தீயெழுந்தது.

பனை + அழகிது = பனையழகிது– அல்வழி.

மணி + அழகு = மணியழகு.

தீ + அழகு = தீயழகு

பனை + அழகு = பனையழகு – வேற்றுமை

எனக் கூட்டி, இ ஈ ஐம் முன் இருவழியும் யகரம் பெறுதல் காண்க. உடம்படு மெய்யின் மேல் வருமொழி முதலுயி ரேறுதல் "உடன்மேலுயிர்" என்னும் 204 ஆவது சூத்திரத்தாற் பெறப்படும்.

(2) விள + அழகிது = விளவழகிது

பலா + அழகிது = பலாவழகிது

பூ + அழகிது = பூவழகிது

நொ + அழகிது = நொவ்வழகிது

கோ + அழகிது = கோவழகிது

கௌ + அழகிது = கௌவழகிது – அல்வழி

விள + அழகு = விளவழகு

பலா + அழகு = பலாவழகு

பூ + அழகு = பூவழகிகு

நொ + அழகு = நொவ்வழகு

கோ + அழகு = கோவழகு – வேற்றுமை

எனக் கூட்டி, ஏனையுயிர்களின் முன், இருவழியும் வகரம் பெறுதல் காண்க.

(3) அவனே + அழகன் = அவனேயழகன், என இடைச் சொல்லாகிய ஏ முன் யகரமும்; ஏ + எலாம் = ஏவெலாம், சே + உழுதது = சேவுழுதது, என ஓரெழுத்தொரு மொழியாகிய உயிர் உயிர்மெய் என்னும் ஏ முன் வகரமும்; சே + அடி =

சேயடி, சேவடி எனச் செம்மையென்னும் பண்புப்பெயரின் விகாரமாகிய சேமுன் யகரமும் வகரமும் பெறுதல் காண்க.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள்.:– இ ஈ ஐ வழி** – இகர ஈகார ஐகாரங்களின் முன்னே, **யவ்வும்**–யகரமும், ஏனை உயிர் வழி – (அ ஆ உ ஊ ஒ ஓ ஒள என்கிற) இவ்வேழு உயிர்களின் முன்னே, வவ்வும் – வகரமும், **ஏ முன்** – ஏகாரத்தின் முன்னே, **இவ் விருமையும்** – யகரமும் வகரமும், **உயிர்வரின்** – உயிர் முதன்மொழி வந்தால், **உடம்படுமெய் என்று ஆகும்** – உடம்படு மெய்யென்று வரப்பெறும். **எ–று.**

**பொ–ரை.:–**

இ, ஈ, ஐ ஆகிய இவைகளின் பின் யகரமும், மற்ற ஏழு உயிர்களின்பின் வகரமும், ஏகாரத்தின்பின் யகரவகரம் இரண்டும் உயிரை முதலிலுடைய மொழி வந்தால், உடம்படு மெய் என்று வரும்.

**உ–ம்.:–**

மணி + அழகிது = மணியழகிது. .

+ அழகு = மணியழகு.

தீ + அழகிது = தீயழகிது.

+ அழகு = தீயழகு.

பனை + அழகிது = பனையழகிது.

+ அழகு = பனையழகு.– இ ஈ ஐ முன் இருவழியும் யகரம் வந்தது

விள + அழகிது = விளவழகிது.

+ அழகு = விளவழகு.

பலா + அழகிது = பலாவழகிது.

+ அழகு = பலாவழகு

கடு + அழகிது = கடுவழகிது.

+ அழகு = கடுவழகு.

பூ + அழகிது = பூவழகிது.

+ அழகு = பூவழகு.

நொ + அழகிது = நொவ்வழகிது

+ அழகு = நொவ்வழகு.

கோ + அழகிது = கோவழகிது.

+ அழகு = கோவழகு.

கௌ + அழகிது = கௌவழகிது.

+ அழகு = கௌவழகு.– மற்றைய உயிரீற்றின் முன் இருவழியும் வகரம் வந்தது.

அவனே + இவன் = அவனேயிவன்.

ஏ + அழகு = ஏவழகு.

சே + அழகிது = சேவழகிது.

சே + அடி = சேவடி. – ஏ முன் யகரமும் வகரமும் வந்தன.

உயிரோடு உயிர்க்கு மயக்கமில்லாமையால், அவ் விரண்டு உயிர்களும் உடன்படுதற்பொருட்டு வரும் மெய்யை உடம்படு மெய் என்றார். உடன்படு என்பது உடம்படு என மருவியதென்று கொள்க. உடம்படுமெய் என்பதை வரும் உயிர்க்கு உடம்பாக அடுக்குமெய் எனினும் அமையும்.

('ஏமுன் இவ்விருமையும்' எனக் கூறினாரேனும், இடைச்சொல் ஏகாரத்தின் முன் (அவனே+அழகன் =அவனே யழகன் என) யகரமும், ஓரெழுத்தொரு மொழியாகிய பெயர்ச்சொல் ஏகாரத்தின் முன் (சே+எலாம்=சேவெலாம் என) வகரமும், செம்மை என்னும் பண்பின் விகாரமாகிய சே என்பதன் முன் (சே+அடி=சேவடி, சேயடி என) வகரமும் யகரமும் வரும் என வறிக. (சே–இடபம்.)

## கா.நமச்சிவாய முதலியார்

**இ ஈ ஐ வழி** – இகர ஈகார ஐகாரங்களின் பின்னே, **யவ்வும்** – யகரமெய்யும், **ஏனை உயிர் வழி** – (அ ஆ உ ஊ ஒ ஓ ஔ என்னும்) இவ்வேழு உயிர்களின் பின்னே, **வவ்வும்** – வகரமெய்யும், **ஏ முன்** – ஏகாரத்தின் பின்னே, **இ இருமையும்** – இவ்விரண்டும் (யகரமெய்யும் வகரமெய்யும்), **உயிர்வரின்** – (வருமொழி முதலில்) உயிர்வந்தால், **உடம்படுமெய் என்று ஆகும்** – உடம்படு மெய்யாக வரும்.

உடம்படுமெய் – நிலைமொழி யீற்றிலும் வருமொழி முதலிலும் நின்ற உயிர்களை உடம்படுத்தும் மெய் ; உடம்படுத்தல்

என்றாலும், உடன்படுத்தல் என்றாலும் பொருள் ஒக்கும் : உடம்பு அடு எனப் பிரித்து, வரும் உயிர் ஏறுதற்கு உடம்பாக அடுக்கும் மெய் என்றாலும் பொருந்தும்.

**உதாரணம்;–**

| | | | | |
|---|---|---|---|---|
| மணி | + அழகிது | = | அணியழகிது |
| | + அழகு | = | மணியழகு |
| தீ + | அழகிது | = | தீயழகிது |
| | + அழகு | = | தீயழகு |
| பனை | + அழகிது | = | பனையழகிது |
| | + அழகு | = | பனையழகு |

இ ஈ ஐ முன் இருவழியும் யகரம் வந்தது.

| | | | |
|---|---|---|---|
| விள + | அழகிது | = | விளவழகிது |
| | + அழகு | = | விளவழகு |
| பலா + | அழகிது | = | பலாவழகிது |
| | + அழகு | = | பலாவழகு |
| கடு + | அழகிது | = | கடுவழகிது |
| | + அழகு | = | கடுவழகு |
| பூ + | அழகிது | = | பூவழகிது |
| | + அழகு | = | பூவழகு |
| நொ + | அழகிது | = | நொவ்வழகிது |
| | + அழகு | = | நொவ்வழகு |
| கோ + | அழகிது | = | கோவழகிது |
| | + அழகு | = | கோவழகு |
| கௌ | + அழகிது | = | கௌவழகிது |
| | + அழகு | = | கௌவழகு |

மற்ற உயிர்களின் முன் இருவழியும் வகரம் வந்தது.

| | | | |
|---|---|---|---|
| அவனே + | அழகன் | = | அவனேயழகன் |

என இடைச்சொல் ஏ முன் யகரமும்,

| | | | |
|---|---|---|---|
| ஏ + | எலாம் | = | ஏவெலாம் |
| சே | + உழவு | = | சேவுழவு |

என ஒரெழுத்தொரு மொழியாகிய உயிர், உயிர்மெய் என்னும் ஏ முன் இருவழியும், வகரமும்,

சே + அடி = சேயடி,

எனச் செம்மை யென்னும் பண்புப்பெயரின் விகாரமாகிய சே என்பதன் முன் யகரமும் வகரமும் உடம்படு மெய்யாக வந்தன.

## மோசகு பொன்னையா

இகர ஈகார ஐகார உயிர்களின் வழியே யகர ஒற்றும், ஒழிந்த உயிர்களின் வழியே வகரஒற்றும், ஏகாரத்தின் வழியே யகர வகர ஒற்றுக்களில் ஏற்புடை ஒன்றும் உயிர் முதன்மொழிவந்து புணருமாயின் உடம்படு மெய்யாய் வரும், எ—று.

நிலைமொழியின் ஈற்றிலும் வருமொழி முதலிலும் உடம்படாது விட்டிசைத்து நிற்கும் உயிர்களை உடம்படச் செய்யும் மெய் உடம்படுமெய் எனப்பட்டது.

எ—டு.:—

மணியழகு
தீயழகு
மலையழகு — இஈஐ வழி யகரம் நின்றது.

விளவழகு
பலாவழகு
கடுவழகு
பூவழகு —ஏனைய உயிர்களின் வழி வகரம் நின்றது.

நொவழகு
கோவழகு
கௌவழகு
அவனே யழகன்
சேவுழுத்து
சேயடி
சேவடி — ஏ வழியே யகரமும் வகரமும் நின்றன.

தொல்காப்பியர்,

**எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே**

**உடம்பொடு மெய்யின் உருபுகொளல் வரையார்.**

என்றே உடம்படுமெய் பற்றிக் கூறியுள்ளார். அவர் உடம்படு மெய் கொள்வதை வரையார் என்று கூறினாரேயன்றி, உடம்படுமெய் கோடல் ஒருதலை என்று கூறவில்லை. நசைஇ, அசைஇ என்பவற்றில் உள்ள இறந்த காலத்தை உணர்த்தும் இகர விகுதி இலக்கியத்தில் உடம்படுமெய் இன்றியே பெயரடியோடு இயைந்து நிற்கின்றது. தொல்காப்பியர் காலத்தில் கிளி அரிது, முங்கா இல்லை என இவ்வாறு புணர்த்தி எழுதுவது வழக்கிலிருந்தது என ஊகிக்கவும் இடமுண்டு. எனினும், தொல்காப்பிய நூற்பாக்களிலிருந்து அ, உ, ஊ, ஒ, ஔ என்பவற்றின் பின்னர் வகரத்தையும், இ, ஈ, ஏ, ஐ என்பவற்றின் பின்னர் யகரத்தையும், ஆவின் பின்னர் யகர வகரங்களில் ஒன்றையும் உடம்படுமெய்யாகக் கொள்ளுதல் முறைமையாக இருந்தது என்பது தெரிகிறது. வீரசோழிய ஆசிரியர்,

**மூன்றொடுநான்கொன்பதாமுயிர்ப் தன்னுயிர்முந்தினடு**

**ஆன்ற யகாரம்வந் தாகம மாகும்அல் லாவுயிருக் கேன்ற**
**வகாரம்எட் டேற்கும் இரண்டும் இறுதிகெட்டுத்**

**தோன்று நிலையும் ஓரோவிடத் தாமென்பர்**
**தூமொழியே.**

என்றும், நேமிநாத ஆசிரியர்,

**மூன்றுநான் கொன்பான் உயிர்ப்பின்னும்**
**அல்லாத**

**ஆன்ற உயிர்ப்பின்னும் ஆவிவரிற்–றோன்றும்**

**யகர வகரம் இறுதியிடத் தோரோர்**

**மகரங் கெடவகரம் ஆம்.**

என்றும் கூறிச் சென்றனர். இவருள் நேமிநாதமுடையார் ஏகாரத்தைத் தொடர்ந்து உயிர் வரும்போது வகரமே உடம் படுமெய்யாய் வரும் என்று கூறுவதாலேயே வீரசோழிய ஆசிரியனும் வேறுபடுகிறார். நன்னூலார் வீரசோழிய ஆசிரியரைத் தழுவி நூற்பா செய்துள்ளார். கோவில், கோயில், மாயிருள், பாயிருள் என வழங்கிவரும் வழக்கால் நிலைமொழியின் ஒலி ஆற்றலால் வகர உடம்படு மெய்யும், வருமொழியின் ஒலி ஆற்றலால் யகர உடம்படு மெய்யும் அமைவதும் உண்டு எனக் கொள்ள இடமுண்டு.

விட்டிசையைத் தடுக்கவே இவ்வுடம்படுமெய்கள் வருகின்றன. யகர வகரங்கள் தமிழில் உயிர்த்தன்மை பெற்றுவிளங்கும் மெய்கள் ஆதலின், அவைகள் உடம்படு மெய்களாக அமைகின்றன. சிறுபான்மை புள்ளி ஈற்றினும் உடம்படு மெய் வரும் என்று கூறி, விண்வத்துக்கொட்கும் என்பதை நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டினார். அது பொருந்தாது; விண்பு என்பதே அக்கால வடிவம்எனக் கொளல் பொருந்தும். செல்வு, சார்வு, உண்பு என்பனவும் அவ்வாறு அமைந்த உகர வீற்றுச் சொற்களே.

(12)

162. எகர வினாமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமு மெய்தின் வவ்வும்
பிறவரி னவையுந் தூக்கிற் சுட்டு
நீளின் யகரமுந் தோன்றுத னெறியே.

எகர வினா முச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்
பிற வரின் அவையும் தூக்கில் சுட்டு
நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே

ekara vin̲ā mus suttin̲ mun̲n̲ar
uyirum yakaramum eytin̲ vavvum
pir̲a varin̲ avaiyum tūkkil suttu
nīḷin̲ yakaramum tōn̲r̲utal ner̲iyē

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Initial Interrogative and Demonstrative letters

When the interrogative 'e' and the three Demonstrative are followed by Vowel initials and (the consonant) y, v is inserted (and doubled); but when they are followed by Consonant initials, these (themselves) are doubled; and if the Demonstrative is lengthened in poetry, y (instead of v) should be inserted before the initial vowel: these are the proper methods.

## ஒப்புமைப் பகுதி

வினையெஞ்சு கிளவியும் உவமக் கிளவியும்

எனவென் எச்சமும் சுட்டின் இறுதியும்
ஆங்க என்னும் உரையசைக் கிளவியும்
ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகுமே.

(தொல்.: 205)

சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றின்
ஒட்டிய ஒற்றிடை மிகுதல் வேண்டும்

(தொல்.: 206)

யவமுன் வரினே வகரம் ஒற்றும்

(தொல்.: 207)

உயிர்முன் வரினும் ஆஇயல் திரியாது

(தொல்.: 208)

நீட வருதல் செய்யுளுள் உரித்தே

(தொல்.: 209)

வாய்ந்த உயிர்ப்பின் வருமெழுத்தின் வர்க்கத்தொற்
றேய்ந்து புகுதும் இயல்புமாம் – ஆய்ந்த
இறுதி வருமெழுத்தாம் ஈறாராம் ஓரோர்
மறுவில் பதங்கெட்டு வரும்.

(நேமி.: 16)

....... எய்தும் ஆவியின் பின்
ஆற்றுந் திறல்வல் லினம்வந் திடிலவற் றின்வருக்கம்
போற்று மிவையென்ற வல்லொற்று மெல்லொற்றும் புக்கிடுமே.

(வீர.: 20: 2–4)

ஆவிக் குறிற்பின் ஞநமவத் தோன்றிலவ் வொற்றிடையாம்
மேவிய பன்னொன்று தோன்றில்வவ் வாம் மெய்யில் ஐந்திரு
மூன்றாவது முண்டொற் றொரோவழித் தோன்றிடும்
ஆவுமவ்வாய்த்
தாவிய வைந்தா முயிர்பின் பெறுவன தாமுமுண்டே

(வீர.: 24)

எகர வினாமுச் சுட்டின் முன்ன
ருயிரும் யகரமு மெய்தின் வவ்வும்
பிறவரி னவையுந் தூக்கிற் சுட்டு
நீடலும் யகார நிலவலு நெறியே

(இ.வி.: 80)

அகரச் சுட்டு ................
............ இருவழி யினுமிகும்

(மு.வீ.: 234)

அகரச் சுட்டின்முன் ஞநமத் தோன்றிற்
றத்தமொற் றிடைமிகு மென்மனார் புலவர்

(மு.வீ.: 236)

வயவரின் வகரம் வருமென மொழிப

(மு.வீ.: 237)

ஆவி வரினு மவ்விய னிலையும்

(மு.வீ.: 238)

யாப்பினுள் அஆ வாகு மென்ப

(மு.வீ.: 239)

சுட்டி னியற்கை முற்கிளந் தற்றே

(தொல்.: 239)

சுட்டின் முன்னரும் அத்தொழிற் றாகும்

(தொல்.: 256)

ஏனவை வரினே மேல்நிலை யியல்பே

(தொல்.: 257)

## மயிலை நாதர்

**எ—ன்**, வினாவும் சுட்டும் நாற்கணத்தோடு புணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.:—** எகர வினா முன்னும் சுட்டுக்கண் முன்னும் உயிரும் யகரமும் வந்தால் வகரமும், ஏனை ஒன்பது மெய்யும் வந்தால் வந்தவையும், செய்யுட்கட் சுட்டு நீண்டிசைத்தவழி யகரமும் மிகுதல் முறைமை, எ — று.

**வ—று.:—**

எவ்வணி, [1]எவ்யானை; அவ்வணி, [2]அவ்யானை; இவ்வணி, [3]இவ்யானை; உவ்வணி, [4]உவ்யானை எனவும்; எக்குதிரை, எச்சேனை, எத்தண்டு, எந்நாடு, எப்படை, எம்மனை, எவ்வளை, எஞ்ஞாலம், எங்ஙனம், எனவும்; அக்குதிரை,

---

**பாடவேறுபாடு.:—**

1. எவ்வியானை
2. அவ்வியானை
3. இவ்வியானை
4. உவ்வியானை

இக்குதிரை, உக்குதிரை எனவும் வரும். ஒழிந்த எட்டு மெய்களோடும் இவ்வாறே ஒட்டிக்கொள்க. [5]"ஆயிடைத் தமிழ்கூறு நல்லுகத்து" என வரும்.[6]

'தூக்கிற் சுட்டு நீளின்' எனவே, நீடற்கும், நீடல் ஒருதலையல்ல வென்றற்கும் இதுவே விதியாகக் கொள்க. 'நெறி' என்ற மிகையானே, யா வினா முன் வரும் 'ஙகரம் மிகுமெனவும், இவ்வணி, ஆயிடை என வருமன்றி முன்னின்ற உடம்படுமெய் இவற்றிற்கு எய்தாதெனவும் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின்,** 'இ ஈ ஐவழி' என்னும் சூத்திரத்தானும், 'எண்மூவெழுத்தீற்று' என்னும் சூத்திரத்தானும் எய்திய விதி விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

**இ–ள்.:–** எ என்னும் வினா இடைச்சொல் முன்னும், அ இ உ என்னும் மூன்று சுட்டிடைச்சொல் முன்னும், உயிரும் யகரமும் வந்தால் வகரமும், ஒழிந்த மெய்கள் வந்தால் அம்மெய்களும், செய்யுட்கண் சுட்டு நீண்டு இசைத்தவழி யகரமும் மிகுதல் முறையாம், எ–று.

**உ–ம்.:–**

எவ்வணி, எவ்யானை, அவ்வணி, அவ்யானை; இவ்வணி, இவ்யானை; உவ்வணி, உவ்யானை எனவும்; அ இ உ: குதிரை, சேனை, தண்டு, படை, ஞாலம், நாடு, மலை, வளை எனவும்; எங்ஙனம், அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம் எனவும், "ஆயிடைத்தமிழ் கூறு நல்லுலகத்து" எனவும் வகரமும் வந்த மெய்களும் யகரமும் முறையே தோன்றியவாறு காண்க. பிறவும் அன்ன.

யகரமும் எய்தின் வவ்வும் என்றமையின் இங்ஙனம் தோன்றிய வகர யகரங்கள் உடம்படுமெய் யல்ல என்பதூஉம், சுட்டு நீளின் எனவே நீடல் உடன்பாடு என்பதூஉம், நீடல் ஒருதலையன்று என்பதூஉம், யகரம் தோன்றும் எனவே இந்நீட்சி அடி தொடை நோக்கி நீட்டும்வழி நீட்டலன்று என்பதூஉம், யகரமும் என எண்ணின்கண் நின்ற இழிவுசிறப்பும்மையான் யகரத் தோற்றம் உயிர்வருவழி யன்றிப் பிறவழித் தோன்றாது என்பதூஉம், நெறி என்றமையின் இவ்வாறு நெறிப்பட வருவன எல்லாம் கோடல்வேண்டும் என்பதூஉம் பெற்றாம்.

"ஆவயினான" எனச் சுட்டு நீண்டு, பிறவழி யகரம் தோன்றாதாயிற்று.

இவ்வாறு நெறிப்பட வருவன வருமாறு:— யாங்ஙனம் என யா வினா முன் வருமொழி ஙகரம் மிகுந்தது. ஆங்ஙனம், ஈங்ஙனம், ஊங்ஙனம் எனச் சுட்டு நீண்டவழியும் வருமொழி ஙகரம் மிகுந்தது. ஈது எனவும்; ஆங்கு, ஈங்கு, ஊங்கு எனவும்; ஆண்டு, ஈண்டு எனவும் சுட்டுப் பெயர்ச்சொல் நீண்டன. "விண்வத்துக் கொட்கும்" எனவும், "செல்வுழிச்செல்க" எனவும், "சார்வுழிச் சார்ந்த தகையள்" எனவும், மெய்யீற்று முன் உயிர்வருங்கால் இங்ஙனம் உடம்படுமெய் யன்று எனக் கூறும் வகரம் தோன்றின. பிறவும் அன்ன.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** வினாவும் சுட்டும் புணருமாறு கூறியது.

**இ—ள்.: எகர வினா முச்சுட்டின் முன்னர்** – எகர வினா முன்னும் மூன்று சுட்டுக்களின் முன்னும், **உயிரும் யகரமும் எய்தின்** – வருமொழி முதலாக உயிர்களும் யகரமும் வந்தால், **வவ்வும் –** இடையே வகர வொற்று வந்து பொருந்தும்; **பிற வரின்** – யகர மொழிந்த ஒன்பது மெய்யும் வந்தால், **அவையும்** – வந்த வந்த ஒற்றுக்களே இரட்டித்தலும், **தூக்கிற் சுட்டு நீளின்** – செய்யுட்கண்ணே சுட்டு நீண்டு இசைத்த வழி, **யகரமும்** – இடையே யகர வொற்று மிகுதலும், **தோன்றுதல் நெறியே** – உண்டாய் வருதல் முறைமையாம், **எ—று.**

**உ—ம்.:—**

எவ்வணி, எவ்யானை, அவ்வணி, அவ்யானை, இவ்வணி, இவ்யானை, உவ்வணி, உவ்யானை எனவும்; எக்குதிரை, எச்சேனை, எத்தண்டு, எந்நாடு, எப்படை, எம்மனை, எவ்வரை, எஞ்ஞாலம், எங்ஙனம் எனவும் சுட்டுக்கு மிகுந்த அடைவே கொள்க. 'ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து' எனவும், "ஆயிரு திணையி னிசைக்குமன் சொல்லே" எனவும், "ஆயிரு பாற்சொல்" எனவும் வரும். "நெறியே" யென்ற மிகையானே யா வினா முன்னும் ஙகாரம் மிகும் என்பதுவும் கொள்க.

## விசாகப் பெருமாளையர்

**இது,** "இ ஈ ஐ வழி" என்னுஞ் சூத்திரத்தாலும் "எண்மூவெழுத் தீற்று" என்னுஞ் சூத்திரத்தாலும் எய்தியது விலக்கிப் பிறிது விகுதி வகுக்கின்றது.

**இ–ள்.:– எகர வினா** (முன்னர்) – எகர வினா விடைச் சொல்லின் முன்னும், **முச்சுட்டின் முன்னர்** – மூன்று சுட்டிடைச்சொல்லின் முன்னும், **உயிரும்** – உயிரும், **யகரமும்** – யகரமும், **எய்தின்** – வந்தால், **வவ்வும்** – வகரமும், **பிற** – யகர மொழிந்த மெய்கள், **வரின்** – வந்தால், **அவையும்** – அவ்வந்த மெய்களும், **தூக்கில்** – செய்யுளிடத்து, **சுட்டு** – சுட்டுக்கள், **நீளின்** – நீண்டு வருமிடத்து, **யகரம்** – யகரமும், **தோன்றுதல்** – மிகுதல், **நெறி**–முறையாம், **எ – று.**

**உ–ம்.:–**

எ+அணி–எவ்வணி, எ+யானை–எவ்யானை எனவும்,

எ+குதிரை–எக்குதிரை, எ+சேனை–எச்சேனை எனவும்,

எ+தண்டு–எத்தண்டு, எ+படை–எப்படை எனவும்,

எ+ஞாலம்–எஞ்ஞாலம், எ+நாடு–எந்நாடு எனவும்,

எ+மனை–எம்மனை, எ+வளை–எவ்வளை எனவும்,

எ+ஙனம்–எங்ஙனம், ஆ+இடை–ஆயிடை எனவும்,

வகரமும் வந்த மெய்களும் யகரமுந் தோன்றியமை காண்க, அ இ உ இவற்றின் முன்னும் அப்படியே கூட்டுக. (''நெறி'' யென்றமையால் யாங்ஙனம் என யா வினா முன்னும் ஆங்ஙனம், ஈங்ஙனம்–ஊங்ஙனம் என நீண்ட சுட்டின் முன்னும் ஙகர மிகுதலும், ஈது, ஆங்கு, ஈங்கு, ஊங்கு, ஆண்டு, ஈண்டு எனச் சுட்டுப்பெயர் நீளலும் ''விண்வத்துக் கொட்கும்'' ''செல்வுழிச்செல்க'' என மெய்யீற்றின் முன் உயிர்வர இப்படி உடம்படுமெய் யல்லாத வகரம் பெறுதலுங் கொள்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

எகரவினாவும் முச்சுட்டுமாகிய உயிரீற்றிடைச் சொற்கள் நாற்கணத்தோடும் புணருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

எகர வினாமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமு மெய்தின் வவ்வும்
பிறவரி னவையுந் தூக்கிற் சுட்டு
நீளின் யகரமுந் தோன்றுத னெறியே.

(எகரவினா முச்சுட்டின் முன்னர்
உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்,

பிறவரின் அவையும், தூக்கில் சுட்டு
நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே.)

**இ—ள்.:— எகரவினா (முன்னர்) முச்சுட்டின் முன்னர்**—எகரவினா விடைச் செல்லின் முன்னும் மூன்று சுட்டிடைச் சொல்லின் முன்னும், **உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்** — உயிரும் யகரமும் வரின்வகரமும், **பிறவரின் அவையும்** —யகரமொழிந்த மெய்கள் வரின் அவ்வம்மெய்களும், **தூக்கில் சுட்டு நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே** — செய்யுளின்கட் சுட்டு நீண்டு வருமிடத்து யகரமும் மிகுதல் முறையாம், **எ—று.**

எகரவினாமுன்னும் அ இ உ என்னும் புறச்சுட்டின் முன்னும் உயிரும் யகரமும் வரின் எவ்வாறு புணரும்?

" எகரவினா முச்சுட்டின் முன்னர் உயிரும் யகரமுமெய்தின் வவ்வும்" (தோன்றுதனெறியே)

**உ—ம்.:—**

எ அணி—எவ்வணி.

எ யானை— எவ்யானை.

அ அணி—அவ்வணி.

அ யானை—அவ்யானை.

இ அணி—இவ்வணி

இ யானை—இவ்யானை.

உ அணி—உவ்வணி.

உ யானை—உவ்யானை.

இங்கே இந்நான்கெழுத்துக்கு முன்னே உயிர் வந்தவிடத்து வகர உடம்படுமெய்யல்லாத வகரமெய் தோன்றிப் பின்னர் அவ் வகரமெய்யிரட்டியதும் யகரம் வந்தவிடத்து உடம்படுமெய்யல்லாத வகரம் தோன்றியதும் தோன்றல் விகாரமெனக் கொள்க.

அந்நான்கிற்கு முன்னும் பிறவெழுத்துத்துவரின் எவ்வாறு புணரும்?

"(எகரவினா முச்சுட்டின் முன்னர்ப்)

பிறவரின் அவையும் (தோன்றுதனெறியே)"

**உ—ம்.:—**

எ குதிரை—எக்குதிரை.

எ சேனை–எச்சேனை.

எ தண்டு–எத்தண்டு.

எ படை–எப்படை.

எ ஞாலம்–எஞ்ஞாலம்.

எ நாடு–எந்நாடு.

எ மலை–எம்மலை.

அ குதிரை–அக்குதிரை.

இ குதிரை–இக்குதிரை.

உ குதிரை–உக்குதிரை.

அ சேனை–அச்சேனை.

இ சேனை–இச்சேனை.

எனவரும்.

செய்யுளின்கண்ணே நீண்ட சுட்டின்முன் உயிர்வரின் எவ்வாறு புணரும்?

" தூக்கிற்சுட்டு நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே"

உ–ம்.:– அ இடை–ஆயிடை.

எகரவினா முச்சுட்டின்முன்னர் உயிர்வரின் வகரமும் நீண்டசுட்டின் முன் உயிர்வரின் யகரமும் தோன்றுமென்றது, உயிர்முன் உயிர் புணர்தற்குக் கூறிய "இஈஐவழி" என்னுஞ் சூத்திரத்தில் அடங்காதா?

அடங்காது. "இஈஐவழி" என்னும் சூத்திரத்தில் உடம் படுமெய் வருமாறு கூறப்பட்டது. இவ்வெகரவினா முச்சுட்டென்னுஞ் சூத்திரத்தில் கூறப்பட்டவை உடம்படு மெய்யல்லாத வகர யகர மெய்கள்.

எகரவினா முச்சுட்டின் முன் யகரம்வரின் வகரமும் பிறவரின் அவற்றுள்ளே ஞ ந ம வரின் அவையுந் தோன்று மென்றதனால் விலக்கப்பட்ட விதி யாது?

"எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும்
முன்வரு ஞநமய வக்க ளியல்பும்" என்றவிதி.

பிறவரின் என்றவற்றுள்ளே க ச த ப வரின் அவை தோன்றுமென்றது யாது வகுத்தபடியாம்?

முன் எய்தாதது எய்தாதது எய்துவித்தலின் புதுவிதி வகுத்தபடியாம்.

ஆகவே இச்சூத்திரம் என்னவிகாரம் கூறுகின்றது?

தோன்றல் விகாரம்.

நெறியென்றமையால், யாங்ஙனம் என யாவினா முன்னும், ஆங்ஙனம், ஈங்ஙனம், ஊங்ஙனம், என நீண்ட சுட்டின் முன்னும், ஙகர மிகுதலும், ஈது எனவும் ஆங்கு, ஈங்கு, ஊங்கு, ஆண்டு, ஈண்டு, ஊண்டு எனவும் சுட்டுப்பெயர் நீளலும் "விண்வத்துக் கொட்கும்"எனவும் "செல்வழி செல்க" எனவும் "சார்வுழிச்சார்ந்த தகையன்" எனவும் மெய்யீற்றின் முன் உயிர்வர, இப்படி உடம்படுமெய்யல்லாத வகரம் பெறுதலுங்கொள்க.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** இ ஈ ஐ வழி யென்னுஞ் சூத்திரத்தாலும், எண்மூ வெழுத் தீற்றென்னுஞ் சூத்திரத்தாலும், எய்திய விதி விலக்கிப் பிறிதுவிதி கூறுகின்றது.

**இ—ள்.:— எகர வினா முச்சுட்டின் முன்னர்** — எ என்னும் வினா விடைச்சொல்லும் அ இ உ என்னும் மூன்று சுட்டு இடைச் சொல்லுமாகிய இவற்றின் முன், **உயிரும் யகரமு மெய்தின் வவ்வும்** — உயிர் முதல் மொழியும் யகர முதல் மொழியும் வந்தால் வகர ஒற்றும், **பிறவரி னவையும்**—ஒழிந்த மெய்முதல் மொழிகள் வந்தால் அவ்வந்த மெய்களும், **தூக்கிற் சுட்டு நீளின்**— செய்யுளிலே சுட்டெழுத்து நீளுமாயின், யகரமும் - யகர ஒற்றும், **தோன்றுதனெறி**—மிகுதல் முறையாம், **எ—று.**

**உ—ம்.:—**

எவ்வணி, எவ்யானை, அவ்வணி, அவ்யானை, இவ்வணி, இவ்யானை, உவ்வணி, உவ்யானை என எகர வினா முச்சுட்டின் முன் உயிரும் யகரமும் வர வகரந் தோன்றிற்று. எக்குதிரை, எச்சேனை, எத்தானை, எப்படை, எஞ்ஞாலம், எந்நாடு, எம்மனை, எவ்வளை, எங்ஙனம் என யகரம் ஒழிந்த மெய்கள் வந்து புணர அவ்வந்த மெய்கள் மிக்கன. ஒழிந்த மூன்று சுட்டுக்களொடு மிவ்வாறே யொட்டிக் காண்க. அ இடை – 'ஆயிடைத்தமிழ் கூறுநல்லுகத்து' எனச் சுட்டு நீண்டவழி யகர ஒற்றுத் தோன்றியவாறுங் காண்க. பிறவுமன்ன.

'யகரமு மெய்தி'னென்றதனால், இங்கே தோன்றிய யகர வகர ஒற்றுக்கள் உடம்படுமெய் யல்ல வென்பதும், 'சுட்டு நீளின்' எனவே நீளுதல் உடன்பாடென்பதும், அது நிச்சயமன் றென்பதும், யகரந் தோன்று மெனவே, இந்த நீட்சி அடி தொடை முதலிய நோக்கி நீட்டும்வழி நீட்டல்

விகாரமன் றென்பதும், யகரமு மென்ற இழிவு சிறப்பு உம்மையால், யகரந் தோன்றுதல் உயிர்வருவழி யன்றிப் பிறவழித் தோன்றா தென்பதும், வன்கணம் வரின் சுட்டு நீளா தென்பதும், நெறி யென்றதனால் இவ்வாறு நெறிப்பட வருவன வெல்லாங் கொள்ள வேண்டு மென்பதும் பெறப்பட்டன. 'ஆவயினான' எனச் சுட்டு நீண்டவழி, உயிர்வாராமையால் யகரந் தோன்றாதாயிற்று. இவ்வாறு நெறிப்பட வருவன வருமாறு: 'யாங்ஙனம்' என யா வினா முன்னும், ஆங்ஙனம், ஈங்ஙனம், ஊங்ஙனம் எனச் சுட்டு நீண்ட வழியும் வருமொழி ஙகர மிகுந்தது. ஈது, ஆங்கு, ஈங்கு, ஊங்கு, ஆண்டு, ஈண்டு எனச் சுட்டு நீண்டன. விண்வத்துக்கொட்கும், செல்வுழிச்செல்க, சார்வுழிச்சார்ந்த என மெய்யீற்றின் முன் உயிர் வருங்கால், உடம்படுமெய் யன்றென விலக்கிய வகர ஒற்றுத் தோன்றிற்று. பிறவுமன்ன. தோன்றுதல், நெறியென முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– எகரவினா** (முன்னர்) – எகரவினாவிடைச் சொல்லின் முன்னும், **முச்சுட்டின் முன்னர்** – மூன்று சுட்டிடைச் சொற்களின் முன்னும், **உயிரும் –, யகரமும் –, எய்தின்** – வந்தால், **வவ்வும்** – வகரமெய்யும்; **பிற** – யகரமொழிந்த மெய்கள், **வரின்** – வந்தால், **அவையும்** – அவ்வந்த மெய்களும்; **தூக்கில்** – செய்யுளில், **சுட்டு** – சுட்டெழுத்து, **நீளின்** – நீண்டு வருமிடத்து, **யகரமும்** – யகரமெய்யும், **தோன்றுதல்** – மிகுதல், **நெறி** – முறையாம்.

**உதாரணம் :–**

எ + அணி = எவ்வணி
எ + யானை = எவ்யானை – எகர வினாமுன் உயிரும் யகரமும்வர வகரமெய் தோன்றிற்று.

(சுட்டின் முன்னும் இப்படியே கூட்ட வகரந் தோன்றுதல் காண்க.)

எ + குதிரை = எக்குதிரை

எ + நாடு = எந்நாடு
எ + வீடு = எவ்வீடு – யகரம் ஒழிந்த மெய்கள் வர அந்தந்தமெய்கள் தோன்றின.

(சுட்டின் முன்னும் இப்படியே கூட்ட அந்தந்த மெய்கள் தோலறுதல் காண்க)

குறிப்பு :-

அ + இடை = 'ஆயிடைப் பருவம்வந் தடைந்த காலையில்'' எனச் செய்யுளில் சுட்டுநீண்ட விடத்து யகரந் தோன்றிற்று. 'நெறி' என்ற மிகையால் - யாங்ஙனம் என யாவினா முன்னும், ஆங்ஙனம், ஈங்ஙனம், ஊங்ஙனம் என நீண்ட சுட்டின் முன்னும் ஙகரம் மிகுதலும்; ஈது, ஆங்கு, ஈங்கு, ஊங்கு, ஆண்டு, ஈண்டு எனச் சுட்டுப்பெயர் நீளுதலும்; ''விண்வத்துக்கொட்கும்'', 'செலவுழிச் செல்க'' என மெய்யீற்றின் முன் உயிர்வர இவ்வாறு உடம்படுமெய்யல்லாத வகரம் பெறுதலும் கொள்க. இங்ஙனம் வரும் உடம்படு மெய்யல்லாத வகரத்தை 'மெய்யீற்றுடம்படு மெய்' என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

## ஆறுமுக நாவலர்

**இ-ள்.: எகர வினா (முன்னர்) முச்சுட்டின் முன்னர்** - எகர வினா விடைச்சொல்லின் முன்னும் மூன்று சுட்டிடைச்சொல்லின் முன்னும், **உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்** - உயிரும் யகரமும் வரின் வகரமும், **பிற வரின் அவையும்** - யகர மொழிந்த மெய்கள் வரின் அவ்வந்த மெய்களும், **தூக்கில் சுட்டு நீளின் யகரமும்** - செய்யுளின்கட் சுட்டு நீண்டு வருமிடத்து யகரமும், **தோன்றுதல் நெறி** - மிகுதல் முறையாம், எ - று.

உ-ம்.:-

(1) எவ்வணி, எவ்யானை, அவ்வணி, அவ்யானை; இவ்வணி, இவ்யானை; உவ்வணி, உவ்யானை என எகர வினா முச்சுட்டின் முன் உயிரும் யகரமும் வர, வகரந் தோன்றுதல் காண்க.

(2) எக்குதிரை, எச்சேனை, எத்தண்டு, எப்படை, எஞ்ஞாலம், எந்நாடு, எம்மனை, எவ்வளை, எங்ஙனம் என யகர மொழிந்த மெய்கள் வர, அவ்வந்த மெய்கள் தோன்றுதல் காண்க. ஒழிந்த மூன்று சுட்டுக்களோடும் இப்படியே கூட்டுக. உயிர் வந்தவழித் தோன்றிய வகர மெய் இரட்டுதல் ''தனிக்குறின் முன்னொற்று'' என்னுஞ் சூத்திரத்தாலும், இரட்டிய மெய்யின்மேல் வருமொழி முதலுயிரேறுதல் ''உடன்மேலுயிர்'' என்னுஞ் சூத்திரத்தாலும், பெறப்படும்.

(3) ஆ+இடை = ''ஆ யிடைத்தமிழ் கூறுநல் லுலகத்து'' எனச் சுட்டு நீண்டவிடத்து யகரந் தோன்றுதல் காண்க.

நெறி யென்றமையால் யாங்ஙனம் என யா வினா முன்னும், ஆங்ஙனம், ஈங்ஙனம், ஊங்ஙனம் என நீண்ட சுட்டின் முன்னும், ஙகர மிகுதலும், ஈது. எனவும். ஆங்கு, ஈங்கு, ஊங்கு எனவும்; ஆண்டு, ஈண்டு எனவும், சுட்டுப்பெயர் நீளலும், "விண்வத்துக்கொட்கும்" எனவும், "செல்வுழிச் செல்க" எனவும், "சார்வுழிச் சார்ந்த தகையள்" எனவும், மெய்யீற்றின் முன் உயிர் வர, இப்படி உடம்படு மெய்யல்லாத வகரம் பெறுதலுங் கொள்க.

எகர வினா முச்சுட்டின் முன் உயிர்வரின் வகரமும், நீண்ட சுட்டின் முன் உயிர்வரின் யகரமுந் தோன்று மென்றது "இ ஈ ஐ வழி" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல்; யகரம் வரின் வகரமும், பிறமெய்களுள் ஞ ந ம வ வரின் அவையுந் தோன்று மென்றது "எண்மூவெழுத்தீற்று" என்னுஞ் சூத்திரத்தால் **எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்;** க ச த ப ங வரின், அவை தோன்றும் என்றது **எய்தாத தெய்துவித்தல்.**

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள்.:– எகர வினா** (முன்னர்) – எகர வினா விடைச் சொல்லின் முன்னும், – **முச்சுட்டின் முன்னர்** – மூன்று சுட்டிடைச் சொல்லின் முன்னும், – **உயிரும் யரகமும் எய்தின் வவ்வும்** – உயிரும் யகரமும் வரின் வகரமெய்யும், – **பிறவரின் அவையும்** – யகரமல்லாத மெய்கள் வரின் அவ் வந்த மெய்களும், – **தூக்கில் சுட்டு நீளின் யகரமும்** – செய்யுளின்கட் சுட்டு நீண்டுவருமிடத்து, – யகரமெய்யும், – **தோன்றுதல்நெறி** – மிகுதல் முறையாம் **எ–று.**

**உ–ம்.:–**

(1)எ+அணி = எவ்வணி, எ+யானை; அ+அணி = அவ்வணி, அ+யானை = அவ்யானை; இ+அணி=இவ்வணி, இ+யானை=இவ்யானை; உ+அணி=உவ்வணி, உ+யானை= உவ்யானை; என எகரவினா முச்சுட்டின்முன் உயிர் வரவும், யகரம் வரவும் வகரமெய் தோன்றுதல் காண்க.

(2)எ+குதிரை = எக்குதிரை, எ+சேனை = எச்சேனை, எ+தண்டு = எத்தண்டு, எ+படை = எப்படை, எ+ஞாலம் = எஞ்ஞாலம், எ+நாடு = எந்நாடு, எ+மனை=எம்மனை, எ+வளை=எவ்வளை, எ+ஙனம்=எங்ஙனம் என யகர மொழிந்த மெய்கள் வர அவ்வந்த மெய்கள் தோன்றுதல்

காண்க. இப்படியே அக்குதிரை, இக்குதிரை, உக்குதிரை எனச் சுட்டுக்களோடுங் கூட்டி யகர மொழிந்த மெய்கள் தோன்றினமை காண்க.

வருமொழி முதலில் உயிர் வந்த வழித்தோன்றிய வகரமெய் யிரட்டுதல் : 'தனிக்குறின் முன்னொற்றுயிர்வரி னிரட்டும்' என்னுஞ் சூத்திரத்தாலும், இரட்டிய மெய்யின்மேல் வருமொழி முதலுயிரேறுதல் 'உடன்மேலுயிர் வந்தொன்று வதியல்பே' என்னுஞ் சூத்திரத்தாலும் பெறப்படும்.

(3) அ+இடை=ஆயிடை எனச் சுட்டுநீண்டவிடத்து யகரந்தோன்றுதலை "ஆயிடைத்தமிழ் கூறுநல்லுலகத்து" "ஆயிடைநின்ற கிரீடியை" "ஆயிடைக்குடபால்வெற்பில்" "ஆயவன்வளர்த்த" என்று முறையே தொல்காப்பியம், பாரதம், திருவாதவூரர்புராணம், இராமாயணம் என்னு நூல்களிற் காண்க.

நெறியே யென்றமையால், யாங்ஙனம் என யாவினா முன்னும், ஆங்ஙனம், ஈங்ஙனம், ஊங்ஙனம் என நீண்ட சுட்டின் முன்னும் ஙகர மிகுதலும், ஈது. எனவும் ஆங்கு, ஈங்கு, ஊங்கு எனவும். சுட்டுப்பெயர் நீளுதலும், "விண்வத்துக் கொட்கும்", எனவும் "செல்வுழிச்செல்க" எனவும். "சார்வழிச் சார்ந்ததகையள்" எனவும். மெய் யீற்றின் முன் உயிர்வர இப்படி உடம்படு மெய்யல்லாத வகரம் பெறுதலுங்கொள்க. அன்றியும், (உயிர் மாத்திரமேயன்றி) யரகமும் எய்தின் என்றதினால் இங்கே தோன்றிய யகர வகர வொற்றுக்கள் உடம்படு மெய்யல்லவென்பதும், சுட்டு நீளின் எனவே நீளுதல் உடன்பாடென்பதும், நீண்டேவரல் வேண்டுமென்னும் நியதியின்றென்பதும், யகரமும் என்னு மிழிவு சிறப்பும்மையால், யகரமானது உயிர்வருவழித் தோன்றுத லின்றிப் பிறவழித் தோன்றாதென்பதும், வன்கணம்வரிற் சுட்டு நீளாதென்பதும் கொள்க.

எகரவினாமுச்சுட்டின் முன் உயிர்வரின் வகரமும், நீண்ட சுட்டின்முன் உயிர்வரின் யகரமுந் தோன்றுமென்றது 'இ ஈ ஐ வழி என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிது விதிவகுத்தல்; யகரம் வரின் வகரமும், பிறமெய்களுள் த ந ம வரின் அவையுந் தோன்று மென்றது. 'எண்மூவெழுத் தீற்று' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல்; க ச த ப ங வரின் அவை தோன்றுமென்றது எய்தாததெய்து வித்தல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.:–** (1) **எகர வினா** – எகர வினா விடைச்சொல்லுக்கும், **முச்சுட்டின்** – மூன்று சுட்டிடைச் சொற்களுக்கும், **முன்னர்** – முன்னே, **உயிரும்** – , **யகரமும்** – , **எய்தின்** – வந்தால், **வவ்வும்** – வகர மெய்யும், **பிற** – யகர மொழிந்த மெய்கள், **வரின்** – வந்தால், **அவையும்** – அவ்வந்த மெய்களும், **தூக்கில்** – செய்யுளில், **சுட்டு** – சுட்டெழுத்து, **நீளின்** – நீளுமிடத்து, **யகரமும்** – யகர மெய்யும், **தோன்றுதல்**–மிகுதல், **நெறி** – முறையாம்; எ–று.

**உ–ம்.:–**

எ+அணி–எவ்வணி

எ+யானை–எவ்யானை

எ + குதிரை–எக்குதிரை

எ+நாடு – எந்நாடு

அ + சேனை–அச்சேனை

எ+மனை – எம்மனை

இ + தண்டு–இத்தண்டு

எ+ விதம் – எவ்விதம்

உ + படை–உப்படை – எகரவினா முச்சுட்டின் முன்னர் உயிரும் யகரமும் வரவகரமெய் தோன்றிற்று

எ+நனம்–எங்ஙனம்

எ+ ஞாலம் – எஞ்ஞாலம்

(2) அ + இடை – "ஆயிடை"–சுட்டு நீண்டவிடத்து, யகரம் தோன்றிற்று. (ஆயிடை – அவ்விடம்) சுட்டு நீளுதற்கும் இதுவே விதி.

இவை யெல்லாம் இடைச்சொல் தொடராதலால், அல்வழிப் புணர்ச்சி. "நெறி" என்ற மிகையால்–யாங்ஙனம் என 'யா' வினாவின் முன்னும் ஆங்ஙனம், ஈங்ஙனம், ஊங்ஙனம் என நீண்ட சுட்டின் முன்னும் ஙகரம் மிகுதலும்; ஈது, ஆங்கு, ஈங்கு, ஊங்கு, ஆண்டு, ஈண்டு எனச் சுட்டுப்பெயர் நீளலும், "விண்வத்துக்கொட்கும்" (விண்+அத்து = விண்வத்து),

"செல்வுழிச் செல்க" (செல்+உழி = செல்வுழி) என மெய்யீற்றின் முன் உயிர்வர இப்படி உடம்படுமெய் யல்லாத வகரம் பெறுதலும் கொள்க; இவ்வாறு மெய்யீற்றின் முன் வரும் வகரத்தை, 'மெய்யீற்றுடம்படுமெய்' என்பர், ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

## பவானந்தம் பிள்ளை

இ–ள். எகர வினா (முன்னர்) முச்சுட்டின் முன்னர் – எகர வினா விடைச்சொல்லின் முன்னும் மூன்று சுட்டியிடைச் சொல்லிடைச் சொல்லின் முன்னும், உயிரும் யகரமும் எய்தின் – உயிரும் யகரமும் வரின், வவ்வும் – வகரமும், பிற வரின் அவையும் – யகர மொழிந்த மெய்கள் வரின் அவ்வந்தமெய்களும், தூக்கில் சுட்டு நீளின் யகரமும் – செய்யுளின் கட் சுட்டு நீண்டு வருமிடத்து யகரமும், தோன்றுதல் நெறி – மிகுதல் முறையாம். எ–று.

**உ–ம்.:–**

(1)

எ + அணி = எவ்வணி

அ + அணி = அவ்வணி

இ + அணி = இவ்வணி

உ + அணி = உவ்வணி – என எகர வினா முச்சுட்டின் முன் உயிரும்.

எ + யானை = எவ்யானை

அ + யானை = அவ்யானை

இ + யானை = இவ்யானை

உ + யானை + உவ்யானை – என எகர வினா முச்சுட்டின் முன் யகரமும் வர, வகரந் தோன்றதுல் காண்க.

(2)

எ + குதிரை = எக்குதிரை.

எ + சேனை = எச்சேனை.

எ + தண்டு = எத்தண்டு.

எ + படை = எப்படை.

எ + ஞாலம் = எஞ்ஞாலம்.

எ + நாடு = எந்நாடு

எ + மனை = எம்மனை.

எ + வளை= எவ்வளை.

எ + ஙனம் = எங்ஙனம் – என யகர மொழிந்த மெய்கள் வர. அவ் வந்த மெய்கள் தோன்றுதல் காண்க.

ஒழிந்த மூன்று சுட்டுக்களோடும் இப்படியே கூட்டுக. உயிர் வந்தவழித் தோன்றிய வகரமெய் இரட்டுதல் "தனிகுறின் முன்னொற்று" என்னும் 205 ஆவது சூத்திரத்தாலும், இரட்டிய மெய்யின் மேல் வருமொழிமுத லுயிரேறுதல் "உடன்மேலுயிர்" என்னும் 204 ஆவது சூத்திரத்தாலும், பெறப்படும்.

(3)

ஆ + இடை = ஆயிடை எனச் சுட்டு நீண்டவிடத்து யகரந் தோன்றுதல் காண்க.

'நெறி' யென்றமையால், யாங்ஙனம் என யாவினா முன்னும், ஆங்ஙனம், ஈங்ஙனம். ஊங்ஙனம் என நிண்ட சுட்டின் முன்னும், ஙகரமிகுதலும்; ஈது, ஆங்கு, ஈங்கு ஊங்கு, ஆண்டு, ஈண்டு எனச் சுட்டுப் பெயர் முதல் நீளலும்; "விண்வத்துக்கொட்கும்", "செல்வுழிச் செல்க", "சார்வுழிச் சார்ந்த தகையள்", என மெய்யீற்றின் முன் உயிர் வர, அப்படி உடம்படுமெய்யல்லாத வகரம் பெறுதலுங் கொள்க. (இவ்வாறு வரும் உடம்படுமெய்யல்லாத வகரத்தை மெய்யீற்றுடம்படுமெய் என்பர் நச்சினார்க்கினியர்.)

எகர வினா முச்சட்டின் முன் உயிர்வ;ன வகரமும், நீண்ட சுட்டின் முன் உயிர்வரின் யகரமுந் தோனஸற யென்றது. இ ஈ ஐ வழி என்னும் 162 வது சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல்; யகரம் வரின் வகரமும், பிற மெய்களுள் ஞ ந ம வ வரின் அவையுந் தோன்றுமென்றது "எண்மூ வெழுத்தீற்று" என்னும் 158 – வது சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல்; க ச த ப ங வரின், அவை தோன்றும் என்றது 'எய்தாத தெய்துவித்தல்'.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள்.:–** **எகர வினா** (முன்னர்) – எகர வினா இடைச்சொல்லின் முன்னும், முச் சுட்டின் முன்னர்–மூன்று சுட்டிடைச்சொற்களின் முன்னும், **உயிரும் யகரமும் எய்தின்** – உயிரும் யகரமும் வந்தால், **வவ் வும்**–வகரமும், பிற வரின் – யகரம் ஒழிந்த மெய்கள் வந்தால், **அவையும்**– அவ் வந்த மெய்களும், **தூக்கில்**–செய்யுளிடத்து, சுட்டு நீளின் – சுட்டுகள் நீண்டு வருமிடத்து, யகரம் – யகரமும், **தோன்றுதல்**–மிகுதல், **நெறி**–முறையாம். **எ–று.**

பொ–ரை.:–

எ என்னும் வினா இடைச்சொல்லின் பின்னும், அ, இ, உ என்னும் மூன்று சுட்டிடைச் சொல்லின் பின்னும், உயிரும் யகரமும் வந்தால் வகரமும், யகரமல்லாத மற்ற மெய்கள் வந்தால் அம் மெய்களும், செய்யுளில் சுட்டு நீண்டுவந்தால் யகரமும் மிகுதல் முறை ஆம்.

உ–ம்.:–

எ +அணி = எவ்வணி.

+ஆடு = எவ்வாடு.

+இடம் = எவ்விடம்.

+ஏடு = எவ்வேடு.

+ஒடு = எவ்வோடு.

+யானை =எவ்யானை.– உயிரும் யகரமும் வர வகரம் தோன்றிற்று

எ + குதிரை= எக்குதிரை – யகரம் ஒழிந்த மெய்கள் முன்வந்த மெய்கள் தோன்றின.

எ + சேனை =எச்சேனை.

+தண்டு = எத்தண்டு.

+படை = எப்படை.

+ஞாலம் = எஞ்ஞாலம்.

+வளை = எவ்வளை.

+ஙனம் = எங்ஙனம்.

அ, இ, உ என்னும் சுட்டுக்களின் முன்னும் இப்படியே கூட்ட முறையே வகரமும், வந்த மெய்களும் தோன்றுதல் காண்க.

ஆ+இடை=ஆயிடை (ஆயிடை–அவ்விடம்) யகரந் தோன்றியது.

"நெறி" என்ற மிகையால் யாங்ஙனம் என யா வினா முன்னும், ஆங்ஙனம், ஈங்ஙனம், ஊங்ஙனம் என நீண்ட சுட்டின் முன்னும் ஙகர மிகுதலும், ஈது, ஆங்கு, ஈங்க, ஊங்கு, ஆண்டு ஈண்டு, எனச் சுட்டுப் பெயர் நீளலும், "விண்வத்துக் கொட்கும்." "செல்வுழிச் செல்க." என, மெய்யீற்றின் முன் உயிர்வர இப்படி உடம்படு மெய்யல்லாத வகரம் பெறுதலும் கொள்க. (விண்+அத்து=விண்வத்து, செல்+உழி–செல்வழி) இவ்வாறு மெய்யீற்றின் முன்வரும்

வகரத்தை மெய்யீற்றுடம்படுமெய் என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர். 'நெறி' என்பது மிகை என்ற நியாயம்.

## கா.நமச்சிவாய முதலியார்

எகரவினா (முன்னர்) – எகரவினாவிடைச் சொல்லின் முன்னும், **முச்சுட்டின் முன்னர்** – மூன்று சுட்டிடைச் சொல்லின் முன்னும், **உயிரும்** – உயிரும், **யகரமும்** – யகரமும், **எய்தின்** – வந்தால், **வவ்வும்** – வகரமும், **பிற** – யகரம் ஒழிந்த மெய்கள், **வரின்** – வந்தால், **அவையும்** – அவ்வந்த மெய்களும், **தூக்கில்** – செய்யுளிடத்து, **சுட்டு** – சுட்டுக்கள், **நீளின்**– நீண்டு வருமிடத்து, **யகரம்** – யகரமும், **தோன்றுதல்** – தோன்றுதல், **நெறி** – முறையாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| எ | + | அணி | = | எவ்வணி |
| | + | யானை | = | எவ்யானை |
| | + | குதிரை | = | எக்குதிரை |
| | + | சேனை | = | எச்சேனை |
| | + | தண்டு | = | எத்தண்டு |
| | + | படை | = | எப்படை |
| | + | ஞாலம் | = | எஞ்ஞாலம் |
| | + | நாடு | = | எந்நாடு |
| | + | மனை | = | எம்மனை |
| | + | வளை | = | எவ்வளை |
| | + | ஙனம் | = | எங்ஙனம் |
| ஆ | + | இடை | = | ஆயிடை |

என வகரமும் வந்த மெய்களும் யகரமுந் தோன்றிமை காண்க. அ இ உ ஆகிய மூன்றின் முன்னும் இப்படியே கூட்டுக.

'நெறி' என்றமையால், யாங்ஙனம் என யாவினா முன்னும், அங்ஙனம் – ஈங்ஙனம் – ஊங்ஙனம் என நீண்ட சுட்டின் முன்னும் ஙகரம் மிகுதலும், ஈது – ஆங்கு – ஈங்கு – ஊங்கு – ஆண்டு – ஈண்டு எனச் சுட்டுப்பெயர் நீளலும், 'விண்வத்துக் கொட்கும்', 'செல்வுழிச் செல்க' என மெய்யீற்றின்முன் உயிர்வர இப்படி உடம்படுமெய்ல்லாத வகரம் பெறுதலுங் கொள்க.

இவ்வாறு வரும் உடம்படு மெய்யல்லாத வகரத்தை மெய்யீற்றுடம்படுமெய் யென்பர் **நச்சினார்க்கினியார்.**

## மோசசு பொன்னையா

எகர வினாவிடைச்சொல், சுட்டிடைச் சொற்கள் இவற்றின் முன்னர் உயிரும் யகரமும் வரின் வகர ஒற்றும், ஒழிந்த மெய்கள் வரின்வந்த அம் மெய்களும், செய்யுளில் சுட்டு நீளின் யகரமெய்யும் மிகுதல் முறையாம், எ-று.

எ-டு.:-

| | | |
|---|---|---|
| அணி | – எவ்வணி | |
| யானை | – எவ்யானை | – உயிரும் யகரமும் வர வகரந்தோன்றிற்று |

எஅ இ உ +

| | | |
|---|---|---|
| குதிரை | – எக்குதிரை | |
| சேனை | – எச்சேனை | |
| தண்டு | – எத்தண்டு | |
| படை | – எப்படை | |
| ஞாலம் | – எஞ்ஞாலம் | |
| நாடு | – எந்நாடு | |
| மனை | – எம்மனை | |
| விதம் | – எவ்விதம் | |
| ஙனம் | – எங்ஙனம் | மெபிற வர வந்த அவ்வம் ய்யே தோன்றிற்று |

(இவ்வாறே ஏனையவற்றையும் முடிக்க)

ஆ + இடை = ஆயிடை – சுட்டு நீண்டவிடத்து யகரந் தோன்றிற்று.

இதனால், இவ்வாசிரியர் சுட்டு வடிவங்கள் அ, இ, உ என்றும், மொழிமுதல் வினாவின் வடிவம் எகரம் என்றும் கொண்டார் எனத் தெரிகின்றது. தொல்காப்பியர் 'அஇஉஅம் மூன்றுஞ்சுட்டு' என்று கூறியுள்ளதால் அவரும் அ இ உ என்பவற்றையே சுட்டு வடிவங்கள் எனக் கொண்டார் என்பது வெளிப்படை. அவர் 'நீட வருதல் செய்யுளில் உரித்தே' என்றதனால் சுட்டுக்கள் நீண்டு வருதுல் செய்யுள் வழக்கே எனவுங் கொள்ளலாம். தொல்காப்பியர், 'எதோளி' என்ற சொல்லை 'எகரமுதல் வினாவின் இகரஇறுதி' என்று குறிப்பிட்டுள்ளதால் எகரம் அவர் காலத்தில் வினாப்பொருளை உணர்த்தினமை புலனாகின்றது.

அவ்வாறே அவர் 'யாவை' என்ற சொல்லை, 'யாவென் வினாவின் ஐயென் இறுதி' என்று அந்நூற்பாவில்குறிப்பிட்டு, யகர ஆகார வினாவும் தம் காலத்தில் வழக்கில் இருந்தமையை உடம்பொடு புணர்த்தலால் உணர்த்திச் சென்றார். அவர் 'ஆ ஏ ஓ அம் மூன்றும் வினா' என்றாராக, இளம்பூரணர் அதன் உரையில் தன்னின முடித்தல் என்னும் உத்தியால், 'எகரமும் யகர ஆகாரமும் வினாப் பெறுமெனக் கொள்க' என்று உரைத்துச் சென்றார். அதனையும், வழக்கையும் ஆதாரமாகக் கொண்டு இவ்வாசிரியர் எகர வினாவைக் குறிப்பிட்டார் எனல் பொருந்தும்.

இனி, இந்நூற்பாவால் இவ்வாசிரியர் விதிக்கும் வகர யகரங்கள் உடம்படு மெய்களா அல்லது எழுத்துப்பேறா அன்றி வேறா என அறிதல் இன்றியமையாதது. தொல்காப்பியர் சுட்டுப்புணர்ச்சி பற்றி விதித்தவை இவை:

சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றின்
ஒட்டிய ஒற்றிடை மிகுதல் வேண்டும்.
யவமுன் வரினே வகரம் ஒற்றும்,
உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது.

இவற்றை ஆதாரமாகக் கொண்டு,

அ + ஞானம் –அஞ்ஞானம்
அ + நாள் – அந்நாள்
அ + மலை –அம்மலை
அ + யாழ் – அவ்யாழ்
அ + வழி – அவ்வழி

என முடிக்கலாம்.

தொல்காப்பியர் சுட்டு முதலாகிய வகர இறுதிச் சொற்கள் நான்கு என்றார். அவற்றின் புணர்ச்சி பற்றிக் கூறுங்கால் அவர்,

மெல்லெழுத் தியையின் அவ்வெழுத் தாகும்
ஏனவை புணரின் இயல்பென மொழிப.

எனக் கூறியுள்ளார். அந்நூற்பாக்களை ஆதாரமாகக் கொண்டு,

அவ் + ஞானம் – அஞ்ஞானம்

அவ் – நாள் – அந்நாள்

அவ் + மலை – அம்மலை

அவ் + யாழ் – அவ்யாழ்

அவ் + வழி – அவ்வழி

எனவும் முடிக்கலாம். இவற்றை நோக்குங்கால் வருமொழி முதலில் மெய்வந்தால் நிலையொலித் திரிபும், உயிர்வந்தால் வருவொலித் திரிபும், யகர வகரங்கள் வந்தால் இயல்புமுடிவும் ஒழுங்குற அமைவது புலனாகும். அன்றியும், அ + யாழ் என்பதை அவ்யாழ் என்று புணர்த்தி விதி செய்துள்ளமையை, அவ் + யாழ் = அவ்யாழ் என்று புணர்த்தி விதி செய்துள்ளமையோடு ஒப்பிட்டுப் பார்க்குங்கால், அவ் என்பதே சுட்டு வடிவம் எனவும், மறைந்த வகரமே புணர்ச்சியில் மீண்டும் தோன்றியுள்ளது எனவும் எண்ண இடமுண்டு. அவ்வாறே யகர வினாவின் பழைய வடிவம் எவ் என்பதே என்று கொள்ளப்படும். சுட்டு வடிவம் நீண்ட காலத்தில் அஃது ஒற்றின்றிச் செய்யுளில் வழங்கிவந்ததேபோல் வழக்கிலும் நடந்து, ஏகார வினாவாக அமைந்து, பின்னர் யாவினாவுமாயிற்று எனல் வேண்டும். எனவே, இப்புணர்ச்சியில் இடையே வரும் எழுத்துக்கள் பழைய சுட்டு வடிவத்தின் வகர ஒற்றும் அதன் திரிபுகளுமேயாம் என்க. சுட்டு நீளின் வரும் யகரம் உடம்படுமெய். தொல்காப்பியர் ஆகாரத்தை அடுத்து யகர உடம்படுமெய் வரும் என்பதை உடம்பொடு புணர்த்தி விளக்கிச் சென்றார். ஆயிடை, ஆயிரு என்பன அதற்குச் சான்றுகள். சுட்டு நீளாத இடத்தும் சங்க இலக்கியத்தில் மாயிருள், பாயிருள் என ஆகாரத்தின்வழி யகர உடம்படுமெய் வருதல் நோக்கத் தக்கது.

(13)

**163. உயிர்வரி னுக்குறண் மெய்விட் டோடும்**
**யவ்வரி னிய்யா முற்றுமற் றொரோவழி**

**உயிர் வரின் உக் குறள் மெய் விட்டு ஓடும்**
**யவ் வரின் இய்யாம் முற்றும் மற்று ஒரோ வழி**

## Final u

A short u is (for the most part) dropped before all initial vowels, but it is changed into I, when followed by an initial y. Even perfect u follow this rule in a few instances.

## ஒப்புமைப் பகுதி

யகரம் வருவழி இகரம் குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்றாது

(தொல்.: 411)

இகரம் குறுகி வருங்குற் றுகரம்பின் யவ்வரினே

(வீ.: 3:4)

........... மேலுகரம் யப்பின்
படையா வருமிகரம் .......

(நேமி.: 41:1–2)

குற்றிய லுகரத் திறுதி முன்னு
மற்றென மொழிப யவ்வரி னிகரந்
தெற்றென வருஉமது முற்றத் தோன்றாது.

(இ.வி.: 65)

தனிக்குறில் அல்லவற்று இறுதி வன்மை
ஊர்ந்துளிக் குறுகும் உகரம் என்ப
தொடர் உயிர் உக்குறள் துடைத்து உணும் யவ்வரின்
உஇயாம் சில முற்றகரமும் அற்றே

(தொன்.:15)

யகரம் வரும்வழி யிகரம் குறுகும்

(மு.வீ.: 391)

ஆவிபின் னோன்றக் கெடுங்குற் றுகரம்.....
....................................... ஆவி வந்தாற்
பாவிய முற்றுகரத்தின் சிதைவும் பகர்ந்தனரே

(வீர.: 21:1 &3–4)

## மயிலை நாதர்

எ–ன், குற்றுகர முற்றுகர வீறு உயிரும் யகரமும் வந்தாற் புணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– குற்றியலுகரம் உயிர்முதன்மொழி வந்தால் தனக்கு ஆதாரமான மெய் நிற்கத் தான்கெடும்; யகர முதன்மொழி வந்தால் இகரமாகத் திரியும்; ஒரோவிடத்து முற்றுகரமும் இவ்விரு விதியையும் எய்தும், எ–று.

வ—று.:—

நாகழகிது, நாகியாது எனவும்; நாகின்வளர்ச்சி, நாகியமன் கொள்ளான் எனவும்; இதனை, இதனால் எனவும், (தரவு, தெருவு, கதவு, புதவு, இழவு, விழவு, வரவு, செலவு, புணர்வு, உணர்வு, நொவ்வு, நுகர்வு) + (அழகிது, யாது) எனவும் வரும்.

## சங்கர நமச்சிவாயர்

**எ—னின்,** குற்றியலுகரத்திற்கு 'இ ஈ ஐவழி' என்னும் சூத்திரத்தான் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தலும், முற்றியலுகரத்திற்கு அச் சூத்திரத்தான் எய்தியதன்மேல் சிறப்புவிதி வகுத்தலும் நுதலிற்று.

**இ—ள்.:—** குற்றியலுகரம் உயிர் முதன்மொழி வந்தால், தனக்காதாரமான மெய் நிற்கத் தான் கெடும்; யகர முதன்மொழி வந்தால், இகரமாகத் திரியும். முற்றியலுகரமும் அவ்விரு விதியும் பெறும் ஒரோவிடங்களில், **எ — று.**

**உ—ம்.:—**

நாகரிது, நாகியாது எனவும்; நாகின்வளர்ச்சி, நாகியமன் கொள்ளான், தனாதடி எனவும்; கதவு, செலவு: அழகிது, யாது எனவும்; அதனை, இதனை எனவும் இருவழியும் வந்தன. பிறவும் அன்ன.

'கெடும்' என்னாது 'ஓடும்' என்றமையால், குற்றியலுகரம் ஒரோவழி 'இ ஈ ஐவழி' என்னும் பொதுவிதி பெறுதலும் கொள்க.

**வ—று.:—**

**'தண்முக மாகத் தானழைப் பதுவே' (303)**

**'ஆறன் ஒருமைக் கதுவும் ஆதுவும்' (300)**

என வரும். ஆசிரியர் தொல்காப்பியர்,

**[1]"அவற்றுள்,**
**மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்"**

எனவும்,

**[2]"குற்றியலுகரமும் அற்றென மொழிப"**

எனவும் கூறிய சூத்திரங்களுள், அற்றென்னும் மாட்டேற்றிற்கு மெய்யீறுபோலக் குற்றியலுகர ஈறும் புள்ளியொடு நிற்கும் எனப் பொருள்கொள்ளாது, இம் மூன்றாஞ் சூத்திரத்தை,

**"புள்ளி யீற்றுமுன் உயிர்தனித் தியலாது மெய்யொடும்**
**சிவணும் அவ்வியல் கெடுத்தே"**

என்னும் முப்பத்தாறாம் சூத்திரத்தோடு மாட்டெறிந்ததாகக் குற்றியலுகரமும் புள்ளியீறுபோல உயிரேற இடங் கொடுத்துக் கெடாது இரண்டு உயிரும் ஒருங்கு நிற்கும் எனக் கூறிச் சாதிப்பாரும் உளர். அவ்வாறு கூறல் மாட்டேற்று இலக்கணம் அன்றாம்; அன்றியும், மெய் உயிர் என்பன உவமவாகுபெயராய் வந்த காரணக்குறியல்லவாக வேண்டும்; அதனால் அஃது அந்நூலாசிரியர் கருத்தன்றாம். இவ்வாறு அந்நூலொடு பொருந்தா உரைக்கோள் பலவுள. அவற்றை அந்நூல் கருத்தாகத் துணிந்து, அந்நூலோடு இந்நூல் மறுதலைப்பட்டது என்று கோடற்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** குற்றுகர வீற்றிலும் முற்றுகர வீற்றிலும் உயிரும் யகரமும் வந்து புணருமாறு கூறியது.

**இ–ள்.:– உயிர் வரின்** – வருமொழி முதலாக உயிர் வந்தால், **உக்குறள்** – நிலைமொழி ஈற்றிற் குற்றியலுகரம், **மெய் விட்டோடும்** – தனக்குப் பற்றுக்கோடாகிய மெய் நிற்கத் தான் கெடும், **யவ்வரின்** – வருமொழி முதலாக யகரம் வந்தால், **இய்யாம்** – நிலைமொழி ஈற்றிற் குற்றியலுகரம் இகரமாய்த் திரியும், **முற்றுமற்று** – முற்றியலுகரமும் அத் தன்மைத்தாம், **ஒரோ வழி** – ஒரோ இடங்களில், **எ–று.**

**உ–ம்.:–**

நாகழகிது, நாகியாது எனவும்; நாகின் வளர்ச்சி, நாகியமன் கொள்ளான் எனவும்; அதழகு, இதழகு, தரவு, தெருவு, கதவு, புதவு, இழவு, விழவு, வரவு, செலவு, உணர்வு, புணர்வு, நோவு, நுகர்வு, அழகிது, யாது எனவும் வரும்.

## விசாகப் பெருமாளையர்

**இது,** குற்றியலுகரத்திற்கு "இஈஐவழி". என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தலும், முற்றியலுகரத்திற்கு அச் சூத்திரத்தா லெய்தியதன் மேற் சிறப்பு விதியும் உணர்த்துகின்றது.

**இ–ள்.: உக்குறள்** – குற்றியலுகரமானது, **உயிர்** – உயிர் முதன்மொழி, **வரின்** – வந்தால், **மெய்விட்டு**–தனக் கிடமாகிய மெய்யை விட்டு, **ஓடும்**– கெடும், **ய**–யகர முதன்மொழி, **வரின்**–வந்தால், **இய்யாம்** – அது இகரமாகத்

திரியும், **முற்றும்** – முற்றியலுகரமும், **அற்று** – அவ் விரு விதியும் பெறும், **ஒரோவழி**–ஒவ்வோரிடத்து, **எ–று.**

**உ–ம்.:–**

நாகு+அரிது–நாகரிது, நாகு+யாது–நாகியாது எனவும், நாகு+வளர்ச்சி–நாகின் வளர்ச்சி, நாகு+யமன்–நாகியமன் எனவும், கதவு+அழகிது–கதவழகிது, கதவு+யாது–கதவியாது, அது+ஐ–அதை, எனவும் வரும்,

('கெடும்' என்னாது 'ஓடும்' என்றமையால் "தன்முகமாகத் தானழைப்பதுவே" எனக் குற்றியலுகரம் பொதுவிதி பெறுதலுங் கொள்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

உடம்படுமெய்பெற்றுப் புணர்தற்பாலவாகிய சிலவுயிர் முன் உயிர்ப் புணர்ச்சிக்கண் கெடுதலும், உயிர்முன் யகரப் புணர்ச்சிக்கண் திரிதலுமுண்டா மெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

உயிர்வரி னுக்குறண் மெய்விட் டோடும்
யவ்வரினிய்யா முற்றுமற் றொரோவழி.

(உயிர் வரின் உக்குறள் மெய் விட்டு ஓடும்;
யவ்வரின் இஆம்; முற்றும் அற்று ஒரோவழி)

**இ–ள்.:– உக்குறள் உயிர்வரின் மெய்விட்டு ஓடும்**–குற்றியலுகரம் உயிர் முதன்மொழி வந்தாற் றனக்கிடமாகிய மெய்யின் மேற் தனித்துநின்ற வியல்பு கெடப் பெறும்; **ய வரின் இ ஆம்** – யகரமுதன் மொழி வந்தால் அது இகரமாகத் திரியும்; **முற்றும் அற்று ஒரோவழி**–முற்றியலுகரமும் அவ்விருவிதியும் பெறும் ஒவ்வோரிடத்து, **எ–று.**

உயிர்வரின் குற்றியலுகரம் எவ்விகாரம் பெறும்?

"உயிர்வரின் உக்குறண் மெய்விட்டோடும்"

**உ–ம்.:–**

(1) நாகு, எஃகு. வரகு, கொக்கு, குரங்கு, தெள்கு, இவற்றின்முன் அரிது, அருமை முதலிய உயிர்முதன் மொழிகளை வருவித்து, நாகரிது, நாகருமை எனக் கூட்டி, இருவழியும் உயிர் வரக் குற்றியலுகரந் தான் வல்லின மெய்யின்மே லேறிநின்ற கெடப்பெறுதல் காண்க.

யகரம்வரின் குற்றியலுகரம் யாதாம்?

" (உக்குறள்) யவ்வரினிய்யாம்"

(2) நாகு முதலியவற்றின் முன், யாது, யாப்பு என வருவித்து, நாகியாது, நாகியாப்பு, எனக் கூட்டி, இருவழியும் யகரம் வரக் குற்றியலுகரம் இகரமாகத் திரிதல் காண்க.

உயிரும் யகரமும் வரின் முற்றியலுகரம் இவ்விதி பெறுதலுமுண்டோ?

"முற்றுமற்றொரோவழி"

(3) கதவு–அழகிது–கதவழகிது, கதவு–யாது–கதவியாது, எனவும், அது–ஐ–அதை எனவும், முற்றியலுகரம் ஒரோரிடத்து அவ்விருவிதியும் பெறுதல் காண்க.

இவ்விதியேயன்றிக் குற்றியலுகரம் வேறுவிதியும் பெறுமோ?

ஒரோவிடத்துக் குற்றுகரம் இ ஈ ஐ வழி என்னுஞ் சூத்திர விதியும் பெறும்.

**வரலாறு:–**

"தன்முகமாகத் தானழைப்பதுவே." இதில்: அழைப்பது என்பது குற்றுகரமொழி; ஏகாரவிடைச்சொல் வர: "அழைப்பதே" என முடிதற்பாலது, அங்ஙனமுடியாது, வகரவுடம்படுமெய் பெற்று,"அழைப்பதுவே" என முடிந்தது. "அடித்தடித்துவக்காரமுன் றீற்றிய வற்புத மறியேனே" இதில் "அடித்து" என்பது குற்றுகரமொழி; அக்காரமென்னும் உயிர் முதன்மொழி வர, அடித்தக்காரமென. முடிதற்பாலது அங்ஙன முடியாது வகரவுடம்படுமெய் பெற்று, "அடித்துவக்காரம்" என முடிந்தது. (அக்காரம்–சர்க்கரை.)

நாகரிது என்புழிமுன்னர்க் குற்றுகரவோசையும் பின்னர் உயிரோசையுமாக அவ்விரண்டுங்கூடி யல்லது அப்பொருளுணர்த்தாமையின் உயிரேறுங்காற் குற்றுகரங் கெட்டுப்போக நின்ற ஒற்றின்மேல் உயிரேறிற்றெனக் கொள்ளலாகாது என்பர் நச்சினாக்கினியர். அதுபற்றியே கெடுமென்னாது ஒடுமென்றதாமென்க.

குற்றியலுகரம் உயிர் வரின் ஒடும் என்றது "இ ஈ ஐ வழி என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்; யவ்வரின் இய்யாம் என்றது எய்தாத தெய்துவித்தல்; ஒரோவிடத்து முற்றியலுகரம் இவ்விதி யிரண்டனுள் முன்னையது பெறும் என்றது "இ ஈ ஐ வழி" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி; பின்னையது பெறும் என்றது எய்தாத தெய்துவித்தல்.

## முகவை இராமானுச கவிராயர்

**இது**, குற்றியலுகரத்திற்கு, இ ஈ ஐ வழி யென்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிது விதியும், முற்றியலுகரத்திற்கு அந்தச் சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்பு விதியுங் கூறுகின்றது.

**இ–ள்.:– உயிர்வரின்**–உயிர் முதல் மொழி வந்து புணரின், **உக் குறள்**– குற்றியலுகரமானது, **மெய்விட் டோடும்**–தானேறி நின்ற வல்லொற்றை விட்டு நீங்கும், **யவ்வரி னிய்யாம்** – யகர முதல் மொழி வந்து புணரின் உகரம் இகரமாகத் திரியும், **முற்றுமற்று** – முற்றுகரமும் அந்த இரண்டு விதிகளையும் பெறும், **ஒரோவழி** – ஒரோரிடங் களிலேன்றவாறு.

**உ–ம்.:–**

நாகு, எஃகு, வரகு, கொக்கு, குரங்கு, தெள்கு என நிறுத்தி, அரிது, ஆன்றது, அருமை, ஆண்மை என வருவித்து, நாகரிது, எஃகரிது எனவும்; நாகருமை, எஃகருமை எனவும் ஒட்டி, இரு வழியும் உயிர்வந்து புணரக் குற்றுகரங் கெட்டவாறும், இனி யவற்றொடு, யாது, யாப்பு எனவும் ஒட்டி, இருவழியும் யகரம் வர உகரம் இகரமாகத் திரிந்தவாறுங் காண்க. பிறவற்றொடு மிவ்வாறே ஒட்டிக் கொள்க. இனி கதவு, கனவு என நிறுத்தி அவ்வாறு வருவித்து, கதவரிது, கனவரிது, கதவியாது, கனவியாது எனவும்; கதவருமை, கனவருமை, கதவியாப்பு, கனவியாப்பு எனவும் ஒட்டி, முற்றுகரமும் ஒரோரிடத்து அவ்வாறு முடிந்தமை காண்க. கெடு மென்னாமல் ஓடு மென்றதினால் குற்றியலுகர மோரோரிடங்களில் 'இ ஈயைவழி' யென்னுஞ் சூத்திரப் பொதுவிதி பெறுதலுங் கொள்க.

**வ–று.:–**

'தன்முக மாகத் தானழைப் பதுவே'. இதில் அழைப்பது என்பது குற்றுகர மொழி, அதனோடு ஏகார இடைச்சொல் வந்து, அழைப்பதே என முடிய வேண்டியது, வகர உடன்படுமெய் பெற்று, அழைப்பதுவே என நின்றது. 'ஆற னொருமைக் கதுவு மாதுவும்' இதில் ஆது என்பது குற்றுகரமொழி, அதனொடு உம் என்னும் இடைச்சொல் வந்து ஆதும் என முடிய வேண்டியது, வகர உடன்படுமெய் பெற்று ஆதுவும் என நின்றது. பிறவுங் காண்க. உக்குறள் ஓடும், இய்யாம் எனவும், முற்றும், அற்று எனவும் முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– உ குறள்** – குற்றியலுகரம், உயிர்வரின் – (வருமொழி முதலில்) உயிர்வந்தால், **மெய்விட்டு** – (தனக்கிடமாகிய) மெய்யை விட்டு, **ஓடும்** – சென்றுவிடும்; **ய வரின்** – (வருமொழி முதலில்) யகரம் வந்தால், **இ ஆம்** – (அவ்வுகரம்) இகரமாகத் திரியும்; **முற்றும்** – முற்றியலுகரமும், **ஒரோ வழி** – ஒரோவிடத்து, **அற்று** – அவ்விருவிதியையும் (உயிர்வர உ கெடுதலையும், ய வர இ ஆகத் திரிதலையும்) பெறும்.

| குற்றியலுகரம் | உதாரணம் | முற்றியலுகரம் |
|---|---|---|
| நாடு + அருமை = நாடருமை. | | கதவு + அருமை = கதவருமை |
| நாடு + யாது = நாடியாது | | கதவு + யாது = கதவியாது |

குறிப்பு : –

'கெடும்' என்னாது, 'ஓடும்' என்றமையால் காண்பது + உம் = காண்பதுவும் எனக் குற்றியலுகரம் ஒரோவிடத்துக் கெடாமல் ''ஏனை உயிர்வழி' என்றபடி வகர உடம்படுமெய் பெறுதலையுங் கொள்க. இனி, குற்றியலுகரம் சிறுபான்மை உயிர்முதன்மொழி வரும்பொழுது கெடாமல் நிற்குமென்ற இவ்விலக்கணத்திற்கு இவ்வாசிரியர் மேல் ''தன் முகமாகத் தானழைப்பதுவே'' எனவும், ''ஆறனொரு மைக்கு அதுவு மாதுவும்'' எனவும் தாமே இலக்கியங் காட்டியது அறிக.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:– உக்குறள் உயிர் வரின் மெய் விட்டு ஓடும்** – குற்றியலுகரம் உயிர் முதன்மொழி வந்தாற் றனக்கிடமாகிய மெய்யை விட்டுக் கெடும், **ய வரின் இய்யாம்**–யகர முதன்மொழி வந்தால் அது இகரமாகத் திரியும், **முற்றும் அற்று ஒரோவழி** – முற்றியலுகரமும் அவ்விரு விதியும் பெறும் ஒவ்வோரிடத்து, எ–று.

**உ–ம்.:–**

(1) நாகு, எஃகு, வரகு, கொக்கு, குரங்கு, தெள்கு இவற்றின் முன், அரிது, அருமை முதலிய உயிர் முதன்மொழிகளை வருவித்து, நாகரிது, நாகருமை எனக்கூட்டி, இரு வழியும் உயிர் வரக் குற்றியலுகரந் தானேறி நின்ற வல்லின மெய்யை விட்டுக் கெடுதல் காண்க. குற்றியலுகரங் கெட நின்ற மெய்யின் மேல் வந்தவு யிரேறுதல் ''உடன்மேலுயிர்'' என்னுஞ் சூத்திரத்தாற் பெறப்படும்.

(2) நாகு முதயிவற்றின் முன், யாது, யாப்பு என வருவித்து. நாகியாது, நாகியாப்பு எனக் கூட்டி, இருவழியும் யகரம் வரக் குற்றியலுகரம் இகரமாகத் திரிதல் காண்க.

(3) கதவு + அழகிது = கதவழகிது. கதவு + யாது = கதவியாது. எனவும். அது + ஐ = அதை எனவும் முற்றியலுகரம் ஒரோரிடத்து அவ் விருவிதியும் பெறுதல் காண்க.

கெடும் என்னாது ஒடும் என்றமையால், குற்றியலுகரம் ஒரோரிடத்து "இ ஈ ஐ வழி" என்னுஞ் சூத்திரப் பொதுவிதி பெறுதலுங் கொள்க.

**வ–று.:–**

"தன்முகமாகத் தானழைப் பதுவே" இதில், 'அழைப்பது' என்பது குற்றுகரமொழி, ஏகார விடைச்சொல் வர, 'அழைப்பதே' என முடிதற்பாலது, அங்ஙன முடியாது, வகர வுடம்படுமெய் பெற்று, 'அழைப்பதுவே' என முடிந்தது. "அடித்தடித்து வக்காரமுன் றீற்றிய வற்புத மறியேனே" இதில் 'அடித்து' என்பது குற்றுகரமொழி, அக்கார மென்னும் உயிர் முதன்மொழி வர, அடித்தக்காரமென முடிதற்பாலது அங்ஙன முடியாது வகர வுடம்படுமெய் பெற்று, 'அடித்துவக்காரம்' என முடிந்தது.

குற்றியலுகரம் உயிர்வரிற் கெடும் என்றது "இ ஈ ஐ வழி" என்னுஞ் சூத்திரத்தால் **எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்;** யவ் வரின் இய்யாம் என்றது **எய்தாததெய்து வித்தல்;** ஒரோவிடத்து முற்றியலுகரம் இவ் விதி யிரண்டனுள் முன்னையதுபெறும் என்றது "இ ஈ ஐ வழி" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்பு விதி; பின்னையது பெறும் என்றது **எய்தாததெய்துவித்தல்.**

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். உக்குறள் உயிர்வரின் மெய்விட்டு ஓடும்** – குற்றியலுகரம் உயிர்முதன் மொழிவந்தால் தனக்கிடமாகிய மெய்யை விட்டு நீங்கும், – **யவரின் இய்யாம்** – யகரமுதன் மொழிவந்தால் அவ்வுகரம் இகரமாகத் திரியும், – **முற்றும் அற்று ஒரோவழி** – முற்றியலுகரமும் அவ்விருவிதியும் பெறும் ஒவ்வோரிடத்து. **எ–று.**

**உ–ம்.:–**

(1) நாகு, எஃகு, வரகு, கொக்கு, குரங்கு, தெள்கு இவற்றின்

முன் அரிது, அருமை முதலிய உயிர்முதன் மொழிகளை வருவித்து நாகரிது, நாகருமை எனக் கூட்டி இருவழியும் உயிர்வரக் குற்றியலுகரந் தானேறி நின்ற வல்லின மெய்யைவிட்டுக் கெடுதல் காண்க. குற்றியலுகரங்கெட நின்ற மெய்யின் மேல் வந்த வுயிரேறுதல் : 'உடன்மேலுயிர்' என்னுஞ் சூத்திரத்தாற் பெறப்படும்.

(2)நாகு, எஃகு முதலியவற்றின் முன், யாது, யாப்பு எனவருவித்து நாகியாது, நாகியாப்பு எனக் கூட்டி இருவழியிலும் யகரம் வரக் குற்றியலுகரம் இகரமாகத் திரிதல் காண்க.

(3)கதவு+அழகிது = கதவழகிது, கதவு + யாது = கதவியாது எனவும். அது+ஐ=அதை எனவும். முற்றியலுகரம் ஒரோரிடத்து அவ்விருவிதியும் பெறுதல் காண்க. கெடும் என்னாது ஒடுமென்றமையால் குற்றியலுகரம் ஒரோரிடத்து 'இ ஈ ஐவழி' என்னுஞ் சூத்திரப் பொதுவிதி பெறுதலுங் கொள்க.

**வரலாறு.:–**

'தன்முகமாகத் தானழைப்பதுவே' இதில் அழைப்பது என்பது குற்றியலுகரமொழி ஏகாரஇடைச்சொல்வர : அழைப்பதேஎன முடிதற்பாலது அங்ஙனமுடியாமல் வகரவுடம்படுமெய் பெற்று அழைப்பதுவே என முடிந்தது. "அடித்தடித்துவக்காரமுன்றீற்றியவற்புதமறியேனே" இதில் அடித்து என்பது குற்றியலுகரமொழி அக்காரம் என்னும் உயிர் முதன் மொழிவர, அடித்தக்காரமென முடிதற்பாலது அங்ஙனமுடியாமல் வகரவுடம்படு மெய் பெற்று 'அடித்துவக்காரம்' என முடிந்தது.

குற்றியலுகரம் உயிர்வரிற்கெடும் என்றது 'இ ஈ ஐ வழி' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல்; யவ்வரின் இய்யாம் என்றது எய்தாத தெய்துவித்தல்; ஒரோவிடத்து முற்றியலுகரம் இவ்விதி யிரண்டனுள் முன்னையது பெறுமென்றது 'இ ஈ ஐ வழி' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி; பின்னையது பெறுமென்றது எய்தாததெய்துவித்தல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ—ள்.:— உ குறள்** – குற்றிய லுகரமானது, **உயிர் வரின்** – (வருமொழி முதலில்) உயிர் வந்தால், **மெய்விட்டு**—(தனக்கு இடமாகிய) மெய்யை விட்டு, **ஓடும்** – கெடும்; **ய வரின்**—(வருமொழி முதலில்) யகரம் வந்தால், **இஆம்**—(அவ்வுகரம்) இகரமாகத் திரியும்; **முற்றும்** – முற்றியலுகரமும், **ஒரோவழி** – ஒவ்வோரிடத்து, **அற்று** – அவ்வாறே யாகும் (உயிர் வர உகரம் கெடுதலும் யகரம் வர உகரம் இகரமாகத் திரிதலு மாகிய அவ் விரண்டு விதியையும் பெறும்); **எ—று.**

உக்குறள் – மாத்திரை குறுகிய உகரம்

**உ—ம்.:—**

**(1) குற்றியலுகரம்** **(2) முற்றியலுகரம்**

வரகு + அருமை—வரகருமை கதவு+அருமை—கதவருமை. வேற்றுமை.

வரகு+யாது வரகியாது+ யாது – கதவியாது. அல்வழி.

'கெடும்' என்னாமல் 'ஒடும்' என்றமையால், 'காண்பதுவும்', 'வருவதுவே' எனக் குற்றியலுகரம் ஒரோவிடத்துக் கெடாமல் "இ ஈ ஐ வழி', என்னுஞ் சூத்திரப் பொதுவிதியால் வகர உடம்படுமெய் பெறுதலும் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள்.:— உக்குறள் உயிர் வரின்** – குற்றியலுகரம் உயிர்முதன் மொழி வந்தால், **மெய் விட்டு ஓடும்** – தனக்கிடமாகிய மெய்யை விட்டுக் கெடும், **ய வரின்** – யகர முதன் மொழி வந்தால், **இய்யாம்** – அது இகரமாகத் திரியும். **முற்றும் அற்று ஒரோவழி** – முற்றுகரமும் அவ்விரு விதியும் பெறும் ஒவ்வோரிடத்து,**எ—று.**

**உ—ம்.:—**

(1) நாகு + அரிது = நாகரிது (அல்வழி) நாகு + அருமை = நாகருமை (வேற்றுமை) எனக் கூட்டி, இரு வழியும் உயிர் வரக் குற்றியலுகரந் தானேறி நின்ற வல்லினமெய்யை விட்டுக் கெடுதல் காண்க. குற்றியலுகரங் கெட நின்ற மெய்யின் மேல் வந்தவுயிரேறுதல் "உடன்மே லுயிர்" என்னும் 204 – வது சூத்திரத்தாற் பெறப்படும்.

(2) நாகு + யாது = நாகியாது அல்வழி), நாகு + யாப்பு =

நாகியாப்பு (வேற்றுமை) எனக் கூட்டி, இருவழியும் யகரம் வரக் குற்றியலுகரம் இகரமாகத் திரிதல் காண்க.

(3) கதவு + அழகிது = கதவழகிது. கதவு + யாது = கதவியாது. அது + ஐ = அதை. என முற்றியலுகரம் ஒரோரிடத்து அவ்விருவிதியும் பெறுதல் காண்க.

'கெடும்' என்னாது 'ஒடும்' என்றமையால், குற்றியலுகரம் ஒரோரிடத்து 'இ ஈ ஐ வழி' என்னும் 162–வது சூத்திரப் பொதுவிதி பெறுதலுங் கொள்க.

**உ–ம்.:–**

தன் மூகமாகத் தானழைப்பதுவே'' – இதில் 'அழைப்பது' என்னும் குற்றுகர மொழி, ஏகாரவிடைச்சொல் வர, 'அழைப்பதே' என முடிதற்பாலது, அங்ஙனமுடியாது, வகரவுடம்படுமெய் பெற்று, 'அழைப்பதுவே' என முடிந்தது. 'அடித்தடித்து வக்கார முன் றீற்றிய வற்புத மறியேனே' இதில் 'அடித்து' என்னும் குற்றுகரமொழி, அக்காரமென்னும் உயிர் முதன்மொழி வர, 'அடித்தக்கார' மென முடிதற்பொலது அங்ஙன முடியாது, வகரவுடம்படுமெய் பெற்று 'அடித்துவக்காரம்' என முடிந்தது.

குற்றியலுகரம் உயிர் வரிற் கெடும் என்றது ''இ ஈ ஐ வழி'' என்னும் 162–வது சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்; யவ் வரின் இய்யாம் என்றது 'எய்தாத தெய்துவித்தல்;' ஒரோவிடத்து முற்றியலுகரம் இவ்விதி யிரண்டனுள் முன்னையதுபெறும் என்றது ''இ ஈ ஐ வழி'' என்னுஞ் சூத்திரத்தால் 'எய்தியதன்மேற் சிறப்பு விதி;' பின்னையது பெறும் என்றது 'எய்தாததெய்துவித்தல்.'

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள்.:–** **உ குறள்** – குற்றிய லுகரமானது, **உயிர் வரின்** – உயிர் முதன்மொழி வந்தால், **மெய் விட்டு** – (தனக்கிடமாகிய) மெய்யை விட்டு, **ஒடும்** – கெடும்; **ய வரின்** – யகர முதன்மொழி வந்தால், **இ ஆம்**– (அது) இகரமாகத் திரியும்; முற்றும் – முற்றியலுகரமும், **ஒரோவழி** – ஒவ்வோரிடத்து, **அற்று** – அவ் விருவிதியும் பெறும், **எ–று.**

**பொ–ரை.:–** குற்றியலுகரம், உயிரை முதலிலுள்ள மொழி வந்தால், (தனக்கு ஆதாரமாகிய) மெய்யை விட்டுக் கெடும்; யவ்வை முதலிலுள்ள மொழி வந்தால், இகரமாகத் திரியும்; முற்றியலுகரமும் அவ் விரண்டு விதியையும் சில இடங்களிற் பெறும்.

உ—ம்.:—

நாகு + அரிது = நாகரிது.

+ யாது = நாகியாது.

எஃகு + அரிது = எஃகரிது.

+ யாது = எஃகியாது.

பந்து + எறிந்தான் = பந்தெறிந்தான்.

+ யாது = பந்தியாது.— குற்றிய லுகரம் உயிர்முன் கெட்டது, யகரத்தின் முன் இகரமாயிற்று.

கதவு + அழகிது = கதவழகிது. — முற்றிய லுகரம் உயிர்முன் கெட்டது, யகரத்தின் முன் இகரமாயிற்று.

+ யாது = கதவியாது.

அது + ஐ = அதை.

கனவு + அரிது = கனவரிது.

+ யாது = கனவியாது.

'கெடும்' என்னாது 'ஓடும்' என்றமையால், 'தன்முகமாகத் தானழைப்பதுவே' "நல்லாரைக் காண்பதுவும்" எனக் குற்றியலுகரம் ஒரோவிடத்துக் கெடாமல் 'இ ஈ ஐ வழி' என்னும் பொது விதியால், வகரவுடம்படு மெய் பெறுதலுங் கொள்க. 'ஓடும்' என்றது இலேசு என்னும் நியாயம்.

## கா.நமச்சிவாய முதலியார்

**உக்குறள்** — குற்றியலுகரமானது, **உயிர்** — உயிர் முதன்மொழி, வரின் — வந்தால், **மெய்விட்டு** — (தனக்கிடமாகிய) மெய்யை விட்டு, **ஓடும்** — கெடும்; **ய** — யகரமுதன்மொழி**வரின்** — வந்தால், **இய்யாம்** — அஃது இகரமாகத் திரியும்; **முற்றும்** — முற்றியலுகரமும், **அற்று** — அவ் விருவிதியும் பெறும், **ஒரோவழி** — ஒவ்வோரிடத்து.

**உதாரணம்**

| | | | |
|---|---|---|---|
| நாகு | + அரிது | = | நாகரிது |
| குரங்கு | + அருமை | = | குரங்கருமை |

இருவழியும் உயிர்வரக் குற்றியலுகரம் கெட்டது.

| | | | |
|---|---|---|---|
| நாகு | + யாது | = | நாகியாது |

| | | | |
|---|---|---|---|
| நாகு | + யாப்பு | = | நாகியாப்பு |

இருவழியும் யகரம் வரக் குற்றியலுகரம் இகரமாகத் திரிந்தது.

| | | | |
|---|---|---|---|
| கதவு | + அழகிது | = | கதவழகிது |
| கதவு | + யாது | = | கதவியாது |
| அது | + ஐ | = | அதை |

முற்றியலுகரம் அவ்விருவிதியும் பெற்றது.

கெடும் என்னாது ஓடும் என்றமையால், குற்றியலுகரமும் ஒரோவிடத்து 'இ ஈ ஐ வழி' (சூ–162) என்னும் சூத்திரப் பொது விதிப்படி வகர வுடம்படுமெய் பெறுதலும் கொள்க.

**உதாரணம்:**–அழைப்பதுவே, காண்பதுவும் முதலியன.

## மோசகு பொன்னையா

நிலைமொழியின் ஈற்றில் நின்ற குற்றியலுகரம் உயிர் முதன்மொழி வந்தால் தான் சார்ந்து நின்ற மெய்யை விட்டு நீங்கும்; யகர முதன்மொழி வந்தால் அஃது இகரமாகத் திரியும்; ஒரோவிடத்து முற்றியலுகரம் அவ்வாறேயாகும் எ–று.

எ–டு.

| | |
|---|---|
| வரகருமை<br>வரகியாது | குற்றியலுகரம் உயிர்வர நீங்கி, யகரம் வர இகரமாகத் திரிந்தது. |
| கதவருமை<br>கதவியாது | முற்றியலுகரம் உயிர்வர நீங்கி யகரம் வர இகரமாகத் திரிந்தது. |

வருமொழி முதலில் உயிர் வரினும் குற்றியலுகரம் நீங்காமல், 'காண்பதுவும்', 'வருவதுவும்', 'ஆதுவும்' அழைப்பதுவே என்று இவ்வாறு உடம்படுமெய் பெற்றுப் புணருவதும் உண்டு.

தொல்காப்பியர் உயிர் முதன் மொழி வரின் குற்றியலுகரம் மெய்விட்டு ஓடும் அல்லது கெடும் என்று யாண்டுங் கூறினாரல்லர். இவ்வாசிரியர், 'உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்' என்றது முதனூற் கருத்தோடு மாறுபட்டதாகும். தொல்காப்பியர்,

> ஆறன் மருங்கிற் குற்றிய லுகரம்
> ஈறுமெய் ஒழியக் கெடுதல் வேண்டும்.

என்றதனால், குற்றியலுகரம் உயிர்முதல் வருமொழி வந்தவிடத்துக் கெடுதற்கு விதியமைத்தார் எனப் பிறழ உணர்ந்தமை இதற்குக் காரணம் ஆகலாம். அவர் அந்நூற்பாவில் அறு என்பதின் முற்றியலுகரம் ஆயிரம் என்னும் வருமொழி வருதலாற் கெடும் என்பதற்கே விதியமைத்தார் என்பது.

'ஆறன் கிளவி முதல்நீ டும்மே'

என்ற நூற்பாவோடு ஒப்ப வைத்து நோக்குவாருக்குப் புலனாகும். இனி,

'நூறென் கிளவி ஒன்றுமுத லொன்பாற்கு
ஈறுசினை யொழிய இனவொற்று மிகுமே'

என்ற நூற்பாவால் தொல்காப்பியர் குற்றியலுகரக் கேட்டிற்கு விதியமைத்தார் என்பாரும்உளர். அந்நூற்பாவில் ஒழிய என்ற சொல்லுக்குக் 'கெடாது நிற்ப' என்று உரையாசிரியர் கூறியதாலும், 'ஆறன் மருங்கின்' முதலிய நூற்பாக்களில் வரும் ஒழிய என்பதற்கும் அதுவே பொருள் என்பதாலும், அந்நூற்பாவிற்கு, 'ஈறாகிய குற்றியலுகரமும் அவ்வுகரம் ஏறிய மெய்யாகிய சினையும் கெடாது நிற்பச் சினைக்கு இனமான இன ஒற்று மிக்கு முடியும்' என உரை காணலே நேரிதாகும். அவ்வாறு கொள்ளாக்கால், நூற்று மூன்று, நூற்று நான்கு என்பன முடியுமாறில்லை என்பது தெளிவுறும். எனவே, குற்றியலுகரம் புணர்ச்சியிற் கெடுமென்பது தொல்காப்பியருக்குக் கருத்தன்று என்பது போதரும்.

இவ்வாசிரியர், இந்நூற்பாவில், யவ்வரின் இய்யாம் என்றார். தொல்காப்பியர்,

யகரம் வருவழி இகரங் குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்றாது.

என்ற நூற்பாவால் வல்லொற்றிற் கேற்ப அமைந்த ஒலித்துணை உகரம் வருமொழி முதலெழுத்தாகிய யகரத்தின் ஆற்றலால் நீங்க அவ்விடத்தில் யகரத்திற்கேற்ப இகரம் ஒலித்துணையாக அமையும் என்றே கொண்டார் என்பது வெளிப்படை.அவர், 'துவரத் தோன்றாது' என்றதனால், பிற இடங்களில் உயிரேற இடங்கொடுத்து நிற்கும் குற்றியலுகரம் இவ்விடத்தில் மட்டும் இல்லாதே போகும் என்பதே பொருளாயிற்று எனக் கொள்க.

குற்றியலுகரம் கெடும் என்று முதன்முதல் நூற்பா செய்தவர் வீரசோழிய ஆசிரியரே. அவர்,

**ஆவி பின்தோன்றக் கெடும் குற்றுகரம்**

என்றார். நேமிநாத ஆசிரியர்,

குற்றுகரம்ஆவி வரிற்சிதையும் கூறியவல்
லொற்றுமுன் றோன்றுதலும் உண்டாகு–
முற்றோன்று
மென்மையதன் வல்லெழுத்தாம் வேற்கண்ணாய்
முற்றுகரத்
தன்மையும்போம் ஆவியினைச் சார்ந்து.

என்று நூற்பா செய்தார். இவ்விருவர் கொள்கையும் இவ்வாசிரியர் இவ்வாறு விதி வகுத்தற்கு ஆதாரமாயின எனக் கோடல் அமையும். நச்சினார்க்கினியர் இவ்வுண் மையைத் தெளிவுபடுத்துவதற்காக, நாகரிது என்புழி முன்னர்க்குற்றுகரவோசையும், பின்னர் உயிரோசையும் பெற்றுஅவ்விரண்டுங் கூடி நின்றல்லது அப்பொரு ளுணர்த்த லாகாமையின், இஃது உயிரோடுங் கூடி நிற்குமென்றார்' எனக் கூறிய விளக்கவுரை இவண் நோக்கத்தக்கது.

முற்றியலுகரமோ எனின், வருமொழி முதலில் உயிர்வரின் விட்டு ஓடும் அல்லது இடையே உடம்படுமெய் பெற்று ஒத்திசைத்து நிற்கும் அது யகரம்வரத் திரியாது: என்னை,

தன்னொழி மெய்ம்முன் யவ்வரி னிகரந்
துன்னு மென்று துணிநரு முளரே

என்று இவ்வாசிரியரே கூறுகின்றார் ஆதலின், அதனைக் குற்றியலுகரத்தோடு மாட்டேற்றி யுரைத்தமையும் உயிரீற்றுப் புணரியலில் குற்றியலுகரப் புணர்ச்சியை அடக்கினமையும் முதனூலோடு மாறுகொளக் கூறலேயாம் என அறிக.

நச்சினார்க்கினியர், 'குற்றியலுகரத்திற்கு முன்னர் வந்த உயிரேறி முடிய அரை மாத்திரையாய் நிற்றலும், முற்றிய லுகரத்திற்கு முன்னர் வந்த உயிரேறி முடியாமையும் தம்முள் வேற்றுமை' என்று அவற்றிடை அவர் காட்டியுரைத்த வேற்றுமை மனத்துள் இருத்தத் தக்கது.

164. இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன்
கசதப மிகும்வித வாதன மன்னே.

இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்
கசதப மிகும் வித வாதன மன்னே.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### HARD CONSONANT BEFORE VOWEL

After natural and accidental vowel-finals (the initials) k,c,t and p are **very largely** doubled in all combinations except those which are specified (below).

## ஒப்புமைப் பகுதி

அகர இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யல்வழி கசதப தோன்றின்
தத்தம் ஒத்த ஒற்றிடை மிகுமே

(தொல்.: 204)

வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே

(தொல்.: 217)

ஆகார இறுதி அகர இயற்றே

(தொல்.: 222)

வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே

(தொல்.: 226)

இகர இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை ஆயின் வல்லெழுத்து மிகுமே

(தொல்.: 236)

ஈகார இறுதி ஆகார இயற்றே

(தொல்.: 250)

உகர இறுதி அகர இயற்றே

(தொல்.: 255)

வேற்றுமைக் கண்ணும் அதன் ஓரற்றே

(தொல்.: 260)

ஊகார இறுதி ஆகார இயற்றே

(தொல்.: 265)

வேற்றுமைக் கண்ணும் அதன் ஓரற்றே

(தொல்.: 267)

ஏகார இறுதி ஊகார இயற்றே

(தொல்.: 275)

வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே

(தொல்.: 277)

ஐகார இறுதிப்பெயர் நிலை முன்னர்
வேற்றுமை ஆயின் வல்லெழுத்து மிகுமே

(தொல்.: 281)

ஓகார இறுதி ஏகார இயற்றே

(தொல்.: 290)

வேற்றுமைக் கண்ணும் அதன் ஓரற்றே
.............................................................................

(தொல்.: 293)

ஔகார இறுதிப் பெயர்நிலை முன்னர்
அல்வழி யானும் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத்து மிகுதல் வரைநிலை இன்றே
.............................................................................

(தொல்.: 296:1–3)

வாய்ந்த உயிர்ப்பின் வருமெழுத்தின் வர்க்கத்தொற்
றேய்ந்து புகுதும்.........................

(நேமி.: 16 : 1–2)

............................ எய்தும் ஆவியின் பின்
ஆற்றுந் திறல்வல் லினம்வந் திடிலவற் றின் வருக்கம்
போற்றும் .......................

(வீர.: 20:2–4)

இயல்பினும் விதியினு நின்ற உயிர்முன்
வல்லெழுத் தியையி னவ்வெழுத்து மிகுமே

(இ.வி.: 82)

## மயிலை நாதர்

**எ—ன்,** உயிரீற்றின்முன் வல்லினம் புணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.:—** இயல்பினானும் ஆக்கப்பாட்டினானும் நின்ற உயிரின்முன் கசதபக்களை முதலாகவுடைய மொழிகள் வந்தால் அவை மிக்கு முடியும்; பெரும்பாலும் விதந்து சொல்லாதன, எ — று.

விதியினு மென்பது, அகர முதலாக இடையே விதிக்கப் படுவனவும், ஒற்றீறொழிந்து உயிரீறாய் நிற்பனவுமாம். விதத்தலாவது, இன்னது இன்னவிடத்து இன்னதாமென எடுத்து [1]விதித்தல். உயிரொருமையாற் குற்றுகரமும் உருபுயிரும் ஈண்டே அடங்குமெனக் கொள்க. ஈண்டும் பொதுப்பட வைத்தமையான் இருவழியும் கொள்க.

**வ—று.:—**

மகக்குறிது, விளக்குறிது, (மக, விள) + (சிறிது, தீது, பெரிது) எனவும்; (மக, விள) + (குறுமை, சிறுமை, தீமை, பெருமை) எனவும்; இயல்பகர வீற்றுப் பெயர்ப்பத முன் இருவழியும் கசதபக்கள் மிக்கன. உணக்கொண்டான், தரக்கொண்டான், சாவக் கொண்டான், (உண, தர, சாவ) + (சென்றான், தந்தான், போயினான்) என இயல்பகர வீற்று வினைப்பத முன் அல்வழியில் மிக்கன. கொள்ளெனக் கொண்டான், ஆங்கக் கொண்டான், புலிபோலக் கொண்டான், (கொள்ளென, ஆங்க, புலிபோல) + (சென்றான், தந்தான், போயினான்) என இயல்பகர வீற்று இடைப்பத முன் மிக்கன. தடக்கை, வயக்களிறு, குழக்கன்று என இயல்பகர வீற்று உரிப்பத முன் மிக்கன. தாழக்கோல், தமிழ்ப்பல்லவதரையரென அகரச் சாரியை பெற்ற விதி அகரவீற்றுப் பெயராயவற்றின் முன் இருவழியும் மிக்கன. வட்டக்கடல், (வட்டம்) + (சுனை, தாழி, பாறை) என ஈற்று மகரம் கெட்டு விதி அகர வீற்றுப் பெயராயதன் முன் மிக்கன.

இயல்புயிரும் விதியுயிருமாகிய ஏனைய ஈற்றையும் இவ்வாறே அறிந்து முடிக்க.

( தாரா, மூங்கா, யா, கா) + (கடிது, சிறிது, தீது, பெரிது)

---

பாட வேறுபாடு.:—

1. விரித்தல்

எனவும்; (கடுமை, சிறுமை, தீமை, பெருமை) எனவும் இயல்பு ஆகார வீற்றுப் பெயர்ப்பதமுன் இருவழியும் மிக்கன. (உண்ணா, தின்னா) + (கொண்டான், சென்றான், தந்தான், போயினான்) எனவும்; உண்ணாக்கொற்றன், (உண்ணா) + (சாத்தன், தேவன், பூதன்) எனவும் ஆகார வீற்று வினைப்பத முன் மிக்கன.

**“உயிருறுப் புயிர்மெய் தனிநிலை யெனாஅக் குறினெடி லளபெடை மூவினமெனாஅ”**

என ஆகார வீற்றிடைப்பத முன் ககரம் மிக்கது. (உசா, உயா, வயா) + (கடிது, சிறிது, தீது, பெரிது) எனவும்; (கடுமை, சிறுமை, தீமை, பெருமை) எனவும் ஆகார வீற்று உரிப்பத முன் இருவழியும் மிக்கன.

கிளிக்கால், (கிளி) + (சிறகு, தலை, புறம்) என இகர வீற்றுப் பெயர்ப்பத முன் வேற்றுமைக்கண் மிக்கன. (ஓடி, ஆடி, பாடி) + (கொண்டான், சென்றான், தந்தான், போயினான்) என இகர வீற்று வினைப்பத முன் மிக்கன. (இனி, அணி) + (கொண்டான், சென்றான், தந்தான் போயினான்) எனக் காலமும் இடமும் காட்டும் இகர வீற்று இடைப்பத முன் மிக்கன. கடிக்கமலம், (கடி) + (சரோருகம், தாமரை, பங்கயம்) என இகர வீற்று உரிப்பத முன் மிக்கன. ஊர்வழிக் கொண்டான், (ஊர்வழி) + (சென்றான், தந்தான், போயினான்) என இகரவீற்று உருபுப்பத முன் மிக்கன.

ஈக்குறிது, (ஈ) + (சிறிது, தீது, பெரிது) எனவும்; (கால், சிறை, தலை, புறம்) எனவும் ஈகார வீற்று ஓரெழுத்துப் பெயர்ப்பதமுன் இருவழியும் மிக்கன. (தழீஇ, நிறீஇ) + (கொண்டான், சென்றான், தந்தான், போயினான்) என ஈகார வீற்று வினைப்பதமுன் மிக்கன. மீக்கொள்க, மீச்செல், மீத்தா, மீப்போ என ஈகார வீற்று இடைப்பதமுன் மிக்கன. தீக்கதி, (தீ) + (சிறை, தொழில், புலன்) என ஈகார ஈற்று உரிப்பதமுன் மிக்கன.

கடுக்குறிது, (கடு) + (சிறிது, தீது, பெரிது) எனவும்; (காய், [1]செதிள், தோல், பூ) எனவும், உகர வீற்றுப் பெயர்ப்பதமுன் இருவழியும் மிக்கன. (அடித்து, பிடித்து) + (கொண்டான், சென்றான், தந்தான், போயினான்) என உகர வீற்று

பாட **வேறுபாடு.:–**

**1. செதுள்**

வினைப்பத முன் மிக்கன. (மற்று) + (கொள், செல், தா, போ) என உகரவீற்று இடைப்பத முன் மிக்கன. (அதிர்ப்பு) + (கடிது, சிறிது, தீது, பெரிது) என உகரவீற்று உரிப்பதமுன் மிக்கன. (ஊர்க்கு) + (கொண்டான், சென்றான், தந்தான், போயினான்) என உகரவீற்று உருபுப் பதமுன் மிக்கன.

கொண்மூக்கடிது; (கொண்மூ) + (சிறிது, தீது, பெரிது) எனவும், (கடுமை, சிறுமை, தீமை, பெருமை) எனவும் ஊகார வீற்றுப் பெயர்ப்பதமுன் இருவழியும் மிக்கன. உண்ணூக்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் என ஊகாரவீற்று வினைப்பத முன் மிக்கன.

சேக்கடிது; (சே) + (சிறிது, தீது, பெரிது) எனவும், (கடுமை, சிறுமை, தீமை, பெருமை) எனவும் ஏகார வீற்றுப் பெயர்ப்பத முன் இருவழியும் மிக்கன.

யானைக்கோடு; (யானை) + (செவி, தலை, புறம்) என ஐகார வீற்றுப் பெயர்முன் வேற்றுமைக்கண் மிக்கன. ஒல்லைக்கொண்டான், வல்லைக்கொண்டான்; (ஒல்லை, வல்லை) + (சென்றான், தந்தான், போயினான்) என வினையெச்ச வினைச்சொன் முன் மிக்கன. "தில்லைச் சொல்", "கொன்னைச்சொல்" என இடைச்சொன் முன் மிக்கது. பணைத்தோளென உரிப்பத முன் மிக்கது. யானையைக் காத்தான்; சேர்த்தான், தடுத்தான், பிடித்தான் என உருபுப்பத முன் மிக்கன.

நொக்கொற்றா; சாத்தா, தேவா, பூதா என ஒகர வீற்று வினைப்பத முன் மிக்கன.

கோக்கடிது; (கோ) + (சிறிது, தீது, பெரிது) எனவும், (கடுமை, சிறுமை, தீமை, பெருமை) எனவும், ஓகார வீற்றுப்பெயர்ப் பதமுன் இரு வழியும் மிக்கன.

ஔக்கடிது; (ஔ) + (சிறிது, தீது, பெரிது) எனவும், (கடுமை, சிறுமை, தீமை, பெருமை) எனவும் ஔகார வீற்றுப் பெயர்ப்பத முன் இருவழியும் மிக்கன.

கொக்குக்கடிது; (கொக்கு) + (சிறிது, தீது, பெரிது) எனவும், (கடுமை, சிறுமை, தீமை, பெருமை) எனவும் குற்றுகர வீற்றுப் பெயர்ப்பத முன் இருவழியும் மிக்கன. ஈண்டுக் காட்டா தொழிந்தனவும் வந்தவழிக் கண்டு இதுவே நிலனாக முடித்துக்கொள்க.

இதனுள், 'மன்னே' என்ற மிகையானே,

விதவாதவற்றுள்ளும் சிறுபான்மை மிகாதனவும் உளவெனக் கொள்க. அவை: குணகடல், குடகடல், வடகடல், வடகலை, மழகளிறு, குழவிகை, ஏரிகரை, மீகண், "மலைகிழவோனே", குழந்தைகை, 'என்னை காணுமாறு' என்றற் றொடக்கத்தன. பிறவும் வருவன வெல்லாம் இதுவே விதியாக முடிக்க.

## சங்கர நமச்சிவாயர்

## சிவஞான முனிவர்

**எ—னின்**, உயிரீற்றின் முன் வல்லினம் புணருமாறு உணர்த்துவான் தொடங்கி உயர்திணைப்பெயர் பொதுப்பெயர்க்கு *ம்'ஆவி யரமுன் வன்மை மிகா' ம்* என எய்தியதன் மேல் சிறப்பு விதியும், அஃறிணைப் பெயர்க்கும் வினை முதலியவற்றிற்கும் எய்தாதது எய்துவித்தலும் **உணர் – ற்று.**

**இ – ள்.:–** இயல்பினானும் விதியினானும் இறுதியாக நின்ற உயிர்களின் முன்னர் வரும் க ச த பக்கள் பெரும்பாலும் மிகும், விதந்து சொல்லாதன, **எ—று.**

விதி ஈறாவன: முன்னைய உயிரீறும் மெய்யீறும் ஒழிய உயிரீறாய் நிற்பனவும், யாதானும் ஒருயிர் பின்னர் இறுதிக்கண் தோன்றி நிற்பனவுமாம். விதப்பாவன சிறப்புவிதி.

**உ – ம்.: –**

ஆடூஉக் குறியன், சிறியன், தீயன், பெரியன்; நம்பிக்கொற்றன் எனவும், சாத்திப்பெண் எனவும், தாராக்கடிது எனவும், ஒற்றைக்கை, வட்டக்கல், தாழக்கோல் எனவும் மூவகைப் பெயர்ப்பத முன் அல்வழியில் மிக்கன. இவற்றுள் ஒற்றை, வட்ட, தாழ என்பன விதி ஈறு. ஆடூஉக்கை, செவி, தலை, புறம்; எட்டிப்பூ, காவிதிப்பூ, நம்பிப்பூ எனவும்; விளக்கோடு, கடுக்காய் ஆட்டுக்கால் எனவும் உயர்திணை அஃறிணைப் பெயர்ப்பத முன் வேற்றுமைக்கண் மிக்கன. ஆடிக் கொண்டான், ஆடாக்கொண்டான், ஆடூஉக்கொண்டான், ஆடெனக் கொண்டான், ஆடக்கொண்டான், உண்பாக்குச் சொன்றான், பூத்துக் காய்த்தது, பொள்ளெனப் பரந்தது, சாலப் பகைத்தது எனவும்; இருளின்றிக் கண்டார், பொருளன்றிக் காணார் எனவும் பலவகைத் தெரிநிலை குறிப்பாய வினையெச்சங்கள் முன் மிக்கன. மற்றைச்சாதி

எனவும், கடிக்கமலம் எனவும், சொன்றிக் குழிசி எனவும், கங்கைச்சடை எனவும் இடைச்சொல் உரிச்சொல் திசைச்சொல் வடசொல் முன் மிக்கன. பிறவும் அன்ன.

விதவாதன பெரும்பாலும் மிகும் எனவே, விதந்தன சிறுபான்மை மிகும் எனவும், விதவாதன சிறுபான்மை மிகா எனவும் கூறினாராயிற்று. அவை வருமாறு:– நொக்கொற்றா, துக்கொற்றா, சாத்தா, தேவா, பூதா என்பன 'ஏவல்முன் வல்லினம் இயல்பொடு விகற்பே' என்று முற்கூறிய விதப்புவிதி பெறாது மிகுந்தன. எனவே, நொ து முன் மூவினமும் மிகும் என்றாராயிற்று. ஏரி கரை, குழந்தை கை, குழவி கை, "பழமுதிர்சோலை மலைகிழவோனே" எனவும்; கூப்புகரம், ஈட்டுதனம், நாட்டுபுகழ் எனவும் இருவழியும் பின் விதவாதன மிகாவாயின. பிறவும் அன்ன.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** உயிரீற்றின் முன் வல்லினம் புணருமாறு கூறியது.

**இ–ள்.:–** **இயல்பினும் விதியினும்** – இயல்பினாலும் ஆக்கப்பாட்டினாலும், **நின்ற உயிர் முன்** – நிலைமொழி ஈறாக நின்ற உயிர்முன், **க ச த ப மிகும்** – வருமொழி முதலாக வந்த கசதபக்கள் மிக்கு முடியும், **விதவாதன மன்னே** – பெரும்பாலும் எடுத்து விரிக்கப்படாத சொற்களுக் கெல்லாம், **எ–று.**

**உ–ம்.:–**

மக, விள, நுண், அத, மூங்கா, தாரா, யா, கிளி, புலி, நரி, ஈ, தீ, கடு, தழு, கொண்மூ, ஏஎ, சே, சோ, கோ, கௌ, கொக்கு என நிறுத்தி; கடிது, சிறிது, தீது, பெரிது எனவும்; கடுமை, சிறுமை, தீமை, பெருமை எனவும் வருவித்து இயல்பாக நிற்கும் உயிரீற்றுப் பெயர்ப் பத முன் இருவழியும் மிக்கவாறு காண்க. யானைக்கால், யானைச்செவி, யானைத்தலை, யானைப்புறம் என ஐகார வீற்றுப் பெயர் வேற்றுமைப் புணர்ச்சிக்கண் மிக்கன. உண், தா, சால், உண்ணா, தின்னா, ஓடி, ஆடி, பாடி, தழீஇ, நிறீஇ, அடித்து, பிடித்து, உண்ணு, ஒல்லை, வல்லை என நிறுத்தி, கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என வருவித்து இயல்பாய் நின்ற உயிரீற்று வினையெச்சத்தின் முன் வந்த வல்லினம் மிக்கவாறு காண்க. உண்ணா

தின்னா என நிறுத்தி, சாத்தன், கொற்றன், தேவன், பூதன் என வருவித்து ஆகாரவீற்று எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன் வல்லினம் மிக்கவாறு காண்க. நொ, து என நிறுத்தி கொற்றா, சாத்தா, தேவா, பூதா என வருவித்து இவ்விரண்டீற்று வினைச்சொல் முன் வல்லினம் மிக்கவாறு காண்க. கொள்ளோ, ஆங்க, புலி போல், மூவினமெனா, தனிநிலையெனா, அணி பெற்று என நிறுத்தி, கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என வருவித்து உயிர் ஈற்று இடைப்பத முன் மிக்கவாறு காண்க.

ஏஎக் கொற்றா, ஓஒக் கொற்றா என எகர ஒகர ஈற்று முன்னிலை யிடைச்சொல் மிக்கது காண்க. தில்லைச்சொல், கொன்னைச் சொல்லென ஐகார வீற்று இடைச்சொல் மிகக் காண்க. தடக்கை, தவக் கொண்டான், வயக்களிறு, குழக்கன்று எனவும் இயல்பாகா உரிச்சொல் வீற்று முன் மிக்கன. உசா, வயா என நிறுத்தி, கடிது, சிறிது, தீது, பெரிது எனவும் கடுமை, சிறுமை, தீமை, பெருமை எனவும் வருவித்து இயல்பாய் நின்ற ஆகார வீற்றுப் பதமுன் மிக்கவாறு காண்க. கடிக்கமலம், செண்பகம், தாமரை, பங்கயம் என இகர வீற்றுப் பதமுன் மிக்கன. தீக் கதி, சிறை, தொழில், புலன் என ஈகார வீற்று உரிப்பத முன் மிக்கன. அதிர்ப்பு என நிறுத்தி, கடிது, சிறிது, தீது, பெரிது எனவும் கடுமை, சிறுமை, தீமை, பெருமை எனவும் வருவித்து உகர வீற்றுப் பதமுன் இருவழியும் மிக்கவாறு காண்க. பணைத்தோள் என ஐகார வீற்றுப் பதமுன் மிக்கது. வட்டக்கடல், சுனை, தாழி, பானை என ஈற்று மகாரம் கெட்டு விதி யகர வீற்றுப் பெயராய் இவை முன் வந்த வல்லினம் மிக்கன. தாழக்கோல், தமிழ்ப் பல்லவதரையர் என ஈற்று மெய்மேல் அகரச் சாரியை பெற்று விதி அகர வீற்றுப் பெயராய் அவற்றின்முன் இரு வழியும் அடைவே மிக்கன. இயல்புயிரும் விதியுயிரும் இவ்வாறே. ஒழிந்த வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொற்கும் அறிந்து முடிக்க.

ஊர்வழிக் கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என இகர வீற்றுருபுப் பதமுன் மிக்கன. ஊர்க்குக் கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என உகர வீற்றுருபுப் பதமுன் மிக்கன. யானையைக் காத்தான், செகுத்தான், தடுத்தான், பிடித்தான் என ஐகார வீற்றுருபுப் பத முன் மிக்கன. ஈண்டுக் காட்டாதனவும் வந்த வழிக்

கண்டு இதுவே நிலனாக முடித்துக் கொள்க.

இதனுள் "மன்னே"யென்ற மிகையானே விதவாத வற்றுள்ளும் சிறுபான்மை மிகாதனவும் உளவெனக் கொள்க. அவை குணகடல், குடகடல், வடதலை, மழகளிறு, குழவிகை, ஏரிகரை, மீகண், "மலை கிழவோனே" (திமுருகு. 317), குழந்தைகை, என்னை காணுமாதோ என வருவனவும் எல்லாம் இதுவே விதியாக முடிக்க.

## விசாகப் பெருமாளையர்

இது உயிரீற்று முன் வல்லினம் புணருமாறு அறிவிக்கத் தொடங்கி உயர்திணைப் பெயர் பொதுப்பெயர்க்கு "ஆவியர முன் வன்மைமிகா" என எய்தியதன் மேற் சிறப்பு விதியும், அஃறிணைப் பெயர்க்கும் வினை முதலியவைகளுக்கும் எய்தாத தெய்து வித்தலுஞ் சொல்லுகின்றது.

**இ–ள்.:– இயல்பினும்** – இயல்பினாலும், **விதியினும்** – விதியினாலும், **நின்ற** – இறுதியாக நின்ற, **உயிர்முன்** – உயிர்களின் முன், **கசதப** – வருகிற கசதபக்கள், **மிகுமன்** – பெரும்பாலு மிகும், **விதவாதன** – சிறப்பு விதியிற் சொல்லாதவைகள், **எ–று.**

ஆடூஉக்குறியன், நம்பிக்கொற்றன், சாத்திப்பெண், தாராக்கடிது, ஒற்றைக்கை, வட்டக்கடல், தாழக்கோல் எனவும், ஆடூஉக்கை, நம்பிப்பூ, கடுங்காய், ஆட்டுக்கால் எனப் பெயர்களின் முன் இருவழியிலும் வல்லெழுத்து மிகுந்தன. ஆடிக்கொண்டான், ஆடாக்கொண்டான், ஆடுக்கொண்டான், ஆடெனக் கொண்டான், ஆடக் கொண்டான், உண்பாக்குச்சென்றான், பூத்துக் காய்த்தது, பொள்ளெனப்பரந்தது, சாலப்பகைத்தது எனவும், இருளின்றிக் கண்டார் எனவும் வினையெச்சங்களின் முன் மிக்கன. மற்றைச்சாதி என இடைச்சொன் முன்னும், கடிக்கமலம் என உரிச்சொன் முன்னும், சொன்றிக் குழிசி எனத் திசைச்சொன் முன்னும், கங்கைச்சடை என வடசொன் முன்னும் வலி மிக்கன. (விதிவாதன பெரும்பாலு மிகு மெனவே விதந்தன சிறுபான்மை மிகு மெனவும், விதவாதன சிறுபான்மை மிகாவெனவுங் கூறியதாயிற்று)

**உ–ம்.:–**

நொக்கொற்றா, துக்கொற்றா, ஏவன் முன் வல்லின மியல்பொடு விகற்பே, எனச் சொல்லிய சிறப்புவிதி பெறாமல்

வல்லெழுத்து மிக்கன. / ஏரிகரை, குழந்தைகை, "பழமுதிர்சோலை மலைகிழவோனே" கூப்புகரம் , நாட்டுபுகழ் என விதவாதன மிகா வாயின.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

உயிரீற்றுச் சொன்முன்னே வன்கணம் புணருமாறு தொகுத்துக் கூறும் சூத்திரம் யாது?

இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன்
க ச த ப மிகும்வித வாதன மன்னே.

(இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் க ச த ப மிகும்; விதவாதன மன்னே)

**இ–ள்.:– இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்** –இயல்பினாலும் விதியினாலும் இறுதியாக நின்ற உயிர்களின்முன், **க ச த ப மிகும் விதவாதமன்** – வருங் க ச த பக்கள் பெரும்பாலும் மிகும் பின் சிறப்புவிதியிற் சொல்லாதவைகளுள், **எ–று.**

இங்கே இயல்பீறாவது யாது?

"முன்னே "ஆவி ஞ ண ந ம ய ன ர ல வ ழ ள மெய் சாயுமுகர நாலாறு மீறே" என்ற சூத்திரத்தாற் கூறப் பட்ட மொழிக் கியல்பாகவுள்ள இருபத்து நான்கீற்றினுள் உயிரீறு"

விதியீறாவது யாது?

புணர்ச்சியின் பொருட்டு ஒற்றீறொழித்து உயிரீறாகியேனும் ஒற்றீற்றின்மேல் வந்து உயிரீறாகியேனும் நிற்கும் உயிரீறு. அது வட்டக்கல் என்பதில் வட்டம் என்பது வட்டவெனவும் தமிழப் பிள்ளை யென்பதில் தமிழ எனவும் நிற்பது போல்வது.

இச்சூத்திரவிதி அல்வழிக்கா வேற்றுமைக்கா?

"விதவாமையின் இரண்டுக்குமாம்"

**உ–ம்.:–**

**(1)**ஆடூஉக்குறியன், நம்பிக்கொற்றன் எனவும், ஆடூஉக்கை செட்டித்தெரு எனவும், உயர்திணைப் பெயர்முன் இரு வழியும் வல்லெழுத்து மிக்கன. சாத்திப்பெண் எனப்பொதுப்பெயர் முன் அல்வழியில் வல்லெழுத்து மிக்கது. தீக்கடிது, விளக்குறிது, தராக்கடிது, தீப்பெரிது, வடுத்தீது, கொக்குக் கடிது, கொண்மூக்கரிது, சேச்சிறிது,

சேப்பெரிது எனவும் ஒன்றைக்கை, வட்டக்கல், தாழக்கோல் எனவும், அஃறிணைப் பெயர் முன் அல்வழியில் வல்லெழுத்து மிக்கன. இவற்றுள், ஒற்றை, வட்ட, தாழ என்பன விதியீறு. விளக்கோடு, பலாக்காய், கிளிச்சிறை, தீக்கடுமை, கடுக்காய், கொக்குக்கால், வண்டுக்கால், கொண்மூக்குழாம், சேக்கொம்பு, தினைத்தாள், சோப்பெருமை என அஃறிணைப்பெயர்முன் வேற்றுமையில் வல்லெழுத்து மிக்கன.

(2) ஆடிக்கொண்டான், ஆடாக்கொண்டான், ஆடுஉக் கொண்டான், ஆடெனக்கொண்டான், ஆடக் கொண்டான், உண்பாக்குச் சென்றான், பூத்துக் காய்த்தது. பொள்ளெனப் பரந்தது, சாலப்பகைத்தது எனவும், தெரிநிலைவினையெச்சத்தின் முன்னுங் குறிப்பு வினை யெச்சத்தின் முன்னும் வல்லெழுத்து மிக்கன. கூவிற்றுக்கோழி எனவும், குண்டுகட்டுக்களிறு எனவும், தெரிநிலைவினைமுற்றின் முன்னுங் குறிப்புவினை முற்றின் முன்னும் வல்லெழுத்து மிக்கன.

(3) ஆங்கக் கொண்டான், இனிச்செய்வேன், மற்றைத்தெரு, என இடைச்சொல்லின் முன் வல்வெழுத்து மிக்கன.

(4) தவப்பெரியன், கடிக்கமலம், பணத்தோள், என உரிச்சொல்லின் முன் வல்லெழுத்து மிக்கன.

(5) சொன்றிக்குழிசி, எனத் திசைச்சொன் முன்னும் கங்கைச் சடை என வடசொன் முன்னும் வல்லெழுத்து மிக்கன.

விதவாதன வெனவே முன் விதந்தனவும் இனி விதப்பனவு முளவென்றாயிற்று. அவை யாவை?

அவைமுன் "பொதுப்பெயருயர்திணைப்பெயர்களீற்று... ஆவியரமுன் வன்மைமிகா" என்றவிதியினும், "ஆவி யரழ விறுதிமுன்னிலைவினை ஏவன்முன் வல்லினமியல்பொடு விகற்பே" "என்ற சூத்திரத்தினும் போந்தவைமுன் விதந்தனவாம். இனிவிதப்பன வருஞ் சூத்திரங்களில் வருவன".

விதவாதன பெரும்பாலு மிகும் எனவே, விதந்தன சிறுபான்மை மிகா எனவும் கூறினாராயிற்று, அவை வருமாறு:-

(1) நொக்கொற்றா, துக்கொற்றா, சாத்தா, தேவா, பூதா

என்பன. "ஏவன்முன் வல்லின மியல்பொடு விகற்பே என முற்கூறிய சிறப்புவிதி பெறாது, வல்லெழுத்து மிக்கே வந்தன. எனவே, நொ, து, முன் மூவினமும் மிகு மென்றாராயிற்று.

(2) ஏரிகரை, குழவிகை, குழந்தைகை, "பழமுதிர்சோலை மலைகிழவோனே" எனவும், கூப்புகரம், ஈட்டுதனம் நாட்டுபுகழ் எனவும் முறையே வேற்றுமையிலும் அவ்வழியிலும் பின் விதவாதன மிகாவாயின.

வல்லினம் உயிரீற்றுயர்திணைப்பெயர் பொதுப்பெயர் களுக்கு முன் மிகும் என்றது "ஆவியரமுன் வன்மை மிகா" என எய்தியதன்மேற் சிறப்புவிதி, அஃறிணைப் பெயர்களுக்கு முன்னும் வினை முதலியவைகளுக்கு முன்னும் மிகும் என்றது எய்தாத தெய்துவித்தல்.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** உயிரீற்றின் முன் வல்லினம் புணருமாறு உணர்த்தத் தொடங்கி, உயர்திணைப்பெயர் பொதுப்பெயர்களுக்கு எய்தியதன் மேற் சிறப்பு விதியும், அஃறிணைப் பெயர்க்கும் வினை முதலியவற்றிற்கும் எய்தாதது எய்துவித்தலு முணர்த்திற்று.

**இ–ள்.:–** **இயல்பினும்** – இயற்கையாக வாயினும், **விதியினும்** – செயற்கையாக வாயினும், **நின்ற உயிர்முன்**–நிலைமொழியாக நின்ற உயிரீற்று மொழிகளுக்கு முன்னே, **கசதப மிகும்**–வருங் க ச த ப க்கள் மிக்கு முடியும், **விதவாதன மன்** – பின்பு எடுத்துச் சொல்லாதன வற்றுள்ளே பெரும்பாலும், **எ–று.**

விதப்பு – பின்பு கூறப்படுஞ் சிறப்பு விதி.

**உ–ம்.:–**

ஆடூஉக் குறியன், ஆடூஉச் சிறியன், தீயன், பெரியன்; நம்பிக் கொற்றன் எனவும்; சாத்திப்பெண் எனவும்; தாராக்கடிது எனவும்; ஒற்றைக்கை, வட்டக்கல், தாழக் கோல் எனவும்; முறையே உயர்திணை, விரவுத்திணை, அஃறிணை என்னும் மூவகைப் பெயர்ச்சொல் முன் அல்வழியில் மிக்கன. இவற்றுள் ஒற்றை, வட்ட, தாழ என்பன விதி யீறு. ஆடூஉக்கை, செவி, தலை, புறம், நம்பிப்பூ, காவிதிப்பூ, எட்டிப்பூ எனவும்; விளக்கோடு, கடுக் காய், ஆட்டுக்கால் எனவும்; முறையே உயர்திணை அஃறிணைப் பெயர்ச்சொற்கள் முன் வேற்றுமையில் மிக்கன.

ஆடிக்கொண்டான், ஆடாக்கொண்டான், ஆடூஉக் கொண்டான், ஆடெனக் கொண்டான் ஆடக் கொண்டான், உண்பாக்குச் சென்றான் எனவும்; பூத்துக் காய்த்தது, பொள்ளெனப் பரந்தது, சாலப் பகைத்தது எனவும்; இருளின்றிக் கண்டார், பொருளன்றிக் காணார் எனவும்; பல்வகை வினையெச்சங்களின் முன் மிக்கன. மற்றைச் சாதி எனவும்; கடிக் கமலம் எனவும்; சொன்றிக் குழிசி எனவும்; கங்கைச்சடை எனவும்; இடை உரி திசைவட சொற்களின் முன் முறையே மிக்கன. பிறவுமன்ன.

விதவாதன பெரும்பாலு மிகுமெனவே விதந்தன சிறுபான்மை மிகுமெனவும், விதவாதன சிறுபான்மை மிகாதெனவுங் கூறினாராயிற்று. அவை வருமாறு நொக்கொற்றா, துக்கொற்றா, சாத்தா, தேவா, பூதா என்பன, 'ஏவன்முன் வல்லினமியல் பொடுவிகற்பே' என்ற விதப்பு விதி பெறாமல் மிக்கே வந்தன. ஏரிகரை, குழந்தைகை, குழவிகை, மலைகிழவோன் எனவும், கூப்புகரம், ஈட்டுதனம், நாட்டுபுகழ் எனவும், இருவழியும் பின் விதவாதன சிறுபான்மை மிகாவாயின. மன் என்பது மிகுதிப் பொருள் குறித்த இடைச்சொல்லாதலால், பெரும்பாலுமெனப் பொருளுரைக்கப்பட்டது, கசதப மிகும் என முடிக்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :– விதவாதன – பின் (சிறப்பு விதியிற்) சொல்லாதவைகள், **இயல்பினும்** – இயல்பினாலும், **விதியினும்** – விதியினாலும் **நின்ற** – மொழிக்கீறாக) நின்ற, **உயிர்முன்** – உயிர்களின் முன், **கசதப** – வருமொழி முதலில் வரும்) கசதபக்கள், **மன்** – பெரும்பாலும், மிகும் – இரட்டிக்கும்.

**குறிப்பு :–**

இயல்புயிரீறாவது – ஒரு விதியினாலல்லாமல் இயற்கை யாகவே உயிர் சொல்லுக்கு இறுதியாக நிற்பது. விதியுயிரீறாவது – மொழிக் கிறுதியில் இயற்கையாக நின்ற உயிராவது மெய்யாவது ஓர் விதி பற்றிப் போய் மற்றோர் உயிரீறாக நிற்பது; உ–ம் : விள, பலா முதலியன. மரம் – மர முதலியன.

உதாரணம் :–

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| ஆட + சென்றான் = ஆடச்சென்றான் | வாழைப்பழம் |

விள + குறிது = விளக்குறிது விளக்கிளை

(என இயல்புயிரீற்றின் முன் க ச த பக்கள் மிகுதல் காண்க.)

நேற்றை + கூலி = நேற்றைக்கூலி மரக்கிளை

(என விதியுயிரீற்றின் முன் கசதபக்கள் மிகுதல் காண்க.)

அவை, 'சிறுபான்மை மிகா' எனவும்; சிறப்பு விதியிற் சொல்லாதவை 'பெரும்பாலும் மிகும்' எனவே சிறப்பு விதியில் 'மிகா' என்று சொன்னவை 'சிறுபான்மை மிகும்' எனவும் கூறியதாயிற்று. அவை வருமாறு :-

வேற்றுமை – ஏரிகரை, மலைகிழவோன்.
அல்வலி – கூப்புகரம், நாட்டுபுகழ். இருவழியிலும் பின்விதவாதன மிகாவாயின.

நொக்கொற்றா
துக்கொற்றா "ஏவல்முன் வல்லின மியல்பொடு விகற்பே" என்றசிறப்புவிதி பெறாது மிக்கே வந்தன.

இச்சூத்திரத்தில் க ச த பக்கள் என்றது மேல்வருஞ் சூத்திரங்களில் வேண்டுமிடத்தெல்லாம் கொள்ளப்படும்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்** – இயல்பினாலும் விதியினாலும் இறுதியாக நின்ற உயிர்களின் முன், **க ச த ப மன் மிகும்** – வருங் க ச த பக்கள் பெரும்பாலு மிகும், **விதவாதன**–பின் சிறப்பு விதியிற் சொல்லாதவைகளுள், **எ – று.**

**உ–ம்.:–**

(1) ஆடூஉக்குறியன், நம்பிக்கொற்றன் எனவும். ஆடூஉக்கை, செட்டித்தெரு எனவும், உயர்திணைப் பெயர் முன் இருவழியும் வல்லெழுத்து மிக்கன. சாத்திப்பெண் எனப் பொதுப்பெயர் முன் அல்வழியில் வல்லெழுத்து மிக்கது. விளக்குறிது, தாராக்கடிது, தீப்பெரிது, வடுத்தீது, கொக்குக்கடிது, கொண்மூக்கரிது, சேச்சிறிது, சோப்பெரிது எனவும், ஒற்றைக்கை, வட்டக்கல், தாழக்கோல் எனவும் அஃறிணைப்பெயர் முன் அல்வழியில் வல்லெழுத்து மிக்கன. இவற்றுள், ஒற்றை, வட்ட, தாழ என்பன விதியீறு. விளக்கோடு, பலாக்காய், கிளிச்சிறை, தீக்கடுமை,

கடுக்காய், கொக்குக்கால், வண்டுக்கால், கொண்மூக்குழாம், சேக்கொம்பு, தினைத்தாள், சோப் பெருமை என அஃறிணைப்பெயர் முன் வேற்றுமையில் வல்லெழுத்து மிக்கன.

(2) ஆடிக்கொண்டான், ஆடாக்கொண்டான், ஆடூஉக் கொண்டான், ஆடெனக் கொண்டான், ஆடக்கொண்டான், உண்பாக்குச் சொன்றான், பூத்துக்காய்த்தது, பொள்ளெனப்பரந்தது, சாலப்பகைத்தது எனவும், இருளின்றிக்கண்டார், பொருளன்றிக் காணார் எனவும், தெரிநிலை வினையெச்சத்தின் முன்னுங் குறிப்பு வினையெச்சத்தின் முன்னும் வல்லெழுத்து மிக்கன. கூவிற்றுக் கோழி எனவும், குண்டுகட்டுக்களிறு எனவும், தெரிநிலை வினைமுற்றின் முன்னுங் குறிப்புவினைமுற்றின் முன்னும் வல்லெழுத்து மிக்கன.

(3) ஆங்கக் கொண்டான், இனிச்செய்வேன், மற்றைத் தெரு என இடைச்சொல்லின் முன் வல்லெழுத்து மிக்கன.

(4) தவப்பெரியன், கடிக்கமலம், பணைத்தோள் என உரிச்சொல்லின் முன் வல்லெழுத்து மிக்கன.

(5) சொன்றிக்குழிசி எனத் திசைச்சொன் முன்னும், கங்கைச்சடை என வடசொன் முன்னும் வல்லெழுத்து மிக்கன.

விதவாதன பெரும்பாலு மிகும் எனவே, விதந்தன சிறுபான்மை மிகும் எனவும், விதவாதன சிறுபான்மை மிகா எனவுங் கூறினாராயிற்று அவை வருமாறு:–

(1) நொக்கொற்றா, துக்கொற்றா, சாத்தா, தேவா, பூதா என்பன 'ஏவன்முன் வல்லின மியல்பொடு விகற்பே'' என முற்கூறிய சிறப்புவிதி பெறாது, வல்லெழுத்து மிக்கே வந்தன. எனவே, நொ, து முன் மூவினமும் மிகுமென்றாராயிற்று.

(2) ஏரிகரை, குழவிகை, குழந்தைகை, "பழமுதிர்சோலை மலைகிழவோனே'' எனவும். கூப்புகரம், ஈட்டுதனம், நாட்டுபுகழ் எனவும். முறையே வேற்றுமையிலும் அல்வழியிலும் பின் விதவாதன மிகாவாயின.

வல்லினம் உயிரீற் றுயர்திணைப்பெயர் பொதுப்பெயர் களுக்கு முன் மிகும் என்றது "ஆவி யரமுன் வன்மை மிகா'' என எய்தியதன் மேற் சிறப்பு விதி; அஃறிணைப்

பெயர்களுக்கு முன்னும் வினை முதலியவைகளுக்கு முன்னும் மிகும் என்றது எய்தாத தெய்துவித்தல்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்** – இயல்பினாலும் விதியினாலும் இறுதியாக நின்ற உயிர்களின்முன், **– க ச த ப மன்மிகும் –** வருங் க ச த பக்கள் பெரும்பாலு மிகும், **– விதவாதன** – பின் சிறப்பு விதியிற் சொல்லாதவைகள். **எ–று.**

**உ–ம்.:–**

(1) ஆடூஉக்குறியன், நம்பிக்கொற்றன் எ–ம். ஆடூஉக்கை, செட்டித்தெரு எனவும். உயர்திணைப் பெயரின் முன் இருவழியும் வல்லெழுத்து மிக்கன. சாத்திப் பெண் எனப் பொதுப்பெயரின் முன் அல்வழியில் வல்லெழுத்து மிக்கது. விளக்குறிது, தாராக்கடிது, தீப் பெரிது வடுத்தீது, கொக்குக்கடிது, கெண்மூக்கரிது, சேச்சிறிது, சோப்பெரிது எனவும். ஒற்றைக்கை, வட்டக் கடல், தாழக்கோல் எ–ம். அஃறிணைப்பெயர்முன் அல்வழியில் வல்லெழுத்து மிக்கன. இவற்றுள் விள, ஒற்றை, வட்ட, தாள என்பன விதியீறு. விளக்கோடு, பலாக்காய், கிளிச்சிறை, தீக்கடுமை, கடுக்காய், கொக்குக் கால், வண்டுக்கால், கொண்மூக்குழாம், சேக்கொம்பு, தினைத்தாள், சோப்பெருமை என அஃறிணைப் பெயர்முன் வேற்றுமையில் வல்லெழுத்து மிக்கன.

(2)ஆடிக் கொண்டான், ஆடாக்கொண்டான், ஆடூஉக்கொண்டான், ஆடெனக்கொண்டான், ஆடக் கொண்டான், உண்பாக்குச் சென்றான், பூத்துக்காய்த்தது, பொள்ளெனப் பரந்தது, சாலப்பகைத்தது எனவும். இருளின்றிக்கண்டார், பொருளன்றிக் காணார் எனவும். தெரிநிலை வினையெச்சத்தின் முன்னுங் குறிப்பு வினையெச்சத்தின் முன்னும் வல்லெழுத்து மிக்கன. கூவிற்றுக் கோழி எனவும். குண்டுகட்டுக்களிறு எனவும். தெரிநிலை வினைமுற்றின் முன்னுங் குறிப்புவினை முற்றின் முன்னும் வல்லெழுத்து மிக்கன.

(3)ஆங்கக்கொண்டான், இனிச்செய்வேன், மற்றைத் தெரு, என இடைச் சொல்லின் முன் வல்லெழுத்து மிக்கன.

(4)தவப்பெரியன், கடிக்கமலம், பணைத்தோள் என

உரிச்சொல்லின் முன் வல்லெழுத்து மிக்கன.

(5)சொன்றிக்குழிசி எனத் திசைச்சொன்முன்னும், கங்கைச் சடை என வடசொன் முன்னும் வல்லெழுத்து மிக்கன.

விதவாதன பெரும்பாலு மிகும் எனவே, விதந்தன சிறுபான்மை மிகும் எனவும், விதவாதன சிறுபான்மை மிகா எனவுங் கூறினாராயிற்று. (விதப்பு - சிறப்புவிதி) அவை வருமாறு : -

(1)கொக்கொற்றா, துக்கொற்றா, சாத்தா, தேவா, பூதா என்பன : 'ஏவன்முன்வல்லி னமியல்பொடு விகற்பே' என முற்கூறிய சிறப்பு விதி பெறாது வல்லெழுத்து மிக்கே வந்தன. எனவே நொ, து முன் மூவினமும் மிகுமென் றாராயிற்று.

(2)ஏரிகரை, குழவிகை, குழந்தைகை, "பழமுதிர் சோலைமலை கிழவோனே" எ-ம். கூப்புகரம், ஈட்டுதனம், நாட்டுபுகழ் எ-ம். முறையே வேற்றுமையிலும், அல்வழியிலும் பின் விதவாதன மிகாவாயின.

**விதப்பாவது** :- பொதுவாகத் தொகுத்துரைக்கப் பட்டவைகளிலிருந்து வகுத்தெடுத்து விதிகூறுதல் = சிறப்பு விதி.

வல்லினம் உயிரீற்றுப் பொதுப்பெயர், உயர்திணைப் பெயர்களுக்கு முன்மிகும் என்றது 'ஆவியரமுன் வன்மைமிகா' என எய்தியதன் மேற்சிறப்பு விதி; அஃறிணைப் பெயர்களுக்கு முன்னும், வினை முதலியவைகளுக்கு முன்னும் மிகுமென்றது எய்தாத தெய்துவித்தல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ-ள்.:-**இயல்பினும்**-இயல்பினாலாவது, **விதியினும்**-விதியினாலாவது, **நின்ற**-(மொழிக்கு ஈறாக) நின்ற, **உயிர் முன்**-உயிர்களின் முன், **க ச த ப** - (வருமொழி முதலில் வருகின்ற) க ச த பக்கள், **மன்**-பெரும்பாலும், **மிகும்**-இரட்டிக்கும், **விதவாதன**-(பின்) சிறப்பு விதியிற் சொல்லாதவைகள்; **எ-று.**

இயல்பு உயிரீறாவது-விகாரப்படாமல் இயற்கையாக நின்ற உயிர் சொல்லுக்கு இறுதியாக நிற்பது;

உ–ம்.:–

விள, பலா, மலை முதலியன.

விதி உயிரீறாவது–மொழிக்கு இறுதியில் இயற்கையாக நின்ற உயிராவது மெய்யாவது ஒரு விதி பற்றி நீங்கி மற்றோர் உயிரீறாக நிற்பது;

உ–ம்.:–

ஒன்று – ஒற்றை, மரம் – மர முதலியன. விதி யெனினும், ஆக்கப்பா டெனினும் ஒக்கும்.

விதவாதன – விதந்து சொல்லப்படாதன. விதத்தலாவது – இன்னது இன்னவிடத்து இன்னவாறு ஆமென எடுத்து விதித்தல். அதனை, வருஞ் சூத்திரங்களிற் காண்க.

உ–ம்.:–

| அல்வழி. | வேற்றுமை. |
|---|---|
| ஆட(ச்) சென்றான் | வாழை(ப்)பழம்– இயல்பு உயிரீறு. |
| நேற்றை(ப்)பொழுது | மர (க்) கிளை – விதி உயிரீறு. |

'பின் சிறப்பு விதியிற் சொல்லாதவை பெரும்பாலும் மிகும்' எனவே அவை சிறுபான்மை மிகா என்றும்; பின் சிறப்பு விதியிற் சொல்லாதவை பெரும்பாலும் மிகும்' எனவே, சிறப்பு விதியில் மிகாவென்று சொன்னவை சிறுபான்மை மிகும் என்றும் கூறினாராயிற்று. அவை வருமாறு:–

(1) ஏரிகரை, மலைகிழவோன்– வேற்றுமை

கூப்புகரம், நாட்டுபுகழ் – அல்வழி. – பின் சிறப்பு விதியில்லாதவைஇருவழியிலும் மிகாவாயின.

(2) நொ (க்) கொற்றா

து (க்) கொற்றா – "ஏவல்முன் வல்லினமியல் பொடுவிகற்பே" எனச் சொன்ன சிறப்புவிதி பெறாமல் மிக்கே வந்தன.

இச் சூத்திரத்து 'க ச த ப' என்றதை, மேல் வருஞ் சிறப்புவிதிச் சூத்திரங்களில் வேண்டுமிடத் தெல்லாம் கூட்டிக் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள்.:— இயல்பீனும் விதியினும் நின்ற உயிர்முன் —** இயல்பினாலும் விதியானலும் (மொழிக்கு) இறுதியாக நிற் உயிர்களின் முன், **க ச த ப மன் மிகும்** — வருங் க ச த பக்கள் பெரும்பாலும் மிகும், **வித வாதன** — பின் சிறப்பு விதியிற் சொல்லாதவைகளுள். எ—று.

இயல்பினால் நின்ற உயிரீற்று மொழிகளாவன— விள, பலா, மா என்பன போல இயற்கையாக நின்ற உயிரீற்று மொரிகள். விதியினால் நின்ற உயிரிற்று மொழிகளாவன — இயற்கையாக இறுதியில் நின்ற உயிராவது மெய்யாவது ஒரு விதி பற்றி நீங்கி மற்றோர் உயிரீறாக நின்கும் மொழிகள்.

**உ—ம்.:—**

**அல்வழி**

ஆடூஉ + குறியன் = ஆடூஉக் குறியுன், நம்பி + கொற்றன் = நம்பிக் கொற்றன் (உயர்திணை). சாத்தி + பெண் = சாத்திப் பெய் (பொது) தாரா + கடிது = தாராக்கடிது (அஃறிணை) — என இயல்பீற்றிலும், ஒற்றை + கை = ஒற்றைக்கை. வட்ட + கல் = வட்டக்கல் — என விதியீற்றிலும் வன்மை மிக்கன.

**வேற்றுமை**

நம்பி +பூ = நம்பிப்பூ (உயர்திணை.) வாழை + பழம் = வாழைப்பழம் (அஃறிணை). — என இயல்பீற்றிலும், விள + கோடு = விளக்கோடு. கடு+ காய் = கடுக்காய் என விதியீற்றிலும் வன்மை மிக்கன.

ஆடி+ கொண்டான் = ஆடிக்கொண்டான், ஆடா கொண்டான் = ஆடாக்கொண்டான், உண்பாக்கு + சென்றான் = உண்பாக்குச் சொனற்றான், பூத்து + காய்ததது = பூத்துக் காய்ததது, சால + பகைத்தது = சாலப்பகைத்தது எனப் பல்வகை வினையெச்சங்களின் முன்னும்; மற்றை + சாதி = மற்றைச் சாதி, கடி + கமலம் = கடிக்கமலம், சொன்றி + குழிசி = சொன்றிக் குழிசி, கங்கை + சடை = கங்கைச் சடை என முறையே இடை உரி திசை வடசொற்களின் முன்னும் வன்மை மிக்கன. பிறவுமன்ன.

விதவாதன பெரும்பாலும் மிகும் எனவே, (1) விதந்தன சிறுபான்மை மிகும் எனவும், (2) விதவாதன சிறுபான்மை மிகா எனவுங் கூறினாராயிற்று. அவை வருமாறு:—

(1) நொ + கொற்றா = நொக்கொற்றா. து + கொற்றா = துககொற்றா. என்பன, ஏவல்முன் வல்லினம் இயல்பொடு விகற்பே (ச—161) என முற்கூறிய சிறப்பு விதி பெறாது மிக்கே வந்தன. எனவே, நொது முன் மூவினமும் மிகும்

என்றாராயிற்று. இடையினமும் மெல்லினமும் மிகுதல் 158 ஆம் சூத்திரத்தாற் பெறப்பட்டது.

(2) ஏரி + கரை = ஏரிகரை. மலை + கிழவோன் = மலைகிழவோன். கூப்பு + கரம் = கூப்புகரம். நாட்டு + புகழ் = நாட்டுபுகழ். என முறையே வேற்றுமையிலும் அல்வழியிலும் பின் விதவாதன மிகாவாயின.

வல்லினம் உயிரீற்றுயர்திணைப் பெயர் பொதுப்பெயர் களுக்கு முன் மிகும் என்றது "ஆவியரமுன் வன்மை மிகா" (சூ–158) என 'எய்தியதன்மேற் சிறப்புவிதி'. அஃறிணைப் பெயர்களுக்கு முன்னும் வினை முதலியவை களுக்கு முன்னும் மிகும் என்றது 'எய்தாததெய்துவித்தல்'.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள்.:–** **இயல்பினும்** – இயல்வினாலும், **விதியினும்** – விதியினாலும், **நின்ற** – (இறுதியாக) நின்ற, **உயிர்முன்** – உயிர்களின் முன், **க ச த ப** – (வருகிற) கசதபக்கள், **விதவாதன** – (சிறப்பு விதியிற்) சொல்லாதவைகள், **மிகும் மன்** – பெரும்பாலும் மிகும். எ–று.

**பொ–ரை.:–** இயல்பினாலும் விதியினாலும் இறுதியாக நின்ற உயிர்களின் பின்வரும் கசதபக்கள், சிறப்புவிதியிற் சொல்லாதவைகள் பெரும்பாலும் மிகும்.

**உ–ம்.:–**

**அல்வழி**

ஆடூஉ+குறியன் = ஆடூஉக்குறியன்.

நம்பி+கொற்றன்= நம்பிக் கொற்றன்.– உயர்திணைப்பெயர்.

சாத்தி + பெண் = சாத்திப் பெண். – பொதுப்பெயர்.

தாரா + கடிது = தாராக்கடிது,

ஒற்றை + கை = ஒற்றைக்கை,

வட்ட + கால் = வட்டக்கால்,

தாழ் + கோல் = தாழக்கோல்– அஃறிணைப்பெயர்.

**வேற்றுமை**

ஆடூஉ + கை = ஆடூஉக்கை. – உயர்திணைப் பெயர்.

நம்பி + பூ = நம்பிப்பூ.

கடு + காய் = கடுக்காய். – அஃறிணைப்பெயர்.

ஆடு + கால் = ஆட்டுக்கால்.

எனப் பெயர்களின் முன் இருவழியிலும் வல்லெழுத்து மிகந்தன.

ஆடி + கொண்டான் = ஆடிக்கொண்டான்.

ஆடா + கொண்டான் = ஆடாக்கொண்டான்.

ஆடூஉ + கொண்டான் = ஆடூஉக்கொண்டான்.

ஆடெனை + கொண்டான் = ஆடெனக்கொண்டான்.

ஆட + கொண்டான் = ஆடக்கொண்டான்.

உண்பாக்கு + சென்றான் = உண்பாக்குச்சென்றான்.

பூத்து + காய்த்தது = பூத்துக்காய்த்தது.

பொள்ளென + பறந்தது = பொள்ளெனப்பறந்தது.

சால + பகைத்தது = சாலப்பகைத்தது.

இருளின்றி + கண்டார் = இருளின்றிக் கண்டார்.

என எச்சங்களின் முன் வலி மிக்கன.

மற்றை + சாதி = மற்றைச்சாதி. – இடைச்சொல்.

இனி + செய்வேன் = இனிச்செய்வேன்.

நடி + கமலம் = கடிக்கமலம் – உரிச்சொல்.

சென்றி + குழிசி = சொன்றிக்குழுசி. – திசைச்சொல்

கங்கை + சடை = கங்கைச்சடை – வடசொல்.

என இடைச்சொல் முதலிய சொற்களின் முன் வலிமிக்கன.

விதவாதன பெரும்பாலும் மிகமெனவே, விதந்தன சிறுபான்மை மிகுமெனவும், விதவாதன சிறுபான்மை மிகாவெனவுங் கூறியதாயிற்று.

உ–ம்:–

நொ+நொற்றா = நொக்கொற்றா.

து + கொற்றா = துக்கொற்றா.

"ஏவல் முன் வல்லின மியல்பொடு விகற்பே" எனச் சொல்லிய சிறப்புவிதி பெறாமல் வல்லெழுத்து மிக்கன.

| **வேற்றுமை** | **அல்வழி** |
|---|---|
| ஏரிகரை. | கூப்புகரம். |
| குழவிகை. | நாட்டுபுகழ். |
| குழந்தைகை. | |
| மலைகிழவோனே. | |

என விதவாதன இருவழியிலும் மிகாவாயின.

இயல்பு உயிரீறாவது:– விகாரப்படாமல் இயற்கையாக நின்ற உயிர், சொல்லுக்கு இறுதியாக நிற்பது.

உ–ம்.:–

விள, பலா, மலை முதலியன.

விதி உயிரீறாவது:– மொழிக்கு இறுதியில் இயற்கையாக நின்ற உயிராவது மெய்யாவது ஒருவிதி பற்றி நீங்கி மற்றோர் உயிரீறாக நிற்பது.

உ–ம்.:–

ஒன்று – ஒற்றை, மரம் – மர முதலியன.

விதி யெனினும், ஆக்கப்பாடெனினும் ஒக்கும். விதந்தன முன் விதந்தன. (விதத்தலாவது – இன்னது இன்ன விடத்து இன்னவாறு ஆகுமென எடுத்து விதித்தல். அதனை வருஞ் சூத்திரங்களிற் காண்க.) விதவாதன – பின் விதவாதன. (எடுத்துச் சொல்லப்படாதன.) 'மன்' என்றது மிகை என்னும் நியாயம். இச் சூத்திரத்தில் க ச த ப என்றதை, மேல்வருஞ் சிறப்புவிதிச் சூத்திரங்களில் வேண்டுமிடத்தெல்லாங் கூட்டிக்கொள்க.

## கா.நமச்சிவாய முதலியார்

**விதவாதன** – சிறப்பு விதியிற் சொல்லாதவைகளுள், **இயல்பினும்** – இயல்பினாலும், **விதியினும்** – விதியினாலும், **நின்ற** – இறுதியாக நின்ற, **உயிர்முன்** – உயிர்களின் முன், **கசதப** – வருகிற ககர சகர தகர பகரங்கள், **மன்மிகும்** – பெரும்பாலும் மிகும்.

இயல்பீறாவது, ஒருமொழியின் இறுதியில் இயல்பாக உள்ள எழுத்து ஈறாக நிற்பது.

விதியீறாவது, ஒருமொழியின் இறுதியில் இயல்பாக இருந்த எழுத்து ஒரு விதிபற்றிக் கெட்டுப் போக, அம்மொழியில் வேறோர் எழுத்து ஈறாக இருப்பது.

**உதாரணம்**

விள – இயல்பீறு
மர (க்கிளை) – விதியீறு.

மரம் என்பதிலுள்ள மகரமெய் விதி பற்றிக் கெட, அம்மொழி, அகர உயிரீறாகவுளது.

**உதாரணம்:–**

| | | | | |
|---|---|---|---|---|
| நம்பி | + | தெரு | = | நம்பித்தெரு |
| ஆடூஉ | + | கை | = | ஆடூஉக்கை |
| நம்பி | + | கொற்றன் | = | நம்பிக்கொற்றன் |
| ஆடூஉ | + | குறியன் | = | ஆடூஉக்குறியன் |

என உயர்திணைப் பெயர்முன் இருவழியும் வல்லினம் மிகுந்தன.

| | | | | |
|---|---|---|---|---|
| சாத்தி | + | பெண் | = | சாத்திப்பெண் |

எனப் பொதுப்பெயர்முன் அல்வழியில் வல்லினம் மிகுந்தது.

| | | | | |
|---|---|---|---|---|
| விள | + | குறிது | = | விளக்குறிது |
| தாரா | + | கடிது | = | தாராக்கடிது |

| | | | | |
|---|---|---|---|---|
| தீ | + பெரிது | = | தீப்பெரிது | |
| வடு | + தீது | = | வடுத்தீது | |
| கொக்கு | + கடிது | = | கொக்குக்கடிது | |
| கொண்மூ | + கரிது | = | கொண்மூக்கரிது | |
| சே | + சிறிது | = | சேச்சிறிது | |
| சோ | + பொது | = | சோப்பெரிது | |
| ஒற்றை | + கை | = | ஒற்றைக்கை | |
| வட்ட | + கல் | = | வட்டக்கல் | விதியீறு |
| தாழ | + கோல் | = | தாழக்கோல் | |

என அஃறிணைப் பெயர்முன் அல்வழியில் வல்லினம் மிகுந்தன.

| | | | |
|---|---|---|---|
| விள | + கோடு | = | விளக்கோடு |
| பலா | + காய் | = | பலாக்காய் |
| கிளி | + சிறை | = | கிளிச்சிறை |
| தீ | + கடுமை | = | தீக்கடுமை |
| கடு | + காய் | = | கடுக்காய் |
| கொக்கு | + கால் | = | கொக்குக்கால் |
| குரங்கு | + குட்டி | = | குரங்குக்குட்டி |
| கொண்மூ | + குழாம் | = | கொண்மூக்குழாம் |
| சே | + கொம்பு | = | சேக்கொம்பு |
| தினை | + தாள் | = | தினைத்தாள் |
| சோ | + பெருமை | = | சோப்பெருமை |

என அஃறிணைப் பெயர்முன் வேற்றுமையில் வல்லினம் மிகுந்தன.

| | | | |
|---|---|---|---|
| ஆடி | + கொண்டான் | = | ஆடிக்கொண்டான் |
| ஆடா | + கொண்டான் | = | ஆடாக்கொண்டான் |
| ஆடூஉ | + கொண்டான் | = | ஆடூஉக்கொண்டான் |
| ஆடென | + கொண்டான் | = | ஆடெனக்கொண்டான் |
| ஆட | + கொண்டான் | = | ஆடக்கொண்டான் |
| உண்பாக்கு | + சென்றான் | = | உண்பாக்குச்சென்றான் |
| பூத்து | + காய்த்தது | = | பூத்துக்காய்த்தது |
| பொள்ளென | + பரந்தது | = | பொள்ளெனப்பரந்தது |
| சால | + பகைத்தது | = | சாலப்பகைத்தது |

எனத் தெரிநிலை வினையெச்சத்தின்முன் வல்லினம் மிக்கன.

| | | | |
|---|---|---|---|
| இருளின்றி | + கண்டார் | = | இருளின்றிக்கண்டார் |
| பொருளின்றி | + காணார் | = | பொருளின்றிக்காணார் |

எனக் குறிப்பு வினையெச்சத்தின்முன் வல்லினம் மிகுந்தன.

| | | | |
|---|---|---|---|
| கூவிற்று | + கோழி | = | கூவிற்றுக்கோழி |
| நால்வாய்த்து | + களிறு | = | நால்வாய்த்துக்களிறு |

எனத் தெரிநிலை வினைமுற்றின் முன்னும் குறிப்புவினை முற்றின் முன்னும் வல்லினம் மிகுந்தன.

இனி + தருவேன் = இனித்தருவேன்
மற்றை + சாதி = மற்றைச்சாதி

என இடைச் சொல்லின்முன் வல்லினம் மிகுந்தன.

கடி + கமலம் = கடிக்கமலம்
தவ + பெரியன் = தவப்பெரியன்

என உரிச்சொல்லின் முன் வல்லினம் மிகுந்தன.

சொன்றி + குழிசி = சொன்றிக்குழிசி

எனத் திசைச்சொன் முன்னும்,

கங்கை + சடை = கங்கைச்சடை

என வடசொல் முன்னும் வல்லினம் மிகுந்தன.

விதவாதன பெரும்பாலும் மிகும் எனவே, (1) விதந்தன சிறுபான்மை மிகும் எனவும், (2) விதவாதன சிறுபான்மை மிகா எனவும் கூறினராயிற்று.

### உதாரணம்

(1) நொ + கொற்றா = நொக்கொற்றா
+ தேவா = நொத்தேவா
நொ + பூதா = நொப்பூதா
+ சாத்தா = நொச்சாத்தா
து + கொற்றா = துக்கொற்றா
+ சாத்தா = துச்சாத்தா
+ தேவா = துத்தேவா
+ பூதா = துப்பூதா

என்பன, 'ஏவன்முன் வல்லினம் இயல்பொடு விகற்பே' என முற்கூறிய சிறப்பு விதி பெறாது வல்லினம் மிகுந்தேவந்தன.

(2) ஏரி + கரை = ஏரிகரை
குழவி + கை = குழவிகை
குழந்தை + கை = குழந்தைகை
மலை + கிழவோன் = மலைகிழவோன்

எனவும்,

கூப்பு + கரம் = கூப்புகரம்
ஈட்டு + தனம் = ஈட்டுதனம்
நாட்டு + புகழ் = நாட்டுபுகழ்

எனவும் முறையே வேற்றுமையிலும், அல்வழியிலும் பின் விதவாதன மிகாவாயின.

வல்லினம், உயிரீற்று உயர்திணைப் பெயர், பொதுப் பெயர்களுக்கு முன் மிகுமென்றது, **'ஆவியரமுன் வன்மை மிகா'** (சூ–159.) என எய்தியதன்மேற் சிறப்பு விதி. அஃறிணைப் பெயர்களுக்கு முன்னும் வினை முதலியவைகளுக்கு முன்னும் மிகுமென்றது எய்தாதது எய்துவித்தல்.

## மோசசு பொன்னையா

இயல்பினாலும், விதியினாலும் மொழியின் ஈற்றின்கண் நின்ற உயிர்களின் முன்னர் வருமொழி முதற்கண் நிற்கும் கசதபக்கள், (பின்னர்) விதந்து சொல்லப்படாதன பெரும்பாலும் மிகும், **எ–று.**

விதத்தல் – சிறப்பாக எடுத்துக் கூறுதல். புணர்ச்சியில் எழுத்துப்பேறாய் வரும் அகரம் முதலியனவும், ஒற்றீறு ஒழிந்து உயிரீறாய் நிற்பனவும் விதியீறாம்.

**எ–டு.:–**

| **அல்வழி** | **வேற்றுமை** | |
|---|---|---|
| ஆடச்சென்றான் | – வாழைப்பழம் | – இயல்பு உயிரீறு. |
| நேற்றைப் பொழுது | – மரக்கிளை | – விதி உயிரீறு. |

விதவாதன மன் மிகும் என்றதனால், அவை சிறுபான்மை மிகா என்றும், விதந்தவை சிறுபான்மை மிகும் என்றும் கொள்ளப்படும்.

**எ–டு.:–**

ஏரிகரை, குழவிகை, குழந்தைகை, பழமுதிர்சோலை, மலைகிழவோனே – வேற்றுமையில் விதவாதன மிகாவாயின.

கூப்புகரம், ஈட்டுதனம், நாட்டுபுகழ் – அல்வழியில் விதவாதன மிகாவாயின.

நொக்கொற்றா, துக்கொற்றா – 'ஏவல் முன் வல்லினம் இயல்பொடு விகற்பே' என்ற சிறப்பு விதி பெறாது விதந்தவை மிக்கே வந்தன.

உயிரீற்றின் முன்னர் வல்லினம் இரட்டுதல் வேற்றுமைப் புணர்ச்சியிலோ அல்வழிப் புணர்ச்சியிலோ எல்லா இடங்களிலும் வரையறைப்பட்டு நடப்பதில்லை. இதற்கு

வல்லினத்தை உச்சரிக்கும் முறையில் உண்டான தடுமாற்ற நிலையே காரணம் எனலாம். தமிழில் (ம) வல்லொலி (ப) மெல்லொலி என்ற இரு ஒலிகளுக்கும் ஒரே எழுத்து வடிவம் அமைந்துள்ளதால் இந்நிலை ஏற்பட்டது போலும்.

வல்லின முதன்மொழிகள் வருமொழிகளாக வரும் பொழுதே, மிகுதலும் மிகாமையும் இருவழியும் விதியுள் அடங்காது இகந்து நிற்கின்றன. புணரியல் விதிகளிற் பெரும்பாலானவை இவ்வகைப் புணர்ச்சிக்கு விதியமைப்பனவாகவே உள்ளன. அவ்விதிகளால் அடக்கப்படாத விலக்குகளை உரையாசிரியர்கள் முடித்துவைக்க முற்பட்டுள்ளனர்.

(13)

**165. மரப்பெயர் முன்ன ரினமெல் லெழுத்து**
**வரப்பெறு நவுமுள வேற்றுமை வழியே.**

**மரப்பெயர் முன்னர் இன மெல் எழுத்து**
**வரப் பெறுநவும் உள வேற்றுமை வழியே**

marappeyar munnar ina mel eluttu
varap perunavum ula vērrumai valiyē

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Consonant before name of trees

A kindred Nasal is usually inserted in the casual combination of a few tree-names with Hard initials.

## ஒப்புமைப் பகுதி

**மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே**

(தொல்.: 218)

**மெல்லெழுத்து மிகுநவும் வல்லெழுத்து மிகுநவு**
**மம்மிடை வருநவு முறழ்ச்சி யெய்துநவு**
**மென்றொருநால் வகைய மரப்பெய ரன்னவை**
**வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்**

(இ.வி.: 83)

**வலிவரின் மரப்பெயர் மெலிமிகு மென்ப**

(மு.வீ.: 246)

## மயிலை நாதர்

எ—ன், உயிரீற்று மரப்பெயர்கட்கு எய்தியதன் மேற் சிறப்பு விதி உணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.:—** உயிரீற்று மரப் பெயர்களின் முன் மேலைப் பொது விதியால் இருவழியும் வல்லெழுத்து மிகுதலே யன்றி வரும் வல்லெழுத்துக்கு இனமான மெல்லெழுத்து [1]மிகப் பெறுவனவும் சில வுள, வேற்றுமைக்கண், **எ — று.**

**வ — று.:—**

விளங்கோடு, களங்கனி, [2] யாங்கோடு, [3]உதிங்கோடு, சேங்கோடு; (விள, கள, யா, உதி, சே) + ([4]செதிள், தோல், பூ) என வரும். விளக்கோடு, யாக்கோடு; விளக்குறிது, யாக்குறிது என இருவழியும் வல்லெழுத்துப்பேறும் கொள்க. 'பெறுநவும்' என்ற உம்மையால், அத்திக்காய், அகத்திக்காய், [5]ஆத்திக்காய், இறலிக்காய், இலந்தைக்காய் முதலாயின மெல்லெழுத்துப் [6]பெறா வெனக் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ—னின்,** உயிரீற்றுச் சில மரப்பெயர் முன் வரும் வல்லெழுத்திற்கு எய்தியது ஒருவழி விலக்கிப் பிறிதுவிதி, **உணர் — ற்று.**

**இ—ள்.:—** உயிரீற்று [1]மரப்பெயர்கள் முன், மேலைப் பொது விதியான் வல்லெழுத்து மிகாது, வரும் வல்லெழுத்திற்கு இனமான மெல்லெழுத்து மிகப் பெறுவனவும் சில உள வேற்றுமைக்கண், **எ — று.**

பெறுவன என்னும் சொல் பெறுன எனத் தொகுத்தல் விகாரமாயிற்று.

**உ—ம்.:—**

விளங்காய், களங்கனி, மாங்கொம்பு, செதிள், தோல், பழம் என வரும். பிறவும் அன்ன.

இன மெல்லெழுத்தும் என்னாமையின் பொதுவிதியை இக்காட்டு ஏலா என்க.

---

## பாட வேறுபாடு.:—

1. மிகவும் பெறுவன
2. மாங்கோடு
3. திங்கோடு
4. செதுள்
5. ஆரத்திக்காய்
6. (1)பெறாவன்வாமென்க
   (2)பெறாவுமாமென்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், உயிரீற்று மரப்பெயர்கட்கு எய்தியதன் மேற் சிறப்பு விதி கூறியது.

**இ–ள்.: மரப்பெயர் முன்னர்** – உயிரீற்று மரப்பெயர்கண் முன், **இன மெல்லெழுத்து** – மேலைப் பொதுவிதியால் இரு வழியும் வல்லெழுத்து மிகுவதே யன்றி அதற்கினமான மெல்லெழுத்தும், **வரப் பெறுநவுமுள** – மிக்கு வரவும் பெறுவனவும் சில உளவாம், **வேற்றுமை வழியே** – வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக்கண், **எ–று.**

**உ–ம்.:–**

அதங்கோடு, விளங்கோடு, களங்கோடு, யாங்கோடு, ஒதிங்கோடு, செங்கோடு, செதிள், தோல், பூ என வரும் "பெறுநவும்" என்ற உம்மையால் பெறாதிருத்தலே வலியுடைத் தென்க. அவை அத்திக்காய், ஆத்திக்காய், இறளிக்காய், இலந்தைக்காய், வாழைக்காய் எனக் கண்டு கொள்க.

## விசாகப் பெருமாளையர்

இது, உயிரீற்றுச் சில மரப்பெயர் முன் வரும் வல்லெழுத்திற்கு எய்தியது ஒருவழி விலக்கிப் பிறிது விதி யுணர்த்துகின்றது.

**இ–ள்.: மரப்பெயர் முன்னர்** – உயிரீற்றுச் சில மரப் பெயர்களுக்கு முன், **இனமெல்லெழுத்து வர** – முன்சொன்ன பொது விதியால் வருகிற வல்லெழுத்து மிகாமல் அவற்றிற் கினமாகிய மெல்லெழுத்து மிக, **பெறுனவும்** – பெறுவனவும், **வுள** – சில வுளவாம், **வேற்றுமை வழி** – வேற்றுமை வழியில், **எ–று.**

**உ–ம்.:–**

விள+காய் – விளங்காய்.
மா+கொம்பு–மாங்கொம்பு என வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

மேற்கூறிய சூத்திரவிதியில் அடங்காத உயிரீற்றின் முன்வரும் வல்லினப் புணர்ச்சியு முளதா?

மரப்பெயர் முன்ன ரினமெல்லெழுத்து
வரப்பெறு னவுமுள வேற்றுமை வழியே

(மரப் பெயர் முன்னர் இனமெல் எழுத்து
வரப்பெறுனவும் உள வேற்றுமை வழியே)

**இ—ள்.:— மரப்பெயர் முன்னர் —** உயிரீற்றுச் சில மரப்பெயர்களுக்கு முன், **இனமெல் எழுத்து வரப்பெறுனவும் உள**—மேற்கூறிய பொதுவிதியால் வரும் வல்லெழுத்துமிகாது அவற்றிற்கினமாகிய மெல்லெழுத்து மிகப்பெறுவனவுஞ் சிலவுளவாம், **வேற்றுமை வழி** — வேற்றுமைவழியில், **எ—று.**

**உ—ம்.:—**

விள— காய்— விளங்காய், கள—கனி— களங்கனி, மா துளிர்—மாந்துளிர், காயா—பூ—காயாம்பூ எனவரும்.

இது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது ஒருவழி விலக்கிப் பிறிதுவிதிவகுத்தல்.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** உயிரீற்றுச் சில மரப் பெயர்களுக்கு எய்தியது ஒருவழி விலக்கிப் பிறிது விதி கூறுகின்றது.

**இ—ள்.: மரப்பெயர் முன்னர்**—உயிரீற்றுச் சில மரப்பெயர்களின் முன், **இன மெல்லெழுத்து**— (வல்லினம் வந்து புணரின் மேற் கூறிய பொதுவிதியால் இருவழியும் வல்லெழுத்து மிகாமல்) அவற்றிற்கு இனமாகிய மெல்லெழுத்துகள், **வரப் பெறுனவுமுள வேற்றுமை வழி** — மிகப் பெறுவனவுஞ் சில வுளவாம் வேற்றுமைச் சந்தியில், **எ—று.**

**உ—ம்.:—**

விளங்காய், களங்கனி, மாங்கனி, செதிள், தோல், பூ என வரும். பிறவுமன்ன. யாங்கோடு, யாக்கோடு, காயாங்கோடு, காயாக்கோடு, உகரங்கோடு, உகரக்கோடு, செதிள், தோல், பூ என மெல் லெழுத்தும் வல் லெழுத்தும் பெற்று விகற்பித்து வருதலுரையிற் கொள்க. இன மெல்லெழுத்தும் என உம்மை கொடாததினாலே, பொது விதிக்குப் பொருந்தாமை காண்க. வரப் பெறும் புணர்ச்சிகளும் உள என முடிக்க.

## கா. கோபாலாசாரி — தி.கோ.ரங்காசாரி

**உரை :— வேற்றுமைவழி** — வேற்றுமைப் புணர்ச்சியில், **மரம்பெயர் முன்னர்** — (உயிரீற்றுச்சில) மரப்பெயர்களுக்குமுன், **இனம் மெல்லெழுத்து** — (முன்சொன்ன பொதுவிதியால் வருகிற வல்லெழுத்து மிகாமல் அவற்றிற்கு) இனமாகிய மெல்லெழுத்து, **வர பெறுவனமும்** — தோன்றப் பெறுந்தொடர்களும், **உள** — உள்ளனவாம்.

உ–ம் : விள + காய் = விளங்காய்; மா + பழம் = மாம்பழம்

**குறிப்பு :–**

'இன மெல்லெழுத்தும்' என இறந்தது தழுவிய எச்ச உம்மை கொடுத்துச் சொல்லாமையால் இவ்வுதாரணங்கள் பொதுவிதியைப் பெறாவென வறிக. 'பெறுனவும்' என்னும் எதிர்மறையாகிய இழிவு சிறப்பும்மையால் மெல்லெழுத்துப் பெறாமல் பொதுவிதியால் வலிமிகப் பெறுவன பெரும்பாலன வெனக்கொள்க. உ–ம் : பலாக்காய், வாழைப்பழம், பெறுனவும் என்னும் உம்மையை இறந்தது தழுவிய எச்ச உம்மையாகக் கொண்டு, யாங்கோடு, யாக்கோடு, காயாங்கோடு, காயாக்கோடு என மெல்லெழுத்துப் பெற்று விகற்பித்து வருதலுங்கொள்க. (யா – ஒரு வகை மரம்.)

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:– மரப்பெயர் முன்னர்**–உயிரீற்றுச் சில மரப் பெயர்களுக்கு முன், **இனமெல்லெழுத்து வரப் பெறுனவும் உள** – மேற் கூறிய பொதுவிதியால் வரும் வல்லெழுத்து மிகாது அவற்றிற் கினமாகிய மெல்லெழுத்து மிகப் பெறுவனவுஞ் சில வுளவாம், **வேற்றுமை வழி** – வேற்றுமை வழியில், எ – று.

**உ – ம்.:–**

விள + காய் = விளங்காய், கள + கனி = களங்கனி, மா + துளிர் = மாந்துளிர், காயா + பூ = காயாம்பூ என வரும்.

இது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது ஒருவழி விலக்கிப் பிறிது விதி வகுத்தல்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள்.:– மரப்பெயர் முன்னர்** – உயிரீற்றுச் சில மரப்பெயர்களுக்கு முன், – **இன மெல்லெழுத்து வரப்பெறு னவும் உள** – மேற்கூறிய பொது விதியால் வரும் வல்லெழுத்து மிகாமல் அவற்றிற்கினமாகிய மெல்லெழுத்து மிகப்பெறுவனவுஞ் சிலவுளவாம், – **வேற்றுமைவழி** – வேற்றுமைவழியில். எ–று.

பெறுவனவும் எனற்பாலது பெறுனவும் என்று தொகுத்தலாயிற்று.

**உ–ம்.:–**

விள+காய் = விளங்காய், கள+கனி=களங்கனி, மா+துளிர்=மாந்துளிர், காயா+பூ=காயாம்பூ என வரும்.

யாங்கோடு, யாக்கோடு; யாஞ்செதிள், யாச்செதிள்; யாந்தோல், யாத்தோல்; யாத்தோல்; யாம்பூ, யாப்பூ; காயாங்கோடு, காயாக்கோடு; காயாஞ்செதிள், காயாச்செதிள்; காயாந்தோல், காயாத்தோல்; காயாம்பூ, காயாப்பூ என மெல்லெழுத்தும் வல்லெழுத்தும் மிக்கு விகற்பித்துவருதல் உரையிற்கோடல் என்பதனாற் கொள்க.

இது 'இயல்பினும் விதியினும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது ஒருவழி விலக்கிப் பிறிது விதிவகுத்தல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.:– வேற்றுமை வழி** – வேற்றுமைப் புணர்ச்சியில், **மரம் பெயர் முன்னர்**–(உயிரீற்றுச் சில) மரப்பெயர்கட்கு முன், **இனம் மெல்லெழுத்து வரபெறுனவும்** – (முன்சொன்ன பொது விதிப்படி வருகிற வல்லெழுத்து மிகாமல் அவற்றிற்கு) இனமாகிய மெல்லெழுத்துத் தோன்றப் பெறும் தொடர்களும், **உள** – உள்ளனவாம்; **எ – று.**

**உ–ம்.:–**

விள + காய் = விளங்காய், மா + பழம் = மாம்பழம்.

'இன மெல்லெழுத்தும்' என உம்மை கொடுத்துச் சொல்லாமையால் இவ் வுதாரணங்கள் பொதுவிதியைப் பெறாவென அறிக.

'பொறுனவும்' என்ற உம்மையால், மெல்லெழுத்துப் பெறாமல் பொதுவிதியால் வல்லெழுத்து மிகப்பெறுவன பெரும்பாலன வெனக் கொள்க.

**உ–ம்.:–**

பலாக்காய், ஆத்திப்பூ, வாழைப்பழம், இலந்தைக்கனி முதலியன. யாங்கோடு – யாக்கோடு, காயாங்கோடு – காயாக்கோடு, என மெல்லெழுத்துப் பெற்று விகற்பித்து வருதலை உரையாற் கொள்க; 'பெறுனவும்' என்ற உம்மையினாலேயே இவ் விகற்பமுங் கொள்ளுதலும் ஒன்று.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:– மரப்பெயர் முன்னர்** – உயிரீற்றுச் சில மரபெயர்களுக்கு முன், **இனமெல்லெழுத்து வரப் பெறுவனவும் உள** – மேற்கூறிய பொதுவிதியால் வரும் வல்லெழுத்து மிகாது அறற்றிற்கினமாகிய

மெல்லெழுத்து மிகப் பெறுவனவுஞ் சிலவுளவாம், **வேற்றுமை வழி**– வேற்றுமை வழியில். எ–று.

**உ–ம்.;–**

விள + காய் = விளங்காய், க+கனி = களங்கனி, மா+ துளிர் = மாந்துளிர், காயா + பூ = காயம்பூ.

இது 'இயல்பினும்விதியினும்' என்னும் மேற்சூத்திரத் தால் எய்தியது ஒருவழி விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள்.:– மரப்பெயர் முன்னர்**– (உயிரீற்றுச் சில) மரப்பெயர்களுக்கு முன், **இனமெல்லெழுக்து வர** – (முன்சொன்ன பொது விதியால் வருகிற வல்லெழுத்து மிகாமல் அவற்றிற்கு) இனமாகிய மெல்லெழுத்து மிக, **பெறுனவும்** – பெறுவனவும், **உள** – சிலவுளவாம், **வேற்றுமைவழி** – வேற்றுமைவழியில், எ–று.

**பொ–ரை.:–**

உயிரீற்றுச் சில மரப் பெயர்களுக்கு முன், அவற்றிற்கு இனமாகிய மெல்லெழுத்து மிகப் பெறுவனவும் வேற்றுமை வழியில் சில உளவாம்.

**உ–ம்.:–**

விள+காய் = விளங்காய்.

மா+செதிள் = மாஞ்செதிள்.

மா+துளிர் = மாந்துளிர்.

மா+பூ = மாம்பூ.

'இனமெல்லெழுத்தும்' என உம்மை கொடுத்துச் சொல்லாமையால், இவ்வுதாரணங்கள் பொது விதியைப் பெறா வென அறிக. 'பெறுனவும்' என்ற உம்மையால் மெல்லெழுத்துப் பெறாமல் பொது விதியால் வல்லெழுத்து மிகப்பெறுவன பெரும்பாலன வெனக் கொள்க.

**உ–ம்.:–**

பலாக்காய், ஆத்திப்பூ, கொன்றைக்காய், புன்னைக்காய் முதலியன.

(வரப் பெறுனவும் – தோன்றப் பெறும் புணர்ச்சிகளும்.)

யா+கோடு=யாங்கோடு, யாக்கோடு.

காயா+கோடு=காயாங்கோடு, காயாக்கோடு.

என மெல்லெழுத்துப்பெற்று உறழ்ந்து வருதலை உரையிற் கோடலென்னு முத்தியாற் கொள்க.

இனி, பெறுனவுமென்ற உம்மையினாலேயே இவ் வுறழ்ச்சியைக் கொள்ளுதலுமொன்று. (யா—ஓர் மரம்.)

## கா.நமச்சிவாய முதலியார்

**மரப்பெயர் முன்னர்** – உயிரீற்றுச் சில மரப்பெயர்களுக்கு முன், **இனமெல்லெழுத்து வர** – (முன்சொன்ன பொதுவிதியால் வருகிற வல்லெழுத்துமிகாமல் அவற்றிற்கு) இனமாகிய மெல்லெழுத்துமிக, **பெறுநவும்** – பெறுவனவும்; **உள** – சிலவுளவாம், **வேற்றுமைவழி** – வேற்றுமைப் புணர்ச்சியில்.

**உதாரணம்:–**

| | | | | |
|---|---|---|---|---|
| விள | + | காய் | = | விளங்காய் |
| மா | + | கொம்பு | = | மாங்கொம்பு |
| மா | + | துளிர் | = | மாந்துளிர் |
| காயா | + | பூ | = | காயாம்பூ |

இனி, '**பெறுநவும்**' என்ற எதிர்மறையும்மையால், பலாக்காய், வாழைப்பழம் எனப் பொதுவிதிப்படி வல்லினம் மிகுந்தும் வரும்.

## மோசசு பொன்னையா

வேற்றுமைப் புணர்ச்சியில் உயிரீற்று மரப்பெயர்களின் முன்னர்மேற் கூறப்பட்ட பொது விதியால் வரும் வல்லெழுத்து மிகாமல் வல்லெழுத்திற்கு, இனமான மெல்லெழுத்து மிக்கு வருவனவும் சில உளவாம், **எ—று**.

பெறுன – பெறுவன என்பதின் தொகுத்தல் விகாரம், பெருந என்பதும் பாடம்.

**எ—டு.:–**

விளங்காய்
களங்கனி
மாந்தளிர்
காயாம்பூ

பெறுவனவும் என்ற எச்ச உம்மையால், பலாக்காய்,

அத்திப்பூ, வாழைப்பூ, இலந்தைக்கனி என வலிமிக்கு முடியுமவற்றையும், யாங்கோடு,யாக்கோடு, காயாங் கோடு,காயாக்கோடு என உறழ்ந்து முடியும வற்றையும் அமைக்க.இந்நூற்பா மரப்பெயர்ப் புணர்ச்சியை முற்ற முடித்துக் காட்டும் விதியாக அமையாமை கண்ட இலக்கண விளக்க ஆசிரியர்,

மெல்லெழுத்து மிகுநவும் வல்லெழுத்து மிகுநவும்
அம்மிடை வருநவும் உறழ்ச்சி யெய்துநவும்
என்றொரு நல்வகைய மரப்பெயர் அன்னவை
வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்.

என விரித்துக் கூறியுள்ளமை நோக்கத்தக்கது.

(16)

நன்னூல் உரைவளம்

உயிரீற்றுப்புணரியல் — 1

முற்றிற்று.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
### சென்னை - 600 113

## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை-ஒப்பனையியல் | 250.00 |
| தமிழிலக்கியக் குறியீடுகள் அகராதி | 225.00 |
| அரங்கேற்றுகாதை ஆராய்ச்சி | 140.00 |
| பழந்தமிழ் அமைப்பியல் மற்றும் குறியியல் ஆய்வுகள் | 45.00 |
| Essays and Tributes on Tirukkural (1886-1986) | 100.00 |
| இந்தியச் சூழலில் மொழிஇழப்பு ஒரு சமுதாய மொழியியல் பார்வை | 60.00 |
| நீறணி பவளக் குன்றம் | 35.00 |
| உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார் | 35.00 |
| கலீலியோ முதல் கலாம் வரை | 35.00 |
| குலோத்துங்கன் கவிதைகள் ஒரு கோபுர தீபம் | 60.00 |
| தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள் | 30.00 |
| நாமக்கல் கவிஞரின் தமிழ்ப்பணி | 30.00 |
| ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம் | 30.00 |
| சிறுபஞ்சமூலம்- ஒரு சமூகவியல் பார்வை | 30.00 |
| சங்கத் தமிழ் பகுதி 1 | 100.00 |
| சங்கத் தமிழ் பகுதி 2 | 100.00 |
| சங்கத் தமிழ் பகுதி 3 | 115.00 |
| சங்கத் தமிழ் பகுதி 4 | 130.00 |
| சங்கத் தமிழ் பகுதி 5 | 110.00 |
| ம.பொ.சி.யின் வாழ்க்கை வரலாற்று இலக்கியங்கள் | 60.00 |
| தொல்காப்பியம், சங்க இலக்கியம் பதிப்பும் பதிப்பாளரும் | 160.00 |
| இந்தி நாடகப்பனுவல் (ஆடிமாதத்தில் ஒரு நாள்) | 50.00 |
| திராவிட இயக்கத்தில் அன்னை மணியம்மையின் பங்கு | 40.00 |
| பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம் | 70.00 |
| காரைக்கால் அம்மையார் பாடல்கள் ஓர் ஆய்வு | 40.00 |
| Freudism in the Novels of James Joyce and T.Jankiraman: A comparative study | 125.00 |
| இலக்கணத்தொகை யாப்பு பாட்டியல் | 290.00 |
| தென்கிழக்கு ஆசியா நாடுகளில் தமிழ்ப்பண்பாடு | 310.00 |
| பதிற்றுப்பத்து மூலமும் ஆராய்ச்சிப்புத்துரையும் | 170.00 |
| தமிழ் மொழிபெயர்ப்பு முன்னோடிகள் | 185.00 |
| மனிதப் புனிதர் கக்கன் | 110.00 |
| மொழிபெயர்ப்பு:ஒரு கவின்கலை | 75.00 |
| மூவர்தமிழ் மூன்று பார்வைகள் | 50.00 |
| காமன்வெல்த் நாடுகளின் கவிதைகள் | 100.00 |
| அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா | 145.00 |
| அறிஞர் அண்ணா-மொபசான் சிறுகதைகள்-ஒப்பாய்வு | 160.00 |
| இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள் | 55.00 |
| கடலடியில் தமிழர் நாகரிகம் | 55.00 |
| கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்) | 150.00 |
| சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள் | 55.00 |
| சங்க அகப்பாடல்கள் தோழி கூற்று | 170.00 |

---

**694 நன்னூல் உரைவளம் 6 (உயிரீட்டுப் புணரியல் 1) 125.00**